தமிழ்ப் பள்ளிப் பாட அகராதி

(6 முதல் 10 ஆம் வகுப்பு வரை)

முனைவர் ச.நீலாயதாட்சி, M.A., M.A., P.T., Ph.D
முதன்மைப் பதிப்பாசிரியர்

பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-10

UG 7230

6 முதல் 10 ஆம் வகுப்பு
தமிழ்ப் பள்ளிப் பாட அகராதி
தமிழக அரசு நல்கை - ஆய்வுத்திட்டம்

முனைவர் ச.நீலாயதாட்சி, MA., MA., P.T., Ph.D.,
முதன்மைப் பதிப்பாசிரியர்

பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-10

ISBN NO : 978-81-7090-461-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 418

திருவள்ளுவராண்டு 2047, ஆவணி, செப்டம்பர் 2016

நூலின் தலைப்பு	:	தமிழ்ப் பள்ளிப்பாட அகராதி
ஆசிரியர்	:	முனைவர் ச.நீலாயதாட்சி
மொழி	:	தமிழ்
பொருள்	:	அகராதி
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	186
தாள்	:	டிஎன்பிஎல், மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டிம்மி 1x4
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	ரூ. 370.00
படிகள்	:	500
அச்சு	:	ஓம்சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்

07 FEB 2019

முனைவர் **க. பாஸ்கரன்**
துணைவேந்தர்
மின் அஞ்சல்: rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010 - தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362 226159

அணிந்துரை

பெருஞ்சொல்லகராதியின் மேனாள் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ச.நீலாயதாட்சி அவர்கள் செய்த "தமிழ்ப் பள்ளிப்பாட அகராதி" (6 முதல் 10 ஆம் வகுப்பு வரை) எனும் ஆய்வு நூல் வடிவம் பெறுவதைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன்.

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அகராதி வளர்ச்சியே அடித்தளமிடும். ஒரு மொழியின் சொற்பெருக்கத்தை அளவிடும் கருவியாகவும் அகராதி விளங்குகிறது. இத்தமிழ்ப் பள்ளிப்பாட அகராதி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். அவர்கள் தங்களது பாடத்தில் இடம் பெற்றுள்ள தமிழ்ச்சொல்லிற்கான பொருளை உடனறிந்து கொள்வதற்கு இந்நூல் துணைபுரியும்.

இந்த அகராதியை ஆழமாக உள்வாங்கிக் கொண்டால் மாணவர்களின் இலக்கண அறிவும் கூடுதலாகும். இத்தகு பயனுள்ள ஆய்வை அளித்துள்ள முனைவர் ச.நீலாயதாட்சி அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன். இதுபோன்ற பயன்தரும் அகராதிகள் பலவற்றை இனியும் படைத்திட வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர்
30.08.2016

(க. பாஸ்கரன்)

பதிப்புரை

பள்ளிப்பாட அறிவு செம்மையுற, அடித்தளமாக அகராதிகள் அமைகின்றன. அதிலும் கற்கும் மொழிக்கு ஏற்றவாறு தனித்தனி சிறப்பு நிலை அகராதிகள் அமைந்தால் மாணவர்கள் தங்கள் மொழித்திறனை பெருக்கிக்கொள்ள ஏதுவாக அமையும். அந்த வகையில் தமிழ்நாட்டில் தமிழ் வழியில் பாடம் கற்கும் மாணவர்கள் அல்லாது வேற்றுமொழி கற்பவருக்கும் குறிப்பாக ஆங்கில வழி பாடம் கற்கும் மாணவர்களுக்கும் தமிழ்ப்பாட மொழித்திறனைப் பெறுவதற்கு தமிழ்ப்பாட அகராதி என்பது இன்றியமையாததாகிறது. அதன்படி தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துறைசார்ந்த ஆய்வுத் திட்டப்பணியின் பொருட்டு தமிழக அரசு தனித்திட்ட ஆய்வுக்காக நல்கை அளித்துள்ளது.

அந்த நல்கையின் கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருஞ்சொல்லகராதித் திட்டத்தில் முதன்மைப் பதிப்பாசிரியர் மற்றும் உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும் ச.நீலாயதாட்சி என்பவரின் ஒருங்கிணைப்பின் கீழ் 6 முதல் 10 ஆம் வகுப்பு பள்ளித் தமிழ்ப்பாட அகராதி (School of Tamil Subject Dictionary 6th to 10th) என்னும் தனித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் காலம் 1.4.2013 முதல் 30.3.2014 வரையிலாக கணக்கிடப்பட்டது. ஒருங்கிணைப்பாளரின் கீழ் திட்டத்தகைமையாளர் இருவர், கணினித்தட்டச்சர் இருவர் என்ற நிலையில் இவ்வகராதிப் பணி செம்மையாக நடைபெற்று நல்லமுறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வகராதி நல்ல பயனை நல்கும் என்பது திண்ணம்.

இந்தப் பாடத்திட்டத்தில் சொற்களுக்கான பொருள்கள், எளிமையுடன் எடுத்துக் கையாளப்பட்டுள்ளன. சுமார் 5,300 சொற்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இப்பாடங்களில் இடம் பெற்ற இலக்கணங்கள் விளக்கத்துடன் பின்னால் தரப்பட்டுள்ளன.

அதன் பின் இப்பாடங்களில் இடம்பெற்றுள்ள அன்றாடம் நடைமுறையில் இருக்கும் ஆங்கிலச் சொற்களுக்கும் தமிழில் பொருள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளித் தமிழ்ப் பாட அகராதி காலப்போக்கில் தமிழ்ப் பாடநூல் மாற்றம் செய்யப்பட்டு புதியதொரு தமிழ்ப் பாடநூல் வரப்பெற்றாலும் அவைகளில் இடம் பெறும் தமிழ்ச் சொல்லடைவுகள் இதில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும் என்பதை உறுதியாகக் கூறலாம். இது ஒரு பயனுள்ள அகராதியாகத் திகழும் என்பதில் எந்தவொரு கருத்து மாற்றமும் இருக்கப்போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிக்கோள்

மாணவர்களில் தமிழ்வழி பாடம் பயில்பவர்களும் ஆங்கில வழியில் பாடம் பயில்பவர்களும் தங்களது பாடத்தில் இடம்பெற்ற தமிழ்ச் சொல்லிற்கான பொருளை உடனறிந்து கொள்வதற்கும் ஒரு சொல்லிற்கான வேற்றுப்பொருள்கள் இருப்பதை அறியும் மொழி அறிவினைப் பெறுவதற்கும் கைக்கொடுப்பதாக இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கமாக அமைகிறது.

அகராதியின் அமைப்பு முறை

1. சொல்லிற்கான தகுந்த பொருளை எளிமையாகக் கொடுத்தல்.

2. இடம்பெற்ற சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை என்ற பிரிவுகளில் அடங்குவதாக இருந்தால் பெயர்ச்சொல்லுக்கு பெ. என்றும், வினைச்சொல்லுக்கு வி. என்றும் பெயரடைக்கு பெ.அ. என்றும் வினையடைக்கு வி.அ. என்றும் குறியிட்டுக் காட்டப்படுகிறது.

3. ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருந்தால் அந்தப் பொருள்களின் தன்மைக் கருதி தொடர்புடைய பொருளுக்கு தலைச்சொல் 1-இல் 1,2 என வகையாகப் பிரித்தும் வெவ்வேறு பொருள்களுக்கு தலைச்சொல் இரண்டு மூன்று என்பதாகவும் போடப்படுகிறது. (எ.கா.) அக்கினி என்ற சொல்லிற்குப் பனிரெண்டு பொருள்கள் உள்ளன.

அக்கினி[1] பெ. அக்கினிதேவன், அக்கினி புராணம், உதராக்கினி, ஓமாக்கினி, நெருப்பு -தொடர்புடையன.

அக்கினி[2] பெ. செங்கொடி வேல்

அக்கினி[3] பெ. 1.நவச்சாரம், 2.வெடியுப்பு

அக்கினி[4] பெ. பித்தம்

அக்கினி[5] பெ. பொன்

அக்கினி[6] பெ. சிறுநீர் – வெவ்வேறானவை

4. ஒரு சில இடங்களில் ஒரு சொல்லிற்கு பொருள் எழுதும்போது அந்தப் பொருள் மாணவர்களுக்கு நன்கு விளங்குவதற்கு ஏற்ப மேற்கோள்களுடன் விளக்கப்படுகின்றன.

5. பாடப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட நன்கு புரிந்த சொற்களுக்கு பொருளாய் புரியாத சொல் இருப்பினும் கொடுக்கப்பட்டுள்ளது. சான்றாக போர்க்களம் என்ற புரிந்த சொல்லுக்கு அடுகளம் என்ற சொல்லும் உண்டு. ஆதலால் புரிந்த சொல்லை முதலில் இடம்பெறச் செய்து அதற்குப் பொருளாய் புரியாத சொல்லும் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற சொற்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவ்வாறும் கொடுக்கப்பட்டுள்ளது.

6. சொல்லடைவுகள் முடியப்பெற்றதும், இலக்கணக் குறிப்புகள் என்ற தலைப்பில் பாடப்புத்தகங்களில் இடம்பெற்ற இலக்கணங்கள் நூலில் உள்ளதுபோல் குறிப்பாக அல்லாமல் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

7.அடுத்தபடியாக பாடப்புத்தகத்தில் இடம்பெற்ற ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வகராதி ஒருங்கிணைப்பாளரின் கீழ் 2 திட்டத் தகைமையாளர்களும், 2 கணினித் தட்டச்சர்களுடனும் பணிமேற்கொள்ளப்பட்டது. பணியாளர்கள் தங்களுக்கான பணிகளுடன் களஆய்வும் ஒருங்கிணைப்பாளருடன் சேர்ந்து மேற்கொண்டனர் தஞ்சை மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்குச் சென்று சொல்லடைவுகள் சேகரிக்கப்பட்டன.

இதன் பயனாக தமிழ் அறிவு, தமிழ்ப்பயிலும் மாணவர்கள் அல்லாது பிறமொழிப் பயிலும் மாணவர்களுக்கும் சென்று சேரும் வண்ணம் எளிமையானதாகவும் அதே சமயம் சொல்லிற்கானப் பொருள் பரவலாக அறியும்படியும் ஒரு சொல்லிற்கான பலபொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளதால் மொழி அறிவு மேம்பாடு அடையும் என்பதும் பயனாக அமையும். மேலும், இலக்கண அறிவு இயல்பாக பெருகும் வண்ணம் தரப்பட்டுள்ளதால் தமிழ் இலக்கண அறிவு இளமையிலேயே பெறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்க பயனாக அமைகிறது.

ச.நீலாயதாட்சி

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

1. இ.சொ.	- இலக்கண சொல்
2. கு.வி.மு.	- குன்றிய வினை முற்று
3. பெ.	- பெயர்
4. பெ.அ.	- பெயரடை
5. வி.	- வினை
6. வி.அ.	- வினை அடை
7. வி.மு.	- வினை முற்று
8. வி.வி.	- வியங்கோள் வினை முற்று

அ

அஃது பெ. அஃறிணை ஒருமைச் சுட்டு.

அக்கதை பெ. அட்சதை. மங்களகரமான அரிசி.

அக்கன்[1] பெ. 1.இராவணன் மகன்களுள் ஒருவன். 2.கருடன். 3.குருடன். 4.உருத்திராக்க முடையவன் (உருத்திராட்சக்கொட்டை அணிந்தவன்).

அக்கன்[2] பெ. நாய்.

அக்கா பெ. முன்பிறந்தாள்.

அக்கிரமம் பெ. 1.முறைகேடு. 2.கொடுமை. 3.அட்டூழியம்.

அக்கினி[1] பெ. 1.அக்கினிதேவன். 2.அக்கினி புராணம். 3.உதராக்கனி. 4.ஓமாக்கினி. 5.நெருப்பு, மூலாக் கினி. (தியானம் செய்கையால் ஏற்படும் மூலாதாரத்தின் சூடு).

அக்கினி[2] பெ. செங்கொடிவேல்.

அக்கினி[3] பெ. நவச்சாரம்.

அக்கினி[4] பெ. பித்தம்.

அக்கினி[5] பெ. பொன்.

அக்கினி[6] பெ. மூத்திரம்.

அக்கினி[7] பெ. வெடியுப்பு.

அக்கினித்திசை பெ. தென் கிழக்கு.

அக்கினிநட்சத்திரம் பெ. (சித்திரை வைகாசியில் பரணி மூன்றாம் பாதம் முதல் உரோகிணி முதற்பாகம் வரை சூரியன் நிற்கும்) கடுங்கோடை (சித்திரை, வைகாசி).

அகக்கூத்து பெ. ஞானக்கூத்து, அகச் சுவையாகிய குணத்தின் வழி நிகழுங்கூத்து.

அகக்கூத்துக்கை பெ. அகக்கூத்தில் காட்டும் கை.

அகங்காரம் பெ. செருக்கு (ஆணவம், மமதை).

அகச்சட்டகம் பெ. 1.உடலில் உள்ளமைந்த எலும்புக் கூடு. 2.மனித எலும்புக்கூடு.

அகச்சமயம் பெ. சைவ சமயத்தினுட் சமயம் (பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவமவாத சைவம், சிசுங்கிராந்தவாத சமயம், ஈசுவர அவிரா வாத சைவம், சீவாத்துவத் சைவம் எனும் ஆறு).

அகச்சான்று பெ. ஆராய்ச்சியில் நூலினுள் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு உறுதி செய்யும் சான்று.

அகச்சிவப்புக்கதிர் பெ. கண்ணிற்குப் புலப்படா உள் சிவப்புக் கதிர் வீச்சு.

அகச்சுட்டு பெ. சொல்லகத்து முதனிலை யாயமைந்து நிற்குஞ்சுட்டு. (அ,இ,உ மூன்றும் சுட்டெழுத்து அவள், இவள், உவள் என்று வரும்)

அகச்சுரப்பி பெ. 1.நாளமில்லாச் சுரப்பி. 2.தொண்டைச் சுரப்பி, 3.அகச்சுரப்பி மண்டலம்.

அகச்சுவை பெ. 1.அகப்பொருள் நெறிக்குரியது. 2.காதல் உணர்ச்சி பற்றியது.

அகசை பெ. பார்வதி, மலையிற்பிறந்தவள்.

அகடு பெ. 1.உள். 2.வயிறு.

அகடுபகடு பெ. பித்தலாட்டம். அகடுபகடு செய்யாதே.

அகண்டம்[1] பெ. 1.பிளவுபடாதது, பெரியது. 2.எல்லாம். 3.கண்டுபிடிக்கப்படாதது.

அகண்டம்[2] பெ. மண் விளக்கு.

அகத்தார் பெ. உள்ளிடத்துள்ளார் இல்வாழ்வார், சுற்றத்தார்.

அகத்தி[1] பெ. 1.அகத்திய முனிவன். 2.உள்ளிருக் கிறவள்.

அகத்தி[2] பெ. ஒரு மரம். இது சாழைய கத்தி, சிற்றகத்தி, செவ்வகத்தி என மூவகைப்படும்.

அகத்திடல் பெ. மனத்தினுள்வைத்திருக்கை.

அகத்திடுதல் வி. 1.உள்ளிடுதல். 2.கழுவுதல். 3.கைக்குள்ளே விட்டனைத்தல்.

அகத்திணை பெ. உள்ளத்ததே நிகழ்கின்ற இன்ப ஒழுக்கம். அது கைக்கிளை, குறிஞ்சித் திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை, பெருந்திணை என ஏழு வகைப்படும்.

அகத்திணைப்புறம் பெ. கைக்கிளையும் பெருந்திணையும்.

அகத்திணையியல் பெ. இன்பமாகிய ஒழுக்கத்தின் இலக்கணம்.

அகத்தியம்[1] பெ. அகத்திய முனிவரால் செய்யப்பட்ட தமிழிலக்கண நூல்.

அகத்தியம்[2] பெ. அவசியம்.

அகத்தியர் பெ. தொல்காப்பியரின் ஆசிரியர்.

அகத்தினர் பெ. மனைவி, இல்லறக் கிழத்தி.

அகத்தினள் பெ. 1.மனைவி. 2.இல்லறக் கிழத்தி.

அகத்தீடு பெ. 1.உள்ளீடுதல். 2.கழுவுதல். 3.கைக்குள்ளே விட்டணைத்திடுகை.

அகத்துறுப்பு பெ. 1.மனம், சித்தம், புத்தி, அகங்காரம் எனும் நான்கு. 2.உடலின் உள் உறுப்புகள்.

அகத்தோல் பெ. உட்தோல்.

அகதி[1] பெ. 1.திக்கற்றவன். 2.வறியவன்.

அகதி[2] பெ. 1.தில்லைமரம். 2.வேலமரம்.

அகந்தை பெ. 1.செருக்கு. 2.கோபம்.

அகநானூறு பெ. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. (எட்டுத்தொகை நூல்கள் : ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

அகநிலை பெ. 1.உள்நிலை ஊர். 2.கடவுள்.

அகநிலைக்குறிஞ்சி பெ. ஒரு பண்.

அகநிலைப்பாலை பெ. ஒரு பண்.

அகப்பணி பெ. 1.மனத்தொழில். மனத்தினை செம்மை ஆக்குகை. 2.வீட்டுவேலை.

அகப்பாட்டுறுப்பு பெ. அகத்திணையின் பன்னிரண்டு உறுப்புகள். திணை, கைக்கோள், கூற்று கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகைத்துறை என்பன.

அகப்புறச்சமயம் பெ. சைவசித்தாந்தத்திற்குப் புறம்பான சமயம். அவை, 1.பாசுபதம், 2.மாவிரதம், 3.கபாலம் (காளாமுகம்). 4.வாமம், 5.வைரவம். 6.ஐக்கியவாத சைவம்.

அகப்புறத்திணை பெ. அகனாகிய ஐந்திணைக்கும் புறனாகிய ஒழுக்கம், அது கைக்கிளையும் பெருந்திணையுமென இருவகைப்படும்.

அகப்புறப்பொருள் பெ. அகப்புறத்திணை.

அகப்பொருட்கோவை பெ. ஒரு பிரபந்தம்.

அகம்[1] பெ. 1.நெஞ்சம். உள்ளம், மனம். 2.மார்பு.

அகம்[2] பெ. உள்ளடங்குகை.

அகம்[3] பெ. 1.பூமி. 2.மலை. 3.வீடு. 4.இடம். (மருதம்)

அகம்[4] பெ. ஆகாயம்.

அகம்[5] பெ. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு.

அகம்[6] பெ. தானியம்.

அகம்[7] பெ. முறைமை.

அகமகிழ்ச்சி பெ. உள்ளத்தில் எழும் மகிழ்ச்சி. (உள் மகிழ்ச்சி), ஆனந்தம்.

அகமார்க்கம் பெ. 1.உள்வழி. 2.மந்திரக்கிரமம்.

அகமுழவு பெ. (இசைக்கருவிகள்) எழுவகை முழவுகளுள் ஒன்று, அது உத்தம கருவியான இடக்கை, கரடிகை, குடமுழா, சல்லிகை, படகம், பேரிகை, மத்தளம் எனப் பலவகைப்படும்.

அகராதி[1] பெ. அகரமுதலி; சொற்களை அகர வரிசையில் கொண்டுள்ள கருவிநூல். தமிழ் மொழி அகராதி.

அகராதி[2] பெ. இறுமாப்புடன் பலவாறாக பேசுபவன். அவன் அகராதிபிடிச்சவன். (பே.வ.)

அகல் பெ. அகல்விளக்கு.

அகலக்கவி பெ. வித்தாரக்கவி; அது தொடர்நிலைச் செய்யுளாலும் அடிபலவாய் நடக்கும் முத்தகச் செய்யுளிலும் பாடப் படுவது. அகலக்கவி பாடும் புலவன்.

அகலிடம் பெ. 1.பூமி. 2.வேற்று இடம். அவளுக்கு அகலிடம் ஏது (பே.வ.).

அகலுதல் வி. 1.வெளியே போதல். 2.விலகிப் போதல். 3.நகர்தல்.

அகலவுரை பெ. விரிவாக எழுதும் உரை.

அகவல்[1] பெ. ஆசிரியப்பா.

அகவல்[2] பெ. ஆடல்.

அகவல்[3] பெ. மயில் கத்தும். ஒலிக்குறிப்பு.

அகவல்[4] பெ. அழைக்கை.

அகவிதழ் பெ. அல்லி.

அகவிலை பெ. தானியவிலை.

அகவை[1] பெ. உட்பட்டது.

அகவை[2] பெ. வயது. உன் அகவை எத்தனை?

அகழ்வார் பெ. தோண்டுபவர்.

அகழி பெ. 1.அகழ். 2.கோட்டை. 3.மதில் சூழ் கிடங்கு.

அகற்றுதல் வி. 1.நீக்குதல். 2.விலக்குதல். 3.நகர்த்தல்.

அகன் பெ. 1.அகம். 2.உள்ளம். 3.மனம்.

அகனமர்தல் வி. மனமகிழ்தல்.

அகாரி பெ. 1.இடி 2.இந்திரன். 3.கடவுள்.

அகிம்சை பெ. துன்பம் செய்யாமை.

அகிலம் பெ. 1.எல்லாம், அனைத்தும். 2.உலகம். 3.பூமி.

அங்கணர் பெ. சிவன்.

அங்கத்தினர் பெ. உறுப்பினர்.

அங்கம்[1] பெ. 1.உறுப்பு, 2.பகுதி.

அங்கம்[2] பெ. உடல்.

அங்கம்[3] பெ. ஓரங்க நாடகம்.

அங்கமாலை பெ. ஒரு பிரபந்தம் (நூல்).

அங்கதி[1] பெ. கொடை.

அங்கதி[2] பெ. தீ.

அங்கதி[3] பெ. நோய்.

அங்கதி[4] பெ. 1.விட்டுணு. 2.பிரமா. 3.பார்ப்பான்.

அங்காடி[1] பெ. **பொருள் விற்பனை வளாகம்.** அவை, நாளங்காடி, அல்லங்காடி, சிறப்பங்காடி.

அங்காடி[2] பெ. கிளைச்சொற்கள்.

அங்காடி[3] பெ. **கடைவீதி.** நான் அங்காடிக்குப் போயிட்டு வந்தேன்.

அங்காத்தல் வி. 1.கொட்டாவி விடுதல். 2.வாய் திறத்தல்.

அங்கிதம்[1] பெ. 1.உடற்றழும்பு. 2.அடையாளம்.

அங்கிதம்[2] பெ. கணக்கிடப்பட்டது.

அங்கிதம்[3] பெ. பாட்டுடைத்தலைவன்.

அங்கு இ.சொ. அவ்விடம்; அவ்விடமெனப் பொருள் படும் ஓரிடைச்சொல்.

அங்குலம் பெ. ஓர் அடியில் 12 இல் ஒரு பகுதி.

அங்கை பெ. உள்ளங்கை.

அச்சக்குறிப்பு பெ. பயப்பாட்டுக்குறி.

அச்சம்[1] பெ. பயம்.

அச்சம்[2] பெ.இலேசு.

அச்சம்[3] பெ. ஈசுரப்புல்.

அச்சம்[4] பெ. ஓரலங்காரம்.

அச்சம்[5] பெ. கடைப்படுதானம்.

அச்சு[1] பெ. 1.உயிரெழுத்து. 2.எழுத்து. 3.அச்செழுத்து. 4.வார்ப்படம்.

அச்சு[2] பெ. 1.தேன்குழல் குச்சு. 2.குறுக்குத் தண்டு. 3.வண்டியின் அச்சு. 4.முதன்மையச்சு.

அச்சு[3] பெ. அடையாளம்.

அச்சு[4] பெ. உடல்.

அச்சு[6] பெ. கட்டளைக்கருவி.

அச்சு[7] பெ. யுகம்.

அச்சுறை பெ. உடம்பு.

அச்சுக்கூடம் பெ. அச்சகம்.

அச்சுப்படி பெ. கோத்த அச்செழுத்துகளின் மெய்ப்பு.

அச்சுப்பிழை பெ. அச்சில் எழுத்துகள் விடுபடுகை அல்லது மாறியமைதலால் ஏற்படும் பிழை.

அசடு பெ. 1.மடமை. 2.விளக்கம் பெறாதவன். 3.முட்டாள். 4.பொருளற்றது.

அசராது[1] பெ. கொன்றை மரம்.

அசராது[2] பெ. உறுதியாக.

அசரீரி பெ. 1.அரூபி. 2.ஆகாயவாணி. 3.சரீர மற்றது.

அசல்[1] பெ. அருகாண்மை.

அசல்[2] பெ. உயர்ந்தது.

அசல்[3] பெ. சீலை.

அசல்[4] பெ. பூமி.

அசல்[5] பெ. **முதற்பிரதி. உன்னுடைய** அசல் **பத்திரத்தைக் கொடு.**

அசல்[6] பெ. 1.உண்மை. 2.மூலம் (ஒரிஜினல்).

அசல்[7] பெ. முதல் (வட்டி – முதல்).

அசாதுரியம் பெ. சொற்றிறமின்மை.

அசாவாமை பெ. தளராமை.

அசினம் பெ. 1.தோலாசனம். 2.தோல்.

அசு[1] பெ. சுவாசம்.

அசு[2] பெ. துக்கம்.

அசுபதி பெ. ஒருநாள்.

அசுரர் பெ. அவுணர், இராக்கதர்.

அசூயை பெ. 1.பொறாமை. 2.தீய இயல்பு.

அசைதல்[1] வி. 1.நகர்த்துதல். 2.ஆட்டுதல்.

அசை[2] பெ. 1.நேரசை. 2.நிரையசை.

அசை[3] பெ. கடல்.

அசைநிலை பெ. அசைச்சொல்.

அசைப்பு[1] பெ. அசைகை.

அசைப்பு[2] பெ. இறுமாப்பு.

அசைப்பு[3] பெ. சொல்.

அசையந்தாதி பெ. செய்யுளில் அடியீற்றசை வரும்படி முதலசை ஆகத் தொடுத்திருப்பது.

அசையாநிலை பெ. ஆடாது நிற்கும் நிலைமை.

அசையாமணி பெ. 1.ஆராய்ச்சி மணி. 2.விசேட சமயங்களில் அசைக்கும் மணி.

அசையாமை பெ. 1.சலனமின்மை. 2.ஆட்டம் காணாது இருக்கும் நிலை.

அசைவம் பெ. மாமிச உணவு.

அசைவின்மை பெ. முயற்சி.

அஞ்சல்[1] பெ. 1.கடிதம். 2.கடிதம் அனுப்பும் முறை.

அஞ்சல்[2] பெ. 1.தோல்வி. 2.பயப்படுகை.

அஞ்சல்[3] பெ. வியங்கோள் வினைமுற்று.

அஞ்சல்[4] பெ. ஒலிபரப்புகை.

அஞ்சல்ஆணை பெ. பணம் செலுத்திப் பெறும் ஆணை.

அஞ்சல்உறை பெ. கடிதத்தை வைத்து அனுப்பும் உறை.

அஞ்சல்எழுத்தர் பெ. அஞ்சல் நிலையக் கடிதத் தொடர்பான ஊழியர்.

அஞ்சல்குறியீட்டு எண் பெ. கடிதத்தை எளிதாகப் பட்டுவாடா செய்ய ஒவ்வொரு ஊருக்கும் வழங்கப் பட்டிருக்கும் எண் (எ.கா.சென்னை-600 167).

அஞ்சல்தலை பெ. அஞ்சல் கட்டணத்திற்குரிய வில்லை. இக்கடிதத்திற்கு அறுபது காசு அஞ்சல்தலை ஒட்டு.

அஞ்சலி பெ. 1.உரியவர்க்கு மரியாதை செலுத்துகை. 2.வணக்கம்.

அஞ்சாமை பெ. 1.துணிச்சல். 2.பயப்படாமை.

அஞ்சி பெ. 1.பயங்கொள்ளுகை. 2.அஞ்சுபவன்.

அஞ்சு[1] வினையென்னேவல். பயப்படு (கை). பயங்கொள்ளென்னேவல்.

அஞ்சு[2] பெ. ஐந்து.

அட்சரம் பெ. எழுத்து.

அட்டகோணம் பெ. எட்டு கோணம்.

அட்டவணை பெ. 1.விவரப்பட்டியல். 2.அட்டவணை இடுகை. 3.சொல்லப்பட்ட காரியத்தினொழுங்கு. 4.சேர்க்கப்பட்டது. 5.வரிசைக் குறிப்பு.

அட்டி பெ. மறுப்பு.

அடக்கம்[1] பெ. பணிவு.

அடக்கம்[2] பெ. சிறியது.

அடக்கம்[3] பெ. 1.புதைக்கை. 2.மறைக்கை.

அடக்கம்[4] பெ. ஒரு தோற்கருவி.

அடகு[1] பெ. இலைக்கறி.

அடகு[2] பெ. கடன்கோடற் கீடு வைக்கை.

அடங்காமாரி[1] பெ. ஒருவருக்கும் கீழ்ப்படியாதவர்.

அடங்காமாரி[2] பெ. விடாமழை.

அடர்[1] பெ. அடர் என்ற ஏவல்.

அடர்[2] பெ. தகடு.

அடர்[3] பெ. இதழ்.

அடர்[4] பெ.நெருக்கம்.

அடர்[5] பெ.நொய்ம்மை.

அடர்த்தி பெ.1.செறிவு. 2.நெருக்கம். 3.ஒரு கன சென்டிமீட்டர் பொருளின் நிறை.

அடர்ந்த வி.அ. நெருங்கிய.

அடவி பெ. காடு.

அடி[1] பெ. 1.அடியென்னேவல், அடியோர். 2.ஆதி. 3.கடவுள்.

அடி[2] பெ. ஓரளவு.

அடி[3] பெ. 1.கால். 2.காற்சுவடு.

அடி[4] பெ. கீழ்மகளை விளிக்குஞ்சொல்.

அடி[5] பெ. 1.செய்யுளுறுப்பினொன்று. 2.அசை.

அடி[6] பெ. தாது.

அடி[7] பெ. 1.மூலம். 2.முன்.

அடி[8] பெ. கொல்கை.

அடி[9] பெ. எறிகை.

அடி[10] பெ. தறி.

அடி[11] பெ. ஒலி.

அடி[12] பெ. வீசுகை.

அடி[13] பெ. 1.பிரம்படி. 2.காலடி

அடிக்கடி பெ. 1.அடிபெயர்க்குந்தோறும். 2.குறுகிய இடைவெளிவிட்டு செய்யும் செய்கை.

அடிக்கணை பெ. கணைக்கால்.

அடிக்காற்று பெ. பெருங்காற்று.

அடிக்குள் வி.அ. உடனே.

அடிசில் பெ. சோறு.

அடிநா பெ. நாக்கின் அடிபாகம்.

அடிமடம் பெ. கீழ்நிலை.

அடிமடை பெ. உள்மடை.

அடிமறி பெ. எண்வகைப் பொருள் கோளில் ஒன்றாகிய அடிமறி மாற்று பொருள்கோள்.

அடிமுனை பெ. துவக்கம்.

அடிமை[1] பெ. 1.தொண்டன். 2.தன்னுரிமையற்ற பணியாள்.

அடிமை[2] பெ. ஒப்படைப்பு.

அடிமை[3] பெ. அன்பு.

அடிமை[4] பெ. சிறை.

அடியவர் பெ. 1.இறை அடியார். 2.அடிமையாள்.

அடியர் பெ. தொண்டு செய்வோர்.

அடியேன் பெ. தொண்டனாகிய நான்.

அடிவயிறு பெ. கீழ்வயிறு.

அடிவளிமண்டலம் பெ. நிலத்தின் வெப்ப நிலையைச் சீராய் வைத்திருக்க உதவுவது.

அடிவானம் பெ. வானமும் நிலமும் கூடுவதுபோல் தோன்றும் இடம்.

அடிவீழ்தல்[1] வி. 1.வணக்கமாய் இருத்தல். 2.காலடி பணிதல்.

அடிவீழ்தல்[2] வி. மண்ணைக் கவ்வுதல், தோல்வி யாதல்.

அடிவைத்தல் வி. 1.ஆரம்பித்தல். 2.தலையிடுதல். 3.நடக்கத் தொடங்குதல்.

அடு பெ. 1.சமைக்கை. 2.வெல்கை.

அடுக்கு பெ. 1.ஒன்றன் மேலொன்றாக அடுக்கியது. 2.வரிசை. 3.அடுக்குக்கலம்.

அடுக்குச்சட்டி பெ. அடுக்குக்கலம்.

அடுக்குத்தொடர் பெ. இரண்டு மூன்று நான்கு சொற்கள் அடுக்கி வரும்; பிரித்தால் தனித்தனியே பொருள் தரும் (எ.கா. புதிது புதிது).

அடுக்குதல் வி. ஒன்றன் மேலொன்றாக வைத்தல்.

அடுக்குமொழி பெ. எதுகை மோனைத் தொடர் (யானை, பூனை).

அடுத்தவர் பெ. மற்றவர்.

அடை[1] பெ. 1.பொரிக்க வைக்கும் முட்டைத் தொகுதி. 2.அடைகாக்கும் பெட்டி. 3.அடைகாத்தல்.

அடை[2] பெ. பலகாரம்.

அடைக்கலம் பெ. தஞ்சம்.

அடைக்கலங்காத்தல் வி. 1.அடைக்கலப் பொருளைப் பாதுகாத்தல். 2.அடைக்கலம் புகுந்தவனைக் காத்தல்.

அடைகுளம் பெ. வாய்க்காலில்லாக்குளம்.

அடைந்தோர் பெ. உறவோர். அடைக்கலமாகப் புகுந்தவர்.

அடைமழை பெ. விடாமழை.

அடைமொழி பெ. விசேடணம். (தெய்வப்புலவர் திருவள்ளுவர், மகாத்மாகாந்தி போன்றவர்கள்)

அடையாளஅட்டை பெ. அடையாளங்காட்டும் சீட்டு.

அடையாளம் பெ. 1.அறிகுறி. 2.குறிப்பு. 3.சின்னம். 4.மாதிரி.

அண்டார் பெ. பகைவர்.

அண்டை[1] பெ. 1.அண்மை. அண்டை வீட்டார். 2.பக்கம். கீழண்டைவீடு.

அண்டை[2] பெ. 1.முட்டு. அண்டைக்கட்டு. 2.கட்டு மரத்தின் முன்னால் உள்ள முட்டு. 3.அணை. தலைக்குக் கையை அண்டை கொடுத்துத் தூக்கு.

அண்ணம் பெ. உள்வாய்க் குழிந்த பகுதி.

அண்ணல் பெ. பெருமையுள்ளவர்.

அண்ணன் பெ. முன்பிறந்தான்.

அண்ணி பெ. தமையன் மனைவி.

அண்மை பெ. அடையுந்தன்மை, அருகில்.

அணங்கார் பெ. பெண்கள்.

அணங்கு பெ. 1.தெய்வப்பெண். 2.பேரழகி. 3.தெய்வம்.

அணி[1] பெ. சமீபம்.

அணி[2] பெ. அடுக்கு.

அணி[3] பெ. 1.அணியென்னேவல். 2.ஓர் உவம உருபு. 3.ஓர் அலங்காரம், ஆற்றலாலும் மொழிப் புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவதே அணியாகும்.

அணி[4] பெ.கவட்டம்.

அணி[5] பெ.சம்பளம்.

அணி[6] பெ. 1.அச்சாணி. 2.கம்மாளர் கருவி.

அணி[7] பெ. 1.அலங்காரம். 2.அழகு.

அணி[8] பெ. ஆபரணம்.

அணி[9] பெ. எல்லை.

அணி[10] பெ. 1.ஒழுங்கு. 2.நன்மை. 3.பெருமை.

அணி[11] பெ. நிரை.

அணி[12] பெ. 1.படைவகுப்பு. 2.வரிசை.

அணி[13] பெ. கற்பனை.

அணி[14] பெ. அன்பு.

அணி[15] பெ. இனிமை.

அணி[16] பெ. முகம்.

அணிகலன் பெ. ஆபரணம்.

அணிதல்[1] வி. 1.போட்டுக்கொள்ளுதல். 2.அலங்கரித்தல்.

அணிதல்[2] வி. படைவகுத்தல்.

அணிந்துரை பெ. முன்னுரை.

அணிவகுப்பு பெ. படைவகுப்பு. வரிசை

அணிவிடம் பெ. மாதர் அணிகலன்களை அணியும் இடம் (கழுத்து காது போன்றன).

அணு பெ. மேலும் பிரிக்க இயலாத மிக நுண்ணிய துகள்.

அணுஅடுக்கு பெ. முதல் அணு உலை.

அணுக்கம்[1] பெ. சந்தனம்.

அணுக்கம்[2] பெ. நெருங்கியது; அணுக்கத் தொண்டன்.

அணுமின்நிலையம் பெ. அணு ஆற்றலால் மின் உற்பத்தி செய்யுமிடம் (கல்பாக்கம்).

அணை[1] பெ. 1.1.அணைக்கட்டு. (நீர்தடுப்பு) 1.2.தடுப்பு.

அணை[2] பெ. 1.தழுவுகை. 2.சேர்கை.

அத்தமலை பெ. சூரியன் அத்தமிக்கும் மலை.

அத்தாட்சி பெ. சான்று.

அத்தி[1] பெ. ஒரு மரம்.

அத்தி[2] பெ. எலும்பு.

அத்தி[3] பெ. கொலை.

அத்தி[4] பெ. பாதி.

அத்தி[5] பெ. காட்டத்தி, கொடியத்தி, பேயத்தி, மலையத்தி, என்பன.

அத்தியாயம் பெ. இயல்.

அத்தியாவசியம் பெ. இன்றியமையாதது.

அதர்மம் பெ. தர்மமில்லாதது.

அதர்வணம் பெ. நான்காம் வேதம்.

அதிகாரத்தலைவன் பெ. அதிகாரி.

அதிகாரி பெ. 1.அதிபதி. 2.நூல்கேட்டற்குரியோன். 3.நூல் செய்வித்தோன். 4.பாட்டுடைத்தலைவன். 5.அலுவலர்.

அதிசயம் பெ. வியப்பு.

அதிபதி பெ. தலைவர்.

அதிபர் பெ. தலைவர்.

அதிர்ச்சி[1] பெ. அதிகப்படுகை.

அதிர்ச்சி[2] பெ. ஆரவாரம்.

அதிர்ச்சி[3] பெ. குமுறல்.

அதிர்ச்சி[4] பெ. பயம். பயந்து அதிர்கை.

அதிர்வு பெ. 1.யாழ்நரம்பைச் சிதறவந்துகை. 2.ஒலி அடுக்கு.

அது பெ. அஃறிணை. ஒருமைச்சுட்டு (அது மரம்).

அந்தகன் பெ. 1.பார்வை இழந்தவன்.2.எமன்

அந்தணர் பெ. தேவர், முனிவர், பார்ப்பார்.

அந்தப்புரம் பெ. அரசி வாழுமிடம்.

அந்தரங்கம் பெ. மறைவு, இரகசியம்.

அந்தரிதம் பெ. குறை.

அந்தரிப்பு பெ. 1.உதவியின்மை. 2.தனித்திருக்கை.

அந்தாதி பெ. முதல்பாட்டின் இறுதி, அசை, சொல், தொடர், அடி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை அடுத்த பாட்டின் முதலாகக் கொண்டு பாடப்படும் செய்யுள் நூல் (சான்று; அபிராமி அந்தாதி).

அந்தி பெ. பகற்பொழுது முடியும்நேரம் (மாலை நேரம்).

அந்தில் பெ. 1.அசைச்சொல். 2.அவ்விடம்.

அந்து[1] பெ. கிணறு.

அந்து[2] பெ. கொலை.

அந்து[3] பெ. நெல்வண்டு.

அந்து[4] பெ. பாதகிண்கிணி.

அந்நியர் பெ. அயலவர்.

அந்நியம் பெ. பிறர்.

அநியாயம் பெ. நியாயத்திற்கு அப்பாற்பட்டது.
அநீதி பெ. அநியாயம்.
அநேகம் பெ. பல. அநேக நாட்கள்.
அநேகர் பெ. பலர்.
அப்பர் பெ. 1.சைவகுரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பாரில் ஒருவர். 2.தந்தையர்.
அப்பன் பெ. தந்தை.
அப்பாயி பெ. தகப்பனைப் பெற்றவள். பாட்டி
அப்பாவி பெ. 1.கபடமில்லாதவன். 2.பேதை.
அப்பிரயாசம்[1] பெ. 1.இருமுறை கூறுதல். 2.சமீபம்.
அப்பிரயாசம்[2] பெ. 1.தொழில். 2.கொள்ளுகை.
அப்பிரயாசம்[3] பெ. பெருக்கம்.
அப்பிரயாசம்[4] பெ. பரீட்சை.
அப்பிரயாசம்[5] பெ. பழக்கம்
அபாகம் பெ. 1.முதிராமை. 2.பாகமின்மை.
அபகாரகன் பெ. திருடன்.
அபயகுலசேகரன் பெ. ஒரு சோழன்.
அபடு பெ. சாமர்த்தியமின்மை.
அபத்தியதை பெ. மருத்துவச்சி.
அபயங்கரம் பெ. அச்சமின்மை.
அபிநயம் பெ. 1.அலங்கரிப்பு. 2.உபசரணை. 3.கூத்து. 4.கைமெய்காட்டல். 5.காமக்குறிப்பு.
அபிப்ராயம் பெ. 1.உட்கருத்து. 2.நோக்கம். 3.மறை பொருள். 4.கருத்து.
அபூர்வம் பெ. 1.அரிது. 2.புதுமை.
அம்பரர் பெ. அசுரர்.
அம்பலம் பெ. பலர் கூடும் வெளியிடம்.
அம்பலவாணகவிராயர் பெ. அறப்பளீசுவர சதகம் என்னும் அறநூலின் ஆசிரியர்.
அம்பலவாணதேசிகர் பெ. திருவாவடுதுறை மடத்துச் சிவத்துறவியார்.
அம்பறாத்தூணி பெ. அம்புக்கூடு.
அம்பி[1] பெ. 1.படகு. 2.தெப்பம். 3.ஓடம். 4.மரக்கலம். 5.மிபர்.
அம்பி[2] பெ. இறைகூடை.
அம்பிகாபதி பெ. 1.சிவன். 2.கம்பனுடைய மகன்.
அம்பு[1] பெ. கணை.
அம்பு[2] பெ. 1.ஆடு தின்னாப்பாளை. 2.எலுமிச்சை. 3.தளிர்.
அம்பு[3] பெ. 1.சரகாண்ட பாடாணம். 2.திப்பிலி.
அம்பு[4] பெ. நீர்.
அம்பு[5] பெ. மூங்கில்.
அம்பு[6] பெ. மேகம்.
அம்புலி[1] பெ. சந்திரன்.
அம்புலி[2] பெ. ஒரு பழைய தோலிசைக் கருவி.
அம்போதி பெ. பாட்டின் ஒரு பொருள்.
அம்மாத்திரம் பெ. அவ்வளவு.
அம்மானை பெ. மகளிர் மூவர் கூடிப் பல பந்துகளை மேலெறிந்து அம்மானைப் பாட்டுப் பாடிக்கொண்டு அவை நிலத்தில் விழாதவாறு மேன்மேலும் ஒவ்வொன்றாக விரைந்து கையால் தட்டி மேலெழுப்பி விரும்பிய நேரம் விளையாடும் விளையாட்டு.
அம்மி[1] பெ. அரைக்கல்.
அம்மி[2] பெ. மாமி.
அம்மிக்கல் பெ. அரைகல்.
அம்மை[1] பெ. 1.தாய். 2.காளி. 3.பாட்டி
அம்மை[2] பெ. அழகு.
அம்மை[3] பெ. 1.மேலுலகம். 2.முற்பிறப்பு. 3.வருட பிறப்பு.
அம்மை[4] பெ. **உடம்பில் கொப்புளம் போல் வரும் ஒருவகை நோய்;** அம்மை போட்டிருக்கு.
அம்மைவடு பெ. **அம்மைத்தழும்பு.** கொப்புள மாக அம்மைநோய்க் கண்டு அதனால் ஏற்பட்ட தழும்பு.
அமங்கலம் பெ. 1.நன்மையில்லாத நிகழ்ச்சி. 2.சாவு. 3.கைம்மை.
அமடு பெ. சிக்குகை.
அமத்தம் பெ. வெறியின்மை.
அமதி பெ. 1.காலம். 2.அறிவின்மை.
அமர்[1] பெ. 1.விருப்பம். 2.அன்பு. 3.காதல்.
அமர்[2] பெ. உட்கார் என்னேவல்.
அமர்க்களம் பெ. 1.போர்க்களம். 2.குழம்பிய ஆரவாரம். 3.பெருமை.

அமர்தல் வி. 1.உட்கார்ந்து இருத்தல். 2.அமைதியாதல். 3.இளைப்பாறுதல்.

அமர்ந்துதல் வி. விரும்புதல்.

அமல் பெ. நடைமுறை.

அமல்படுத்தல் வி. நடைமுறைப்படுத்தல்.

அமலன் பெ. குற்றமற்றவன்.

அமிழ் பெ. தானாக மூழ்குதல்.

அமிழ்தம்[1] பெ. 1.பால். 2.நீர். 3.சாவா மருந்து.

அமிழ்தம்[2] பெ. 1.இனிப்பு. 2.உப்பு.

அமுதசுரபி பெ. வற்றாது உணவுதரும் கலம் (மணிமேகலை பெற்றது).

அமுது பெ. 1.அமுதம். 2.சோறு. 3.அமுது படையல்.

அமுதம்[1] பெ. 1.அமிருதம், (சாவாமருந்து) தேவர் உணவு. 2.இனிமை. 3.உப்பு. 4.கடுக்காய். 5.சீந்தில். 6.தயிர். 7.திரிகடுகு. 8.திரிபவலை. 9.நீர். 10.நெல்லி. 11.பால்.

அமுதம்[2] பெ. பெருமை.

அமுதம்[3] பெ. முத்தி வேண்டுகை.

அமுதர் பெ. 1.இடையர். 2.வானோர்.

அமுதவெழுத்து பெ. செய்யுள்.

அமைச்சர் பெ. மந்திரி.

அமைச்சு பெ. மந்திரி ஆளுகைச் செய்கை.

அமைதி[1] பெ. 1.அடக்கம். 2.தன்மை.

அமைதி[2] பெ.சமயம்.

அமைதி[3] பெ. 1.சால்பு. 2.ஆரவாரமின்மை.

அமைப்பியல் பெ. அமைப்பு முறை.

அமைப்பு பெ. 1.அனுபோகம். 2.நியமிப்பு. 3.விதி.

அமையும் பெ. உண்டாகும்.

அமைவர் பெ. 1.ஞானிகள். 2.முனிவர்.

அமைவு பெ. 1.அடக்கம். 2.பொருந்துகை.

அய்யா பெ. தகுதிமிக்கவரை குறிக்கும் மரியாதைச் சொல். ஐயா,

அயலார் பெ. 1.அயலவர். 2.உறவினர் அல்லாதார். தாய், தந்தை, மாமன் ஆகிய உறவு வழியைச் சாராதவர்.

அயற்கூற்றுத்தொடர் பெ. ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவது போல் அமைப்பது. தான் வருவதாக அவன் கூறினான்.

அர்த்தம்[1] பெ. புதுமை.

அர்த்தம்[2] பெ. பொருள்.

அர்த்தவாதம் பெ. 1.பிரயோசனத்தைச் சொல்லுகை. 2.புகழ்கை.

அர்ப்பணம் பெ. 1.படையல். 2.உரித்தாக்குகை.

அரக்கர் பெ. 1.அசுரர். 2.இராட்சதர்.

அரசு[1] பெ. 1.இராசா. 2.இராச்சியபாரம். நாடு.

அரசு[2] பெ. ஒரு மரம்.

அரசு[3] பெ. வியாழன்.

அரங்கேற்றுதல் வி. சபையிலேறச் செய்தல்.

அரசி பெ. 1.தலைவி. 2.நாட்டை ஆள்பவள்.

அரண்மனை பெ. 1.உள்மனை. 2.கோட்டை.

அரம் பெ. அராவும் கருவி.

அரம்பையர் பெ. தேவமகளிர்.

அரா பெ. பாம்பு.

அரவு பெ. பாம்பு.

அரிதல்[1] வி. 1.துண்டு செய்தல். 2.நறுக்குதல்.

அரி[2] பெ. கரை அரிப்பு.

அரி[3] பெ. வைக்கோல் முதலியவை கட்டும் பிரி.

அரி[4] பெ. நமைச்சல்.

அரி[5] பெ. ஏற்படுகை.

அரி[6] பெ. நெற்கதிர்.

அரிச்சந்திரன்[1] பெ. ஒரு நாடக நூல்.

அரிச்சந்திரன்[2] பெ. உண்மை மட்டும் பேசும் ஓர் அரசன்.

அரிணை பெ. கள்.

அரிது பெ. அருமை.

அரிமர்த்தன பாண்டியன் பெ. மாணிக்க வாசகர் இவரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.

அரிமா[1] பெ. ஆண்சிங்கம்.

அரிமா[2] பெ. சிங்கவிராசி.

அரிமான் பெ. ஆண்சிங்கம்.

அரியாசனம் பெ. சிங்காசனம்.

அருக்கன்[1] பெ. 1.இந்திரன். 2.சூரியன். 3.மூத்த குமாரன்.

அருக்கன்[2] பெ. கால கிரகங்களிரண்டு.

அருக்கன்[3] பெ. சுக்கு.

அருக்கன்[4] பெ. ஞாயிற்றுக் கிழமை.

அருகில் பெ. சமீபத்தில் (அருகில் வா).

அருங்கவி பெ. 1.பல்வேறு சித்திரங்கட்கு அமைக்கக்கூடிய அருப்பா. 2.சித்திரப்பா.

அருங்காவல் பெ. கடுஞ்சிறை.

அருங்கு பெ. அருமை.

அருட்செல்வம் பெ. 1.அருளாகிய செல்வம். 2.பொருட்செல்வம் என்பதற்கு எதிர் இறைவன் அருள்.

அருட்பா பெ. 1.இராமலிங்க அடிகளார் பாடிய தெய்வப் பாடல் தொகுப்பு. 2.தேவாரம் திருவாசகம் போல இறைவன் ஏவியெழுப்பலாற் பாடப்பட்ட செய்யுள் அல்லது பாட்டு.

அருணகிரி[1] பெ. திருவண்ணாமலை. ஒரு பெயர் பெற்ற சிவநகர்.

அருணகிரி[2] பெ. அருணகிரிநாதர். திருப்புகழை எழுதியவர்.

அருணம் பெ. இடைக்கால இலக்கியத்திற் கூறப்படும் ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று.

அருணன்[1] பெ. எழுங்கதிரவன்.

அருணன்[2] பெ. 1.சூரியன். 2.சாரதி. 3.புதன். 4.வருணன்.

அருணை பெ. பாலை.

அருந்ததி[1] பெ. 1.வசிட்டர் மனைவி. 2. ஒரு பெண்.

அருந்ததி[2] பெ. அருந்ததி நட்சத்திரம்.

அருந்ததி[3] பெ. 1.கள். 2.கூத்து.

அருந்தியன் பெ. அன்புடையவன்.

அருந்தமிழ் பெ. அருமையான தமிழ்.

அருந்திறல் பெ. அரிய திறமை.

அருநிலம் பெ. பாலைவனம்.

அருநீர் பெ. பாசனத்திற்கு உதவும் ஏரி நீர்.

அருப்பம்[1] பெ. சிறிது.

அருப்பம்[2] பெ. மா.

அருப்பம்[3] பெ. அருமை.

அருப்பு[1] பெ. கிளைக்கை.

அருப்பு[2] பெ. தயிர்.

அருப்பு[3] பெ. 1.கொலை. 2.துயர்.

அரும்பதம்[1] பெ. பொருள் தெரியாச்சொல்.

அரும்பதம்[2] பெ. சிறந்த உணவு.

அரும்பர் பெ. அரும்பு.

அரும்பு பெ. மொட்டு வகை.

அரும்பிஞ்சு பெ. பூம்பிஞ்சு.

அரும்பிணி பெ. தீராநோய்.

அரும்புதல் வி. 1.தோன்றுதல். 2.முகிழ்த்தல்.

அருமேனி பெ. கடவுளின் உருவிலான வடிவம்.

அருனம்[1] பெ. 1.உயர்வானவை. 2.அருமை யானவை. 3.எளிதில் கிடையாமை.

அருனம்[2] பெ. 1.பெருமை. 2.ஆற்றாமை.

அருமை[1] பெ. அபூர்வம்.

அருமை[2] பெ. 1.பெருமை. 2.எளிதிற் பெறக் கூடாமை.

அருமை[3] பெ. பிரயாசம்.

அருள்சீவனம் பெ. இயேசு பெருமானின் வாக்கியங்கள்.

அருவாநாடு பெ. இடைக்காலப் பன்னிரு கொடுந் தமிழ் நாடுகளுள் ஒன்று.

அருவி[1] பெ. 1.மலையினின்று வீழும் நீர்வீழ்ச்சி. குற்றால அருவி. 2.ஆறு. 3.கழிமுகம். 4.நீரூற்று.

அருவி[2] பெ. தினைத்தாள்.

அருவினை பெ. செய்தற்கரிய செயல்.

அருள்[1] பெ. சாத்துவிகக் குணத்திலொன்று. அது கிருபை, அன்பு, அருளிச் செய்கை, ஈயென் னேவல், அருட்கட்டளை என்பனவாகும்.

அருள்[2] பெ. மரவகை.

அருள்[3] பெ. 1.உமை. 2.சத்தி.

அருள்மரம் பெ. முதிர்ந்த மாதுளைமரம்.

அருளகம் பெ. வெள்ளெருக்கு.

அருளப்பாடு பெ. அருட்கட்டளை.

அருள்வடிவன் பெ. இறைவன்.

அரை[1] பெ. பாதி.

அரை[2] பெ.இடுப்பு.

அரைநா பெ. முதலை.

அரைநாள் பெ. 1.நடுநாள். 2.பாதிநாள்.

அரைநூல் பெ. 1.அரைச்சதங்கை. 2.அரைஞான். 3.நூலிற்பாதி.

அல்[1] பெ. 1.அல்லென்னேவல். 2.முக்கூற்றொருமைத் தன்மை விகுதி (உ.ம்.) நடப்பல். 3.எதிர் மறைவிகுதி.

அல்[2] பெ. இரவு.

அல்[3] பெ. இருதிணை.

அல்கு பெ. இரவு.

அல்மோராசிறை பெ. உத்தராஞ்சல் மாநிலத்தில் உள்ள கைதிகளுக்கான இருப்பிடம்.

அல்லல் பெ. துன்பம்.

அல்லவை பெ. 1.பாவம். 2.நன்மை.

அல்லன் பெ. 1.இல்லாதவன். 2.தீய குணம் உள்ளவன்.

அல்லு பெ. எப்பொழுதும்.

அலங்காரம் பெ. ஒப்பனை.

அலகு[1] பெ. **பறவையின் மூக்கு.** அந்தப் பறவையின் அலகு எப்படியிருக்கிறது பார்.

அலகு[2] பெ. சுவர்ப்புறம்.

அலகு[3] பெ. கதிர்.

அலகு[4] பெ. துடைப்பு.

அலகு[5] பெ. பலகறை.

அலகு[6] பெ. கொழறு.

அலகு[7] பெ. அளவு.

அலர்மகள் பெ. 1.இலக்குமி. 2.சரசுவதி.

அலவர் பெ. **உழவுத்தொழில் செய்து வருபவர்.**

அலவாங்கு பெ. கடப்பாரை.

அலறு-தல் வி. **முழங்குதல்.** ஏன் இப்படி அலறுகிறாய்.

அலாதி பெ. மெய்யெழுத்து முதல்.

அலியெழுத்து பெ. ஆய்த எழுத்து.

அலுவலகம் பெ. **பணியாற்றுமிடம்.** அவனது அலுவலகம் வெகுதூரத்தில் உள்ளது.

அலை பெ. கடல் அலை.

அலைஎண் பெ. குறிப்பிட்ட நீளமுள்ள ஓர் அலைச் சுற்றுகளின் எண்ணிக்கை.

அவ்வியம் பெ. தேவர்களுக்கு கிடைப்பது.

அவசியம் பெ. 1.அவசரம். 2.ஆபத்து. **3.நிச்சயம்.** நீ அவசியம் என்வீட்டிற்கு நாளை வரவேண்டும்.

அவதூதகீதை பெ. துறவைபற்றிய ஒரு புத்தகம்.

அவதூறு பெ. **நிந்தை; பிறர்பழி கூறல்.** யாரையும் அவதூறாகப் பேசாதே.

அவமதிப்பு பெ. **மதியாமை.** பிறரை அவமதிப்பு செய்யாதே.

அவல்[1] பெ. **பள்ளம்.**

அவல்[2] பெ. **நெல் இடியலான உண்பொருள்.** எனக்கு அவல் மிகவும் பிடிக்கும்.

அவாந்தரை[1] பெ. உள்ளடக்கியது.

அவாந்தரை[2] பெ. **வறுமை.** என் வாழ்க்கை அவாந்தரையாக இருக்கின்றது.

அவாய் பெ. (இலக்.) வகரவுகரங்கெட்டுநின்ற அவாவு மென்னும் பெயரெச்சம்.

அவாவு பெ. 1.அவாவென்னேவல். 2.பெயரெச்சத் தொகை.

அவிஉணவு பெ. தேவர்களுக்கு வேள்வியின் பொழுது கொடுக்கப்படும் உணவு.

அவித்தம் பெ. மெய்மை.

அவிமுத்தி பெ. காசிக்கு அருகே இருக்கும் ஒரு புண்ணிய பூமி.

அவிரோதம் பெ. விரோதமின்மை.

அவிவேகம் பெ. **புத்திக் குறைவு.** அவன் எப்பொழுதும் அவிவேகம் உடையவன்.

அவிழ் பெ. **சோறு.** எனக்கு கொஞ்சம் அவிழ் தா.

அவுணர் பெ. **அசுரர்.** அவர் ஒரு அவுணர்.

அவையர் பெ. அவையிலுள்ளோர்.

அழகியல் பெ. அழகுடையோர்.

அழகின்சிரிப்பு பெ. பாரதிதாசன் இயற்றிய ஒரு நூல்.

அழகு[1] பெ. **வனப்பு.** அந்த ஓவியங்கள் எத்தனை அழகு வாய்ந்தவையாக இருக்கிறது.

அழகு[2] பெ. 1.தகுதி. **2.ஒழுங்கு.**

அழற்கடவுள் பெ. அக்கினிதேவன்.

அழி[1] பெ. 1.அற்றுப்போகை. 2.சிதைக்கை. 3.அழிவு. 4.கெட்டது.

அழி[2] பெ. அழி என்ற ஏவல்.

அழித்தல்[1] வி. 1.கண்டித்தல். 2.கொடுத்தல்.

அழித்தல்[2] வி. 1.குலைத்தல். 2.கரித்தல்.

அழித்தல்[3] வி. படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலில் ஒன்று.

அழிதல்[1] வி. 1.இரங்குதல். 2.கலங்குதல். 3.நிலை கெடுதல். 4.மனங்கலங்குதல். 5.வருந்துதல். 6.கெடுதல். 7.தவறல்.

அழிதல்[2] வி 1.குலைதல். 2.சிதறுதல்.

அழிதல்[3] வி. பெருகுதல்.

அழிவிலூர் பெ. **சிதம்பரம்.** நான் அழிவிலூருக்குச் செல்கிறேன்.

அழிவு[1] பெ. கழிமுகம்.

அழிவு[2] பெ. குற்றம்.

அழிவு[3] பெ. கேடு.

அழு வினையென்ஏவல். **1.கண்ணீர் விடு (கை).** நன்றாக அழு. 2.துன்பப்படு (கை).

அழுக்காறு பெ. 1.பொறாமை. 2.அசுத்தநெறி. 3.பொய். அழுக்காறு அவாவெகுளி எனத் தொடங்கும் திருக்குறளில் வள்ளுவர் ஒரு மனிதனுக்கு எத்தகைய குணங்கள் இருக்கக் கூடாது என்பதை கூறியுள்ளார்.

அழுந்தூர் பெ. ஓரூர்.

அழைத்தல்[1] வி. கூப்பிடுதல், வரவழைத்தல்.

அழைத்தல்[2] பெ. அழைப்பு மடல்.

அழைப்பு பெ. அழைக்கை.

அள்ளு பெ. ஒருங்குசேர்.

அளகு[1] பெ. 1.கோழி. 2.கோட்டான். 3.பெடை. 4.கூகை. 5.மயில் இவற்றின் பெண்.

அளகு[2] பெ. கார்த்திகை நாள்.

அளப்புதல்[1] வி. பேச்சினால் அலப்புதல்.

அளப்புதல்[2] வி. வாயினால் ஒன்றினை அலப்புதல் (தின்பண்டம்).

அளபு பெ. 1.ஓலங்காரம். 2.அஃது அளபெடையாய் வருவது.

அளபெடுத்தல் பெ. **எழுத்தின் மாத்திரையை எழுப்புதல்.** இவை செய்யுளுக்குரியவை.

அளவு பெ. அளவை; வரம்பு.

அளவெண் பெ. **அளவடி ஓரடியாக நான்கடி வருவது.** இவை செய்யுளுக்குரிய அளவு முறை களைக் குறிப்பவை.

அளவைவிளக்கம் பெ. பிரமாணங்களை விளக்கும் ஒரு நூல்.

அளித்தல்[1] வி. 1.ஈதல். 2.அருள் செய்தல். 3.காத்தல். 4.அன்பு செய்தல்.

அளித்தல்[2] வி. சொல்லுதல்.

அளை[1] பெ. 1.புற்று. 2.மலைக்குகை.

அளை[2] பெ. ஏழாம் வேற்றுமையுருபு.

அளை[3] பெ. 1.தயிர். 2.மோர்.

அளை[4] பெ. வளை.

அளை[5] பெ. வெண்ணெல்.

அளை[6] பெ. முழை.

அற்புதர் பெ. 1.கம்மாளர். **2.ஞானிகள்.** அவர்கள் எல்லோரும் அற்புதர்கள்.

அற்றவர் பெ. எதன்மீதும் பற்றில்லாதவர்.

அற்றார் பெ.1.பற்று இல்லாதவர். 2.வறியவர்.

அற்று[1] இ.சொ. 1.அத்தகைய. 2. அது போன்றது. 3.தன்மையுடையது. 4.அவ்வளவு. **5.போலும்.** அதுபோலும்.

அற்று[2] இ.சொ. **1.அது போன்றது** (வன்பாற் கண் வற்றல் மரம் தளிர்தற்று). 2.ஒரு சாரியை.

அறத்தார் பெ. **புண்ணியமுள்ளவர்.** அவர் மிகவும் அறத்தார்.

அறத்தொடுநிலை பெ. அறத்தொடு நிற்றல்.

அறம்[1] பெ. **1.தர்மம்.** அறம் செய விரும்பு. (ஆத்திச் சூடி). 2.கடமை. 3.ஒழுக்கம். 4.கற்பு. 5.இல்லறம். 6.துறவறம். 7.கருமம். 8.கையறம்.9. தகுதியானது. 10.புண்ணியம். 11.பெரியோரியல்பினொன்று.

அறம்[2] பெ. 1.அறநூல். 2.நூற்பயன். 3.ஞானம்.

அறம்[3] பெ. சமயம்.

அறம்[4] பெ. 1.அறக்கடவுள் 2.யமன். 3.தருமதேவதை.

அறம்[5] பெ. நோன்பு.

அறம்[6] பெ. 1.அறச்சாலை. 2.சாலை.

அறவர் பெ. 1.பெரியோர். 2.முனிவர்.

அறவொழுக்கநூல்கள் பெ. 1.திருக்குறள். 2.நாலடியார். 3.நான்மணிக்கடிகை. 4.இனியவை நாற்பது. 5.இன்னா நாற்பது. 6.திரிகடுகம். 7.ஆசாரக் கோவை. 8.பழமொழி நானூறு. 9.சிறுபஞ்சமூலம். 10.முதுமொழிக் காஞ்சி. 11.ஏலாதி இவை அனைத்தும் வாழ்க்கைக் குரிய அற ஒழுக்கங்களைக் கூறும் நூல்களாகும்.

அறன் பெ. அறக்கடவுள்.

அறிக்கை[1] பெ. 1.**அறிவிக்கை.** நம் பள்ளியில் நாளை நடைபெறும் ஆண்டுவிழாவிற்கு அறிக்கை வந்தாச்சு. 2.**விளம்பரம்.** செய்தித் தாளில் தேர்தல் அறிக்கை வந்தவண்ணம் உள்ளன.

அறிக்கை[2] பெ. 1.அறிவு. 2.கட்டுப்பாடு.

அறிக்கைபண்ணுதல்[1] வி. அறிவித்தல்.

அறிக்கைபண்ணுதல்[2] வி. கட்டுப்படுத்தல்.

அறிக்கைபண்ணுதல்[3] வி. இறைவனிடம் பாவ அறிக்கை பண்ணுதல், குற்றத்தை ஒப்புக் கொள்ளுதல்.

அறிகருவி பெ. **ஞானேந்திரியம்.** அறிவுசார்ந்த நிலையில் செயல்படுவது.

அறிகில்லார் பெ. **அறிய இயலாதவர்.** இவர்கள் அறிகில்லார்கள்.

அறிகுறி பெ. **அடையாளம்.** உன் உடம்பில் ஏதாவது அறிகுறி இருக்கா.

அறிஞர் பெ. **அறிவாளி.** அறிஞர் அண்ணா மாபெரும் மேதை.

அறிஞன் பெ. 1.முனிவன். 2.புலவன். 3.அறிவுடையோன்.

அறிதல் வி. 1.**தெரிந்துகொள்ளுதல்.** எல்லா வற்றையும் அறிதல் வேண்டும். 2.உணர்தல்.

அறிமுகம் பெ. **கண்டபழக்கம்.** அவரிடம் முன்பின் அறிமுகம் இருக்கா.

அறியாமை பெ. மடமை.

அறிவியல்கூடம் பெ. ஆய்வகம்.

அறிவியல்நோக்கு பெ. அறிவியல் பார்வை; ஆய்வு நோக்கு; ஆராய்ந்து அறிகை; நாம் ஒவ்வொருவரும் அறிவியல் நோக்கு உள்ளவர் களாய் செயல்பட வேண்டும்.

அறிவியல் முறை பெ. அறிவியலில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறை.

அறிவில்லாதவன் பெ. மூடன். அவன் அறிவு இல்லாதவன்.

அறிவிலி பெ. மூடன்.

அறிவீனம் பெ. 1.அஞ்ஞானம். 2.அறியாமை. அறிவீனமாய் இருக்காதே.

அறிவீனன் பெ. மூடன்

அறிவு பெ. 1.ஆன்மா. 2.**கல்வி.** அறிவை விரிவு செய். 3.பொறியுணர்வு. 4.**புத்தி.** அறிவுடன் பேசு. 5.ஞானம். 6.போதனை. 7.அறிகை. 8.உணர்வு. 9.அறிய வேண்டியவை.

அறிவுடையார் பெ. **கற்றறிவாளர்.** அறிவுடையார் எல்லா செயல்களையும் ஒழுங்காக திறம்பட செய்வார்.

அறிவுரை பெ. **ஆலோசனை.** ஆசிரியர் மாணவருக்கு அறிவுரை வழங்கினார்.

அறு[1] பெ. 1.**துண்டாக்குகை.** அந்தக் கயிற்றினைப் பாதியாக அறுத்துப் போடு. 2.இற்றுப்போகை. 3.கீறுகை.

அறு[2] பெ. சலிப்பு உண்டாக்குகை.

அறுகோணம் பெ. **ஆறு மூலைகள் உள்ள வடிவு.** செங்கோணம், முக்கோணம் என கணக்கில் வரும் அறுகோணம்.

அறுசமயம் பெ. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணாபத்தியம் எனும் அறுவகை சமயங்கள்.

அறுசுவை பெ. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு, எனும் அறுசுவை உணவு முறைகள்.

அறுபத்துநாலடிச்சிந்து பெ. சிந்துக்கவியுள் ஒன்று.

அறுதொழிலோர் பெ. ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தலென்னும் அறுதொழிலையுடையோராகிய பார்ப்பார் எனும் அந்தணர். (பிராமணர்).

அறுந்தொகை பெ. மிச்சமில்லாத தொகை.

அறுபகை பெ. அறுவகையான உட்பகைகள். அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்பன.

அறுவகைப்படை பெ. காட்டுப்படை, கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை, பகைப்படை, மூலப்படை என்பன.

அறுவகைப்பொருள் பெ. வினைச்சொற்கள் சொற்பொருளாறு, அவை கருவி, காலம், செய்படு பொருள், செயல், செய்பவன், நிலம் என்பன.

அறுவர்க்குஇறையாங்கை பெ. ஏழுகன்னியருள் இளையவளாகிய பிடாரி.

அறை[1] பெ. 1.கட்டப் பகுதி. 2.வீட்டின் அறை. அந்தப் புத்தகம் என் அறையில் இருக்கிறது. 3.அரங்கு.

அறை[2] பெ. சதுரங்கத்தின் கட்டம்.

அறை[3] பெ. 1.பாத்தி. 2.பாறை. 3.மலையுச்சி.

அறை[4] பெ. பறையடிக்கை.

அறை[5] பெ. திரை.

அறை[6] பெ. 1.சொல். 2.எழுத்தினோசைச்சொல்.

அறை[7] பெ. பாசறை. போர் நிகழும் இடம்.

அறை[8] பெ. அடி.

அறை[9] பெ. அறுந்தது.

அறைதல்[10] வி. அறுதல்.

அறைகுவன் பெ. சொல்லுபவன்.

அன்பளிப்பு பெ. 1.பரிசு. ஏதாவது அன்பளிப்பு கொடுத்தார்களா. 2.இலவசம்.

அன்பிலது பெ. அன்பில்லாத உயிர்கள்.

அன்பின்ஐந்திணைகள் பெ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகள்.

அன்பு பெ. 1.ஆசை. என் அப்பா அம்மாவுக்கு என்மேல் அன்பு அதிகம். 2.தயை. 3.பெரியோர் இயல்பினொன்று.

அன்னம்[1] பெ. 1.சோறு. 2.தானியம்.

அன்னம்[2] பெ. புள்வகை.

அன்னம்[3] பெ. கவரிமான்.

அன்மொழி பெ. 1.அல்லாத மொழி. 2.பிறமொழி.

அன்மொழித்தொகை பெ. (இலக்.) உம்மை, உவமை, பண்பு, வினை, வேற்றுமை எண்ணுந் தொகைநிலைத் தொடர் மொழிகளின் புறத்துத் தொக்க நின்பன (எ.கா.) பொற்றொடி

அன்னவர் பெ. இறைவர். அன்னவர் எனக்கு காட்சியளித்தார்.

அன்னியன் பெ. 1.பிறன். அவன் ஒரு அன்னியன் என்று நினையாதே. 2.அயலான்.

அனிச்சை[1] பெ. 1.அனிச்சப்பூ. 2.ஒரு பூடு. 3.ஒரு மரம். 4.நாகமல்லி.

அனிச்சை[2] பெ. விருப்பமின்மை.

அனுக்கம் பெ. 1.வருத்தம். 2.வாட்டம். 3.பலவீனம். என் உடல் மிகவும் அனுக்கமாக உள்ளது.

அனுக்கொள்கை பெ. அனுபற்றிய கோட்பாடு (டால்டன் அணுக்கொள்கை)

அனுசரித்தல் வி. 1.சார்ந்து நடத்தல். வீட்டிலும் வெளியிலும் எல்லோரிடமும் அனுசரித்து நடக்க வேண்டும். 2.மேற்கொண்டு நடத்தல். 3.வழிபடுதல்.

அனுசிந்தை பெ. தியானிக்கை.

அனுதினம் பெ. 1.நாள்தோறும். அனு தினமும் கடவுளை வணங்கவேண்டும். 2.எப்போதும்.

அனுபோகித்தல் வி. அனுபவித்தல்.

அனுமதி[1] பெ. இசைவு.

அனுமதி[2] பெ. பெருமையில்லாதவர்.

அனைத்திலர் பெ. ஒன்றுமில்லாதர்.

அனையார் பெ. 1.போன்றார். 2.அத்தன்மை உடையவர். 3.ஒத்தவர்.

ஆ

ஆக்கம்[1] பெ. 1.செல்வம். 2.இலாபம். ஆக்கச் செலவுக் கணக்கு.

ஆக்கம்[2] பெ. 1.கொடிப்படை. 2.படை.

ஆக்கம்[3] பெ. 1.இலக்குமி. 2.பெண். 3.பெரு முகம்.

ஆக்கம்[4] பெ. எழுச்சி.

ஆக்கம்[5] பெ. வகுப்பு.

ஆக்குநர் பெ. செய்பவர்.

ஆக்கவினை பெ. செல்வத்தால் வரும் வினைச் செயல்.

ஆக்கை[1] பெ. உடல்.

ஆக்கை[2] பெ. வைக்கோல் புரிக்கயிறு.

ஆகடியம் பெ. ஏளனம்.

ஆகடியமான எழுத்து பெ. பரிகாசச் சொற்கள் (ஏளனம்).

ஆகம் பெ. உடல்.

ஆகமம்[1] பெ. 1.புனிதநூல். கிறித்துவ, சைவ வைணவ ஆகமம். 2.தருமநூல்.

ஆகமம்[2] பெ. **உறுதிக்கடுதாசி.** பஞ்சாயத்தில் அவள் வேண்டாம் என்று ஆகமம் எழுதிக் கொடுத்து விட்டான்.

ஆகமம்[3] பெ. 1.கல்வி. 2.ஞானம். 3.ஒரு சாத்திரம்.

ஆகமம்[4] பெ. சேருகை.

ஆகாது பெ. **கூடாது.** அது ஆகாது இது ஆகாது என்று சொல்லாதே.

ஆகில் இ.சொ. காரணப்பொருளில் வருவது (ஆனால்).

ஆகிலும் இ.சொ. இருந்தபோதிலும்.

ஆகின் வி.அ. ஆயின்.

ஆகின்று வி.மு. 1.ஆயிற்று. 2.அமைந்தது.

ஆகு பெ.அ. பொருந்திய.

ஆகுக வியங்.வி. அமைக.

ஆகுபு வி.எ. ஆகி, செய்பு என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்

ஆகுபெயர் பெ. ஒன்று மற்றொன்றுக்குத் தொன்று தொட்டு ஆகிவரும் பெயர் (சேலம் தின்றான்/ சேலத்து மாம்பழம்).

ஆகுலம்[1] பெ. 1.ஆரவாரம். 2.ஒலி.

ஆகுலம்[2] பெ. 1.கலக்கம். 2.துன்பம். 3.வருத்தம்.

ஆகையினால் இ.சொ. ஆதலால்.

ஆகோ இ.சொ. வியப்பும் இரக்கமும் கலந்த குறிப்புச்சொல்.

ஆங்க வி.அ. **ஆங்கு.** ஆங்க வந்தாச்சா.

ஆங்கண் வி.அ. 1.அவ்விடம். 3.அப்பொழுது. 2.அக்கணம்.

ஆங்காங்கு வி.அ. 1.ஆங்காங்கே. 2.**அப்படி அப்படி.** ஆங்காங்குச் சிறிது மழை பெய்து உள்ளது.

ஆங்கு வி.அ. 1.அவ்விடம். 2.அங்கு. 3.அக்காலம். 4.உடனே. 5.அவ்விதம். 6.அப்படி. 7.அசை நிலை. 8.இடப்பொருள் தரும் ஏழனுருபு.

ஆங்ஙனம் வி.அ. 1.அவ்வாறு. 2.அவ்வாறே

ஆங்கிலம் பெ. இங்கிலீசு பாசை (பே.வ.) பிரிட்டிஷ் மொழி.

ஆச்சரியம் பெ. வியப்பு.

ஆச்சு வி.மு. ஆயிற்று, நேரம் ஆச்சு, சீக்கிரம் புறப்படுங்கள்.

ஆச்சுது வி.மு. ஆயிற்று; நேரம் ஆச்சுது சீக்கிரம் புறப்படுங்கள்.

ஆசற வி.அ. (முற்றிலும்) குறையற.

ஆசனம் பெ. **இருக்கை.** அந்த ஆசனத்தில் உட்காரு.

ஆசான்[1] பெ. 1.ஆசிரியன். உன்னுடைய ஆசான் சொல்வதைக்கேள். 2.மூத்தோன். 3.முருகன்.

ஆசான்[2] பெ. ஒரு பண்.

ஆசான்[3] பெ. வியாழன்.

ஆசிரியப்பா பெ. அகவல் பாவகை.

ஆசிரியர் பெ. **1.பயிற்றுவிப்பவர்.** பள்ளித் தலைமை ஆசிரியர். 2.நூலை பதிப்பித்தவர். 3.நூலாசிரியன். 4.புலவன். 5.குரு.

ஆசிரியை பெ. **ஆசிரியருக்குரிய பெண்பால்.** பள்ளி தலைமை ஆசிரியை.

ஆசீர்வதித்தல் வி. வாழ்த்துதல்.

ஆசீவகர் பெ. சமணமுனிவர்.

ஆசுகவி பெ. 1.கொடுத்த பொருளை உடன் கவியாகப்பாடும் புலவர். 2.நாற்கவியினொன்று, அது பொருளடி, பாவணி முதலியன கொடுத்து மற்றொருவன் பாடுவெனப் பாடுங்கவி.

ஆசை பெ. 1.விருப்பம். 2.பொன். 3.திக்கு.

ஆட்கொல்லி[1] பெ. **1.கொலைகாரன்.** அவன் சரியான ஆட்கொல்லி. 2.**கொலைகாரி.** அவள் சரியான ஆட்கொல்லி.

ஆட்கொல்லி[2] பெ. பணம்.

ஆட்சிமொழி பெ. அரசின் அலுவலகமொழி. அவ்வப்பகுதியில் தாய்மொழியே ஆட்சிமொழி.

ஆட்டம்[1] பெ. 1.அசைவு. உனது ஆட்டம் நன்றாக இருந்தது. 2.அலைவு. 3.தன்மை. 4.முயற்சி.

ஆட்டம்[2] பெ. சூதாடுகை.

ஆடவர் பெ. 1.ஆண்மக்கள். 2.இளையோர். 3.வயது முப்பத்திரண்டிற்கும் நாற்பத்தெட்டிற்கும் இடைப்பட்டவர்.

ஆடுபரி பெ. ஆடுகின்ற குதிரை.

ஆண் பெ. ஆடவர்.

ஆண்டன் வி.அ. ஆங்கு; அவன் ஆண்டன் வந்தாச்சா.

ஆண்டாண்டு (ஆட்டாண்டு) வி.அ. காலங்காலமாய்

ஆண்டி பெ. 1.தவசி. 2.பண்டாரம். 3.யாசகி.

ஆண்டு பெ. திங்கள் கொண்ட கால அளவு. ஆங்கில ஆண்டு, தமிழ் ஆண்டு, திருவள்ளுவர் ஆண்டு.

ஆண்பால் பெ. தமிழின் ஐம்பால்களில் ஆணினைக் குறிக்கும் ஒன்று.

ஆண்மை பெ. 1.ஆண்மை தன்மை. 2.ஆளும் தன்மை. 3.வெற்றி. 4.மனமுயற்சி. 5.வாய்மை. 6.உடைமை.

ஆணி பெ. 1.சுவர் அல்லது பலகையில் அடிக்கப் பயன்படுவது. 2.இரும்பால் ஆன பொருள்.

ஆணித்தரம் பெ. உறுதி.

ஆணிவேர் பெ. உச்சிவேர், உயிர்வேர்.

ஆணை பெ. 1.ஆக்கினை. 2.ஏவல். 3.அடையாளம். 4.சத்தியம். 5.சபதம். அவர் எனக்கு உதவி செய்வதாக ஆணையிட்டார். 6.தடுத்தல். 8.நிர்ணயம். 8.மெய். 9.வெற்றி.

ஆத்திகம் பெ. இறை நம்பிக்கை. அவர்கள் ஆத்திகம் பேசுபவர்கள்.

ஆத்திச்சூடி பெ. ஔவைசெய்த ஒரு நீதி நூல். அறம் செய விரும்பு (ஆத்திச்சூடி).

ஆத்துமா[1] பெ. 1.அறிவு. 2.உறுதி. 3.புத்தி. 4.சுபாவம்.

ஆத்துமா[2] பெ. 1.உடல். 2.ஆன்மா, மனசு. 3.சீவன்.

ஆத்துமா[3] பெ. 1.சூரியன். 2.தீ.

ஆத்துமா[4] பெ. 1.பிரமன். 2.பிராமணன். 3.மகன்.

ஆத்துமா[5] பெ. கரடிக்குட்டி.

ஆதங்கம்[1] பெ. 1.ஆபத்து. 2.உபத்திரவம். 3.கலக்கம்.

ஆதங்கம்[2] பெ. காய்ச்சல்.

ஆதங்கம்[3] பெ. 1.தீங்கு. 2.நோய்.

ஆதங்கம்[4] பெ. பறையொலி.

ஆதரவாளர் பெ. ஆதரவு அளிப்பவர்.

ஆதவன் பெ. ஞாயிறு; சூரியன்.

ஆதி[1] பெ. 1.முதல். 2.காரணம். 3.பழைமை. 4.தொடக்கம். 5.கடவுள்.

ஆதி[2] பெ. 1.குதிரையின் தேரோட்டம். 2.குதிரைக் கதியுள் ஒன்று.

ஆதி[3] பெ. தாலவகையுள் ஒன்று.

ஆதிநூல் பெ. 1.முதனூல். 2.வேதம்.

ஆதிபகவன் (ஆதிபகவான்) பெ. 1.கடவுள். முழுமுதற் பொருள். 2.சிவன்.

ஆந்தரதேசம் பெ. இது ஒருதேசம். இது கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கு மத்தியில் உள்ளது. இதைத் தெலுங்குதேசம் எனப்படும் திரிலிங்க தேசமென்பது வடமொழி வழக்கு.

ஆபத்து பெ. 1.இடையூறு. எனக்கு எப்பப் பார்த்தாலும் ஆபத்து வந்தவண்ணம் உள்ளது. 2.தீங்கு. 3.இடர். 4.துன்பம்.

ஆய்தம் பெ. ஆய்தவெழுத்து (ஃ) எஃகு.

ஆய்தொடி பெ. ஆராய்ந்தெடுத்த கைவளை.

ஆய்வாளர் பெ. ஆய்வு செய்பவர்.

ஆய்வு பெ. 1.ஆராய்ச்சி – அறிவியல் ஆய்வு, இலக்கிய ஆய்வு. 2.பரிசீலனை.

ஆய்வேடு பெ. ஆராய்ச்சி ஏடு.

ஆயம் பெ. தோழியர் கூட்டம்.

ஆயுள் பெ. 1.வாழுங்காலம். 2.உயிர். 3.பதவிக் காலம்.

ஆர்அவை பெ. நிறைந்த அவை (புலவர்கள்).

ஆர்கலி[1] பெ. 1.ஆர்ப்பரிக்கும் கடல். 2.வெள்ளம்.

ஆர்கலி[2] பெ. 1.மிக்க ஒலி. 2.ஆரவாரம்.

ஆர்வம் பெ. 1.விருப்பம். 2.மும்முனைப்பு.

ஆர்வலர் பெ. அன்புடையவர்.

ஆரம் பெ. மாலை.

ஆரம்பம் பெ. தொடக்கம்.

ஆரவாரம்[1] பெ. ஆடம்பரம்.

ஆரவாரம்[2] பெ. 1.ஒலி. 2.பேரொலி. 4.கிளர்ச்சி. 5.கொண்டாட்டம்.

ஆராதனை பெ.வழிபாடு.

ஆராய்ச்சி பெ. ஆராய்வு.

ஆராய்ச்சி அறிவு பெ. நூலறிவு.

ஆராயுதல் வி. ஆராய்ந்து பார்த்தல், துருவிப் பார்த்தல்.

ஆரியம் பெ. வடமொழி, ஆசிய நாடு.

ஆருயிர் பெ. அருமையான உயிர்.

ஆரோக்கியம் பெ. 1.உடல்நலம். 2.செழிப்பு.

ஆல் பெ. ஆலமரம்.

ஆலயம் பெ. கோயில்.

ஆலை பெ. 1.கரும்பு. 2.கரும்பாலை. 3.கொட்டில். 4.யானைக்கூடம். 5.தொழிற்சாலை. 6.பஞ்சாலை. 7.செக்காலை.

ஆவணம்[1] பெ. 1.முறையாகத் தொகுக்கப்படும் செய்தி. 2.அடையாளம். 3.உரிமை. 4.உரிமைப் பத்திரம்.

ஆவணம்[2] பெ. 1.கடை. 2.கடைவீதி. 3.கரை. 4.தெரு. 5.தேர் மொட்டுப் பொருந்திய பீடம்.

ஆவணம்[3] பெ. புநர்பூசம். (நட்சத்திரம்)

ஆழ் பெ.அ. 1.மூழ்கு (கை). 2.ஆழமான.

ஆழி[1] பெ. 1.கடல். 2.கடற்கரை.

ஆழி[2] பெ. மோதிரம்.

ஆழி[3] பெ. 1.தேர்ச்சக்கரம். 2.சக்கரம். 3.உருளை. 4.வண்டி. 5.வட்டம்.

ஆழி[4] பெ.கட்டளை.

ஆழ்தல் வி. அமுந்துதல்.

ஆழ்வார்கள் பெ. 12 வைணவப் பெரியார்கள்.

ஆள் பெ. மனிதன்.

ஆள்வினை பெ. முயற்சி.

ஆளவந்தார் பெ. ஆழ்வார்களுளொருவர்.

ஆளுகை பெ. 1.ஆட்சி. 2.ஆளுந்தன்மை. 3.இராச்சியப்பொது.

ஆளுமை பெ. ஆளுகின்ற தன்மை.

ஆற்றல்[1] பெ. 1.ஞானம். 2. ஒரு செயல் செய்கை. 3.அதிக பலம். 4.பொறை. 5.மிகுதி. 6.முயற்சி. 7.வலிமை (வல்லமை). 8.வாய்மை. 9.பொறை. 10.கடைப்பிடிக்கை. 11.சக்தி.

ஆற்றல்[2] பெ. ஆண்மை.

ஆற்றல்[3] பெ. 1.இன்னசொல் இன்ன பொருளுணர்த்துமென்னும் நியதி. 2.வெற்றி. 3.தணிக்கை. 4.நிலையுடைமை.

ஆற்றாமை பெ. 1.சகிக்கக்கூடாமை. 2.தகுதி யின்மை. 3.பொறாமை. 4.முடியாமை. அவளுக் கிருக்கும் மனக்கவலையின் ஆற்றாமையால் அந்த வார்த்தையைக் கூறிவிட்டாள்.

ஆற்றுதல் வி. 1.இல்வாழ்க்கை நடத்துதல். 2.ஆற்றுப்படுத்துதல்; சாந்தப்படுத்துதல்.

ஆற்றுப்படை பெ. 1.ஒரு வள்ளலிடம் பரிசு பெற்றவன். பரிசு பெற வேண்டியவனை ஆற்றுப் படுத்துதல். 2.முருகனைப் போற்றிப் பாடப்பட்ட ஆற்றுப்படை நூலாகிய திருமுரு காற்றுப்படை.

ஆற்றுமா பெ. 1.ஆன்மா. 2.பிராணன்.

ஆறறிவு பெ. ஐந்தறிவுக்கு மேற்பட்ட ஆறாம் அறிவு, பகுத்தறிவு.

ஆறாயிரப்படி பெ. திருவாய்மொழியின் முதல் விரிவுரை.

ஆறு[1] பெ. 1.நல்வழி 2.வழி; பாதை.

ஆறு[2] பெ. ஓர் எண் (6).

ஆறு[3] பெ. நதி (நீர்நிலை).

ஆறு[4] பெ. அமைதி.

ஆறுதல்[5] வி. 1.ஆற்றுதல். 2.சூடுகுறைதல்

ஆற்றுவார் பெ. 1.செயல் செய்பவர். 2.ஒரு காரியத்தைச் செய்து முடிப்பவர். 3.சாந்தப் படுத்துபவர்.

ஆன் பெ. மாடு.

ஆன்ற பெ.அ. 1.மாட்சிமைப்பட்ட. 2.பரந்த.

ஆன்றோர் பெ. கல்வி, கேள்வி, பண்பு ஆகிய வற்றில் சிறந்தோர்.

ஆனந்தம் பெ. 1.பேரின்பம். 2.கடவுள். 3.மகிழ்ச்சி.

ஆனம் பெ. குழம்பு.

ஆனி[1] பெ. 1.ஒரு மாதத்தின் பெயர். 2.உத்திராட நாள். 3.கேட்டை. 4.மூலநாள்.

ஆனி[2] பெ. எல்லை.

ஆனி[3] பெ. கேடு.

ஆனி[4] பெ. வெட்டுக்குருத்து.

இ

இக்கட்டு[1] பெ. 1.இடநெருக்கம். 2.தடை.

இக்கட்டு[2] பெ.1.தரித்திரம். 2.துன்பம்.

இக்கட்டு[3] பெ.வெல்லக்கட்டி.

இகரக்குறுக்கம் பெ. குற்றியலிகரம்.

இகல் பெ. பகை.

இகழ்த்தல் வி. தூற்றுதல்.

இகழ்தல் வி. 1.அவமதித்தல். 2.இழிவு படுத்துதல்.

இசை[1] பெ. 1.இசைப்பாட்டு. 2.இசைப்பு. 3.இனிமை. 4.ஒலி. 5.மெல்லிசை. 6.ஓசை. 7.நரம்பிற் பிறக்கும் ஓசை. 8.சீர். 9.குரல்.10. இயல். இசை, நாடகம் என்னும் முத்தமிழில் ஒன்று.

இசை[2] பெ. இணக்கம்.

இசை[3] பெ. கூடிநிற்றல்.

இசை[4] பெ. கொடை.

இசை[5] பெ. 1.சொல். 2.பண்பு. 3.புகழ்.

இசை[6] பெ. பொன்.

இசை[7] பெ. 1.விளரி. 2.தாரம். 3.துத்தம்.

இசை[8] பெ. உடன்படுகை.

இசை[9] பெ. ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை எனும் செய்யுளில் வரும் இசை வகை.

இசைஞானி பெ. இசையறிவு மிக்கவர்.

இசைப்பாட்டு பெ. இராகம்.

இசைபெறுதல் வி. புகழ்பெறுதல்.

இசையந்தாதி பெ. **ஓரலங்காரம்.** இசைக் கூறுகளுள் ஒன்று.

இசையிலக்கணம் பெ. **இசைக்குரிய இலட்சணம்.** அவை ஆடல், பாடல், ஆதியிசை, முத்தமிழ், பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம் என்பனவாகும்.

இட்லி பெ. அரிசிமாவும் உளுந்துமாவும் கலக்கப்பட்ட நிலையில் நீராவியில் வேக வைத்த ஒரு உணவு.

இடக்கரடக்கல் பெ. **அவையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்துச் சொல்லுதல்.** மலங் கழுவுதலை கால்கழுவுதல் என்பது.

இடர் பெ. 1.ஆபத்து. 2.இடைஞ்சல். 3.துன்பம்.

இடித்தல்[1] வி. கழிந்துரைத்தல்.

இடித்தல்[2] வி.மாவிடித்தல்.

இடித்தல்[3] வி. சுவர் வீடு முதலியவற்றை கடப்பாறை போன்ற கருவிகளால் பொடி யாக்குதல்.

இடுதல்[1] வி. போடுதல்.

இடுதல்[2] வி. பொரிதல்.

இடுதல்[3] வி. பூசுதல்.

இடுதல்[4] வி. சூட்டுதல்.

இடுதல்[5] வி. கத்தல்.

இடுதல்[6] வி. எழுதல்.

இடுதல்[7] வி.அணிதல்.

இடுதல்[8] வி. பிறப்பிதல்.

இடுக்கண் பெ. துன்பம்.

இடுகை பெ. ஈகை.

இடும்பன் பெ. 1.ஓரரக்கன். 2.**குமரனேவல் செய்வோன்.** முருகக்கடவுளின் ஆணைக்குக் கட்டுப்பட்ட ஒருவன்.

இடும்பை பெ. 1.துன்பம். 2.தீமை. 3.**நோய்.** அவனுக்கு உடம்பில் வரக்கூடாத இடும்பை வந்தது (பே.வ.). 4.தரித்திரம். 5.அச்சம். என் இடும்பையை தீர்த்தருள்வாய் இறைவா (பே.வ.).

இடைச்சங்கப்புலவர் பெ. அகத்தியன் முதலிய ஐம்பத்தொன்பதின்மர்.

இடைச்சங்கம் பெ. **மதுரையில் இரண்டாவதா யிருந்த சங்கம்.** முதற்சங்கத்திற்கும் கடை சங்கத்திற்கும் இடைப்பட்ட சங்கம்.

இடைச்சி பெ. 1.முல்லைநிலப் பெண். 2.இடையை உடையவள்.

இடைச்செருகல் பெ. **மூல நூலில் பிறரால் சேர்க்கப்படும் பகுதி.** இலக்கியத்தில் இடைச் செருகல் உண்டு என்பது ஒரு பொதுக்குற்றச்சாட்டு.

இடைச்சொல் பெ. **பெயர் வினைகளோடு சார்ந்து வருவது.** கம்பனும், இளங்கோவும் வந்தனர். உம் எனும் இடைச்சொல்.

இடைப்போலி பெ. இடையில் எழுத்து மாறும் போலி வகை, அரயர் – அரையர்.

இணங்குதல்[1] வி. **சேருதல்.** பறவைகள் கூட்டிற்குள் இணங்கின.

இணங்குதல்[2] வி. **ஒத்துப்போதல்.** உன்கருத்திற்கு நான் இணங்குகின்றேன்.

இணை பெ. 1.முதன்மைக்குத் துணை. 2.இரட்டை. 3.இரண்டு. 4.சேர்க்கை. 5.ஒப்பு. 6.இசைவு.

இணைதல் வி. சேர்தல்.

இந்திரவில் பெ. 1.வானவில். 2.இந்திரனின் தனுசு (வில்).

இந்திரவிழா பெ. இந்திரனைக் குறித்துச் செய்யும் வழிபாட்டுத் திருநாள்.

இந்து பெ. நிலவு.

இம்சை பெ. துன்பம்.

இமயம் பெ. 1.இமயமலை. 2.பொன்மலை.

இமையவர் பெ. தேவர்.

இயக்கம் பெ. 1.அசைகை. 2.இயங்குகை. 3.நடமாடுகை 4.பலம். 5.பாக்கியம். 6.பிரகாசம். 7.பெருமை. 8.போதல். 9.மிகுதி. 10.வடதிசை.

இயக்குதல் வி. 1.செய்குதல். 2.நடமாடுதல்.

இயக்குநர் பெ. 1.நடிப்பாற்றல் மிக்கவரும் நடிப்பைக் கற்றுத் தருபவரும். 2.செய்யவைப்பவர்.

இயக்குருபடங்கள் பெ. வரைபடங்களுக்குப் பதிலாகப் பொம்மைகளை கொண்டு தயாரிக்கப் படும் கருத்துப் படங்களே இயக்குரு படங்கள்.

இயல்[1] பெ. 1.இயற்றமிழ். 2.நூல். 3.நூற்பகுதி. 4.அதிகாரம். 5.அறிவுத்துறை.

இயல்[2] பெ. 1.தன்மை. 2.இயல்பு. 3.குணம். 4.மென்மை. 5.ஒழுக்கம். 6.சாயல்.

இயல்பு[1] பெ. 1.தன்மை. 2.தகுதி. 3.செயல். 4.ஒழுக்கம். 5.நற்குணம். 6.நேர்மை. 7.முறை.

இயல்பு[2] பெ. இயற்கை.

இயலாமை பெ. சுவாமை.

இயற்கை[1] பெ. 1.குணம். 2.இயல்பு. 3.சுபாவம்.

இயற்கை[2] பெ. 1.தகுதி. 2.நிலைமை.

இயற்கை[3] பெ. பணிமுட்டு.

இயற்கை[4] பெ. முட்டு.

இயற்கை[5] பெ. 1.திராணி. 2.தானாகவே உண்டாவது. 3.பாக்கியம்.

இயற்கை[6] பெ. 1.விஞ்ஞானம். 2.விரிவாக்கம்.

இயற்கை[7] பெ. 1.பொருந்துகை. 2.இணங்குகை. 3.நிரப்புகை.

இயற்கை[8] பெ. 1.வழக்கம். 2.இலக்கணம். 3.கொள்கை. 4.முறைமை.

இயற்கைஅறிவு பெ. 1.இயல்பாகவே உரிய கல்வியறிவு. 2.இயல்பாகவே உரியவைகள். 3.அறியவேண்டுகை. 4.இயல்பாகவே உரிய ஞானம். 5.உணர்வு. 6.போதனைபொறி.

இயற்கைஒழுங்கு பெ. இயற்கையாகவே (அல்லது) இயல்பாகவே நன்னடத்தை, நேர்மை, மற்றும் முறையுடன் இருத்தல்.

இயற்கைவனப்பு பெ. (இலக்.) இயற்கையில் அமைந்த அழகு.

இயற்சீர்வெண்டளை பெ. ஆசிரியவுரிச்சீற்றசை வருஞ் சீர் முதலசையோடொன்றாது நிற்பது.

இயற்சீர் பெ. ஆசிரியவுரிச்சீர்.

இயற்சொல் பெ. இயற்றமிழ் வழக்குச் சொல்.

இயற்பகைநாயனார் பெ. அறுபத்து மூன்று நாயன் மாரிளொருவர்; இவர் காவிரிப்பூம் பட்டினத்திலே வணிகர் குலத்திற் பிறந்தவர்.

இயற்பெயர் பெ. காரணமின்றி வழங்கும் பெயர்.

இயற்றமிழ் பெ. முத்தமிழுள் ஒன்று.

இயற்றல் வி. உருக்கல்.

இயற்றளை பெ. (இலக்.) ஆசிரியத்தளை.

இயைதல் வி. சேர்தல்.

இயைந்த பெ.அ. 1. ஒட்டிய. 2.இயற்கையோடு ஒன்றிய வாழ்வு.

இயைந்தக்கால் பெ. கிடைத்த பொழுது.

இயைந்தவர் பெ. பொருந்தியவர்.

இரங்குதல் வி. இரக்கப்படுதல்.

இரங்குவான் பெ. வருந்துவான்.

இரட்சகர் பெ. காப்பவர்.

இரட்சித்தல் பெ. காப்பாற்றுதல்.

இரட்சிப்பு பெ. 1.காவல். 2.மீட்பு. 3.அருள்கை.

இரட்டுமி பெ. வாத்தியம்.

இரட்டைக்காப்பியம் பெ. **சிலப்பதிகாரம்.** மணி மேகலை இவை இரண்டும் இரட்டைக்காப்பியம் எனப்படும்.

இரத்தல் வி. 1.பிச்சை கேட்டல் 2.வேண்டுதல்.

இரத்தினச்சுருக்கம் பெ. **சுருங்கக்கூறல்.** புகழேந்திப் புலவர் செய்த ஓர் உறுப்புவமை நூல்

இரவு[1] பெ. 1.யாசிக்கை. 2.பிச்சை. 3.வறுமை.

இரவு[2] பெ. இராத்திரி.

இரவு[3] பெ. மஞ்சள்.

இராசராசன் பெ. 1.சோழ அரசருள் புகழ்பெற்ற அரசன். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியவன். 2.குபேரன். 3.சக்கரவர்த்தி. 4.துரியோதனன்.

இராமன் பெ. 1.தசரதமகாராசருடைய புத்திரன். 2.சந்திரன். 3.வருணன்.

இராமாயணம் பெ. **இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.** சமஸ்கிருதத்தில் வால்மீகியும் தமிழில் கம்பரும் இதனை முதலில் எழுதினர்.

இராமலிங்கர் பெ. வள்ளலாரின் இயற்பெயர்.

இராமாவதாரம் பெ. **கம்பர் தம் இராமாயணத்திற்கு** இட்ட பெயர். திருமாலின் 10 அவதாரங்களுள் ஒன்று.

இராவணன் பெ. இலங்கைவேந்தன்.

இரு[1] பெ. இரண்டு.

இரு[2] பெ. இருவர்.

இருக்கை[1] பெ. 1.குடியிருப்பு. 2.கோயில். 3.ஊர். 4.இருக்குமிடம். 5.ஆசனம்.

இருக்கை[2] பெ. இங்கே இரு என்பது போன்ற கட்டளை ஏவல்.

இருசுடர் பெ. 1.சூரியன். 2.சந்திரன்.

இருண்டவீடு[1] பெ. பாரதிதாசனின் நூல்.

இருண்டவீடு[2] பெ. இருண்டு கிடக்கும் வீடு.

இருதயம் பெ. நெஞ்சம்.

இருதிணை பெ. உயர்திணை, அஃறிணை என்பன.

இருநிலம் பெ. 1.பூமி. 2.பெரிய நிலம்.

இருப்பாணி பெ. இரும்பாணி.

இருப்புமுனை பெ. ஆணியின் நுனி.

இருபால் பெ. ஆண்பால்; பெண்பால்.

இரும்பனை பெ. பெரிய பனை.

இரும்பொறை பெ. பெரும்பொறுமை.

இருவினை பெ. நல்வினை, தீவினை என்பன.

இருள் பெ. பகை.

இரை பெ. தீனி.

இல்[1] பெ. இல்லை.

இல்[2] பெ. இல்லம் (வீடு).

இல்லம்[1] பெ. வீடு.

இல்லம்[2] பெ. தேற்றா எனும் மரவகை.

இல்லாதபொருள் பெ. 1.புதையல். 2. உலகத்தில் யாரும் காணாத பொருள்.

இல்லார் பெ. 1.ஏழை. 2.பொருளற்றவர்.

இலக்கியம் பெ. 1.உரைநடையிலும் செய்யுளிலும் எழுதப்படும் படைப்பு. 2.ஒரு துறை பற்றிய அறிவு.

இலங்குநூல் பெ. அறிவு நூல்.

இலஞ்சம் பெ. கையூட்டு.

இலவங்கம் பெ. 1.கிராம்பு. 2.கிராம்பு உண்டாகும் மரம். 3.கருவாமரம். 4.காட்டுக்கருவாமரம்.

இலெமூரியா பெ. மனித நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படும் கண்டம்.

இலை பெ. **தாவரத்தின் உறுப்புகளில் ஒன்று.** இலை, காய் போல்வன மரத்தின் உறுப்பு களாகும். அரச இலை, வாழை இலை.

இழிவு[1] பெ. 1.குற்றம். 2.கேடு. 3.குறைவு. 4.இகழ்ச்சி. 5.தாழ்வு.

இழிவு[2] பெ. தீட்டு.

இழிவு[3] பெ. பள்ளம்.

இழு பெ. 1.முன்னோக்கி நகர்த்துகை. 2.தொடர்பு படுத்துகை. 3.இழுக்கை.

இழுக்கம் பெ. 1.ஒழுக்கந்தவறுகை. 2.ஈனம். 3.ஒழுக்கம் இல்லாதவர். 4.பிழை.

இழை பெ. 1.நூல் இழை. 2.நூல்.

இழைத்தல் வி. செய்தல்.

இழைத்துணர்தல் வி. நுட்பமாக ஆராய்தல்.

இளங்கோவடிகள் பெ. சிலப்பதிகாரத்தை இயற்றியவர். சிலப்பதிகாரம் தமிழின் முதற் காப்பியமாகும்.

இளநிலை பெ. தொடக்கநிலை.

இளமை[1] பெ. 1.பாலியல் பருவம். 2.மென்மை. 3.அறிவு முதிராமை.

இளமை[2] பெ. (இலக்.) ஒன்றை வேறொன்றாக மயங்கும் மயக்கம்.

இளமை[3] பெ. தாழ்வு.

இளமைப்பெயர்கள் பெ. 1.ஆடு–குட்டி. 2.மான் – கன்று. 3.கீரி – பிள்ளை. 4.சிங்கம் – குருளை. 5.கோழி – குஞ்சு.

இளவல் பெ. தம்பி.

இளிவு பெ. கீழ்மை.

இளைத்தல் வி. உடல் மெலிவுறுதல்.

இளைப்பாறுதல் வி. ஓய்வெடுத்தல்.

இறக்குமதி பெ. விற்பனைக்காக அயல் நாட்டிலிருந்தோ வேறு இடத்திலிருந்தோ தருவிக்கும் பொருள்.

இறங்குதல் வி. கீழே இறங்குதல்.

இறத்தல் வி. 1.சாதல். 2.கடத்தல்.

இறந்தார் பெ. வரம்பு கடந்தவர்.

இறப்பு[1] பெ. 1.அழிகை. 2.கடத்துகை. 3.கெடுகை. 4.சாவுகை. 5.போக்குகை. 6.வீட்டிறப்பு. 7.வரம்பு கடக்கை.

இறப்பு[2] பெ. மிகுதி.

இறுதிக்காலம் பெ. முடிவுக்காலம்.

இறை[1] பெ. 1.1.முதன்மை. 1.2.கடவுள். 2.அரசன். 3.தலைவன்.

இறை[2] பெ. 1.செலவுசெய்கை. 2.வரி. 3.அரசிறை.

இறை[3] பெ. 1.கை. 2.இரேகை. 3.முன்கை. 4.சந்து. 5.மூட்டு. 6.வாய். 7.விரல்.

இறை[4] பெ. 1.நடுவுநிலைமை. 2.சிறுமை.

இறை[5] பெ. கடனம்.

இறைதல் வி. 1.எடுத்தல். 2.சிதறுதல். 3.வீசுதல். 4.தங்குதல்.

இறைஞ்சல் பெ. 1.குனிகை. 2.வணங்குகை.

இறைஞ்சுதல் வி. 1.பணிதல். 2.வணங்குதல்.

இறைவன்[1] பெ. 1.அரசன். 2.கடவுள். 3.சிவன். 4.தலைவன். 5.பிதா. 6.பிரமன். 7.மூத்தவன். 8.கணவன்.

இறைவன்[2] பெ. சிவனார்வேம்பு.

இன்[1] பெ. இனியசுவை.

இன்[2] பெ. இன்னிசை.

இன்சொல் பெ. 1.நயச்சொல். 2.இனிய சொல்.

இன்சொலன் பெ. இனியசொற்களைப் பேசுபவன்

இன்பம்[1] பெ. 1.அகமகிழ்ச்சி. 2.இனிமை.

இன்பம்[2] பெ. 1.ஓலங்காரம். 2.அது சொல்லானாயினும் பொருளாயினுஞ் சுவைபடத் தொடுப்பது.

இன்பு பெ. இன்பம்.

இன்மை பெ. 1.இப்பிறவி. 2.நல்குரவு. 3.வறுமை. 4.இல்லாமை. 5.மிக்க வறுமை.

இன்றைய பெ. 1.இன்நாளுக்குரிய. 2.பெயர்ச்சொல்.

இன்னல் பெ. துன்பம்.

இன்னா பெ. **துன்பம்.** இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்.

இன்னாச்சொல் பெ. 1.தீய சொல். 2.துன்பம் தரும் சொல்.

இன்னியர் பெ. பாடுபவர்.

இனம்[1] பெ. 1.துணையாகச்சேருங் கூட்டம். 2.குலம். 3.சுற்றம். 4.அமைச்சர். 5.நண்பர். 6.கூட்டம். 7.ஆசாமி.

இனம்[2] பெ. 1.நிரை. 2.வருக்கம். 3.ஒப்பு.

இனி பெ. 1.மகிழ்ச்சி. 2.இனிமேல்.

இனித்தல் வி. 1.தித்தித்தல். 2.இன்பமாய் இருத்தல்.

இனிமை பெ. 1.தித்திப்பு. 2.இன்பம்.

இனிய பெ.அ. விருப்பமான.

இனைதல் வி. வருந்துதல்.

இனையவர் பெ. இத்தன்மையானவர்.

ஈ

ஈ பெ. ஒரு மிகச்சிறிய பறவையினம்.

ஈகையாளன் பெ. கொடையாளன்.

ஈசன் பெ. 1.சிவன். 2.அரசன். 3.குரு. 4.கடவுள். 5.எப்பொருட்கு மிறைவன். 6.சிவன் 7.பிரமன். 8.மூத்தோன். 9.விட்டுணு.

ஈட்டல் வி. 1.சம்பாதித்தல். 2.தொகுத்தல்.

ஈடு பெ. 1.இணை. 2.மாற்று. 3.அடகு. 4.தடவை.

ஈண்டு பெ. இவ்விடம்.

ஈதல் வி. கொடுத்தல்.

ஈயப்படுதல் வி. அளிக்கப்படுதல்.

ஈயும் வி.அ. அளிக்கும்.

ஈர்க்கால் பெ. ஈயின்கால்.

ஈர்த்தல் வி. 1.இழுத்தல். 2.உரித்தல். 3.கூர்மை யாதல். 4.எழுதல். 5.பிளத்தல். 6.அறுத்தல்.

ஈர்ப்பு[1] பெ. 1.இசிவு. 2.இழுப்பு. 3.உரிப்பு. 4.காயமாறுங்காலத்தில் உண்டாகும் ஈர்வலி. 5.கவர்ச்சி.

ஈர்ப்பு[2] பெ. புவிஈர்ப்பு.

ஈர்ப்பு[3] பெ. 1.இழுப்பு. 2.இசிவு நோய்.

ஈர்மை பெ. குளிர்ச்சி.

ஈரசை பெ. 1.நேரசை. 2.நிரையசை.

ஈரடி[1] பெ. 1.கவர். 2.சந்தேகம்.

ஈரடி[2] பெ. **1.இரண்டு அடி.** திருக்குறள் இரண்டு அடிகளால் ஆனது. 2.ஈரொட்டு.

ஈரடிப்பா பெ. குறள்வஞ்சிப்பாச் சிறுமை.

ஈரடிவெண்பா பெ. குறள்வெண்பா.

ஈரம்[1] பெ. 1.அன்பு. 2.அருள்.

ஈரம்[2] பெ. 1.நனைவு. 2.குளிர்ச்சி. 3.ஓதம்.

ஈரம்[3] பெ. 1.பசுமை. 2.வெள்ளரி. 3.குங்குமப்பூ

ஈரவிதைப்பு பெ. 1.ஈரநிலத்தில் விதைக்கை. 2.புழுதி விதை.

ஈரிருவர் பெ. நால்வர்.

ஈரெச்சம் பெ. 1.பெயரெச்சம். 2.வினையெச்சம்.

ஈவு[1] பெ. 1.பிரித்து மீந்த எண். 2.பங்கிடுகை. 3.வகுத்துக் கிடைப்பது.

ஈவு[2] பெ. 1.கொடை. 2.வரம். 3.இரக்கம்.

ஈற்றெழுத்து பெ. உயிர் பன்னிரண்டும், ஞ்,ண்,ந், ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ன் என்னும் மெய்யெழுத்துகளும்

ஈறு பெ. எல்லை.

ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம் பெ. **ஈற்றெழுத்து கெடுதல்.** அணையாத விளக்கு- அணையா விளக்கு.

ஈனுதல் வி. 1.தருதல். 2.உண்டாதல். 3.பண்ணுதல். 4.உண்டாக்கி வைத்தல்.

ஈன் பெ. 1.பெறு இவ்விடம். 2.இவ்வுலகம். 3.பெறுதல்.

ஈன்றல் வி. 1.தருதல். 2.உண்டாக்குதல்.

ஈன்று பெ. 1.இவ்விடம். 2.இவ்வுலகம். 3.பெறுதல்.

உ

உக்கிரபாண்டியன் பெ. ஒரு பாண்டியன்; இவன் சோமசுந்தர பாண்டியன் மகன்.

உகரம் பெ. 1.மூர்க்கம். 2.கோபம்.

உகிர் பெ. நகம்.

உகுதல் வி. சொரிதல்.

உச்சவரம்பு பெ. உயர் எல்லை.

உச்சி[1] பெ. 1.தலை. 2.ஆண்மயிர். 3.நடு. 4.நடுத் தலை. 5.நுனி. 6.மயிர்முடி.

உச்சி[2] பெ. **மத்தியானம்.** உச்சிவெயிலில் எங்குப் போகிறாய்.

உச்சிப்பொழுது பெ. **நண்பகல்.** நான் ஊறுக்குப் போய்விட்டு நாளைக்கு உச்சிப்பொழுதுக் கெல்லாம் வந்திடுவேன்.

உச்சிவேர் பெ. மூலவேர்.

உடம்படிக்கை பெ. 1.சம்மதம். 2.பொருத்தச்சீட்டு. 3.பொருத்தம்.

உக்கிரமம் பெ. 1.மூர்க்கம். 2.கோபம்.

உடம்பு[1] பெ. **1.உடல்.** உடம்பு எப்படியிருக்கு. **2.உயிருக்கிருப்பிடம்.**

உடம்பு[2] பெ. மெய்யெழுத்து.

உடற்கல்வி பெ. உடலுக்குப் பயிற்சியளிக்கும் கல்வி; உடற்கல்வி ஆசிரியர்.

உடற்பயிற்சி பெ. உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் பயிற்சி.

உடன்[1] வி.அ. அந்நேரம்.

உடன்[2] வி.அ. கூட.

உடன்[3] வி.அ. **மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபு.** ஒரே வகுப்பைச்சேர்ந்த உடன் மாணாக்கர்.

உடன்பாட்டுத்தொடர் பெ. செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது.

உடன்பாட்டுவினை பெ. விதிவினை.

உடன்பிறந்தார் பெ. 1.சகோதரர். 2.சகோதரி.

உடன்பிறப்பு பெ. உடன்பிறந்தார்.

உடனாளி[1] பெ. **கூட்டாளி.** ஏய் ஒன்னோட உடனாளி எங்கே.

உடனாளி[2] பெ. **சொத்துள்ளவன்.** இந்தச் சொத்துக்கெல்லாம் உடனாளி யாரு.

உடு[1] பெ. கட்டு.

உடு[2] பெ. விண்மீன்.

உடுக்குறி பெ. விண்மீன் வடிவக்குறி.

உடுக்கை[1] பெ. ஆடை.

உடுக்கை[2] பெ. 1.தோலிசைக்கருவி. 2.சிறிய பறை.

உடுக்கை[3] பெ. இடைப்பகுதி.

உடுத்துதல் வி. ஆடை அணிதல்.

உடும்பு பெ. பல்லியைப்போன்ற அமைப்பில் பெரிய உருவம் கொண்டதும் மூன்றடி நீளம் வளரக்கூடியதும் பிளவுபட்ட இரட்டை நாக்குடையதும், பற்றியதும் விடாமல்பிடிக்கும் திறனுடையதுமான ஒரு விலங்கு.

உடை பெ. ஆடை.

உடைந்த பெ. பிளவு.

உடைமை பெ. 1.உடையதன்மை. 2.செல்வம். 3.**உடைய பொருள்.** உன்னுடைய உடமைகள் எல்லாம் பத்திரமாக வை.

உடையார் பெ. செல்வம் உடையாள்.

உடையான் பெ. உடையவன்.

உண்டல் பெ. உண்ணுகை.

உண்டி[1] பெ. **1.உணவு.** உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவருக்கு சமம். 2.சோறு. 3.பறவை உணவு. 4.நால்வகை உணவில் ஒன்று.

உண்டி[2] பெ. 1.காணிக்கை.

உண்டி[3]பெ. மாற்றுச்சீட்டு.

உண்டியல் பெ. 1.உண்டியற் சீட்டு. 2.கோயிற்குக் கொடுக்கும் பணம் போடும் இடம் அல்லது குடுவை. 3.பொக்கிசம்.

உண்மை பெ. 1.அறிவு. 2.இயல்பு. 3.உள்ளது. 4.சத்தியம். 5.நேர்மை. 6.மெய். 7.யாதார்த்தம்.

உண்மைவாழ்த்து பெ. மெய்வாழ்த்து.

உண்மைநெறிவிளக்கம் பெ. மெய்கண்ட சித்தாந்த ஞான சாத்திரம் பதினான்கனுள் ஒன்று.

உண்ணாதார் வி. விரதம் முதலியவற்றினுக்காக உண்ணாது இருப்பவர்.

உண்ணாநோன்பு பெ. உணவு உட்கொள்ளாத நோன்பு.

உண்ணுதல் வி. சாப்பிடுதல்.

உணர்ச்சி பெ. 1.அறிவு. 2.கல்வி. 3.சுரணை. கொஞ்சங்கூட உனக்கு உணர்ச்சி இல்லையா. 4.நினைவு. 5.புத்தி. 6.மனசாட்சி. 7.மனம். 8.உணர்கை.

உணர்ச்சித்தொடர் பெ. பேசும் செய்திகளை எழுத்து வடிவில் வெளிப்படுத்தும் தொடர்.

உணர்தல்[1] வி. 1.அறிதல். 2.உணருதல்.

உணர்தல்[2] வி. காய்தல்.

உணர்வு[1] பெ. 1.உணர்ச்சி. 2.ஆன்மா. 3.அறிவு. 4.தெளிவு. 5.புலன். 6.நல்லெண்ணம். 7.அறிவியல் சிந்தனை.

உணர்வு[2] பெ. ஒழிவு.

உணர்வு[3] பெ. செரித்து ஊட்டமளிப்பது.

உணா பெ. உணவு.

உத்தமம்[1] பெ. 1.சிறப்பு. 2.முதன்மை.

உத்தமம்[2] பெ. 1.மங்கலம். 2.நன்மை.

உத்தரவு[1] பெ. ஆணை; கட்டளை.

உத்தரவு[2] பெ. **1.அனுமதி.** ஐயா உள்ளே வருவதற்கு உத்தரவு கொடுங்கள். 2.விடை பெறுவது. 3.தெய்வச்சம்மதம்.

உத்தி[1] பெ. 1.அனுமானம். 2.அறிவு.

உத்தி[2] பெ. செல்வம்.

உத்தி[3] பெ. சொல்.

உத்தி[4] பெ. **தந்திரம்.** ஏதாவது உத்திகள் இருந்தா சொல்லு, நாம அவங்களைத் தோற்கடிக்கனும்.

உத்தி[5] பெ. 1.திருவுறுப்பு. 2.பயப்பொறி.
உத்தி[6] பெ. தேமல்.
உத்தியோகம் பெ. 1.அலுவல். 2.பணி.
உத்தேசம்[1] பெ. 1.ஒப்பந்தம்.2.சொல்லுகை. 3.நோக்கம்.
உத்தேசம்[2] பெ. 1.போதபிரகாரம் மூன்றினொன்று. 2.அது தான் விவரிக்கும் பெயர் மாத்திரங் கூறல்.
உத்தேசம்[3] பெ. மதிப்பு.
உத்தேசம்[4] பெ. விசாரணை.
உத்தேசம்[5] பெ. விவரம்.
உதயம் பெ. தோற்றம்.
உதயன் பெ. சூரியன்.
உதவி பெ. 1.ஈகை. 2.துணைநிலை. 3.ஒத்துழைப்பு. 4.உதவுகை.
உதித்தல்[1] வி. 1.அவதரித்தல். 2.உதயமாதல். 3.தோன்றுதல். 4.பிறத்தல்.
உதித்தல்[2] வி. பருத்தல்.
உதிர்காலம் பெ. இலையுதிர்காலம்.
உதிர்வு பெ. உதிர்கை.
உதிரம் பெ. குருதி.
உதுக்காண்தல் வி. சற்றுத்தூரத்தில் பார்த்தல்.
உப்பாக்கம் பெ. முதுகுப் பக்கம்.
உபகரித்தல் வி. 1.உதவி செய்தல். தம்மால் இயன்ற வரை மற்றவருக்கு உபகரித்தல் வேண்டும். 2.உபகாரம் செய்தல். 3.கொடுத்தல்.
உபகாரத்தன் பெ. பயன்தருமாறு உதவுபவன்.
உபசரித்தல் வி. விருந்தோம்புதல். விருந்தினரை உபசரித்தல்.
உபதேசம் பெ. அறிவுரை. உபதேசம் கூறுதல்.
உபமானம் பெ. 1.உவமை. 2.ஓரளவை.
உபயம் பெ. திருப்பணியாளர் கொடை.
உபயோகம் பெ. பயன்.
உபாயம் பெ. வழிவகை. ஏதாவது உபாயம் தெரியுதா?
உம்பர் பெ. மேலே.
உம்பரார் பதி பெ. தேவர்தலைவன் (இந்திரன்).
உமணர் பெ. உப்பமைப்போர்.
உமறுப்புலவர் பெ. சீறாப்புராணத்தை இயற்றியவர்.
உமிழ்த்தல் வி. 1.கொப்பளித்தல். 2.சுத்தி செய்தல். உணவு உண்ட பிறகு வாயினை தண்ணீர் விட்டு உமிழ்த்தல் வேண்டும். 3.சொரிதல். 4.தெவிட்டல்.
உமை பெ. பார்வதி.
உய்த்துதல் வி. செலுத்துதல்.
உயர் பெ. 1.மேல் செல்கை. 2.மதிப்பு உயர்ந்தது. நீ நன்றாக படித்தால் உயர்வாய்.
உயர்ச்சி[1] பெ. 1.உயர்வு. 2.மேன்மை.
உயர்ச்சி[2] பெ.உயரம்.
உயர்தனிச்செம்மொழி பெ. உயர்ந்த நல் வார்த்தை களையுடைய தொகை அல்லாத ஒரு மொழி அது தமிழ்மொழி.
உயர்திணை பெ. மக்கள், தெய்வம் முதலியோர்.
உயர்ந்த பெ.எ. உயரிய.
உயர்நிலைப்பள்ளி பெ. 6,7,8,9,10 ஆம் வகுப்புகள் கொண்ட பள்ளி.
உயரம் பெ. 1.உயர்ச்சி. 2.மிகுதி. 3.மேல்.
உயிர்[1] பெ. 1.உயிர்ப்பு. 2.மூச்சு. உயிர் இருக்கானு பாரு. 3.ஓசை. 4.ஆன்மா. 5.பிராணி.
உயிர்[2] பெ. அழகு.
உயிர்க்கோளம் பெ. சந்திரன் செவ்வாய் முதலான கோள்களில் உயிரினங்கள் வாழ இயலாது நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால் அதனை உயிர் கோளம் என்கிறோம்.
உயிர்நூல் பெ. உயிர்களைப் பற்றிய கல்வி நூல் (பிராணி, உடலியக்கம், உயிரியல்)
உயிர்வளிப்படலம் பெ. கதிரவனிடத்திலிருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்களைத் தடுப்பது.
உயிரி பெ. தொழில்நுட்பத்துறை.
உரக்க வி.அ. உரத்த ஒலியுடன் உரக்கப் பேசுதல்
உரவோர் பெ. 1.அறிஞர். 2.மூத்தோர். 3.வலியோர். 4.மனவலிமையுடையோர்.
உரி[1] பெ. மரப்பட்டை.
உரி[2] பெ. நீக்குகை.

உரி[3] பெ. துகில்; ஆடை.

உரி[4] பெ. அரைப்படியளவு.

உரி[5] பெ. உரிச்சொல்.

உரிதல் வி. 1.தோலுரிதல். 2.முறிதல்.

உரிமை பெ. 1.உரியதாக உள்ளது. 2.நட்பு பற்றிய சுதந்திரம். 3.உரித்தானது. 4.சுவாதீனம். 5.அடிமை. 6.தகுதி. 7. மனைவி.

உரிமைத்தத்துவம் பெ. உரித்தெடுக்கும் அதிகார உறுதி பத்தியம்.

உரிமையாட்சி பெ. உரிமையாய் வந்த ஆட்சி.

உரிய பெ.எ. இயல்பாய் உள்ள, உரிமையுள்ள.

உரியர் பெ. உரியோர்.

உரியவள் பெ. உரித்தானவள்; மனைவி.

உருக்கம்[1] பெ. 1.அன்பு. 2.இரக்கம்.

உருக்கம்[2] பெ.உருகுந்தன்மை.

உருக்கம்[3] பெ. தொடை.

உருகுதல்[1] வி. வெப்பத்தால் இளகுதல். உறைந்த எண்ணெயை வெயிலில் எடுத்து வைத்தால் உருகி விடும்.

உருகுதல்[2] வி. மனநெகிழ்தல்.

உருகுதல்[3] வி. மெலிதல்.

உருகுதல்[4] வி. உருகச்செய்தல்.

உருகுதல்[5] வி. 1.தீயிற்கரைத்தல். 2.வாட்டல்.

உரு பெ. வடிவம்.

உருப்பன வி.அ. தோன்றுவனவாகும்.

உரும் பெ. இடி; வானம் உருமுகிறது.

உருமாற்றம் பெ. உயிர்கள் தம் வளர்ச்சியில் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறி வருதல்; என்ன நீ ஒரு மாதத்தில் இவ்வளவு உருமாற்றம் அடைந்துவிட்டாய்.

உருவகப்படுத்துதல் வி. அலங்காரப்படுத்திச் சொல்லல்.

உருவகம் பெ. ஒன்றை மற்றொன்றாக உருப்படுத்தும் நிலை.

உருவம் பெ. 1.அழகு. 2.உடலுறுப்பு. 3.உடல். 4.காணக்கூடியது. 5.சொரூபம். 6.நிறம். உன் உருவம் பார்ப்பதற்கு அழகாக உள்ளது. 7.வடிவம். 8.விக்கிரகம். உருவச்சிலை.

உருவாக்குதல் வி. உண்டாக்குதல்.

உருவாகுதல் வி. 1.உருவமெடுத்தல். 2.உரூபமடைதல். 3.பொருளாதல்.

உரை[1] பெ. 1.சொல். 2.சொற்பொருள். 3.அறிவுரை. 4.பழிப்புரை. 5.நூல்களில் உள்ள உரை. 6.சொற்பயன். 7.பேச்சு. 8.வேதமொழி. 9.கூறுகை. 10.வியாக்கியானம். 11.ஆகமப் பிரமாணம் புகழ்.

உரை[2] பெ. 1.பொன். 2.மாற்றறியுமுறை. 3.உரசிப் பார்க்கை. 4.தேய்மானம்.

உரை[3] பெ. 1.உயர்ச்சி. 2.உயர்ந்த நிலை.

உரை[4] பெ. ஒலி.

உரைக்கோவை பெ. பொருள் அல்லது கருத்துத் தொகுப்பு. சங்க இலக்கியங்கள் உரைக்கோவை.

உரைகட்டுதல் வி. உரைபண்ணுதல்.

உரைகாரர் பெ. உரையாசிரியர்.

உரைத்தல்[1] வி. ஒலித்தல்.

உரைத்தல்[2] வி. 1.கற்பித்தல். 2.சொல்லுதல்.

உரைத்தல்[3] வி. தேய்த்தல்.

உரைத்தமொழி பெ. கூறிய சொற்கள்.

உரைநடை பெ. 1.இயல்பான எழுத்து. 2.மொழி நடை.

உரைநூல் பெ. உரையுள்ள நூல்.

உரைப்பு[1] பெ. காரம். சாம்பாரில் உரைப்பு அதிகம்.

உரைப்பு[2] பெ. சொல்லுகை.

உரைப்பு[3] பெ. தேய்ப்பு.

உரையாசிரியர் பெ. நூலிற்கு உரை செய்வோன். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள்.

உரையாடல் பெ. 1.வசனம். 2.வாய்ப்பேச்சு. 3.சொல்லுகை. 4.பேசுகை.

உரையிடல் பெ. உரைக்கை.

உலகச்செம்மொழி பெ. உலகச் செம்மொழிகள் ஆறு. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் என்பனவாகும்.

உலகத்தோற்றம் பெ. உலகம் தோன்றிய வரலாற்றினைக் கூறுவது.

உலகநடை பெ. 1.உலகவியற்கை. 2.உலகா சாரம்.

உலகநீதி பெ. 1.இயல்பான நீதி. 2.உலகநடை. 3.நன்னெறி. 4.ஒரு நீதி நூல்.

உலகம்[1] பெ. 1.ஆகாயம். 2.பிரபஞ்சம். 3.பூமி. 4.புவி. 5.உலக உருண்டை.

உலகம்[2] பெ.1.நாடு. 2.தொகுதி. 3.திசை

உலகம்[3] பெ. 1.உயர்ந்தோர். 2.சனம் 3.மக்கள். 4.உலகத்தார். 5.பதவி.

உலகம்[4] பெ. சிருட்டிப்பொருள்கள்.

உலகம்மூன்று பெ. மேலும் +கீழும் நடுவும் ஆகிய மூவிடத்திலுள்ள மூன்று வகைப்பட்ட உயிர் இல்லாத உலகங்கள்.

உலகமயமாக்கல் பெ. வணிகம் தொடர்பாக உலகம் தழுவிய ஒன்றைச் செய்யும் பொருளா தாரச் செயல்.

உலகப்பொதுமறை பெ. திருக்குறளுக்கு வழங்கும் மற்றொரு பெயர்.

உலகவழக்கு பெ. பொதுவழக்கு.

உலகு[1] பெ. ஆகாயம்.

உலகு[2] பெ. 1.உயர்ந்தோர். 2.ஒழுக்கம்.

உலகு[3] பெ. 1.நாடு. 2.நிலம். 3.பூமி. 4.திசை.

உலகுபொருள் பெ. வரியாக வரும்பொருள்.

உலர்தல் வி. 1.காய்தல். 2.வாடல்.

உலவுதல் வி. சுற்றுதல்.

உலா பெ. 1.ஒரு பிரபந்தநூல். அது பாட்டுடைத் தலைவன் உலாவந்ததாக நேரிசைக்கலி வெண்பாவாற் கூறி அவனது குலம் முதலிய மகிமையை விளக்குவது. 2.பவணி வருகை.

உலை[1] பெ. 1.சோற்றுலை. 2.நீர் உலை. 3.கலநீர்.

உலை[2] பெ.கொல்லன் உலை.

உலையாஉடம்பு பெ. 1.தளராத உடம்பு. 2.கெடாத உடம்பு.

உலோகம் பெ. கெட்டிநிலைப் பொருள்.

உலோச்சனார் பெ. பெருநற்கிள்ளி என்னும் சோழனைப் பாடிப் பரிசு பெற்ற அகநானூறு பாடிய புலவருள் ஒருவர்.

உவகை பெ. 1.களிப்பு. 2.மகிழ்ச்சி. 3.அன்பு.

உவத்தல் வி. மகிழ்தல்.

உவந்து பெ. மகிழ்ந்து.

உவந்துசெய்தல் வி. விரும்பிச் செய்தல்.

உவப்புதழ்வி பெ. மகிழ்தல்.

உவமானித்தல் வி. ஒப்பிடுதல்.

உவமித்தல் வி. 1.ஒப்பிடுதல். 2.உவமைப்படுத்தல்.

உவமேயம் பெ. உவமிக்கப்படும் பொருள்.

உவமை பெ. 1.ஒப்புமை காட்டல். 2.ஒப்பு. 3.உவமையணி.

உவமையாகு பெயர் பெ. காளை வந்தான். இதில் காளை என்பது உவமை; அது காளை போன்ற ஆண் மகனுக்கு ஆகி வந்துள்ளதால் உவமையாகு பெயராகியது.

உவாத்தி பெ. கற்பிப்போன்.

உழச்சியர் பெ. மருதநிலப் பெண்கள்.

உழத்திப்பாட்டு பெ. ஒரு பிரபந்தம். அது வேளாண்மைச் சிறப்பும், வேளாண்மை மாந்தர் சிறப்பும் தோன்ற இடையிடைச் சிந்தும் விருத்தமும் விரவி வரப்பாடுவது.

உழவர் பெ. 1.சூத்திரர். 2.படைவீரர். 3.வைசியர். 4.மருதநில மக்கள். 5.வேளாளர்.

உழவன் பெ. 1.உழவு மாடு; உழுபவன். 2.வீரன்.

உழவு பெ. 1.உழுந்தொழில். 2.சூத்திரர், வைசியர்க் குரிய அறுதொழிலில் ஒன்று.

உழுதல் வி. 1.உழவுத் தொழில் செய்தல். 2.நிலத்தை கிளைத்தல். 3.கிண்டுதல்.

உழுபடை பெ. விவசாயம் செய்யப் பயன்படும் கருவிகள்.

உழுவை பெ. புலி.

உழை[1] பெ. பக்கம்.

உழை[2] பெ.மான்.

உழைப்பு பெ. 1.சுறுசுறுப்பு. 2.சேகரிப்பு. 3.பிரயாசம். 4.முயற்சி. 5.வருந்தியீட்டுகை.

உள் பெ. 1.இடம். 2.உட்புறம். 3.தொழிற்பெயர்.

உள்ளப்புணர்ச்சி பெ. 1.மனத்திலே புணர்ச்சி பண்ணுவதாக நினைத்து உருகியடைதல். 2.வீணெண்ணத்திற்கொண்ட மகிழ்வு.

உள்ளம்[1] பெ. 1.மனம். 2.கருத்து. 3.ஊக்கம் (புத்தி). 4.அகச்சான்று. 5.ஆன்மா.

உள்ளம்[2] பெ. விஞ்ஞானம்.

உள்வேர்ப்புதல் வி. மனத்தினுள் மறைத்து வைத்திருத்தல்.

உள்ளுறை பெ. 1.மறை. 2.நூலின் பொருளடக்கம்.

உளம்[1] பெ. 1.கருத்து. 2.மனம். 3.முயற்சி.

உளம்[2] பெ. 1.மார்பு. 2.உள்ளிடம்.

உளநூல் பெ. உள்ளத்தைப் பற்றி ஆராயுந்துறை.

உளவாக்கல் வி. படைத்தல்.

உளவாக்குதல் வி. உண்டாக்குதல் (படைத்தல்).

உளி[1] பெ. தச்சக் கருவிகளுளொன்று.

உளி[2] பெ. 1.இடைச்சொல். 2.பகுதிப்பொருள். 3.விகுதி.

உளை பெ. குதிரையின் பிடரிமயிர்.

உற்சாகம் பெ. **ஊக்கம்.** எப்பொழுதும் உற்சாகமாய் இருக்கவேண்டும்.

உற்றார் பெ. **உறவோர், சிநேகர்;** உற்றார் உறவினர்.

உற்றிடம் பெ. அடைக்கலம் தருமிடம்.

உறவு பெ. 1.உறுகை. 2.விருப்பம். 3.சுற்றம். 4.நட்பு. 5.பிரவிருத்தி (துறவு). 6.சொந்தம். 7.தொடர்பு. 8.பொருத்தம். 9.உறுகை.

உறழ்ச்சி பெ. உறழ்வு.

உறி பெ. கயிற்றுறி.

உறுதி பெ. 1.வலிமை. 2.மேம்பாடு. 3.மனம். 4.தளராத நம்பிக்கை. 5.விடாப்பிடி. 6.பயன். 7.பிரமாணம். 8.பற்றுக்கோடு. 9.நன்மை.

உறுதிப்பொருள்[1] பெ. 1.அறம். 2.பொருள். 3.இன்பம். 4.கடவுள்.

உறுதிப்பொருள்[2] பெ. நிச்சயதார்த்தம்.

உறுதியர் பெ. 1.உற்ற துணைவர். 2.தூதர். 3.மந்திரிகள்.

உறுப்பு[1] பெ. 1.அங்கம். 2.உடல். 3.அவயவம். 4.அடையாளம். 5.நெருக்கம்.

உறுப்பு[2] பெ. மேல்வரிச் சட்டம்.

உறுப்பு[3] பெ. 1.காணியாட்சிப்பத்திரம். 2.பங்கு.

உறுப்பு[4] பெ. உறுதி.

உறுப்பு[5] பெ. துறுவல்.

உறுப்பு[6] பெ. மரக்கொம்பு.

உறுப்பு[7] பெ. மிகுதி.

உறுபொருள் பெ. அரசு உரிமையில் வரும் பொருள்.

உறை[1] பெ. ஆடையளுக்கற்றநீர்.

உறை[2] பெ. 1.இடம். 2.இருப்பிடம்.

உறை[3] பெ. இலக்க உரை குறிப்புகளொன்று.

உறை[4] பெ. 1.கிணற்றுறை. 2.உவர்நீர். 3.துளி.

உறை[5] பெ. நீளம்.

உறை[6] பெ. படைக்கூடு.

உறை[7] பெ. பண்டம்.

உறை[8] பெ. பாம்பின் விசம்.

உறை[9] பெ. பொருள்.

உறைகாரர் பெ. படையுறை செய்வோர்

உறைதல் வி. 1.தங்குதல். 2.கட்டியாதல்.

உறையிடம் பெ. 1.இருப்பிடம். 2.உள்வீடு. 3.தங்குமிடம்.

உறையுள் பெ. 1.ஆயுள். 2.இருக்குமிடம். 3.உறை காலம். 4.ஊர்ப்பொது. 5.தங்குமிடம். 6.நாடு. 7.மக்கட் படுக்கை 8. மருதநிலத்தூர். 9.வீடு.

உன்னி பெ. நினைத்து.

ஊக்கம் பெ. 1.ஆதரவு. 2.மனஎழுச்சி. 3.இயல் பூக்கம். 4.மேற்கொண்ட எண்ணம். 5.மனக் கிளர்ச்சி. 6.முயற்சி. 7.வலிமை. 8.உண்மை. 9.உயர்ச்சி. 10.வலிமை.

ஊக்குதல்[1] வி. 1.உற்சாகங்கொள்ளச்செய்தல். 2.எழுப்பல்.

ஊக்குதல்[2] வி. 1.ஏறுதல். 2.முயலுதல்.

ஊசி பெ. எழுத்தாணி.

ஊண் பெ. 1.உணவு. 2.உண்கை. 3.புலால்.

ஊதியம் பெ. 1.இலாபம். 2.கல்வி. 3.பயன். 4.பேறு. 5.ஆக்கம். 6.நன்மை. 7.சம்பளம்.

ஊமையெழுத்து பெ. 1.மெய்யெழுத்து. 2.பிரணவம்.

ஊர்தி பெ. 1.எருது. 2.வண்டி முதலிய வாகனங்கள்.

ஊர் பெ. 1.நாடு. 2.நகர். 3.தேசத்தின் உட்பிரிவு.

ஊழ்[1] பெ. 1.உலகமுடிவு. 2.முடிவு. 3.நியமம். 4.முறைமை. 5.தடவை.

ஊழ்[2] பெ. 1.குணம். 2.பகை. 3.பழிவினை. 4.விதி. 5.முதிர்ச்சி. 6.நீதி.

ஊழ்[3] பெ. பழைமை.

ஊழ்[4] பெ. 1.இயற்கை ஒழுங்கு. 2.கதிரோன்.

ஊழ்வினை பெ. விதிச்செயல்.

ஊழல்[1] பெ. ஆகாதது.

ஊழல்[2] பெ. 1.ஊத்தை. 2.கெட்டது. 3.நாற்றம். 4.பழுதானது.

ஊழல்[3] பெ. நகரம்.

ஊழி பெ. உலகம்.

ஊற்று[1] பெ. 1.நிலத்தில் கொட்டு எனும் ஏவல். 2.சுரக்கை. 3.நீரூற்று. 4.கசிவு.

ஊற்று[2] பெ. 1.ஊன்றுகோல். 2.ஆதரவு. 3.துணை.

ஊற்றுதல் பெ. 1.விடுதல். 2.சுடுதல். 3.சிந்துதல்.

ஊற்றுக்கோல் பெ. ஊன்றுகோல்.

ஊறு பெ. புலன்களின் இயல்பு.

ஊறுபாடு பெ. 1.இடையூறு. 2.இரணம். 3.காயம். 4.சேதம். 5.தீமை.

ஊன் பெ. 1.உடல். 2.மாமிசம். 3.நிணம். 4.தரை.

ஊன்றுதல் வி. 1.தாங்குதல். 2.நடுதல்.

ஏ

எஃகு[1] பெ. 1.ஆயுதப் பொது. 2.கூர்மை. 3.வேல். உறுதியான படைக்கலம்.

எஃகு[2] பெ. 1.மனவொழுக்கம். 2.எஃகென்னேவல். 3.மதிநுட்பம்.

எக்கர்[1] பெ. இடக்கர்.

எக்கர்[2] பெ. சொரிகை.

எக்கர்[3] பெ. மறைந்த சொல்.

எக்கர்[4] பெ. மேலுக்கேறப்பண்ணுதல்

எச்சரித்தல் வி. 1.கடிந்து கொள்ளல். 2.புத்தி சொல்லல். 3.முன்னறிவித்தல். 4.விழிக்கப் பண்ணுதல்.

எஞ்சு பெ. 1.மீதம். 2.குறை.

எட்டாம் திருமுறை பெ. மாணிக்கவாசகர் பாடல்கள் அடங்கிய தொகுதி.

எட்டுத்தொகைநூல்கள் பெ. 1.அகநூல் (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித் தொகை, அகநானூறு) 2.புறநூல் (புறநானூறு, பதிற்றுப்பத்து) 3.அகம் + புறம் நூல் (பரிபாடல்)

எடிசன் பெ. ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியை இயற்றியவர்.

எடுத்துக்காட்டு பெ. 1.உதாரணம். அந்தக் கேள்விக்குப் பதிலாக ஏதாவது ஒரு எடுத்துக் காட்டினைக்கொடு. 2.வெளிப்படுத்துகை.

எடுத்தல் பெ. தொடக்கம்.

எடுத்தலளவை பெ. நிறுத்தலளவை.

எண்[1] பெ. 1.இலக்கம். 2.அம்போதரங்கம். 3.கணிதம். 4.தாழிசை. 5.மதிப்பு. 6.கணக்கு. 7.சோதிட நூல். 8.வரையறை. 9.ஆராய்ச்சி.

எண்[2] பெ. 1.அறிவு. 2.ஆலோசனை. 3.இலேசு. 4.எண்ணம். 5.கவலை. 6.தருக்கம். 7.நினைவு. 8.மனம். 9.எண்ணிக்கை. 10.எண்ணென் னேவல். 11.எளிமை. 12.வலி விசாரம்.

எண்[3] பெ. 1.எண்ணெய். 2.எள்.

எண்கு பெ. கரடி

எண்சுவடி பெ. 1.வாய்ப்பாட்டுச் சுவடி. 2.கணக்கு ஏடு.

எண்டிசை பெ. எட்டுத்திக்கு.

எண்ணம் பெ. 1.சிந்தனை. 2.நினைப்பு. 3.கருத்து. 4.சூழ்ச்சி. 5.கவலை. 6.ஆலோசனை. 7.இறுமாப்பு. 8.கனம். 9.கிலேசம். 10.குறிப்பு. 11.நம்பிக்கை. 12.நோக்கம். 13.மதிப்பு. 14.விசாரம்.

எண்ணல் பெ. கணிதம்.

எண்ணாமை பெ. மதியாமை.

எண்ணுதல் வி. 1.ஆலோசித்தல். 2.இறுமாத்தல். 3.உத்தேசித்தல். 4.எண்ணுதல். 5.கவலைப்படல். 6.குறித்தல். 7.தேர்ச்சியாதல். 8.நினைத்தல். 9.மதித்தல். 10.யோசித்தல்.

எண்ணுப்பெயர் பெ. ஒன்று முதலான பெயர்கள்.

எண்ணெய் பெ. தைலம்.

எண்பொருள் பெ. இயல்பாய்க் கிடைக்கும் பொருள்.

எண்மை பெ. 1.சுலபம். 2.தாழ்மை.

எண்வகுப்பு பெ. ஒன்று முதல் முப்பத்தாறு தானம் வரை வருவது.
எதார்த்தம் பெ. இயல்பு.
எதிர் பெ. 1.முரண்பாடு. 2.சந்தி. 3.தடுக்கை.
எதிர்காலம் பெ. வருங்காலம்.
எதிர்காற்று பெ. நேர்காற்று.
எதிர்ப்பு[1] பெ. 1.அலைப்பு. 2.இலக்கு. 3.எதிர்த்தல். 4.எதிர்மொழி. 5.சண்டிவதம். 6.தடுப்பு.
எதிர்ப்பு[2] பெ.வருங்காலம்.
எதிர்மறையெஞ்சணி பெ. எதிர்மறையெச்ச அலங்காரம்.
எந்தாய் பெ. எம் தந்தையாகிய இறைவன்.
எமன்[1] பெ. 1.இயமன். 2.எம்முடையவன்.
எமன்[2] பெ. நாகப்பாம்பினது நச்சுப்பல்லிலொன்று.
எமினோ பெ. மொழியியலார் வல்லுநர்.
எய்துதல் பெ. 1.அடைதல். 2.சம்பவித்தல். 3.சேருதல். 4.பெறுதல்.
எய்துவர் பெ. அடைவர்.
எய்யாமை பெ. 1.அறியாமை. 2.வருந்தாமை. 3.தளராமை.
எயிற்றியர் பெ. 1.பாலைநிலப் பெண்கள். 2.வேடுவப் பெண்கள்
எயிறு பெ. பல்.
எயினர் பெ. 1.பாலைநில மக்கள். 2.வேடர்.
எரி பெ. தீ.
எரிச்சல்[1] பெ. 1.அழற்றல். 2.கோபம். 3.பொறாமை.
எரிச்சல்[2] பெ. 1.உறைப்பு. 2.எரிதல்.
எரு பெ. 1.சாணம். 2.வயலுக்கிடும் எரு.
எல்லை[1] பெ. 1.அளவு. 2.வரம்பு. 3.கூப்பிடுந்தூரம்.
எல்லை[2] பெ. 1.அவதி. 2.முடிவு கட்டுகை. 3.வரையறுக்கை.
எல்லை[3] பெ. 1.சூரியன். 2.நாள். 3.பகற்பொழுது.
எழில் பெ. 1.அழகு. 2.பொலிவு. 3.இளமை. 4.எழுச்சி. 5.வளர்ச்சி. 6.உயர்ச்சி.
எழினி[1] பெ. 1.திரை. 2.இடுதிரை.
எழினி[2] பெ. உறை.
எழினி[3] பெ. கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான்.
எழுகதிர் பெ. உதயசூரியன்.
எழுத்ததிகாரம் பெ. எழுத்திலக்கணம்.
எழுத்தந்தாதி பெ. 1.ஈற்றெழுத்தந்தாதியாகப் பாடல். 2.ஓரந்தாதி.
எழுத்தர் பெ. எழுதுதல் தொடர்பான வேலை செய்பவர்.
எழுத்தலங்காரம் பெ. எழுத்திலோரியல்பு.
எழுத்தறிவு பெ. கல்வியறிவு.
எழுத்தாணி பெ. ஓலையிலெழுதுங்கருவி.
எழுத்தாளர் பெ. கட்டுரை, கதை எழுதுபவர்.
எழுத்திலக்கணம் பெ. பஞ்சவிலக்கணத்தொன்று.
எழுத்திலாவோசை பெ. எழுத்தொலி காட்டாத அசை; அஃது இரைச்சல் முதலியன.
எழுத்து[1] பெ. 1.இலக்கணம். 2.கல்வி. 3.பேர்ப்பதிவு. 4.கையெழுத்து. 5.கைரேகை. 6.ஆதாரச்சீட்டு. 7.சித்திரம். 8.இலக்கண நூல். 9.உடன்படிக்கைச் சீட்டு. 10.சித்திரம். 11.இலக்கிய நூல். 12.கடிதம். 13 மந்திரம். 14 எழுதப்பட்ட தாள். 15.மொழி. 16.மொழி முதற்காரணமாகிய அணுத்திரளின் அறிகுறி. 17.வரிவடிவம் உள்ளது. 18.படைப்பு
எழுத்து[2] பெ. தலையெழுத்து.
எழுத்துப்பணி பெ. எழுதும்வேலை.
எழுதுதல் வி. சொற்களைச் சொல்லக்கேட்டு எழுதுதல்.
எழுந்திடுதல் வி. தோன்றிடுதல்.
எழுபிறப்பு பெ. 1.தேவர். 2.மனிதர். 3.விலங்கு. 4.பறவை. 5.ஊர்வன. 6.நீர்வாழ்வன. 7.தாவரம்.
எழுமலை பெ. எழுவகை மலைகள். கைலை. இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பனவாகும்.
எழுமேகம் பெ. ஏழு வகை மேகங்கள். சம்வர்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தல், துரோணம், காளமுகி நீலவருணமென்பன.
எழுவாய்[1] பெ. ஆதி.
எழுவாய்[2] பெ. 1.முதல் வேற்றுமை. 2.வாக்கியத்தில் பயனிலைக்கு ஏதுவாக இருக்கும் பகுதி. 3.மரங்கள் உயிருள்ளவை - இதில் மரங்கள் எழுவாய் - பயனிலை - உயிருள்ளவை.

எள்ளல் பெ. 1.அவமதிச்சிரிப்பு. 2.இழிவாகப் பேசுகை. 3.தள்ளுகை. 4.நகைக்கை. 5.நிந்தை

எளிஞர் பெ. எளியவர்.

எளிமை[1] பெ. 1.தரித்திரம். 2.தளர்வு. 3.தனிமை. 4.தாழ்வு. 5.வறுமை. 6.எளியதன்மை. 7.பண்பு. 8.அறிவில்லாமை.

எளிமை[2] பெ. சுலபம்.

எறிதல் வி. வீசிப்போடுதல்.

என்ப பெ. 1.என்று சொல்வர். 2.ஓர் அசைச்சொல். என்பால் பெ. என்னிடம்.

என்பு[1] பெ. எலும்பு (உடல் பொருள் ஆவியைக் குறிக்கிறது).

என்பு[2] பெ. புல்.

ஏ

ஏக்கம் பெ. 1.ஏங்குகை. 2.கவலை. 3.பயம். 4.பேராசை.

ஏக்கற்றல் வி. கவலைப்படுதல்.

ஏகசிந்தை பெ. 1.ஒரு மனம். 2.ஒன்றிப்பு.

ஏச்சு பெ. 1.இகழ்ச்சி. 2.உதாசினம். 3.வசவு.

ஏதம் பெ. குற்றம்.

ஏமரா பெ.எ. பாதுகாவல் இல்லாத.

ஏமாப்பு பெ. பாதுகாப்பு.

ஏயர்கோன்கலிக்காமநாயனார் பெ. அறுபத்தி மூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

ஏர்[1] பெ. 1.தளபாடம். 2.உழவுத்தொழில். 3.உழுபடை. 4.உழுகாடு.

ஏர்[2] பெ. அழகு.

ஏர்த்தொழில் பெ. உழவுத்தொழில்.

ஏரி[1] பெ. 1. குளத்தைவிடப் பெரிய நீர்நிலை. 2.இமில். 3.புரை. 4.கப்பா.

ஏரி[2] பெ. குற்றம்.

ஏரி[3] பெ. புநர்பூசம். (நட்சத்திரம்)

ஏரெழுபது பெ. ஏர் முதலியவற்றினைச் சிறப்பித்துக் கூறிய எழுபது செய்யுட்களால் ஆன ஒரு நூல்; கம்பர் இயற்றியது.

ஏலம் பெ. 1.செடிவகை. 2.ஒரு வாசனைப்பண்டம். 3.மயிர்ச்சாந்து.

ஏலாதி பெ. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.** இதன் ஆசிரியர் கணிமேதாவியர்.

ஏவாள் பெ. **ஆதாம் மனைவி.** உலகத்தில் தோன்றிய முதல் பெண்.

ஏழிசை பெ. 1.குரல். 2.துத்தம். 3.கைக்கிளை. 4.உழை. 5.இளி. 6.விளரி. 6.தாரம் என்பன.

ஏழை பெ. 1.வறுமைநிலையில் உள்ளவர். 2.அறிவிலி. 3.பெண்.

ஏளனம் பெ. 1.அவமதிப்பு. 2.ஏளனச் சிரிப்பு. 3.சரசம். 4.பரிகாசம்.

ஏற்புரை பெ. பாராட்டுக்குப் பதிலுரை.

ஏற்போர் பெ. இரப்போர்.

ஏற்றப்பாடல் பெ. ஏற்றம் இறைப்போர் ஏற்றம் இறைக்கும்பொழுது பாடும் பாட்டு.

ஏற்றம் பெ. 1.மேன்மை. 2.நீர் இறைக்கும் அமைப்பு.

ஏற்றுமதி பெ. ஏற்றுமதியாகும் பொருள்கள்.

ஏறு[1] பெ. 1.ஏறு மாடு. 2.இடபம். 3.விலங்கேற்றின் பொது. 4.ஆன்சிங்கம்.

ஏறு[2] பெ. உயரம்.

ஏறு[3] பெ. 1.இடியேறு. 2.எறிகை; அடிக்கை.

ஏறுதல் வி. 1.மேலே ஏறுதல். 2.உயரே செல்தல். 3.உயர்தல். 4.அடைதல்.

ஏறுதழுவல் பெ. மணமுடிக்கும் பொருட்டு காளையை அடக்கும் வீரநிலை.

ஐ

ஐங்குறுநூறு பெ. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று.

ஐதிகம் பெ. உலக வழக்கு.

ஐந்தடக்கல் பெ. ஐந்து புலன்களையும் கட்டுப் படுத்துவது.

ஐந்திணைஒழுக்கம் பெ. கார் நாற்பது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, இன்னிலை (அ) கைந்நிலை, களவழி நாற்பது.

ஐந்திணை பெ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை (ஐவகை நிலங்கள்).

ஐந்திணையெழுபது பெ. பதினெண்கீழ்க்கணக்கு களுள் மூவாதியார் செய்த நூல்.

ஐந்திணையைம்பது பெ. பதினெண் கீழ்க்கணக்கு களுள் மாறம்பொறையினார் செய்த நூல்.

ஐந்தொழில் பெ. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இறைவனின் ஐந்து செயல்கள்.

ஐம்புலன் பெ. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.

ஐம்பூதங்கள் பெ. நிலம், நீர், தீ, காற்று, வான் என ஐந்தைக் குறிப்பது. (பஞ்சபூதங்கள்).

ஐம்பெருங்காப்பியம் பெ. சிலப்பதிகாரம், மணி மேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டல கேசி ஆகியன ஐம்பெருங்காப்பியங் களாகும்.

ஐம்பெரும்பாதகம் பெ. பொய், கொலை, களவு, கள்ளுண்ணுதல், கருவை அழித்தல் ஆகியவை.

ஐம்பொறி பெ. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன ஐம்பொறிகளாகும்.

ஐம்பொன் பெ. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகியன ஐம்பொன்களாகும்.

ஐயவினா பெ. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ என்று வினவி தனக்குரிய ஐயத்தைப் போக்க வினவுகை.

ஐயா பெ. 1.விளிப்புச்சொல். ஐயா இருக்கின்றீர் களா? 2.தந்தை.

ஐவகைநிலம் பெ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்றவை ஐவகை நிலங்களாகும்.

ஒ

ஒக்கூர்மாசாத்தியார் பெ. பழந்தமிழ்ப் பெண் களின் வீரத்தைப் பாடிய பெண்பாற்புலவர்.

ஒட்டுதல் வி. பொருந்துதல்.

ஒடுக்கம் பெ. அடங்கியிருப்பது.

ஒடுங்குதல் வி. 1.அடங்குதல். 2.அடைபடுதல்.

ஒண்ணாதே பெ. 1.சொல்லாதே. 2.தக்க செயல் ஆகாது என்று உணர்த்துகை.

ஒண்தாரை பெ. ஒளிமிக்க மலர்மாலை.

ஒண்பொருள் பெ. சிறந்த பொருள்.

ஒண்மை[1] பெ. 1.விளக்கம்.2.நன்மை. 3.நல்லறிவு. 4.ஒழுங்கு.

ஒண்மை[2] பெ. இயற்கையழகு.

ஒண்மை[3] பெ. மிகுதி.

ஒதுங்குதல் வி. விலகுதல்.

ஒப்பர் பெ. 1.சமமாவர். 2.ஒப்பாவர்.

ஒப்பற்ற பெ. நிகரற்ற.

ஒப்பாய்வு பெ. ஒப்பிட்டு ஆய்தல்.

ஒப்புரவு பெ. உதவும் நிலை.

ஒருதாரமணம் பெ. ஒரே மனைவியுடன் வாழும் முறை.

ஒல்குதல் வி. விலகுதல்.

ஒல்லை பெ. விரைவு.

ஒலி[1] **பெ.** 1.ஓசை. 2.இடி. 3.காற்று.

ஒலி[2] பெ. 1.சொல். 2.பிறர்கேட்கச் செபிக்கை.

ஒலித்தல்[1] **வி.** 1.ஆரவாரம் செய்தல். 2.இடித்தல். 3.ஒலியென் னேவல்.

ஒலித்தல்[2] பெ. 1.ஓசை. 2.காற்று. 3.முழக்கம்.

ஒலிப்பதிவு பெ. நடிகர்களின் நடிப்பையும் பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலி நாடாவில் செய்வது.

ஒலியெழுப்புதல் வி. ஓசை எழுப்புதல்.

ஒழுக்கம் பெ. 1.ஒழுங்கு முறை. 2.கற்பு. 3.நடை முறை.

ஒழுக்கமுடைமை பெ. நல்ல நடத்தை உடையவர் ஆதல்.

ஒழுகல் வி. 1.நடத்தல். 2.வாழ்தல்.

ஒழுகுதல் வி. ஏற்று நடத்தல்.

ஒள்ளியவர் பெ. அறிவுடையார்.

ஒளிப்பதிவு பெ. படப்பிடிப்புக் கருவியில் இப்படச் சுருளைப் பொருத்திக் காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றெனத் தொடர்ச்சியாகப் படம்பிடிப்பது.

ஒற்கம் பெ. 1.தளர்ச்சி. 2.வறுமை.

ஒற்றளபெடை பெ. தனக்குரிய மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும் மெய்யெழுத்து (எஃகு).

ஒற்று பெ. மெய்யெழுத்து.

ஒற்றுமை பெ. 1.ஒன்றாக இருத்தல். 2.ஒத்த தன்மை.

ஒறுத்தல் வி. தண்டித்தல்.

ஒறுத்தார் பெ. தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவர்.

ஒன்பதுமணிகள் பெ. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம் என்பன.

ஓங்கிநிற்றல்[1] வி. உயர்ந்து நிற்றல்.

ஓங்கிநிற்றல்[2] வி. ஓங்கி வளர்தல். அந்த மரம் வளர்ந்து ஓங்கி நிற்கிறது.

ஓசை பெ. ஒலி.

ஓடுதல்[1] வி. 1.விரைந்து செல்லுதல். தினமும் காலையில் மிதமான வேகத்தில் ஒடுதல் உடலுக்கு நன்மையளிக்கிறது. 2.இயங்குதல். 3.பாய்தல்.

ஓடுதல்[2] வி. கழிதல்.

ஓடை பெ. 1.நீரோடை. 2.குளம்.

ஓதுதல் வி. வாய்விட்டுக் கூறுதல். அவன் எப்பொழுதும் ஓதிக்கொண்டே இருப்பான்.

ஓம்பப்படுதல் வி. காப்பாற்றப்படுதல். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

ஓம்புதல் வி. காத்தல்.

ஓய்ந்து வி.அ. சோர்ந்து.

ஓய்வு பெ. களைப்பு நீங்க வேலையின்றி இருத்தல்.

ஓய்வுநாள் பெ. விடுமுறை நாள்.

ஓர் இரட்சகர் பெ. ஒப்பற்ற இரட்சகர்.

ஓரி பெ. நரி.

ஓரை பெ. 1.வேளை. 2.நேரம். 3.முகூர்த்தம். 4.இராசி. 5.இரண்டரை நாழிகை கொண்ட கால அளவு.

ஓலை[1] பெ. 1.பனை. 2.ஓலைக்குடை. 3.இலை.

ஓலை[2] பெ. 1.காதணி. 2.திருமுகம்.

ஓலை[3] பெ. 1.ஓலைச்சுருள். 2.செய்தி.

ஓவியம் பெ. 1.சித்திரம். 2.படம். 3.பாடம்.

க

கசடற பெ. குற்றமில்லாதது.

கசடு[1] பெ. குற்றம்.

கசடு[2] பெ. 1.கழிவு. 2.அடிமண்டி. 3.அழுக்கு.

கசடு[3] பெ. வடு.

கசந்து[1] வி.எ. கசப்புச்சுவை.

கசந்து[2] வி.எ. வெறுப்பு.

கட்டவிழ்த்தல் வி. விடுவித்தல்.

கட்டளை பெ. உரைகல்.

கட்டளைத்தொடர் பெ. ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது (நான் சொல்வதை செய்).

கட்டளைவாக்கியம் பெ. ஒருவரிடம் ஒரு செயலைச் செய்யும்படி (அல்லது) அச்செயலைப் பின்பற்றும் படி ஏவும் பொருளில் வருவது கட்டளை வாக்கிய மாகும் (எ.கா.நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்).

கட்டி[1] பெ. கெட்டியாகவுள்ள புடைப்பு.

கட்டி[2] பெ.நீர்மநிலை பனிக்கட்டி.

கட்டி[3] பெ.சிறுதுண்டு.

கட்டுமரம் பெ. மரக்கட்டைகளை இணைத்து நீரில் மிதந்து செல்ல அமைக்கப்படும் சாதனம்.

கட்டுரை[1] பெ. 1.உறுதிச்சொல். 2.பழமொழி. 3.புனைந்துரை. 4.வியாசம். 5.பொருள் பொதிந்தசொல். 6.விளங்கச் சொல்லல். 7.உறுதிக்கூறு.

கட்டுரை[2] பெ. பொய்.

கடம்[1] பெ. 1.கடமை. 2.முறைமை. 3.அருநெறி.

கடம்[2] பெ. பாவம்.

கடம்[3] பெ. கோபம்.

கடம்[4] பெ. யானை மதம்.

கடம்[5] பெ. 1.காடு. 2.பாலைநிலவழி. 3.மலைச்சாரல்.

கடம்[6] பெ. ஈமம்.

கடம்[7] பெ. குடம்.

கடம்[8] பெ. உடம்பு.

கடமை[1] பெ. கடப்பாடு.

கடமை[2] பெ. வரி.

கடமை[3] பெ. 1.காட்டுப்பசு. 2.பெண்ணாடு. 3.ஒரு வகை மான்.
கடல்[1] பெ. ஆழி.
கடல்[2] பெ. பறவை.
கடன் பெ. கடமை.
கடா பெ. எருமை.
கடாவுதல் வி. அடித்தல்
கடிகை[1] பெ. நாழிகை.
கடிகை[2] பெ. தாழ்.
கடிமாலை பெ. மணமாலை.
கடுகி[1] பெ. விரைந்து.
கடுகி[2] பெ. சுண்டைச்செடி (காய்).
கடும்சொல் பெ. பிறர்மனம் நோகும்படி கடுமையான சொல்லைச் சொல்லுதல்.
கடுமை[1] பெ. 1.அதிகம். 2.மிகுதி.
கடுமை[2] பெ. 1.வன்மை. 2.கொடுமை. 3.கண்டிப்பு. 4.விரைவு.
கடுமை[3] பெ. வெப்பம் அதிகமாக இருக்கும் நிலை.
கடைபிடிப்பு பெ. உறுதியாய்ப் பிடித்தல்.
கடைமணி பெ. 1.அரண்மனை வாயில்மணி. 2.பூண். 3.ஆராய்ச்சிமணி.
கடையம்[1] பெ. கடகம். ஒருவகை அணிகலன்.
கடையம்[2] பெ. இந்திராணி கூத்து.
கடையர் பெ. தாழ்ந்தவர்.
கண் பெ. 1.பார்வை உருவாக்கும் ஐம்பொறிகளில் ஒன்று. 2.நோக்கு.
கண்டம் பெ. கழுத்து.
கண்டிப்பு பெ. உறுதி.
கண்டுபிடித்தல் வி. ஆராய்ந்து கண்டறிதல்.
கண்ணோட்டம் பெ. உயிர்களிடத்து இரக்கம் (கொள்ளுகை).
கணக்கையர் பெ. ஆசிரியர்.
கணகன் பெ. இரணியன்.
கணி[1] பெ. வேங்கைமரம்.
கணி[2] பெ. சோதிடம்.
கணிமேதாவியார் பெ. ஏலாதி நூலின் ஆசிரியர்.
கத்தி பெ. 1.அரிவதற்கும், வெட்டுவதற்கும் பயன்படும் ஒரு கருவி. 2.வாள்.
கதி பெ. உயிரெடுக்கும் பிறப்பு நிலை.
கதி[2] பெ. கண் விழி.
கதி[3] பெ. விரைவு.
கதி[4] பெ. குதிரை நடை
கதி[5] பெ. 1.மோட்சம். 2.புகலிடம்.
கதி[6] பெ. ஆற்றல்.
கதி[7] பெ. 1.நூலின் உட்பிரிவு. 2.படலம்.
கதி[8] பெ. துணை.
கந்தருவம்[1] பெ. ஓர் இராகம்.
கந்தருவம்[2] பெ. குதிரை.
கந்துகம் பெ. பந்து.
கப்பம் பெ. பகைவரின் நிறைப்பொருள்.
கம்பகக்கலி பெ. எழுத்து ஒவ்வாது வருங்கலிப்பா.
கம்பர் பெ. கம்பராமாயணத்தை இயற்றியவர்.
கம்பராமாயணம் பெ. கம்பர் இயற்றிய நூல்.
கம்பு[1] பெ. குச்சி.
கம்பு[2] பெ. தானியம். கம்பங்கூழ்.
கமலம் பெ. தாமரை.
கமழ்தல் வி. மணம் வீசுதல்.
கமனசித்தர் பெ. வான்வழியே நினைத்த இடத்துக்குச் செல்லும் சித்தர்கள்.
கமனம் பெ. ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்கவல்ல வானவழி.
கயவர் பெ. 1.கொடியவன். 2.கீழ்மகன். 3.கீழ்க் குணம் உடையோர்.
கயல்[1] பெ. கெண்டைமீன்.
கயல்[2] பெ. கயல்விழி. (மீன்போன்ற கண்ணினை உடையவள்)
கயிறு திரித்தல் வி. இல்லாததனைச் சொல்லுதல்.
கர்த்தர் பெ. இயேசுநாதராகிய கடவுள்.
கர்மம்[1] பெ. 1.கடமை. 2.முற்பிறவிப்பயன்.
கர்மம்[2] பெ. சடங்கு.
கரகு பெ. எண்கு.
கரந்தான் பெ. மறைந்தான்.
கரந்தைத்திணை பெ. ஆநிரைகளை மீட்டல்.
கரம் பெ. கை.

கரி பெ. யானை.
கருங்கோல் பெ. கருமை நிறமுடைய கொம்பு.
கருணை¹ பெ. 1.இரக்கம். 2.அருள்.
கருணை² பெ. பொரிக்கறி.
கருத்தரங்கம், கருத்தரங்கு பெ. ஒரு பொருள் குறித்துப் பல தலைப்புகளில் பலர் தம் கருத்து களைக் கூறும் மேடை.
கருத்து பெ. 1.சிந்தனை. 2.எண்ணம்.
கருத்துரை பெ. கருத்தைத் தெரிவிக்கும் உரை.
கருப்பொருள் பெ. 1.ஐந்திணைக்குரிய தெய்வம் முதலிய பொருள்கள். 2.ஒவ்வொரு நிலத்துக்குரிய மக்கள் தங்களின் வாழ்க்கை யில் பயன்படுத்தக் கூடிய பொருள்களாகும். அவை தெய்வம், மக்கள், உணவு, விலங்கு என்பன.
கருமுகில் பெ. கரியமேகம்.
கருவிநூல் பெ. மேற்பார்வைக்குரிய நூல்.
கருவிமொழி பெ. ஒரு மொழியை விளக்கிக் கூறப் பயன்படும் மொழி.
கருவிழி பெ. கண்மணி.
கரை பெ. ஆற்றின் கரை.
கல்¹ பெ. 1.மலை. 2.காவிக்கல். 3.நடுகல். 4.வெட்டியெடுக்கும் கல்.
கல்² பெ. முத்து.
கல்³ பெ. பறை.
கல்⁴ பெ. மைல்தூரம்.
கல்⁵ பெ. இரத்ததானம்.
கல்மிதப்பு பெ. கல்லாகிய தெப்பம்.
கல்லாதவர் பெ. கற்காதவர்.
கல்லூரி பெ. மேல்நிலைப் பள்ளிக்கு அடுத்தக் கல்வி கற்குமிடம்.
கல்வி பெ. 1.வாழ்நாள் முழுதும் கற்கும் செயல். 2.வித்தை. 3.நூல். 4.கற்கை. 5.பயிற்சி.
கல்விப்படம் பெ. மாணவர்களுக்குக் கல்வி கற்பிப் பதற்காக உருவாக்கப்படும் படங்களே கல்விப் படம்.
கல்விமான் பெ. கற்றறிவாளர்.
கல்வியியல்கல்லூரி பெ. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.
கலம்¹ பெ. அணிகலன்.
கலம்² பெ. ஏனம்.
கலம்³ பெ. கப்பல்.
கலம்⁴ பெ. ஒரு மூட்டை.
கலம்⁵ பெ. இரண்டு சலங்கொண்டது.
கலம்பகம் பெ. தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக் கியங்களுள் ஒன்று; கலம்-12, பகம்-6 = 18 உறுப்புகளைக் கொண்டது. பலவகைச் செய்யுட்களாகிய சிற்றிலக்கியம்.
கலம்பகமாலை பெ. பூக்கள் சேர்ந்த மாலை; ஒரு சிற்றிலக்கியம்.
கலவைத்தொடர் பெ. ஒன்றிற்கு மேற்பட்ட தொடர் களுடன் கலந்துவருவது.
கலவைவாக்கியம் பெ. முதன்மை வாக்கியத் தோடு இணைந்து வரும் துணைமை வாக்கியமும் சேர்ந்தது (மழை பெய்ததால் பயிர் விளைந்தது).
கலிங்கத்துப்பரணி பெ. தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கியம்.
கலிங்கம் பெ. வடநாட்டில் உள்ள ஒரு நாடு.
கலித்தொகை பெ. எட்டுத்தொகை நூல்களில் நல்லந்துவனார் தொகுத்த 150 கலிப்பாக்களைக் கொண்ட நூல்.
கலிப்பா பெ. நான்கு வகைப் பாக்களில் ஒன்று.
கலிப்பு¹ பெ. கருமார், கொல்லர், தட்டார் போன்றோர் செய்யும் தொழில்கள்.
கலிப்பு² பெ. ஒலிக்கும் ஓசை.
கலிப்பு³ பெ. பொளவு.
கலிப்புவேலை பெ. கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்.
கலிவிருத்தம் பெ. அளவடி நான்குடையதாய் வரும் கலிப்பா இனம்.
கலிவெண்பா பெ. கலிப்பா வகையுள் ஒன்று.
கலை¹ பெ. ஆண்மான்.
கலை² பெ. 1.சீலை. 2.ஆடை.
கலை³ பெ. நிலவொளி.

கலை[4] பெ. 1.நூல். 2.கல்வி. 3.மொழி. 4.வித்தை. 5.சாத்திரம்.

கலை[5] பெ. 1.மூச்சு. 2. உடல்.

கலை[6] பெ. இடையணி.

கலை[7] பெ. எட்டுவிநாடி கொண்ட கால நுட்பம்.

கலைக்கல்லூரி பெ. பல கலைகள் பயிலுமிடம்.

கலைக்களஞ்சியம் பெ. பல துறைகள் பற்றிய தகவல் தரும் பெருநூல்.

கலைச்சொல் பெ. ஒரு துறைக்கே உரிய நுட்பச் சொல்.

கலைதல் வி. களைத்தல்.

கலைமடந்தை பெ. கலைமகள்.

கவர்தல் வி. 1.நுகர்தல். 2.விரும்புதல். 3.அகப் படுத்துதல். 4.முயங்கல். 5.அழைத்தல்.

கவி[1] பெ. கவிதை.

கவி[2] பெ. 1.கவிஞர். 2.பாவலன், 3.அறிஞன்.

கவி[3] பெ. குரங்கு.

கவிகை பெ. குடை.

கவிதை பெ. பாடல்.

கவியரங்கம் பெ. 1.பாட்டரங்கம். 2.கவிஞர்கள் தங்கள் பாடல்களைப் படித்துக் காட்டும் கூட்டம்.

கவிராயர் பெ. புலவர்.

கவிவீரராகவன் பெ. கவிதா சக்தியுள்ள வீரராகவன்.

கவின் பெ. அழகு.

கழல்[1] பெ. 1.அணிகலன். 2.ஆண்கள் காலில் அணியும் அணிகலன். 3.வீரக்கழல். 4.சிலம்பு. 5.கால்மோதிரம்.

கழல்[2] பெ. செருப்பு.

கழல்[3] பெ. பாதம்.

கழல்[4] பெ. கழற்சிக்காய் கொடி.

கழல்[5] பெ. காற்றாடி.

கழனி[1] பெ. 1.வயல். 2.மருதநிலம்.

கழனி[2] பெ. சோறு.

கழனி[3] பெ. திரைச்சீலை.

கழி பெ. உப்பங்கழி.

கழை பெ. 1.மூங்கில். 2.கரும்பு.

கள் பெ. தேன்.

கள்வன்[1] பெ. 1.கரியவன். 2.திருடன்.

கள்வன்[2] பெ. குரங்கு.

கள்ளிக்கவி பெ. பிறர்பாடியபாடலை மாற்றிப் புரட்டிய செய்யுள்.

களங்கமிலா நட்பு பெ. உறவினரிடத்து மட்டுமின்றி அயலாரிடத்தும் அன்புடன் நடந்துகொள்வது.

களஞ்சியம் பெ. 1.பண்டக சாலை. 2.பொருள் அறை.

களப்பு[1] பெ. களவு.

களப்பு[2] பெ.கள்ளம்.

களவு பெ. திருட்டு.

களவுப்புணர்ச்சி பெ. தலைவனும் தலைவியும் பிறர் அறியாது தனியிடத்தில் எதிர்பட்டுக் கூடுகை.

களன் பெ. இடம்.

களி பெ. இறுகிய பழச்சாறு.

களித்தல் வி. 1.இன்புறுதல். 2.மகிழ்தல்.

களிப்பு பெ. 1.மகிழ்ச்சி. 2.இன்பம்.

களிம்பு[1] பெ. குற்றம்.

களிம்பு[2] பெ. 1.மாசு. 2.அழுக்கு.

களியர் பெ. நெய்தல் நிலமக்கள்.

களியர்வண்ணம் பெ. குடியர் உண்டு குடித்துவிட்டு மகிழ்வதைச் சிறப்பிக்கும் வண்ணப்பாட்டு.

களியாட்டு பெ. 1.மது வெறியாட்டு. 2.கள்ளுண்டு ஆடும் ஆட்டம்.

களிற்றுடனிலை பெ. வீரன் ஒருவன் யானையை வேலால் எறிந்து அதனடியில் இறந்துப்பட்டதைக் குறிக்கும் புறத்துறை.

களை[1] பெ. 1.ஒளி. 2.அழகு. 3.பொலிவு.

களை[2] பெ. அயர்வு.

களை[3] பெ. பயிருக்கு கேடான புல் பூண்டு.

களைஞர் பெ. களைபிடுங்குவோர், வேலைக்காரர்.

களைதல் வி. நீக்குதல்.

களைப்பு பெ. தளர்ச்சி.

கற்காடு பெ. 1.பூசணி. 2.அகில்மரம்.

கற்கி பெ. குதிரை.

கற்கை பெ. 1.படிகை. 2.கல்வியறிவு.

கற்சட்டி பெ. மாக்கல்லால் அமைந்த சட்டி.

கற்சூரம் பெ. கழற்கொடி.

கற்பகம்^{1} பெ. ஐந்தருவினொன்று; அது வேண்டியது எல்லாந் தருமரம், விநாயகன், புளியாரை, தாலமரம். ஒரு கற்பகம் இன்று இருந்தால் நாட்டின் நிதி நெருக்கடியை நீக்கலாம்.

கற்பகம்^{2} பெ. 1.தென்னை. 2.பனை.

கற்பகனை கடந்தோன் பெ. கடவுள்.

கற்படை^{1} பெ. 1.சுருங்கை. 2.கற்படுத்த நிலம்.

கற்படை^{2} பெ. கோட்டையின் கள்ளவழி.

கற்பம்^{1} பெ. அற்பம்.

கற்பம்^{2} பெ. கருப்பம்.

கற்பம்^{3} பெ. ஆயிரங்கோடி.

கற்பம்^{4} பெ. உலகம்.

கற்பம்^{5} பெ. முடியுங்காலம்.

கற்பன் பெ. கல்வியுள்ளவன்.

கற்பனை பெ. 1.இல்லாததை இருக்குமாறு நினைப்பது. 2.வருணனை. 3.கல்வி. 4.பொய் தோற்றம்.

கற்பித்தல் வி. 1.படிப்பித்தல். 2.உண்டாக்குதல். 3.கட்டளையிடுதல்.

கற்பியல் பெ. கற்பைப் பற்றிக் கூறும் அகப் பொருள் துறை.

கற்பு^{1} பெ. 1.ஒழுக்கம். 2.கன்னித்தன்மை. 3.மகளிர் நிறை.

கற்பு^{2} பெ. 1.கல்வி. 2.அறிவு. 3.ஆணை. 4.முறைமை.

கற்புரம்^{1} பெ. பொன்.

கற்புரம்^{2} பெ. கற்பூரம்.

கற்போன் பெ. 1.மாணாக்கன். 2.படிப்போன்.

கற்றவர் பெ. 1.புலவர். 2.அறிவுடையோர்.

கற்றா பெ. கன்றை உடைய பசு.

கற்றைவார் சடையன் பெ. சிவபெருமான்.

கறகறப்பு^{1} பெ. ஒலிக்குறிப்பு.

கறகறப்பு^{2} பெ. தொண்டையறுப்பு.

கறங்கோலை பெ. காற்றாடி.

கறடு பெ. தாழ்ந்த முத்துவகை.

கறம் பெ. 1.கொடுமை. 2.தீவினை. 3.வன் செய்கை.

கறவை பெ. 1.பாற்பசு. 2.கறக்கை.

கறள் பெ. 1.கறை. 2.துரு.

கறி பெ. மிளகு.

கறியமுது பெ. சமைத்த கறியாகச் சாமிக்குப் படைக்கும் உணவு.

கறிவேப்பிலை பெ. கறி தாளிக்கும்போது சேர்க்கும் இலை.

கறுத்தல் வி. சினத்தல்.

கறுப்பன்^{1} பெ. கறியவன்.

கறுப்பன்^{2} பெ. ஒருவகை நெல்.

கறும்பு மரம் பெ. தும்பிலி.

கறை^{1} பெ. உதிரம்.

கறை^{2} பெ. கடமை.

கறை^{3} பெ. 1.கருப்புநிறம். 2.அழுக்கு.

கறைபோக்கன் பெ. இழிந்தவன்

கன்முழை பெ. மலைக்குகை.

கன்று^{1} பெ. 1.இளமரம். 2.மரக்கன்று.

கன்று^{2} பெ. எருமை.

கன்று^{3} பெ. கடமை.

கன்னடம்^{1} பெ. ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று.

கன்னடம்^{2} பெ. பதினெண்மொழிகளுள் ஒன்று.

கன்னடம்^{3} பெ. 1.ஓர் இராகம். 2.ஒரு கூத்து.

கன்னி^{1} பெ. 1.திருமணமாகாத இளம்பெண். 2.தவப் பெண். 3.இளமை.

கன்னி^{2} பெ. 1.கன்னி ராசி. 2.அந்தநாள்.

கன்னி^{3} பெ. கரந்தை.

கன்னி^{4} பெ. ஓர் ஆறு.

கன்னித்தமிழ் பெ. அழிவில்லாத தமிழ்மொழி.

கன்னித்திசை பெ. தென்மேற்கு மூலை.

கன்னிநகர் பெ. கன்னிகாமாடம்.

கன்னி நாடு பெ. பாண்டிநாடு.

கன்னிப்போர் பெ. வீரனது முதற்போர்.

கன்னியாகுமரி^{1} பெ. குமரியாறு.

கன்னியாகுமரி^{2} பெ. பாரத கண்டத்தின் தென்கோடி முனை.

கனகசுப்புரத்தினம் பெ. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர்.

கனகம் பெ. பொன்.

கனகமலை பெ. மேருமலை.

கனகமாழை பெ. பொற்கொடி.

கனங்குழை பெ. கனவிய குழையை அணிந்த பெண்.

கனசாரி பெ. மிகுதி.

கனத்தல் வி. பருத்தல்.

கனப்பு பெ. 1.அழுத்தம். 2.இறுமாப்பு.

கனபலம் பெ. 1.அகலம் 2.கனம். 3.நீளம்.

கனம் பெ. 1.அகலம். 2.உறுதி. 3.கனத்த வடிவு. 4.நல்ல மதிப்பு.

கனல் பெ. நெருப்பு.

கனல்மரம் பெ. சோதிமரம்.

கனலோன் பெ. கதிரவன்.

கனவீனம் பெ. மதிப்புக்குறை.

கனவு பெ. 1.இரக்கம். 2.அன்பு.

கனற்சி[1] பெ. 1.சினம். 2.கோபம்.

கனற்சி[2] பெ. வெப்பம்.

கனி[1] பெ. 1.பழம். 2.இனிப்பு. 3.முதிர்ந்த பழம்.

கனி[2] பெ. பொன் முதலியன எடுக்கும் சுரங்கம்.

கனி[3]பெ. 1.கனிவு. 2.சாரம். 3.அன்புணர்ச்சி.

கனிகரம் பெ. அன்பு.

கனை பெ. 1.ஒலி. 2.குதிரை, முதலியன கனைக்கும் ஒலி.

கனைத்தல் வி. ஆரவாரித்தல்.

கனைவு பெ. 1.நெருக்கம். 2.செறிவு.

கா

கா பெ. காடு.

காக்கை[1] பெ. காக்குகை.

காக்கை[2] பெ. காகம்.

காக்கை[3] பெ. அவிட்டநாள்.

காக்கைக்குணம் பெ. 1.மடியின்மை. 2.கலங்காமை. 3.நெடுகக்காண்டல். 4.இறவாதிடம் புகுதல்.

காகிதம் பெ. தாள்.

காங்கோன் பெ. 1.வீடுமர். 2.முருகன்.

காங்கை பெ. 1.வெப்பம். 2.சூடு. 3.கனல்.

காசி பெ. வாரணாசி.

காசினி பெ. நிலம்.

காசு[1] பெ. 1.நாணயம். 2.பொன். 3.சிறுகாசு.

காசு[2] பெ. குற்றம்.

காசு[3] பெ. கோழை.

காஞ்சி[1] பெ. கோயம்புத்தூர் சில்லா வழியாக ஓடிக் காவிரியுடன் கலக்கும் நொய்யலாறு.

காஞ்சி[2] பெ. நாதாங்கி.

காஞ்சி[3] பெ. மயிர்.

காஞ்சி[4] பெ. சத்தபுரிகளுள் ஒன்றான காஞ்சிபுரம்.

காஞ்சி[5] பெ. மகளிர் இடையில் அணியும் எழுகோவையுள்ள அணி.

காஞ்சி[6] பெ. 1.ஆயா எனும் மரவகை. 2.காஞ்சிப் பூமாலை. 3.ஆற்றுப் பூவரசு.

காஞ்சி[7] பெ. 1.வீடுபேறுநிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சாற்றும் காஞ்சித்திணையாகிய புறத்திணை. 2.வேற்றுமன்னன் வந்துவிட அரசன் காஞ்சியென்னும் பூவைச்சூடித் தன் காவலிடத்தைக் காக்கும் புறத்துறை.

காஞ்சி[8] பெ.நிலையாமை.

காஞ்சி[9] பெ.செவ்வழிப்பண்வகை.

காஞ்சித்திணை பெ. வீடுபேறு காரணமாகப் பல் வேறு நிலையாமைகளைக் கூறும் புறத்திணை.

காஞ்சொறி பெ. 1.ஒரு செடி. 2.பூண்டு வகை.

காட்சி[1] பெ. 1.அறிவு. 2.அற்புதம். 3.தரிசனம். 4.தோற்றம். 5.கண்கவர் தோற்றம். 6.செயல். 7.படம்பார்ப்பது.

காட்சி[2] பெ. ஓர் அளவை.

காட்சியவர் பெ. 1.அறிஞர். 2.காட்சியர்.

காட்சியறிவு பெ. பொருளை நேரில் பார்த்து அறியும் முதல்நிலை அறிவு.

காட்டாளத்தி பெ. இசையின் ஆலாபனை வகை.

காட்டான்[1] பெ. காட்டுப்பசு.

காட்டான்[2] பெ. மிருக குணமுள்ளவன், இழிவான செயல்களை புரிபவன். அவன் ஒரு காட்டான்.

காட்டிக்கொடுத்தல்[1] வி. கற்றுக்கொடுத்தல்.

காட்டிக்கொடுத்தல்[2] வி. எதிரிக்குக் காட்டிக் கொடுத்தல்.

காட்டுதல் வி. காண்பித்தல்.

காட்டுயிரிகள் பெ. காட்டில் வாழும் உயிர்கள்.

காட்டெருமை பெ. மேதி.

காடபந்தம் பெ. தீவட்டி.

காடு[1] பெ. 1.இடம். 2.ஊர். 3.எல்லை. 4.சுடுகாடு. 5.வனம். 6.பாலை.

காடு[2] பெ. 1.மிகுதி. 2.நெருக்கம்.

காடு[3] பெ. ஒரு சொல்லீறு.

காடுகெழு செல்வி பெ. துர்க்கை.

காடுபடுதல் வி. 1.நிரம்புதல். 2.வீணாதல்.

காடுவாழ்த்து பெ. பொதுவியற்றிணைத்துறை பன்னிரண்டனுள் ஒன்று.

காடுவெட்டி பெ. மரம் வெட்டுபவன்.

காடை பெ. பறவை வகைகளில் ஒன்று.

காண்டம் பெ. 1.பெரும்பிரிவு. 2.காப்பியத்தின் பெரும்பிரிவு.

காண்டிகை பெ. கருத்து, சொற்பொருள், எடுத்துக் காட்டு ஆகியவை அடங்கிய உரை.

காணம்[1] பெ. 1.பொருள். 2.பொற்காசு. 3.செக்கு.

காணம்[2] பெ. 1.பாகம். 2.ஓரளவு.

காணார் பெ. குருடர்.

காணிக்கை பெ. 1.இனாமாக வழங்கும் பொருள். 2.கையுறை.

காணுதல் வி. 1.அறிதல். 2.காண்டல். 3.பெறுதல்.

காத்தல்[1] வி. அளத்தல்.

காத்தல்[2] வி. 1.அரசாளுதல். 2.காப்பாற்றல். 3.எதிர் பார்த்தல்.

காதல்[1] பெ. 1.அன்பு. 2.பக்தி. 3.வேட்கை. 4.விருப்பு.

காதல்[2] பெ. ஒரு பாடல்.

காது பெ. உடல் உறுப்புகளில் ஒன்றான கேட்கும் திறனுடைய செவி.

காதை[1] பெ. 1.காப்பிய உட்பிரிவு. 2.வரலாறு. 3.கதை. 4.செய்தி. 5.சொல். 6.கதையைக் கொண்ட பகுதி.

காதை[2] பெ. கொலை.

காந்தம்[1] பெ. 1.ஊசிக்காந்தம். 2.காந்தக்கல். 3.மின்சாரம்.

காந்தம்[2] பெ. அழகு.

காந்தம்[3] பெ. ஒளி.

காந்தள் பெ. 1.உழிஞைத் திணைத்துறை இருபத் தெட்டனுள் ஒன்று. 2.வெண்காந்தள்.

காந்தியடிகள் பெ. சத்தியசோதனை என்ற நூலை எழுதியவர்.

காப்பியம் பெ. 1.காவியம். 2.உயர்ந்தோரைப் பற்றிப் பாடப்படும் செய்யுள் இலக்கியம். ஐம்பெருங் காப்பியம்.

காப்பு[1] பெ. 1.காவல். 2.பாதுகாவல். 3.காவலர்.

காப்பு[2] பெ. 1.தெய்வவணக்கம். 2.திருநீர்.

காப்பு[3] பெ. 1.மதில். 2.சிறை.

காப்பு[4] பெ. அணிகலன்.

காப்பு[5] பெ. 1.அரசன். 2.அரசமுத்திரை.

காப்பு[6] பெ. ஊர்.

காப்பு[7] பெ. நுகர்பொருள்.

காப்புப்பருவம் பெ. பிள்ளைத்தமிழ் கூறும் பருவங்களில் முதல் பருவம்.

காப்புமாலை பெ. தெய்வங்காப்பதாக மூன்று ஐந்து அல்லது ஏழு பாடல்களில் பாடப்பெறும் ஒரு சிற்றிலக்கியம்.

காமத்தீ பெ. காமமெனும் கொடிய விருப்பம்.

காமத்துப்பால் பெ. 1.இன்பத்துப்பால். 2.திருக் குறளின் மூன்றாம் பாகம்.

காமுறுதல் வி. 1.விரும்புதல். 2.வேண்டிக் கொள்ளுதல்.

காய்[1] பெ. 1.பதப்படாதது. 2.அநுகூலமாகாதது.

காய்[2] பெ. ஆடுதற்குரிய காய்.

காய்[3] பெ. கழலைக்கட்டி.

காயசித்தி[1] பெ. 1.மனிதனின் இறப்பை நீக்கிக் காப்பாற்றும் மூலிகை. 2.பொன்னாங்கண்ணி.

காயசித்தி[2] பெ. உடல் நீடித்திருக்கச் செய்கை.

காயும்வில்லினன் பெ. பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்.

கார்[1] பெ. 1.கருமை. 2.மேகம். 3.மழை. 4.கார்ப் பருவம்.

கார்[2] பெ. கார்நெல்.

கார்[3] பெ. கருங்குட்டம்.

கார்[4] பெ. இருள்.

கார்[5] பெ. 1.அறிவு. 2.மயக்கம்.

கார்[6] பெ. பசுமை.

கார்[7] பெ. செல்வி.

கார்[8] பெ. அச்சம்.

கார்[9] பெ. மகிழ்வுந்து.

கார்குலாம் பெ. மேகக்கூட்டம்.

கார்டுவெல் பெ. திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணம் எனும் நூலை எழுதியவர்.

காராளர் பெ. 1.மேகத்தை ஆளுகின்றவர் களாகிய உழவர். 2.உழுதொழிலோர். 3.வேளாளர்.

காலம்[1] பெ. 1.இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் முக்காலம். 2.காலத்துவம். 3.மரணகாலம். 4.விடியல். 5.பருவம். 6.தக்க சமயம். 7.பொழுது.

காலம்[2] பெ. பருவப்பயிர்.

காலம்[3] பெ. விளாம்பழம்.

காலம்[4] பெ. துரிதம்.

காலம்[5] பெ. இசைக்குரிய திரிகாலம்.

காலமறிதல் பெ. செயலை நிறைவேற்றுவதற்கேற்ற காலத்தை அறிதல்.

காலாண்டு பெ. ஆண்டின் கால்பகுதி.

காவியம் பெ. 1.காப்பியம். 2.பாவியம்.

காளிதாசர் பெ. வடமொழி நாடக ஆசிரியர்.

காளை[1] பெ. விதைநீக்காத மாடு.

காளை[2] பெ. 1.இளைஞன். 2.வீரன்.

கான் பெ. காடு.

கானவர்கள் பெ. வேடர்கள்.

கி

கிடங்கில்காவிதிக்கீரங்கண்ணனார் பெ. சங்க காலப் புலவர் (நற்றிணை 364).

கிராமம் பெ. சிற்றூர்.

கிரி பெ. மலை.

கிரீடம் பெ. மணிமுடி.

கிலி பெ. அச்சம்.

கிழக்காந்தலை பெ. தலைகீழ் (மாற்றம்).

கிழமை பெ. உரிமை.

கிழி[1] பெ. 1.கிழிபட்டதுகில். 2.சீலைப்படம். 3.கீளுடை.

கிழி[2] பெ. பணமுடிப்பு.

கிழி[3] பெ. கீற்று.

கிழித்தல்[1] வி. துணியைக் கிழித்தல்.

கிழித்தல்[2] வி. பிளத்தல்.

கிழிதல்[1] வி. 1.கிழிசல். 2.கிழிந்த உடை.

கிழிதல்[2] வி. 1.உராய்தல். 2.வரைதல்.

கிள்ளிமங்கலக்கிழார்மகனார்சேரகோவனார் பெ. சங்க காலப்புலவர் (நற்றிணை 365).

கிள்ளை பெ. கிளி.

கிள்ளைவிடுதூது பெ. தலைவி காதலனிடம் கிளியைத் தூது விடுவதாகச் செய்யப்படும் பிரபந்தம் (அழகர் கிள்ளைவிடு தூது).

கிளம்புதல் வி. 1.புறப்படுதல். 2.வெளிப்படுதல். 3.எதிர்ப்படுதல்.

கிளர் பெ. புகழ்.

கிளர்வேந்தன் பெ. 1.புகழ் விளங்கும் அரசன். 2.புகழுக்குரிய அரசன்.

கிளவிக்கொத்து பெ. கோவைப் பிரபந்தத்தின் பல துறைகளைக் கொண்ட அதிகாரம்.

கிளவிக்கோவை பெ. அகப்பொருள் கோவை.

கிளவித்தலைவன் பெ. அகப்பொருள்தலைவன்.

கிளவியாக்கம் பெ. தொல்காப்பியச் சொல்லதி காரத்தில் வழுவற மொழிகளை ஆக்குவதற்குரிய விதிகளைக் கூறும் பகுதி.

கிளி[1] பெ. 1.சொல். 2.மொழி. 3.அகப்பொருள் துறை.

கிளி[2] பெ. பறவை.

கிளை பெ. சுற்றம்.

கிளைமொழி பெ. 1.ஒரு மூலமொழியிலிருந்து தோன்றி வளரும் மொழியாகும். 2.ஒரு பிரிவினர் பேசும் மொழி.

கிறித்து பெ. இயேசு பெருமான்.

கிறித்துவக் காப்பியங்கள் பெ. 1.தேம்பாவணி. 2.இரட்சணிய யாத்திரிகம். 3.இயேசுகாவியம்.

கிறித்துவம் பெ. கிறித்துவ சமயம்.

கிறித்துவன் பெ. கிறித்துவச் சமயத்தைச் சார்ந்தவன்.

கீ

கீண்டுதல் வி. குழி தோண்டுதல்.

கீதை பெ. மகாபாரதத்தில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் நீதிகளைக் கூறும் அருட்பாடல்.

கீர்த்தனை பெ. இசைப்பாட்டு.

கீர்த்திமான் பெ. புகழ் பெற்றவன்.

கீரங்கீரனார் பெ. சங்ககாலப் புலவர் (நற்றிணை 79).

கீரங்கொற்றனார் பெ. சங்ககாலப் புலவர்.

கீரத்தனார் பெ. சங்காலப் புலவர் (நற்றிணை 42).

கீரந்தையார் பெ. சங்க காலப் புலவர் (பரி பாடல் 2).

கீழ்க்கணக்கு பெ. அறம், பொருள், இன்பம் கூறும் நூல்.

கு

குங்கிலியகலயநாயனார் பெ. 63 நாயன்மார் களில் ஒருவர்.

குசலங்கள்பேசுதல் வி. நலன்கேட்டல்.

குசலம் பெ. நலன்.

குஞ்சி பெ. தலைமுடி.

குடதிசை பெ. மேற்குதிசை.

குடப்புலவியனார் பெ. சங்ககாலப் புலவர் (புற நானூறு 18,19).

குடவழுந்தனார் பெ. சங்ககாலப் புலவர் (அக நானூறு 97).

குடவாயிலினல்லாதனார் பெ. சங்ககாலப் புலவர் (புறநானூறு 242).

குடவாயிற்கீர்த்தனார் பெ. சங்ககாலப் புலவர் (அகநானூறு 35).

குடவுழுந்தனார் பெ. சங்ககாலப் புலவர் (அக நானூறு 67).

குடவோலை பெ. குடத்திலிருந்து தேர்ந்தெடுக்கும் வாக்கு (சோழர் கால முறை).

குடி[1] பெ. இனம்.

குடி[2] பெ. குடித்தனம்.

குடிக்கிழார்மகனார்நெய்தற்றத்தனார் பெ. சங்ககாலப் புலவர் (அகநானூறு 243).

குடித்தல் வி. 1.பருகுதல். 2.அருந்துதல்

குடிநிலையுரைத்தல் பெ. வீரக்குடியின் பழமை யையும் அஞ்சாமையையும் உரைக்கும் புறத்துறை.

குடிபிறப்பு பெ. உயர்குடியில் தோன்றுவது.

குடிமை[1] பெ. 1.உயர்குலத்தாரது ஒழுக்கம். 2.பிறந்த குடியை உயரச்செய்யுந்தன்மை.

குடிமை[2] பெ. குடிகளிடமிருந்து பெறும் ஒருவகை வரி.

குடிமை[3] பெ. 1.உயர்குடி. 2.குடிப்பிறப்பு. 3.அரசரது குடியாயிருக்கும் தன்மை.

குடிமை[4] பெ. அடிமை.

குடிமை[5] பெ. குடியாட்சி.

குடும்பவிளக்கு பெ. பாரதிதாசன் படைத்த குறுங் காவியங்களுள் ஒன்று.

குண்டலகேசி பெ. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று.

குணச்சித்திரம் பெ. 1.கதாப்பாத்திரம். 2.பண்பு விளக்கம்.

குணசாகரர் பெ. யாப்பருங்கலக்காரிகை உரை யாசிரியர்.

குணநலம் பெ. குணங்களால் ஆகிய நலம்.

குணநூல் பே. நாடகத் தமிழ் நூல்.

குணம்[1] பெ. 1.தன்மை. 2.பண்பு. 3.இயல்பு. 4.அமைதி. 5.அனுகூலம்.

குணம்[2] பெ. வில்நாண்.

குணம்[3] பெ. நிறம்.

குணம்[4] பெ. கிழக்கு.

குணவீரபண்டிதர் பெ. நேமிநாதம் நூலாசிரியர் (கி.பி.13).

குதம்பைச்சித்தர் பெ. 18 சித்தர்களில் ஒருவர்.

குதித்தல் வி. 1.எம்புதல். 2.நீரில் குதித்தல். 3.இறங்குதல்.

குதிரைத்தறியனார் பெ. சங்ககாலப் புலவர் (நற்றிணை 216).

குந்தம் பெ. சூலம்.

குப்பம் பெ. நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ் விடங்கள்.

குபேரன் பெ. பெருஞ்செல்வன்.

குமட்டூர்கண்ணனார் பெ. சங்ககாலப்புலவர்; பதிற்றுப்பத்தின் 2 ஆம் பத்தினைப் பாடியவர்.

குமணன் பெ. ஒரு பெருவள்ளல்.

குமரகண்டவலிப்பு பெ. ஒருவகை வலிப்பு நோய்.

குமரகுருபரர் பெ. 17 ஆம் நூற்றாண்டின் பெரும் புலவர்; கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், நீதிநெறி விளக்கம் முதலிய நூல்கள் எழுதியவர்.

குமரகுலசிங்கமுதலியார் பெ. பதிவிரதை வியாசம் என்னும்நூல்செய்தவர்; யாழ்ப்பாணக் கிறித்துவப் புலவர் (1826-1884).

குமரிக்கண்டம் பெ. கடல்கோளால் கவரப்பட்ட பழந்தமிழ்ப் பகுதி; முதல்மாந்தன் தோன்றிய இடம்.

குமரிச்சேர்ப்பன் பெ. குமரித்துறைக்குரிய பாண்டியன்.

குமரேசசதகம் பெ. குருபாததாசர் இயற்றியது கி.பி.18.

குமாரசரசுவதி பெ. கிருட்டிணதேவராயரின் அரண் மனைப் புலவர் (கி.பி.16).

குமாரசுவாமிஅவதானி பெ. தெய்வச்சிலையார் , விறலிவிடுதூது செய்தவர்.

குமாரசுவாமிப்புலவர் பெ. யாழ்ப்பாணப் புலவர்.

குமாரசுவாமிமுதலியார் பெ. அருளம்பலக் கோவை செய்த யாழ்ப்பாணப்புலவர் (கி.பி.19).

குமாரசுவாமியம் பெ. நல்லூர்க்குமார சுவாமி தேசிகர் செய்த ஒரு சோதிட நூல் (கி.பி.18).

குமாரதேவர் பெ. மகாராசா துறவு நூல் ஆசிரியர் (கி.பி.18).

குமாரன் பெ. மகன்.

குமுழிஞாழலார்நப்பசலையார் பெ. சங்காலப் புலவர் (அகம்.160).

குரவர் பெ. ஆசிரியர்.

குரிசில் பெ. தலைவன்.

குருகுலம் பெ. குருவுடன் வாழ்ந்து கற்குமிடம்.

குருகைப்பெருமாள்கவிராயர் பெ. மாறன் அலங்காரம் எனும் நூலின் ஆசிரியர் (கி.பி.16).

குருசு பெ. சிலுவை.

குருதி பெ. இரத்தம்.

குருநமச்சிவாயர் பெ. அண்ணாமலை வெண்பா செய்த ஞானி (கி.பி.16).

குருபாததாசர் பெ. குமரேச சதகம் இயற்றியவர் (கி.பி.18).

குரைகடல் பெ. ஒலிக்கும் கடல்.

குரைத்தல் வி. நாய் குரைத்தல்.

குலச்சிறைநாயனார் பெ. 63 நாயன்மார்களில் ஒருவர்.

குலசேகரப்பெருமாள் பெ. 12 ஆழ்வார்களில் ஒருவர்.

குலசேகரன் பெ. சிறப்புற்று விளங்குபவன்.

குலுங்குதல் வி. 1.அதிர்ந்து ஆடுதல். 2.நிறைந் தாடுதல்.

குலோத்துங்கசோழனுலா பெ. 2 ஆம் குலோத் துங்க சோழன் மீது ஒட்டக் கூத்தர் பாடியது.

குவளை[1] பெ. 1.கருங்குவளை. 2.செங்கழுநீர்.

குவளை[2] பெ. பேரெண்.

குவளை[3] பெ. 1.கண்குழி. 2.கண்மடல். 3.கோழை.

குவி[1] பெ. 1.திரல். 2.மிகுதி.

குவி[2] பெ. குவியல்.

குவிதல் வி. 1.சேர்தல். 2.ஒன்றாக்குதல்.

குழந்தைஇலக்கியம் பெ. குழந்தைகளுக்காக எழுதப்பட்ட பாடல்கள், கதைகள் முதலியவை.

குழந்தைக்கவிராயர் பெ. மான்விடுதூது செய்த புலவர்.

குழப்புநூல் பெ. வேதாமங்களுக்குப் புறம்பான பஞ்சராத்திரிகள் நூல்.

குழல் பெ. கூந்தல்.

குழவி பெ. குழந்தை.

குழற்றத்தன் பெ. சங்ககாலப் புலவர் (குறுந்தொகை 242).

குழி[1] பெ. 1.பள்ளம். 2.குழிவு.

குழி[2] பெ. உடற்குழி.

குழித்தல் வி. குழிக்கை.

குளிர் பெ. 1.குளிர்ச்சி. 2.உறங்குளிர்.

குளிறு பெ. ஒலி.

குற்றம்[1] பெ. 1.தெய்வகோப முதலியவற்றிற்குக் காரணமான தீட்டு. 2.தீங்கு. 3.துன்பம். 4.பழி. 5.அபராதம்.

குற்றம்[2] பெ. அங்கக் குறை.

குற்றம்[3] பெ. பிழை.

குற்றவாளி பெ. உண்மையாகவே குற்றம் செய்தமையால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளாகிய திருடர்கள்.

குறட்பா பெ. குறள் வெண்பா.

குறத்திப்பாட்டு பெ. குறவஞ்சி தலைவியின் காதல் முதலியவை பற்றிக் குறத்தி குறி சொல்வது பற்றிக் கூறுவது.

குறம் பெ. 1.குறத்திப்பாட்டு. 2.குறவர்கூற்றாக வரும் கலம்பக உறுப்பு.

குறமகள்இளவெயினி பெ. சங்ககாலப் புலவர் (புறம்.157).

குறவஞ்சி பெ. 1.குறி சொல்லும் குறத்திமகள். 2.குறத்திப்பாட்டு. குற்றாலக் குறவஞ்சி.

குறவழுதியார் பெ. சங்ககாலப் புலவர் (புறம். 346) (அகம்.150) குறுந்தொகை 345).

குறள்[1] பெ. 1.இருசீரடி. 2.ஒரு வகைப்பா. 3.குறுமை. 4.சிறுமை. 5.திருவள்ளுவர் செய்த ஒரு தரும நூல்.

குறள்[2] பெ. பூதகணம்.

குறளை பெ. 1.கோள் சொல்லுதல். 2.புறங்கூறல்.

குறி[1] பெ. அடையாளம்.

குறி[2] பெ. குணம்.

குறி[3] பெ. ஆண் பெண் குறி என்னும் ஒருவகைச் சாத்திரஞ் சொல்லுதல்.

குறி[4] பெ. குறியென்னேவல்.

குறி[5] பெ. 1.சகுனம். 2.நிமித்தம்.

குறி[6] பெ. தோற்றம்.

குறி[7] பெ. நன்னடத்தை.

குறி[8] பெ. புடவை.

குறி[9] பெ. மாடு முதலியவற்றினிடுங்குறி.

குறி[10] பெ. முறை.

குறிஞ்சி[1] பெ. ஐந்து வகை நிலங்களுள் ஒன்று; மலையும் மலைசார்ந்த இடமும்.

குறிஞ்சி[2] பெ. மலைச்சரிவுகளுள் வளரக்கூடிய ஒருவகைத் தாவரம்.

குறிஞ்சிப்பண் பெ. நால்வகைப் பண்களுள் ஒன்று.

குறிஞ்சிப்பறை பெ. தொண்டகப் பறை.

குறிஞ்சிப்பாட்டு பெ. பத்துப்பாட்டுள் ஒன்றானதும் தலைவியின் வேற்றுமைக்கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்குங் கூற்றாகக் கபிலரால் பாடியதுமான செய்யுள்.

குறிஞ்சியாழ் பெ. குறிஞ்சி நில யாழ்.

குறித்தல் வி. 1.எழுதுதல். 2.பதிவு செய்தல். 3.உறுதி செய்தல். 4.சுட்டுதல்.

குறிப்பு[1] பெ. சித்திரத்தில் உருவக்குறிப்பு.

குறிப்பு[2] பெ. பஞ்சகந்தங்களுள் ஐம்பொறிகளும் மனமுமாகிய ஆறான்றொகுதி.

குறிப்பு[3] பெ. 1.குறிப்புக்குறியீடு. 2.கைக்குறிப்பு புத்தகம். 3.வெளிப்படையாகவின்றிப் பொருள் உணர்த்துஞ் சொல். 4.ஓசை நிறம் முதலிய பொருளைக் குறிப்பது. 5.சிறப்பியல்பு. 6.சாதகம்.

குறிப்பு[4] பெ. இலக்கு.

குறிப்பு[5] பெ. சைகை.

குறிப்பு[6] பெ. சுருக்கம்.

குறிப்பு[7] பெ. 1.மனவொருமை. 2.ஒன்பதுவகைச் சுவைகளில் உண்டாகும் மனநிலை. 3.உள்ளக் கருத்து. 4.பிறர்கருதியதனைக் கானவல்ல கூரிய அறிவு.

குறிப்புச்சொல் பெ. குறிப்பினால் பொருள் உணர்த்தும் சொல்.

குறிப்புவமை பெ. குறிப்பினால் உரணப்படும் உவமையணி.

குறிப்பெடுத்தல் வி. தொகுத்து எழுதுதல்.

குறுங்கணக்கு பெ. உயிர் மெய்=30.

குறுங்கீரன் பெ. சங்க காலப் புலவர் (குறுந்தொகை 342).

குறுங்குடிமருதனார் பெ. சங்ககாலப் புலவர் (அகம். 4 குறுந்தொகை 344).

குறுங்கோழியூர் கிழார் பெ. சங்ககாலப் புலவர் (புறம்.17,20, 22).

குறுந்திரட்டு பெ. தத்துவராயர் தொகுத்த ஒரு வேதாந்த நூல்.

குறுந்தொகை பெ. அகப்பொருளைப் பற்றியதும் அகவற்பாக்கள் 402 கொண்டு பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பெற்றதும் எட்டுத் தொகையிற் சேர்ந்ததுமாகிய ஒரு நூல்.

குறை[1] பெ. 1.தேவை. 2.ஏக்கம்.

குறை[2] பெ. 1.பிழை. 2.குற்றம்.

குறை[3] பெ. 1.ஊட்டக்குறைவு. 2.குறைபாடு. 3.ஊனம்.

குறை[4] பெ. 1.முடிக்கப்படும் பொருள். 2.தவறு.

குறை[5] பெ. எஞ்சியது.

குறை[6] பெ. அரசிறை.

குறை[7] பெ. 1.கடன் காரியம். 2.வறுமை.

குறை[8] பெ. வேண்டுகோள்.

குறை[9] பெ. கட்டை.

குறை[10] பெ. ஆற்றிடைக்குறை.

குறை[11] பெ. எழுத்துக்குறை.

குன்றாதநசரேயன் பெ. குறைவில்லாத நசரேயன் (இயேசு).

குன்றி பெ. 1.குன்றிக்கொடி. 2.குன்றிமணி.

குன்றியனார் பெ. சங்ககாலப் புலவர் (அகம். 400).

குன்று பெ. மலை.

குன்றூர்க்கிழார்மகனார்கண்ணத்தனார் பெ. சங்க காலப் புலவர் (புறம்.338), (நற்றிணை 322).

குனிதல் வி. 1.முன்னுடலை தாழ்த்துதல். 2.குனிந்து செல்லுதல்.

கூ

கூகை[1] பெ. கோட்டான்.

கூகை[2] பெ. கூவை எனும் செடிவகை.

கூகைக்கோழியார் பெ. சங்ககாலப் புலவர் (புறம்.364).

கூட்டம்[1] பெ. 1.சபை. 2.திரள்.

கூட்டம்[2] பெ. மெய்யுறு புணர்ச்சி.

கூட்டம்[3] பெ.இனத்தார்.

கூட பெ. 1.மேலும். 2.கூடுதலாக. 3.குறைந்தஅளவு (கொஞ்சம் கூட இரக்கமில்லை).

கூடல்[1] பெ. மதுரை.

கூடல்[2] பெ. கல்வி.

கூடல்[3] பெ. தோப்பு.

கூடல்[4] பெ. சுழிக்குறி.

கூடலூர்க்கிழார் பெ. முதுமொழிக்காஞ்சி செய்தவரும் ஐங்குறுநூறு தொகுத்தவருமான சங்ககாலப் புலவர்.

கூடாரம் பெ. தங்குவதற்குரிய இடம்.

கூடி வி.எ. சேர்ந்து.

கூடு[1] பெ. பறவைக்கூடு.

கூடு[2] பெ. நெற்கூடு.

கூடு[3] பெ. 1.உறைவிடம். 2.தங்குவது.

கூடு[4] பெ. சிமில்.

கூடு[5] பெ. உடல்.

கூடு[6] பெ. வாய்க்கூடு.

கூடு[7] பெ. ஏவல்.

கூடுதல் வி. சேர்தல்.

கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) பெ. **தலைவனைக் கண்டு மீண்ட இரவலன்.** கூத்தாடுபவரைத் தலைவனிடம் செலுத்தும் புறத்துறை.

கூத்துக்களரி பெ. நடன அரங்கு.
கூர்மபுராணம் பெ. திருமால் கூர்மப்பிறப்பு எடுத்த பொழுது அருளியது; அதிவீரராம பாண்டியர் வட மொழியிலிருந்து தமிழில் இயற்றியது.
கூரிய வி.அ. கூர்மை.
கூரை பெ. 1.வீட்டின் மேற்கூரை. 2.சிறுகுடில்.
கூவாமுன்னர் பெ. அழைக்கும் முன்னர்.
கூவிளங்காய் பெ. நேர்நிரை நேர் குறிக்கும் செய்யுள் வாய்ப்பாடு.
கூழ் பெ. உணவு.
கூழங்கைத் தம்பிரான் பெ. யோசேப்பு புராணம் செய்த யாழ்ப்பாணம் புலவர் (1795).
கூற்று பெ. எமன்.
கூறு[1] பெ. இயல்பு.
கூறு[2] பெ. சிறுகுவியல்.
கூறு[3] பெ. கூறுபாடு.
கூறுகள் பெ. பகுதிகள்.
கூறுதல் வி. சொல்லுதல்.
கூறை பெ. 1.ஆடை. 2.புத்தாடை.
கூனல்[1] பெ. வளைவு.
கூனல்[2] பெ. 1.கூன். 2.முதுகு வளைவு.
கூனாய் பெ. வளைவு (வளைந்த).

கெ

கெட்டி[1] பெ. 1.உறுதி. 2.அழுத்தம்.
கெட்டி[2] பெ. திறமை.
கெட்டி[3] பெ. கெட்டிச்சாயம்.
கெடிலம் பெ. 1.ஆழமான ஓடை. 2.ஓடும் ஆறு.
கெடுதல் வி. 1.தோற்றோடுதல். 2.விகாரத்தால் கெடுதல். 3.வறுமையுறுதல். 4.ஒழுக்கம்கெடுதல். 5.ஒருவழிதல். 6.பழுதாதல். 7.அழிதல்.
கெடு[1] பெ. தவணை.
கெடு[2] பெ. எல்லை.
கெடு[3] பெ. 1.கெடுகை. 2.கெடுதி.
கெடு[4] பெ. மாதம்.
கெண்டை பெ. சேல்மீன்சதை.
கெண்டைக்கால் பெ. கணைக்கால்.
கெலன் கொல்லர் பெ. அமெரிக்காவின் புகழ் பெற்ற எழுத்தாளர்.

கே

கேசரி பெ. சிங்கம்.
கேட்டது பெ. விரும்பியதை கேட்பது.
கேட்டல் வி. கேட்டறிதல்.
கேட்டுமுட்டு பெ. புறச்சமயத்தாரைப் பற்றிக் கேட்டதனால் சைனர் மேற்கொள்ளும் தீட்டு.
கேடு பெ. 1.தீங்கு. 2.களங்கம். 3.ஒழுங்கின்மை. 3.ஒழுக்கக்கேடு.
கேண்மை பெ. 1.நட்பு. 2.உறவு.
கேணி பெ. கிணறு.
கேழல் பெ. பன்றி.
கேள் பெ. 1.உறவு. 2.நட்பு. 3.கணவன். 4.சுற்றம்.
கேள்விஞானம் பெ. கேட்டுப்பெறும் அறிவு.
கேள்வித்தாள் பெ. வினாத்தாள்.
கேள்விநேரம் பெ. வினா கேட்பதற்கு ஒதுக்கப்படும் நேரம்.
கேளிர் பெ. 1.நண்பர். 2.சுற்றத்தார்.

கை

கைக்கிளை பெ. ஒருதலைக் காமம்.
கைகேயி பெ. தசரதன் மனைவி.
கைந்நிலை பெ. பதினெண் கீழ்க்கணக்குகளுள் ஒன்றும் அகப்பொருள் பற்றியதும் புல்லங்காடர் என்ற புலவரியற்றியதுமான நூல்.
கையடக்கம் பெ. கைக்குள் அடங்கும் பொருள்.

கொ

கொக்கு பெ. பறவை.
கொங்கு பெ. தேன்.
கொஞ்சம் பெ. சிறியது, எளிது.
கொட்டி[1] பெ. 1.கொடுகொட்டி. 2.நீர்க்கொடி.
கொட்டி[2] பெ. தாளம்.

கொட்டி[3] பெ. வாயில்.

கொட்பின்றிருத்தல் வி. வேறுபாடு இல்லாதிருத்தல்.

கொடி பெ. பவளக்கொடி.

கொடிக்கவி பெ. 14 மெய்கண்ட நூல்களில் ஒன்று; இதன் ஆசிரியர் உமாபதி சிவம்.

கொடிகட்டிப்பறத்தல் வி. தனிப்புகழோடு வாழுதல்.

கொடுங்கோல் பெ. கொடுமை மிகுந்த ஆட்சி.

கொடுத்தல் வி. 1.அளித்தல். 2.உட்கொள்ளுதல்.

கொடுந்தமிழ் பெ. செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்து வழங்கிவரும் தமிழ் மொழி.

கொடுமை பெ. கொடூரம்.

கொடூரம் பெ.1.கடுமை. 2.துன்பம். 3.வருந்தத்தக்கச் செயல். 4.இறக்கமற்ற செயல்.

கொடை பெ. 1.பரிசு. 2.பங்களிப்பு. 3.தியாகம். 4.ஈகை.

கொடைவஞ்சி பெ. போரில் வென்று கொண்ட பொருளைப் பாடிய பாணர்க்கு அரசன் பரிசாக அளிப்பதைக் கூறும் புறத்துறை.

கொண்டல் பெ. மேகம்.

கொலைமாக்கள் பெ. கொடையாளிகளாகிய சேவகர்கள்.

கொழித்தல்[1] வி. வளம் சேர்த்தல்.

கொழித்தல்[2] வி. அரிசியை கொழித்தல்.

கொள்ளுதல் வி. பெறுதல்.

கொற்கை பெ. பாண்டிய நாட்டுத் துறைமுகம்.

கொற்றம் பெ. 1.வெற்றி. 2.அரசநீதி.

கொன்றைவேந்தன்[1] பெ. சிவபெருமான்.

கொன்றைவேந்தன்[2] பெ. ஔவையார் இயற்றிய நீதி நூல்.

கோ

கோ[1] பெ. 1.அரசன். 2.பேரரசன். 3.தந்தை. 4.தலைமை. 5.குயவன்.

கோ[2] பெ. 1.மலை. 2.நிலம்.

கோ[3] பெ. பசு.

கோ[4] பெ. கண்.

கோ[5] பெ. இரக்கக்குறிப்பு.

கோ[6] பெ. பெருமை.

கோட்மரம் பெ. கிளைகளை உடைய மரம்.

கோடி பெ. கொம்பு.

கோடு[1] பெ. கீற்று.

கோடு[2] பெ. வளைவு.

கோடு[3] பெ. 1.யானை தந்தம். 2.கொம்பு.

கோடு[4] பெ. யாழ்த்தண்டு.

கோடு[5] பெ. பிறைமதி.

கோடு[6] பெ. சங்கு.

கோடு[7] பெ. மயிர் முடி.

கோடு[8] பெ. 1.மலைச்சிகரம். 2.மலை. 3.மேட்டு நிலம். 4.நீர்க்கரை. 5.குளம்.

கோடு[9] பெ. 1.முனை. 2.வரம்பு.

கோடு[10] பெ. கிளை.

கோடு[11] பெ. பக்கம்.

கோடை பெ.1.கோடை காலம். 2.ஆறு பருவங்களில் ஒன்று. 3.வேனிற்காலம்.

கோணம்[1] பெ. 1.வாட்படை. 2.சுவர்வாள்.

கோணம்[2] பெ. குதிரை.

கோணி பெ. சாக்கு.

கோதில் பெ.அ. குற்றமில்லாத.

கோநகர் பெ. தலைநகர்.

கோப்பெருஞ்சோழன் பெ. வடக்கிருந்து உயிர்நீத்த அரசன்.

கோமான் பெ. அரசன் (திருதராட்டிரன்).

கோயில்ஒழுகு பெ. கோயில் நடைமுறைகளைக் கூறும் ஒரு சிற்றிலக்கியம்.

கோயில்நான்மணிமாலை பெ. பட்டினத்தடிகள் செய்த ஒரு சிற்றிலக்கியம்; சிதம்பரம் பற்றியது.

கோயில்புராணம் பெ. உமாபதி சிவாசாரியார் இயற்றிய புராணம்; சிதம்பரம் பற்றியது.

கோவை[1] பெ. 1.கணிப்பொறியில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும் தகவல் திரட்டு. 2.கோப்பு.

கோவை[2] பெ. கோயமுத்தூர்.

கோவை[3] பெ. வரிசை.

கோல்[1] பெ. 1.கம்பு. 2.தடி. 3.தண்டு.

கோல்[2] பெ. திரட்சி.

கோல்[3] பெ. யாழ்நரம்பு.

கோல்[4] பெ.அளவுகோல்.
கோல்[5] பெ. துலாக்கோல்.
கோல்[6] பெ. 1.எழுதுகோல். 2.தூரிகை.
கோல்[7] பெ. அம்பு.
கோல்[8] பெ. 1.செங்கோல். 2.அரசாட்சி.
கோல்[9] பெ. அஞ்சனக்கோல்.
கோல்பஞ்சு பெ. மெல்லியபஞ்சு
கோலம் பெ. 1.அழகு. 2.தோற்றம்.
கோவை பெ. **கோக்கப்பட்டது கோவை;** முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், முதலியவற்றைத் தன்னுள் அடக்கியச் சிற்றிலக்கியம் (மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார்).
கோவைச்சதகம் பெ. கோவை நானூறு ; நூறு பாடல்கள் அமைந்தது (புலவர் பெரியசாமி).
கோழிவேந்தன் பெ. சோழன்.
கோள்[1] பெ. புறங்கூறல்.
கோள்[2] பெ. 1.கொள்கை. 2.துணிபு. 3.வலிமை. 4.தன்மை.
கோள்[3] பெ. கொலை.
கோள்[4] பெ. 1.கிரகம். 2.மேகம்.
கோள்[5] பெ. ஒளி.
கோள்[6] பெ. தீமை.
கோள்[7] பெ. குலை.
கோள்[8] பெ. வித்து.
கோள்[9] பெ. பொய்.
கோள்[10] பெ. பாம்பு.
கோள்[11] பெ. புனைவு.
கோன் பெ. 1.அரசன். 2.தலைவன். 3.இடையர் பட்டப் பெயர்.
கோனேரியப்பமுதலியார் பெ. தமிழில் உபதேச காண்டம் பாடிய ஆசிரியர் (கி.பி.18).
கௌசிகம்[1] பெ. கூகை.
கௌசிகம்[2] பெ. பட்டாடை.
கௌசிகம்[3] பெ.ஒருபண்.
கௌசிகன்[4] பெ. 1.விசுவாமித்திரன். 2.இந்திரன்.
கௌடநெறி பெ. ஒரு செய்யுள் வகை.
கௌணியர் பெ. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வரும் மூவருள் ஒருவர்.
கௌதமன் பெ. 1.புத்தன். 2.ஒரு முனிவன்.
கௌரவித்தல் வி. சிறப்புச் செய்தல்.
கௌரியன் பெ. பாண்டியன் பட்டப் பெயர்.

ச

சகமார்க்கம் பெ. தோழமை நெறி.
சகரையாண்டு பெ. சகாப்த ஆண்டு.
சகா பெ. தோழன்.
சகிப்புத்தன்மை பெ. பொறுத்துக்கொள்ளும் தன்மை.
சகோதரன் பெ. உடன் பிறந்தவன்.
சகோதரி பெ. உடன் பிறந்தவள்.
சங்கஇலக்கியம் பெ. பழமையான **இலக்கியம்.** பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் (10+8+18=36) இவற்றில் சிவனுக்குரிய பண்புகளும் செய்திகளும் கூறப்பட்டுள்ளன.
சங்கத்தமிழ் பெ. முச்சங்கங்கள் வளர்த்த தமிழ்.
சங்கதி பெ. செய்தி.
சங்கப்புலவர் பெ. மதுரைச் சங்கத்தை அணி செய்த புலவர்கள்.
சங்கம் பெ. 1.அவை. 2.கழகம்.
சங்கம் மருவிய காலம் பெ. **கி.பி.100 முதல் கி.பி. 600 வரை நிலவிய காலம்.** இக்கால நூல்கள் சங்கம் மருவிய நூல்கள்.
சங்கின் பிள்ளை பெ. சங்குக் குஞ்சுகள்.
சங்கை[1] பெ. 1.கருத்து 2.எண்ணம்.
சங்கை[2] பெ. 1.எண். 2.அளவு.
சட்டதிட்டம் பெ. நெறிமுறை விதி.
சட்டைமுனி பெ. ஒரு சித்தர்.
சடகோபப்புலவர் பெ. குருகூர்ப்பள்ளு இயற்றியவர்.
சடகோபரந்தாதி பெ. கம்பர் இயற்றிய நூல்.
சடங்கு பெ. சாத்திரமும் வழக்கமும் பற்றிய கிரியை.
சடலம் பெ. சடை.
சடையநாயனார் பெ. 63 நாயன்மார்களில் ஒருவர்; சுந்தரமூர்த்தி நாயனாரின் தந்தை.

சடையப்பவள்ளல் பெ. கம்பரை ஆதரித்தவர்.

சத்தம் பெ. ஓசை.

சதகம்[1] பெ. நூறு பாட்டுகள் கொண்ட ஒரு சிற்றிலக்கியம். தொண்டை மண்டல சதகம் (படிக்காசுப்புலவர்).

சதகம்[2] பெ. தான்றி எனும் மரவகை.

சதா பெ. எப்பொழுதும்.

சதுர்[1] பெ. நான்கு.

சதுர்[2] பெ. திறமை.

சதுர்[3] பெ. நூற்றாண்டு (நாஞ்.வ.).

சதுர்வேதம் பெ. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு.

சதுரகராதி பெ. பெயரகராதி, பொருளகராதி, தொகை அகராதி, தொடையகராதி என்பன அடங்கிய ஒரு நூல்; இதை இயற்றியவர் வீரமாமுனிவர்.

சதுரங்கச்சேனை பெ. நால்வகைப் படைகள்.

சந்தம் பெ. அழகு.

சந்தர்ப்பம் பெ. 1.வாய்ப்பு. 2.வேளை.

சந்தித்தல்[1] பெ. 1.காணுதல். 2.சமாளித்தல். 3.கூடுதல்.

சந்தித்தல்[2] **பெ.** 1.கூடுமிடம். 2.சொற்புணர்ச்சி.

சந்திரவாணன் கோவை பெ. வீரராகவர் எழுதிய கோவை நூல்.

சந்தேகம் பெ. 1.ஐயம். 2.குற்ற உணர்வு.

சபதம் பெ. சூளுரை.

சபை[1] பெ. 1.குறிப்பிட்ட நாளில் பல பொருள்களும் விற்குமிடம். 2.உற்பத்திப் பொருளை வாங்கி விற்றல். 3.விற்பனை வாய்ப்பு.

சபை[2] பெ. 1.அவை. 2.ஆலயம்.

சம்பவம் பெ. நிகழ்ச்சி.

சம்பளம் பெ. ஊதியம்.

சம்பிரதாயம் பெ. மரபு.

சம்பு பெ. நாவல்.

சம்மட்டி பெ. பெரிய சுத்தியல்.

சமஅழுத்தக் கோடுகள் பெ. சமகாற்று அழுத்த முள்ள இடங்களைத் தொடும் கோடுகள்.

சமகாலம் பெ. ஒரே காலம்.

சமண், சமணம் பெ.1.சமணமதம். 2.அருகமதம். 3.சமணர்.

சமபந்தி பெ. ஒரே பந்தியில் உண்ணும் உணவு.

சமயக்குரவர் பெ. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர். மூவர் : அப்பர், சுந்தரர் , சம்பந்தர்

சமயதத்துவம் பெ. மத அடிப்படையிலான உண்மை.

சமயம்[1] பெ. நேரம்.

சமயம்[2] பெ. மதம்.

சமவெளி பெ. 1.மேடு பள்ளமற்ற பரந்த நிலப்பரப்பு. 2.ஆற்றுச் சமவெளி. 3.சிந்துசமவெளி. 4.சமமான நிலப்பகுதி.

சமுதாயச்சீர்திருத்தம் பெ. மூடப்பழக்க வழக்கங் களை மாற்றியமைத்தல்.

சமுதாயம்[1] பெ. 1.மக்கள் திரள். 2.குறிப்பிட்ட இனம்.

சமுதாயம்[2] பெ. உடன்படிக்கை.

சமூகம் பெ. கூட்டம்.

சமூகமரபு[1] பெ. 1.சமூகத்தில் வழிவழியாக வந்து கொண்டிருக்கும் அறிவு. 2.பழக்கவழக்கம் முதலியவற்றைத் தன்னுள் அடக்கியது.

சமூகமரபு[2] பெ. கலை.

சமூகவியல் பெ. சமூக அமைப்பை ஆராயும் துறை.

சயங்கொண்டார் பெ. கலிங்கத்துப்பரணி செய்த புலவர் (கி.பி.11).

சர்க்கார் பெ. அரசு.

சர்ப்பம் பெ. பாம்பு.

சர்மம், சருமம் பெ. தோல்.

சர்வகலாசாலை பெ. பல்கலைக்கழகம்.

சர்வவல்லமை பெ. முழுவல்லமை (கடவுள்).

சரசுவதி அந்தாதி பெ. கம்பர் இயற்றிய நூல்.

சரணடைதல் வி. அடைக்கலமடைதல்.

சரி[1] பெ. குலை.

சரி[2] பெ. உறுப்பு வெளிவருதல்.

சரி[3] பெ. பொருத்தமானது.

சரி[4] பெ. கூடுதல்.

சரி[5] பெ. குறைவு.

சரி[6] பெ. ஈடு.

சரித்திரம் பெ. வரலாறு.
சரிதை பெ. 1.கதை. 2.வரலாறு. 3.வாழ்க்கை வரலாறு.
சரீரம் பெ. உடல்.
சலவர் பெ. வஞ்சகர்.
சலாம் பெ. வணக்கம்.
சவையார் பெ. அவையோர்.
சற்குணம் பெ. நற்குணம்.
சற்புத்திரமார்க்கம் பெ. மகன்மை நெறி; நான்கு சமய நெறிகளில் ஒன்று.
சற்றும் பெ.அ. சிறிதும்.
சறுக்கு[1] பெ. வழுக்கை.
சறுக்கு[2] பெ. 1.வழுவு. 2.நழுவு.
சனனமரணம் பெ. பிறப்பு இறப்பு.
சனிமூலை பெ. வடகிழக்கு மூலை.

சா

சாக்காடு பெ. 1.இறப்பு. 2.சாவு. 3.உயிர்நீத்தல்.
சாக்கியர் பெ. 1.பௌத்தர். 2.சமணர்.
சாடும் பெ. 1.தாக்கும். 2.இழுக்கும்.
சாத்தனார் பெ. சீத்தலைச்சாத்தனார் அகம் புறம் பாடியவர்.
சாத்தன் பெ. 1.பிசாசுநாதன். 2.தீய ஆவி (விவிலியம்).
சாத்திரம் பெ. நூல்.
சாதம் பெ. சோறு.
சாதி பெ. 1.குலம். 2.பிறப்பு. 3.இனம். 4.வருணம். 5.பிரிவு.
சாந்துணையும் பெ. சாகும்வரையிலும்.
சாமக்காவல் பெ. இரவுகாவல்.
சாமி பெ. 1.கடவுள். 2.இறைவன். 3.உயர்வுச் சொல்.
சாமிநாதஐயர் பெ. பல அருள் தமிழ் நூல்களைச் சிறப்பாகப் பதிப்பித்த பெரும் புலவர் (1855-1942).
சாய்[1] பெ. 1.ஒளி. 2.அழகு.
சாய்[2] பெ. நிறம்.
சாய்[3] பெ. புகழ்.
சாய்[4] பெ. 1.தாங்கிநிற்கை. 2.கீழேவிழுகை.
சாய்[5] பெ. நேரம்செல்லுகை.
சாய்க்காமை பெ. அழிக்காமை.
சாயினும் பெ. அழியினும்.
சார்ந்த பெ.அ. 1.சுற்றத்தார். 2.நண்பர்.
சார்பு[1] பெ. 1.இடம். 2.பக்கம்.
சார்பு[2] பெ. பற்று.
சார்பு[3] பெ. ஒருதலைநிற்றல்.
சார்பு[4] பெ. பிறப்பு.
சார்பு[5] பெ. அடிப்படை.
சார்புநூல் பெ. மூன்று நூல்களில் ஒன்று (முதல்நூல், வழிநூல், சார்புநூல்).
சால்பு பெ. சான்றாண்மை.
சாலை பெ. 1.வழி. 2.கூடம். 3.மண்டபம்.
சாவகநாடு பெ. இந்தோனேசியத் தீவுகள்.
சாவி பெ. திறவுகோல்.
சாழை[1] பெ. குடிசை.
சாழை[2] பெ. மகளிர் கைகொட்டி ஆடும் விளையாட்டு.
சாறை[1] பெ. ஒரு மீன்வகை.
சாறை[2] பெ. வழிந்து விழும் வாய்நீர்.
சாற்று[1] பெ. 1.கூறுகை. 2.சொல்லுகை.
சாற்று[2] பெ. 1.விற்றல். 2.விளம்பரப்படுத்துகை.
சாற்று[3] பெ. நிறைக்கை.
சாற்று[4] பெ. அடிக்கை.
சாற்று[5] பெ. புகழ்ச்சி.
சாற்றுதல் வி. 1.சொல்லுதல். 2.புகழ்ச்சியாகப் பேசுதல்.
சாறயாதல் பெ. விழாக்கொண்டாடுதல்.
சாறு[1] பெ. 1.இனிப்புநீர். 2.இரசம். 3.சாறு பிழிதல்.
சாறு[2] பெ. கனிமங்காரம் சர்க்கரையும் சேர்ந்த பாய்மரம்.
சாறு[3] பெ. உயிரணுவிலுள்ளது.
சான்றாண்மை பெ. 1.கல்வி கேள்விகளில் நிறைந்து ஒழுகுந்தன்மை. 2.பெருந்தன்மை. 3.பொறுமை. 4.அறிவு. 5.ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்.

சான்று பெ. சாட்சி பிரமாணம்.

சான்றோர் பெ. 1.ஒழுகுந்தன்மை, பெருந்தன்மை, பொறுமை போன்ற அறவொழுக்கங்களில் நிறைந்தவர். 2.சங்கப்புலவர். 3.வீரர்.

சி

சிக்கல்[1] பெ. **எளிதில் தீர்க்க இயலாதது.** உன் சிக்கலுக்கு தீர்வு உண்டு.

சிக்கல்[2] பெ. ஓர் ஊர்.

சிகரம்[1] பெ. 1.மலையுச்சி. 2.மலைமுகடு. 3.கோபுரம். 4.உச்சி.

சிகரம்[2] பெ. முடி.

சிகரம்[3] பெ. 1.தலைமை. 2.உயர்ச்சி.

சிகரம்[4] பெ. 1.நீர்த்துளி. 2.அலை.

சிகரம்[5] பெ. வட்டில்.

சிகரம்[6] பெ. காக்கை.

சிங்கம்[1] பெ. மடங்கல்.

சிங்கம்[2] பெ. கேசரி.

சித்தர் பெ. 1.தேவ முனிவர்கள். 2.சித்தி பெற்றவர். 3.அருளடைந்தோர்.

சித்திநெறி பெ. முக்திவழி.

சித்திரகவி பெ. நால்வகைக் கருவிகளுள் சித்திரத்தில் அமைத்தற்கேற்பப் பாடும் மிறைக் கவி. சித்திரகவி பாடுவோன்.

சித்திரகாரன் பெ. 1.ஓவியன். 2.சிற்பி.

சித்திரம்[1] பெ. ஓவியம்.

சித்திரம்[2] பெ. அழகு.

சித்திரம்[3] பெ. 1.குறிஞ்சா. 2.கொடிவேலி.

சித்திரம்[4] பெ. சிறப்பான காட்சி.

சிதைவுண்டதமிழ்நூல்கள் பெ. சிதைந்த தமிழ் நூல்கள், பாரதவெண்பா, பெருங்கதை முதலியவை.

சிந்தியல்வெண்பா பெ. மூன்றடியாலமைந்த வெண்பா வகை.

சிந்தை பெ. எண்ணம்.

சிநேகிதம் பெ. நட்பு.

சிபாரிசு பெ. பரிந்துரை.

சிம்மாசனம் பெ. அரியணை.

சிரம் பெ. தலை.

சிரவணபிதுர்பத்தி பெ. காந்தியடிகள் படித்த நாடக நூல்.

சிருங்கிபேரம் பெ. கங்கைக்கரையோர நகரம்.

சிலப்பதிகாரம் பெ. ஒரு நூல்; தமிழனின் முதற் காப்பியம்.

சிலம்பு[1] பெ. 1.பூசாரிகளின் கைச்சிலம்பு. 2.சிலம் பெண்னேவல். 3.காற்சிலம்பு. 4.மகளிர் காலணி வகை.

சிலம்பு[2] பெ. ஒலி.

சிலம்பு[3] பெ. 1.மலை. 2.பக்கமலை. 3.குகை.

சிலுவை[1] பெ. 1.கழுமரம். 2.இயேசுகிறித்து அறையப் பட்ட மரம். 3.கிறித்துவச் சமயச் சின்னம்.

சிலுவை[2] பெ. துன்பம்.

சிவபுராணம் பெ. திருவாசகத்தில் ஒரு பகுதி.

சிற்பம்[1] பெ. 1.நுண் தொழில். 2.கல்லில் செதுக்கிய உருவம்.

சிற்பம்[2] பெ. 1.சிந்திக்கை. 2.தொழில் திறமை.

சிற்றறிவு பெ. சுருங்கிய அறிவு.

சிற்றிலக்கியங்கள் பெ. தொன்னூற்றாறு.

சிற்றிலக்கியம் பெ.1.பிரபந்தம். 2.சதகம்.

சிற்றுணா பெ. 1.சிற்றுணவு. 2.பண்ணிகாரம். 3.கறி முதலியன. 4.சிற்றளவான உணவு.

சிறப்பியல்பு பெ. 1.தனிச்சிறப்பு. 2.தனிப்பண்பு.

சிறப்பு[1] பெ. 1.பெருமை. 2.செல்வம். 3.அன்பளிப்பு. 4.புகழ்.

சிறப்பு[2] பெ. திருவிழா.

சிறப்புப்பேராசிரியர் பெ. வருகை தரும் பேராசிரியர்.

சிறப்புரை பெ. சிறப்புச் சொற்பொழிவு.

சிறப்புலிநாயனார் பெ. 63 நாயன்மார்களில் ஒருவர்.

சிறப்பெழுத்து பெ. ஒரு மொழிக்குச் சிறப்பாக அமைந்துள்ள எழுத்து (ழ -கரம்).

சிறிதுஈயப்படும் பெ. சிறிதளவு உணவு தரப் படும்.

சிறுகதை பெ. அளவில் புதினத்தை விடச் சிறிய இலக்கிய வகை.

சிறுகாக்கைப்பாடினியிர் பெ. சிறுகாக்கைப் பாடினியம் என்னும் நூல் செய்த பழம் புலவர்.

சிறுகாப்பியம் பெ. பெருங்காப்பிய உறுப்புகள் சில குறைந்துகாணப்படும் காவியம்.

சிறுபாணாற்றுப்படை பெ. ஓய்மாநாட்டு நல்லியக் கோடனென்னும் தலைவன்மேல் நல்லூர் நத்தத் தனார் பாடியதும் பத்துப்பாட்டினுள் ஒன்றுமான நூல்.

சிறுபான்மை பெ. சிறிய அளவு.

சிறுபொழுது பெ. இது ஆறு வகைப்படும்; அவை, காலை – காலை 6 மணி முதல் 10 மணிவரை நண்பகல் – பகல் 10 மணி முதல் 2 மணிவரை, ஏற்பாடு – 2 மணி முதல் 6 மணிவரை, மாலை – 6மணி முதல் இரவு 10 மணிவரை, யாமம் – இரவு 10 மணி முதல் 2 மணிவரை, வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணிவரை;

சிறுமை[1] பெ. 1.துன்பம். 2.அற்பத்தன்மை. 3.கோபம்.

சிறுமை[2] பெ. 1.வெம்மை. 2.வெயில்.

சிறுமை[3] பெ. நெருப்பு.

சிறுமை[4] பெ. போர்.

சிறைபிடித்தல் பெ. 1.அடிமையாக்குகை. 2.சிறை செய்கை.

சின்னூல் பெ. சிறுநூல் (நேமிநாதம்).

சினை[1] பெ. 1.முட்டை. 2.கருக்கொண்டிருத்தல்.

சினை[2] பெ. உறுப்பு.

சினை[3] பெ. சினைத்தல்.

சினை[4] பெ. வினைப்பருவம்.

சினைப்பெயர் பெ. 1.உறுப்புப் பெயர். 2.கை. 3.கால்.

சினையாகுபெயர் பெ. சினைப்பெயர் அதன் முதலுக்கு ஆகும் பெயர் (புளி முளைத்தது).

சினைவினை பெ. சினையின் தொழிலைக் காட்டி நிற்கும் வினைச்சொல்.

சீ

சீக்கியர் பெ. பஞ்சாப்பிலுள்ள ஒரு சமயத்தினர்.

சீட்டுக்கவி பெ. **ஓலைப்பாடல்; ஓலையில் கவிவடிவில் எழுதிய கடிதம்.** அந்தக்கவிராயர் மாம்பழக் கவிச்சிங்கக்கவிராயர், சரவணப் பெருமாள் கவிராயர், முதலியோர் சீட்டுக்கவிகள் பாடியுள்ளனர்.

சீத்தல்[1] வி. 1.சீக்குதல். 2.தூய்தாக்கல். 3.நீக்கல். 4.செப்பம் பண்ணுதல்.

சீத்தல்[2] வி. சீவுதல்.

சீத்தலைச்சாத்தனார் பெ. மணிமேகலை என்ற நூலின் ஆசிரியர்.

சீத்துவம் பெ. 1.சித்தம். 2.திறம். 3.வளம்.

சீத்தையர் பெ. 1.கீழானவர். 2.போலிப்புலவர்.

சீதக்காதி பெ. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்.

சீப்பால் பெ. ஈன்ற அணிமைப்பால்.

சீப்பு[1] பெ. 1.கதவின் தாள். 2.மதகிலுள்ள அடை பலகை.

சீப்பு[2] பெ. மயிர் சீவுஞ்சீப்பு.

சீப்பு[3] பெ. வாழைக்குலைச்சீப்பு.

சீப்பு[4] பெ. விலா எலும்பு.

சீபதி பெ. 1.அருகன். 2.கடவுள். 3.திருமால்.

சீமை பெ.1.எல்லை. 2.நாடு.

சீயக்காய் பெ. சிகைக்காய்.

சீயகங்கன் பெ. நன்னூல் செய்வித்த அரசன் (கி.பி.13)

சீர்[1] பெ. 1.ஒரே அளவு. 2.ஒரே சீரான விற்பனை.

சீர்[2] பெ. **இயல்பு.** இதயம் சீராக இயங்குகிறது.

சீர்[3] பெ. **சமம்.** இந்த இனிப்புகளைச் சீராகப் பங்கிட்டுக் கொடுக்கை.

சீர்[4] பெ. **அழகு.** அவர் பொருள்களை அடுக்கும் சீர் குறிப்பிடத்தக்கது.

சீர்[5] பெ. **வரிசை, கொடை.** ஒரே பெண் என்பதால் செய்த சீர் ஏராளம்.

சீர்[6] பெ. **உறுப்பு.** அசைகள் ஒன்று சேர்ந்த செய்யுள் உறுப்பு.

சீர்[7] பெ. **ஒழுங்கு.** அம்மி சீர் செய்தல்.

சீர்[8] பெ. 1.**புகழ்.** சீருடைச்செல்வர். 2.பெருமை. 3.சிறப்பு.

சீர்த்தயிடம் பெ. உரிய காலம்.

சீர்மை[1] பெ. 1.சிறப்பு. 2.புகழ். 3.மேம்பாடு.

சீர்மை[2] பெ. வழவழப்பு.

சீர்வகை பெ. ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு.

சீரணம் பெ. செரித்தல்.

சீரணி[1] பெ. அழகு.

சீரணி[2] பெ. ஓமச்செடி.

சீரணி[3] பெ. தொண்டு செய்யும் அமைப்பு.

சீரந்தாதி பெ. பாட்டில் ஓரடியின் இறுதிச்சீர் அடுத்த அடியின் முதற்சீரோடு தொகுத்து வருவது.

சீரை[1] பெ. 1.மரவுரி. 2.சீலை. 3.கந்தை.

சீரை[2] பெ. 1.தராசு. 2.துலாத்தட்டு.

சீலம் பெ. ஒழுக்கம்.

சீவகசிந்தாமணி பெ. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; திருத்தக்கதேவர் இயற்றிய பெருங் காப்பியம் (கி.பி.10).

சீவான்மா பெ. உயிர்.

சீற்றம் பெ. கடுஞ்சினம்.

சீறாப்புராணம் பெ. **சீறா+ புராணம் – வாழ்க்கை வரலாறு; (சீறா–வாழ்க்கை, புராணம் வரலாறு) இறைவனின் தூதர் நபிகள் நாயகத்தின் வராற்றினைக் கூறும் நூல்.** உமறுப்புலவர் இயற்றிய முகம்மதியப் புராணம் (கி.பி.17).

சீனம்[1] பெ. சீனமொழி.

சீனம்[2] பெ. சீனநாடு.

சீனம்[3] பெ. சீனத்துச் சரக்கு.

சீனம்[4] பெ. படிக்காரம்.

சு

சுக்கான்[1] பெ. கப்பலைத்திருப்புங் கருவி.

சுக்கான்[2] பெ. சுண்ணாம்புக்கல்.

சுக்கு[1] பெ. 1.உலர்ந்த இஞ்சி. 2.சிறு துண்டு.

சுக்கு[2] பெ. பயனற்றது.

சுகந்தம்[1] பெ. 1.நறுமணம். 2.நறுமணப் பொருள். 3.சந்தனம்.

சுகந்தம்[2] பெ. கந்தகம்.

சுகம்[1] பெ. 1.இன்பம். 2.நலம். 3.இணக்கம்.

சுகம்[2] பெ. கிளி.

சுங்கவரி பெ. மக்களின் வரிப்பொருள்.

சுட்டு[1] பெ. 1.எண்ணம். 2.குறிப்பு. 3.குறிப்பிடுகை. 4.குறிப்பிடு. 5.சுட்டெழுத்து.

சுட்டு[2] பெ. சுட்டெனேவல்.

சுட்டு[3] பெ. நன்கு மதிப்பு.

சுட்டுச்சொல் பெ. ஒன்றைக் குறித்துக் காட்டும் மொழி

சுட்டுப்பொருள் பெ. குறித்தபொருள்.

சுடர்[1] பெ. 1.ஒளி. 2.தளிர். 3.விளக்கு. 4.தீப்பொறி.

சுடர்[2] பெ. சூரியன்.

சுடுதண்ணீர்,சுடுநீர் பெ. வெந்நீர்.

சுடும் பெ. வருத்தும்.

சுண்ணம்[1] பெ. பொடி.

சுண்ணம்[2] பெ. பூந்தாது.

சுண்ணம்[3] பெ. மலர் சொல் வகை நான்கில் நான்கடியால் வரும் இசைப்பாட்டு.

சுத்தம்[1] பெ. தூய்மை.

சுத்தம்[2] பெ. உண்மை.

சுத்தம்[3] பெ. பிழையின்மை.

சுத்தம்[4] பெ. சுத்தம்பண்ணுகை.

சுத்தம்[5] பெ. 1.மும்மலங்கள் நீங்கிய அருள்நிலை. 2.முழுமை.

சுத்தமார்க்கம் பெ. 1.உண்மையான பத்தி. 2.மெய்ந் நெறி.

சுந்தரபாண்டியம் பெ. ஒரு தமிழ்க்காவியம்; ஆசிரியர் அனதாரி.

சுந்தரபாண்டியன் பெ. பாண்டியர் பலருக்கு வழங்கிய பெயர்.

சுப்பிரமணியதீட்சிதர் பெ.பிரயோக விவேகம் என்னும் இலக்கண நூல் ஆசிரியர் (கி.பி.17).

சுப்பிரமணியபாரதியார் பெ. மக்கள் கவிஞரும் தேசியக் கவிஞருமாவார் (1882-1921).

சுபாவம் பெ. 1.இயல்பு. அவன் சுபாவத்தை மாற்ற முடியாது. 2.உண்மை. 3.இயற்கை.

சுமக்க வி.அ. பணிக்கை.

சுமை¹ பெ. 1.பாரம். 2.சுமக்கை.

சுமை² பெ. தொகுதி.

சுமைதாங்கி பெ. சுமையை இறக்கி இளைப்பாற உதவும் கல்மேடை.

சுயஉணர்வு பெ. தன்னுணர்வு.

சுயம்¹ பெ. சுயக்கட்டுப்பாடு. உனக்குன்னு ஒரு சுயக்கட்டுப்பாடு இருக்கனும்.

சுயம்² பெ. சுயமுகவரியிட்ட அட்டை.

சுயம்³ பெ. சொந்தமானது.

சுயம்⁴ பெ. கலப்பற்றது.

சுயமரியாதை பெ. தன்மான உணர்வு.

சுயமரியாதைஇயக்கம் பெ. தன்மான உணர்வு உள்ள இயக்கம், பெரியார் தோற்றுவித்தது.

சுயமரியாதைத்திருமணம் பெ. சீர்திருத்தத் திருமணம்.

சுயாட்சி பெ. 1.தன்னாட்சி தானே ஆளும் முறை; சுயாட்சிக் கல்லூரி. 2.மாநிலச் சுயாட்சி.

சுயாதீனம் பெ. தன்விருப்பம்.

சுரங்கம் பெ. 1.நிலவரை. 2.நிலத்தின் உள்வழி. 3.சுரங்கப்பாறை.

சுரதா பெ. உவமைக்கவிஞர்.

சுரபுன்னை பெ. புன்னை வகை (மரம்).

சுரிகை பெ. 1.கத்தி. 2.உடைவாள். 3.கவசம்.

சுரிதகம்¹ பெ. கலிப்பா உறுப்பு. ஆறில் இறுதி உறுப்பு.

சுரிதகம்² பெ. கூத்து.

சுரிதகம்³ பெ. தலையணி.

சுரணை பெ. 1.உணர்ச்சி. 2.அறிவு.

சுரநதி¹ பெ. கங்கை.

சுரநதி² பெ. இந்திரன்.

சுரம்¹ பெ. 1.பாலைநிலம். 2.காடு.

சுரம்² பெ. அருநெறிவழி.

சுரம்³ பெ. இசை.

சுரன்¹ பெ. அறிஞன்.

சுரன்² பெ. கதிரவன்.

சுரன்³ பெ. காடு.

சுரீரெனல் பெ. ஒலிக்குறிப்பு.

சுருங்குதல் வி. 1.ஒடுங்குதல். 2.குறைத்தல்.

சுருதிமுதல்வர் பெ. மறை முதல்வராகிய இயேசு நாதர்.

சுரை¹ பெ. 1.சுரைக்கொடி. 2.சுரைக்குடுக்கை.

சுரை² பெ. கள்.

சுரை³ பெ. மடி (பசு).

சுரை⁴ பெ. திருகாணிக்குழாய்.

சுரை⁵ பெ. குடம்.

சுவடி¹ பெ. 1.ஏடு. 2.ஓலைச்சுவடி. 3.நூல். 4.ஏட்டுப் புத்தகம்.

சுவடி² பெ. 1.சோடி. 2.இரண்டு.

சுவடி எழுதுதல் பெ. ஓலையில் எழுத்துக்களை எழுதிப் பழகுதல்.

சுவர்¹ பெ. 1.மதில். 2.வீட்டுச்சுவர்.

சுவர்² பெ. தேருறுப்பு.

சுவர்³ பெ. அழகு.

சுவர்⁴ பெ. உச்ச ஒலி.

சுழி¹ பெ. உடல்மீது உள்ள சுழி.

சுழி² பெ. நீர்ச்சுழி.

சுழி³ பெ. தலையெழுத்து (விதி).

சுழியம்¹ பெ. மகளிர் தலையணி.

சுழியம்² பெ. எண்ணம்.

சுழியம்³ பெ. பூஜியம். அவன் எழுதுகிற தேர்வில் எல்லாம் பூஜியம்தான் வாங்குவான்.

சுனை¹ பெ. 1.மலை ஊற்று. 2.குகைநீர்நிலை.

சுனை² பெ. பெ. தினவு.

சுனை³ பெ. சுரணை.

சூ

சூடு¹ பெ. வெப்பம்.

சூடு² பெ. ஒற்றடம்.

சூடு³ பெ. உணர்ச்சி.

சூடு⁴ பெ. சூடுப்படுத்துகை.

சூது¹ பெ. 1.சூதாட்டம். 2.சூதாடுகருவி.

சூது² பெ. 1.சூதுக்காரன். 2.சூழ்ச்சி. 3.ஏமாற்றுவது.

சூரன்[1] பெ. 1.வீரன். 2.சூரபதுமன்.

சூரன்[2] பெ. நாய்.

சூருடைகானகம் பெ. அச்சம் தரும் காடு.

சூல்உளை பெ. கருவைத்தாங்கும் துன்பம்.

சூலை பெ. கொடிய வயிற்று நோய்.

சூழ்உளைச்சங்கு பெ. கருமுற்றி முத்துக்கள் ஈனும் சங்கு.

சூழ்ச்சி பெ. 1.தீவினைத் திட்டம். 2.ஆராய்ச்சி. 3.வழிவகை. 4.ஆலோசனை. 5.உபாயம். 6.நுண்ணறி.

சூழ்தல் வி. **சுற்றியமைதல்.** பனி சூழ்ந்த மலை உச்சி.

சூழ்த்தல்[1] வி. சாற்றுதல்.

சூழ்த்தல்[2] வி. சுற்றிமொய்த்தல்.

சூழ்த்தல்[3] வி. ஆய்தல்.

சூழ்விதி பெ. நல்வினை.

சூழ்வினை பெ. உண்டாகும் வறுமைத் துன்பம்.

சூழல்[1] பெ. 1.சூழ்கை. 2.சுற்றுப்புறம். 3.சுற்றுச்சூழல்.

சூழல்[2] பெ. சூழ்ச்சி.

சூளாமணி[1] பெ. முடிமணி.

சூளாமணி[2] பெ. ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்று.

செ

செகுத்திடுதல் வி. உயிர்வதை செய்தல்.

செங்கை பெ. அழகிய கை.

செடி பெ. 1.தண்டு வலிமையற்ற பயிர். 2.மரம், குற்றுச் செடி ஆகிய இரண்டிற்கும் இடைப் பட்டது.

செத்தை பெ. குப்பைக்கூளம்.

செதுக்கி பெ. செதுக்கும் கருவி.

செதுக்கு[1] பெ. பூவாடல்.

செதுக்கு[2] பெ. சேறு.

செதுக்கு[3] பெ. பூதம்.

செதுக்கு[4] பெ. மந்தி.

செதுக்கு[5] பெ. ஏவல்.

செதுக்குதல் பெ. வேண்டாதவற்றை களைதல்.

செந்தமிழ் பெ. கலப்பற்ற தூய தமிழ்.

செந்நாப்போதார் பெ. திருவள்ளுவர் (செந் நாவாகிய தாமரையை உடையவர்.

செந்நீர்[1] பெ. **குருதி.** அவன் உடம்பிலிருந்து செந்நீர் (இரத்தம்) வடிகிறது.

செந்நீர்[2] பெ. புதுவெள்ளம்.

செப்பு[1] பெ.கூறுகை.

செப்பு[2] பெ. 1.சிமிழ். 2.குடுவை. 3.ஒருவகைக்கலம்.

செம்பு[1] பெ. தாமிரம்.

செம்பு[2] பெ. ஏனம்.

செம்பொருள் பெ. 1.மெய்ப்பொருள். 2.கடவுள். 3.அறம். 4.சிறந்த பொருள்.

செம்மை[1] பெ. **அழகு.** அவள் செம்மையாக இருக்கிறாள்.

செம்மை[2] பெ. சுத்தம்.

செம்மை[3] பெ. சிவப்பு.

செம்மை[4] பெ. செவ்வை.

செம்மை[5] பெ. நேர்மை.

செம்மை[6] பெ. மனக்கோட்டமின்மை.

செம்மை[7] பெ. ஒற்றுமை.

செம்மை[8] பெ. பெருமை.

செம்மை[9] பெ. கேது.

செம்மை[10] பெ. கந்தகம்.

செம்மை[11] பெ. வளை.

செம்மொழி பெ. 1.நல்வார்த்தை. 2.தொகை மொழி அல்லாத ஒரு மொழி. 3.செம்மையான மொழி.

செய்[1] பெ. 1.நிலம். 2.**வயல்.** அந்த செய் என்ன விலைக்குப்போகும்.

செய்[2] பெ. 1.ஈடுபடுகை. 2.நிகழ்த்துகை. 3.தீர்வு காணுகை. 4.உருவாக்குகை. 5.**செய்கை.** நீ பேச்சில் காட்டுவதை செய்கையில் காட்டு.

செய்[3] பெ. இருவினை.

செய்தித்தொடர் பெ. ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது.

செய்தியாளர் பெ. செய்தி திரட்டுபவர் (வானொலி, தொலைக்காட்சி செய்தித்தாள்).

செய்ய வி.எ. சிறந்த.

செயப்படுபொருள் பெ. காரியப்படுபொருள்.

செயல்[1] பெ. ஒழுக்கம்.

செயல்[2] பெ. காவல்.

செயல்[3] பெ. செய்கை.

செயல்[4] பெ. சேறு.

செயல்[5] பெ. தொழில்.

செயிர் பெ. சினம்.

செருக்கு பெ. இறுமாப்பு.

செல்லாமை பெ. யாசிப்பதற்காக பிறரிடம் போகாமை.

செல்வம்[1] பெ. மகளிரின் கொஞ்சற் பேச்சு.

செல்வம்[2] பெ. சுவர்க்கம்.

செல்வம்[3] பெ. நுகர்ச்சி.

செல்வம்[4] பெ. அழகு.

செல்வம்[5] பெ. 1.செழிப்பு. 2.ஐசுவரியம். 3.பொருள்.

செல்வம்[6] பெ. வீடுபேறு.

செல்வம்[7] பெ. **கல்வி**. செல்வங்களில் எல்லாம் சிறந்தது கல்விச்செல்வம்.

செவ்வி[1] பெ. 1.காலம். 2.ஏற்றசமயம்.

செவ்வி[2] பெ. காட்சி.

செவ்வியல் பெ. மரபு வழி.

செவ்வியல்தன்மை பெ. 1.ஒரு மொழிக்குரியது. 2.தொன்மை, எண்மை, இளமை, மும்மை, முன்மை, ஒண்மை, வளமை, செம்மை, நுண்மை, இனிமை, தாய்மை, இயன்மை, திண்மை, தனிமை, தூய்மை, வியன்மை இத்தகைய சிறப்பு வாய்ந்தது தமிழ்மொழி.

செவி[1] பெ. காது.

செவி[2] பெ. பாத்திரக்காது.

செவி[3] பெ. வளையம்.

செவி[4] பெ. வீணை.

செவி[5] பெ. முற்றுக்காணி.

செவி[6] பெ. ஓரங்குல மழை.

செவிச்செல்வம் பெ. காதால் கேட்டு அறியும் கேள்விச்செல்வம்.

செவியின்சுவை பெ. செவியால் உணரப்படும் சுவைகள். சொற்சுவை, பொருட்சுவை என இரு வகைப்படும்.

செவிலி பெ. வளர்ப்புத்தாய்.

செவிலித்தாய் பெ. வளர்ப்புத்தாய்.

செழித்தல் வி. வளமிகுதல்.

செழிப்பு பெ. 1.வளம். 2.செழுமை.

செழிய பெ. செழிய மன்னன்.

செற்றம்[1] பெ. துறவு.

செற்றம்[2] பெ. சினம்.

செற்றம்[3] பெ. பகைவர்.

செற்றம்[4] பெ. நெருக்கம்.

செறி பெ. நெருக்கம்.

செறிவு பெ. உறவு நெருக்கம்.

செறு பெ. வயல்.

செறுத்தல்[1] வி. 1.அடக்குதல். 2.தடுத்தல். 3.நெருங்குதல். 4.சினத்தல். 5.வெல்லுதல். 6.கொல்லுதல்.

செறுத்தல்[2] வி. 1.அடைத்தல். 2.தூர்த்தல்.

செறுநர் பெ. பகைவர்.

சென்னி பண்பு பெ. சோழனின் நற்பண்பாடு.

சே

சேக்கிழார் பெ. பெரியபுராணத்தின் ஆசிரியர்.

சேடி பெ. தோழி.

சேமம்[1] பெ. 1.நலம். 2.நல்வாழ்வு. 3.இன்பம்.

சேமம்[2] பெ. காவல்.

சேய்[1] பெ. 1.தாய். 2.குழந்தை. 3.இளமகன். 4.தலைவன். 5.முருகன்.

சேய்[2] பெ. 1.நெடுந்தொலைவு. 2.தொலைவு. 3.தூரம்.

சேய்[3] பெ. சிவப்பு.

சேய்[4] பெ. மூங்கில்.

சேய்மை பெ. தொலைவு.

சேயவர் பெ. குழந்தைகள்.

சேர்[1] பெ. திரட்சி.

சேர்[2] பெ. வைக்கோல் புரியாலமைந்த நெல் குதிர்.

சேர்[3] பெ. நிறுத்தல் அளவை.

சேர்[4] பெ. பொருத்துகை.

சேர்[5] பெ. பொழுது.

சேர்தல் வி. 1.இணைதல். 2.அடைதல். 3.உரிமை யாக்குதல். 4.இடம்பெறுதல். 5.வந்துசேர்தல்.

சேரநாடு பெ. முசிறி.

சேவடி பெ. இறைவனின் திருவடிகள்.

சை

சைக்கிள் பெ. 1.ஈருருளி. 2.மிதிவண்டி.

சொ

சொரூபம் பெ. வடிவம்.

சொல்[1] பெ. 1.மொழி. 2.பேச்சு. 3.பழமொழி. 4.உறுதி மொழி. 5.புகழ். 6.மந்திரம். 7.சாபம். 8.நாமகள்.

சொல்[2] பெ. சத்தம்.

சொல்[3] பெ. 1.புத்திமதி. 2.கட்டளை.

சொல்[4] பெ. சிவப்பு.

சொல்[5] பெ. 1.நாடக அரங்கில் பேசப்படும் உட்சொல். 2.புறச்சொல். 3.ஆகாசச்சொல்.

சொல்[6] பெ. தமிழ்மொழியிலுள்ள இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நால் வகைப் பட்ட மொழிகள்.

சொல்லாட்சித்திறன் பெ. சொற்களை பொருள்பட அறிதல்.

சொல்லிலக்கணம் பெ. 1.சொல்லினியல்பு. 2.சொற் சுவை.

சொல்லேருழவர் பெ. புலவர்.

சொல்வரை பெ. சொற்பகுதி.

சொற்சுவை பெ. குணம், அலங்காரம் என்று சொல்லுக்காகி வருவது.

சொற்பயன் பெ. **சொற்பொருள்.** ஒரு சொல்லுக்குரிய பொருள்.

சொற்றொடர் பெ. சொல்லாலாகிய தொடர்.

சோ

சோம்பல் பெ. 1.மடி. 2.மயக்கம். 3.சோம்பேறி.

சோரம் பெ. நெறிமுறை தவறுகை.

சோழநாடு பெ. காவிரிப்பூம்பட்டினம்.

ஞா

ஞால் பெ. தொங்குகை.

ஞாலம்[1] பெ. 1.பூமி. 2.உலகம். 3.உயர்ந்தோர். 4.தோணி அசையாது நிலைத்து நிற்பதற்கு இடும் மண் முதலிய பாரம்.

ஞானப்பூங்கோதை பெ. உமையம்மை.

ஞானம் பெ. 1.அறிவு. 2.கல்வி. 3.சுருத ஞானம். 4.அவதி ஞானம். 5.மனப்பரியாய ஞானம்.

ஞானி பெ. 1.பேரறிவாளர். 2.அருகன். 3.நான் முகன். 4.அறிவு விளக்கம் பெற்றவன்.

த

தக்கார் பெ. தகுதியுடைய பெரியோர்.

தகரப்பந்தல் பெ. தகரத்தில் போடப்பட்ட பந்தல்.

தகுதி[1] பெ. 1.உரிமை. 2.மதிப்பு.

தகுதி[2] பெ. தெரிவு.

தகைசால் பெ. பண்பில் சிறந்தது.

தகைசான்றவர் பெ. பண்பில் சிறந்தவர்.

தகைமை பெ. தன்மை.

தங்கம்[1] பெ. 1.பொன். 2.பசும்பொன்.

தங்கம்[2] பெ. சிறந்தது.

தசரதன் பெ. அயோத்தி நாட்டு மன்னன்.

தஞ்சம் பெ. 1.அடைக்கலம். 2.பற்றுக்கோடு.

தட்டு[1] பெ. 1.தாம்பாளம். 2.கிண்ணம். 3.கிண்ணி.

தட்டு[2] பெ. தராசுத்தட்டு.

தட்டு[3] பெ. மேல்தட்டு, கீழ்த்தட்டு. (உயர்ந்த நிலை தாழ்ந்த நிலை) அவன் மேல் தட்டில் நின்று கொண்டிருக்கிறான்.

தட்டு[4] பெ. தடை.

தட்டு[5] பெ. ஒலிசெய்கை.

தட்டுப்பாடு பெ. **பற்றாக்குறை.** பணத்துக்கு பெரிய தட்டுப்பாடா இருக்கு.

தடக்கரி பெ. பெரிய யானை.

தடக்கை பெ. நீண்ட கைகள்.

தடந்தோள் பெ. வலியதோள்.

தடம் பெ. தடாகம்.

தடு பெ. மறை.

தடுத்தல்[1] வி. தவிர்த்தல்.

தடுத்தல்[2] வி. நிறுத்துதல்.

தடுத்தல்[3] வி. 1.கட்டுதல். 2.பிரிதல்.

தடை பெ. இடையூறு.

தணி[1] பெ. 1.மலை. 2.குளிர்ச்சி.

தணி[2] பெ. முட்டுக்கட்டை.

தணி[3] பெ.தணிப்பு.

தணிதல் வி. குறைத்துக்கொள்ளுதல்.

தத்து[1] பெ. தவறு.

தத்து[2] பெ. சுவீகாரம். அவன் என்னுடைய தத்துப் பிள்ளை.

தத்து[3] பெ. கண்டம்.

தத்து[4] பெ. தாவுகை.

தத்தும்புனல் பெ. தத்திச் செல்லும் நீர்.

தத்துவம்[1] பெ. 1.இயல்பான அமைப்பு. 2.உண்மை. 3.மகாபூதம்-5, அவை, தன்மாத்திரை-5, கன்மேந் திரியம்-5, ஞானேந்திரியம்-5, மனம் அகங்காரம், மகத்து, மூலப்பிரக்குதி, ஆன்மா ஆகிய 25 மூலப் பொருள்கள். 4.பரமான்மா. 5.அசுத்தத்துவம் 24ம், சுத்தாசுத்ததத்துவம் 7ம், சுத்தத்துவம் 56 ஆகிய 36 மூலப் பொருள்கள் அல்லது மேற்கூறிய 36ம், புறநிலைக்கருவி 60 ஆகிய 96 மூலப்பொருள்கள்.

தத்துவம்[2] பெ. பொருள்களின் குணம்.

ததும்புதல்[1] வி. 1.மிகுதல். 2.நிறைதல். 3.நிரம்பி வழிதல். 4.பெருகுதல்.

ததும்புதல்[2] வி. மனம்நிரம்புதல்.

ததும்புதல்[3] வி.அசைதல்.

ததும்புதல்[4] வி. முழங்குதல்.

தந்தம்[1] பெ. பல், யானைக்கொம்பு. ஆண் யானைக்கு நீண்ட தந்தம் உண்டு.

தந்தம்[2] பெ. தாடி.

தந்தம்[3] பெ. மலைச்சாரல்.

தப்பு[1] பெ. தப்பிக்கை.

தப்பு[2] பெ. தவறு.

தப்பு[3] பெ. நேர்மாறு.

தப்பு[4] பெ. தம்பட்டம்.

தம்[1] பெ. சாரியை.

தம்[2] பெ. 1.அவர்தம்பேச்சு. 2.மூச்சு. 3.மூச்சடக்கு. தம்பிடி.

தமக்குரியர் பெ. தங்களுக்கே உரியது.

தமவே பெ. தம்முடையனவே.

தமவேயம் பெ. தம்முடைய நாடுகளேவாம்.

தமர் பெ. உறவினர்.

தமிழ்[1] பெ. தமிழ்நாடு.

தமிழ்[2] பெ. தமிழர்.

தமிழ்[3] பெ. 1.தமிழ்நூல்; இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்படும். 2.திராவிட மொழிகளுள் ஒன்று.

தமிழ்[4] பெ. 1.நீர்மை. 2.இனிமை.

தமிழ்எழுத்துக்கள் பெ. உயிரெழுத்து. அ-ஔ-12, மெய்யெழுத்து க் - ன்- 18, உயிர்மெய் எழுத்து க-னௌ 216, ஆய்த எழுத்து ஃ-1 மொத்தம் 247.

தமிழ்மகள் பெ. ஔவையார்.

தமிழறிஞர் பெ. தமிழ்ப்புலவர்.

தயக்கம்[1] பெ. 1.தடுமாற்றம். 2.கலக்கம்.

தயக்கம்[2] பெ. தாமதம்.

தயக்கம்[3] பெ. தெளிவு.

தயக்கம்[4] பெ. ஒளிவகை.

தயக்கம்[5] பெ. தோற்றம்.

தயக்கம்[6] பெ. அசைவு.

தயக்கம்[7] பெ. விளக்கம்.

தர்மம்[1] பெ. 1.ஆசாரம். 2.மறைகள். 3.ஒழுங்கு முறை. 4.நீதி, அறம். 5.கடமை. 6.நற்செயல். 7.முறைமை.

தர்மம்[2] பெ.கொடை.

தர்மம்[3] பெ.இயற்கை.

தரம்[1] பெ. 1.தகுதி. 2.மேன்மை.

தரம்[2] பெ. வகுப்பு.

தரம்[3] பெ. மட்டம்.

தரம்[4] பெ. தடவை.

தரம்[5] பெ. மலை.

தரம்[6] பெ. வரிசை.

தரம்[7] பெ. அளவு

தரம்[8] பெ. உயர்வு.

தரி[1] பெ. 1.பூசுகை. 2.அணிகை.

தரி[2] பெ. 1.தங்குகை. 2.தரிப்பது. 3.தரிப்பு.

தரிசனம்[1] பெ. 1.காட்சி. எனக்கு இறைவன் தரிசனமானார். 2.பார்வை. 3.கண். 4.தோற்றம். 5.காண்கை.

தரிசனம்[2] பெ. கண்ணாடி.

தரிசனம்[3] பெ. மதக்கொள்கை.

தலை[1] பெ. சிறப்பு.

தலை[2] பெ. 1.உடல் உறுப்பாகிய தலை. 2.உச்சி முதல். 3.ஆள்.

தலை[3] பெ. **முதன்மை.** நீதான் இந்தக் கூட்டத்திற்கு தலையா.

தலை[4] பெ. முடிவு.

தலை[5] பெ. இடம்.

தலை[6] பெ. இசை.

தலைக்கூடி வி.எ. ஒன்றுசேர்ந்து.

தலைக்கூடுதல் வி. ஒன்று சேர்தல்.

தலைசாயுதல் வி. ஓய்ந்து படுத்தல்.

தலைப்பிரியா வி.எ. நீங்காத.

தலைப்பிரியாச்சொல் பெ. நீங்காத சொற்கள்.

தலைமை[1] பெ. 1.முதன்மை. 2.தலைமை. 3.பொறுப்பு. 4.அதிகாரம்.

தலைமை[2] பெ. **தலைவர்.** இவர்தான் அந்தக் கூட்டத்திற்கு தலைவர்.

தலைவர் பெ. இறைவர்.

தலைவன் பெ. 1.அண்ணன். 2.அரசன். 3.எப்பொருட்கு மிறைவன். 4.குரு. 5.புருடன். 6.மூத்தோன்.

தலைவிதி பெ. **ஊழ்.** நான் எப்பொழுதும் கஷ்டப்படுவதே என் தலைவிதியாயிற்று.

தவம்[1] பெ. 1.பெரும்பேறு. 2.பற்று நீங்கிய வழிபாடு.

தவம்[2] பெ. காத்துக்கிடக்கும் நிலை.

தவம்[3] பெ. கற்பு.

தவழ்[1] பெ. ஊர்.

தவழ்[2] பெ. தோன்று.

தவழ்தல் வி. முட்டிப்போட்டு ஊர்தல்.

தவிர்தல் வி. 1.விலகுதல். 2.இல்லாமற் போதல். 3.தங்கிவிடுதல். 4.பிரிதல். 5.நீக்குதல். 6.ஒழிதல்.

தழல்[1] பெ. 1.தணல். 2.தீக்கொழுந்து. 3.நெருப்பு.

தழல்[2] பெ.நெஞ்சு.

தழல்[3] பெ. 1.கவண். 2.கிளிகடி கருவி.

தழுவல் வி. பின்பற்றி செய்தல்.

தழுவிய வி.அ. முழுதும்.

தழை[1] பெ. தளிர்.

தழை[2] பெ. முன்னேறுகை.

தழை[3] பெ. 1.கழித்த இழை. 2.இழை.

தழை[4] பெ. **பீலிக்குடை.** மயில்தோகை.

தழை[5] பெ. மாலை.

தழை[6] பெ. 1.பச்சிலை. 2.செடிகொடி. 3.செடி.

தழைத்தல்[1] வி. கூடுதல், குறைதல் என்னும் பொருள் உண்டு.

தழைத்தல்[2] வி. பூரித்தல்.

தழைத்தல்[3] வி. மிகுதல்.

தழைத்தல்[4] வி. செழித்தல், வளர்தல்.

தழையாவெப்பம் பெ. 1.பெருகும் வெப்பம். 2.குறையாத வெப்பம்.

தளை[1] பெ. கட்டு.

தளை[2] பெ. விலங்கு.

தளை[3] பெ. சிறை.

தளை[4] பெ. கயிறு.

தளை[5] பெ. பிணிப்பு.

தளை[6] பெ. முறுக்கு.

தளை[7] பெ. நிறம்.

தளை[8] பெ. பாசம். (ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் கொண்டது).

தற்செய்கை பெ. மேம்படுத்திக் கொள்ளுகை.

தற்பெருமை பெ. தன்னைத்தானே பெருமை பட்டுக்கொள்வது.

தறி[1] பெ. 1.துணி நெய்யும் கருவி, நெசவு இயந்திரம். 2.நடுதறி.

தறி[2] பெ. 1.முளைக்கோல். 2.கட்டை. 3.பறைக் குறுக்கடி.

தன்மை[1] பெ. மூவிடங்களுள் தன்னைக் குறிக்கும் இடம்.

தன்மை[2] பெ. 1.மெய்மை.2.நன்மை. 3.ஆற்றல். 4.பெருமை. 5.முறைமை. 6.நிலைமை. 7.குணம்.

தன்னம்[1] பெ. குளிர்ச்சி.
தன்னம்[2] பெ. சாந்தம்.
தன்னம்[3] பெ. இன்பம்.
தன்னம்[4] பெ.மென்மை.
தன்னம்[5] பெ. தன்மை நவிற்சியணி.
தன்னம்பிக்கை[1] பெ. செல்வம்.
தன்னம்பிக்கை[2] பெ. செழுமை.
தன்னம்பிக்கை[3] பெ. தன்னால் முடியும் எனும் உறுதி. மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும்.
தன்னலம் பெ. தனக்கு மட்டும் உரிய நன்மை.
தனி[1] பெ. 1.சார்பிலா. நான் ஒரு தனி ஆள். 2.தனிமை.
தனிமம்[1] பெ. மூலகம்.
தனிமம்[2] பெ. பொன்.
தனிமம்[3] பெ. உயிர்வளி.
தனிமை பெ. 1.ஒன்றியாயிருக்குந் தன்மை. நான் எப்பொழுதும் தனிமையைத்தான் விரும்புவேன். 2.ஒதுக்கம். 3.உதவியற்றநிலை.
தனிமொழி பெ. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது.
தனிவாக்கியம் பெ. ஒரு தொடரில் ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் இணைந்து வருவது (பூங்கொடி வந்தாள்).
தனைதல்[1] வி. தரித்தல்.
தனைதல்[2] வி. அழகு செய்தல்.
தனைதல்[3] வி. சிறப்பித்தல்.
தனைதல்[4] வி. கற்பித்தல்.
தனைதல்[5] வி. கட்டுதல்.

தா

தாகம்[1] பெ. நீர்வேட்கை. எனக்கு ரொம்ப தாகமா இருக்கு குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொடு.
தாகம்[2] பெ. பற்று.
தாது பெ. மகரந்தம்.
தாம்பெயரார் பெ. தாம் மாறுபடார்.
தாமம் பெ. அணி.
தாய்மை பெ. தாயாகும் தன்மை.
தார் பெ. மாலை.
தார்வேந்தன் பெ. மாலையணிந்த அரசன்.
தாரம் பெ. மனைவி.
தாருகன் பெ. ஒரு அரக்கன்.
தாரை பெ. வழி.
தால்[1] பெ. நாக்கு.
தால்[2] பெ. தாலாட்டு.
தால்சுதாய் பெ. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர்.
தாலாட்டு பெ. (குழந்தையை உறங்கவைக்கும்) இசை. உன் குழந்தைக்கு தாலாட்டுப் பாட்டு பாடி தூங்கவை.
தாழ் பெ. தாழக்கோல்.
தாழ்தல் வி. பணிதல்.
தாழ்வு பெ. குற்றம்.
தாழும்படி வி.எ. சரியும்படி.
தாள் பெ. பாதம்.
தாளம்போடுதல் வி. துன்பப்படுதல் (வேலைகிடைக் காததால் தாளம்போடுகிறேன்).
தானம்[1] பெ. 1.கொடை. 2.பெருங்கொடை.
தானம்[2] பெ. இசைச்சுரம்.
தானம்[3] பெ. யானை.
தானம்[4] பெ. மதம்.
தானை[1] பெ. 1.படை. 2.சேனை.
தானை[2] பெ.மேலாடை.

தி

திகழ்தல்[1] வி. விளங்குதல்.
திகழ்தல்[2] வி. ஒளிசெய்தல்.
திகழ்தல்[3] வி. சிறப்பாய் இருத்தல்.
திகழ்தல்[4] வி. மிகுதல்.
திகழ்தல்[5] பெ. உள்ளடக்கிக் கொள்ளுதல்.
திகழ்பா பெ. பொருள் நிறைந்த செய்யுள்.
திங்கள் பெ. 1.சந்திரனுக்குரியதும் வாரத்தில் இரண்டா வதுமான நாள். 2.மாதம். 3.சந்திரன்.
திம் பெ. உறுதி.

திண்ணம் பெ. உறுதி.

திண்ணியர் பெ. வலிமையுடையவர்.

திண்ணை பெ. 1.வேதிகை. 2.வீட்டின் முற்பகுதி.

திண்திறல் பெ. உறுதியான வலிமை.

திண்மை[1] பெ. 1.வலிமை. 2.உறுதி. 3.பருமன்.

திண்மை[2] பெ. மெய்மை.

திண்மை[3] பெ. கலங்கா நிலைமை.

திணைக்குரியபெரும்பொழுது, சிறுபொழுது பெ. பெரும்பொழுது, குறிஞ்சி - குளிர்காலம், முல்லை- கார்காலம், மருதம் - ஆறுபெரும் பொழுதுகள், நெய்தல் - ஆறுபெரும்பொழுதுகள், பாலை- இளவேனில், முதுவேனில் பின்பனி, சிறுபொழுது: யாமம், மாலை, வைகறை, ஏற்பாடு, நண்பகல்.

திணைமாலைநூற்றைம்பது பெ. பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றும் கணிமேதாவியார் இயற்றியதும் 150 செய்யுளில் ஐந்திணை ஒழுக்கங்களைக் கூறுவதுமான நூல்.

திப்பிலி பெ. 1.மருந்துக் கொடி வகை. 2.திப்பிப் பனை எனும் ஒரு வகை பனை வகை.

தியங்குதல் வி. மயங்குதல்.

தியாகம் பெ. 1.தன்னலமறுப்பு. 2.ஈகம். 3.கை விடுகை. 4.தன்னலம் இழந்த கொடை.

திரவியம் பெ. செல்வம்.

திரள்[1] பெ. திரட்சி.

திரள்[2] பெ. கூட்டம்.

திரி[1] பெ. முறுக்கு.

திரி[2] பெ. அலை.

திரி[3] பெ. கெடு.

திரி[4] பெ. மாற்று.

திரி[5] பெ. திரிநூல்.

திரி[6] பெ. மூன்று திரிபு.

திரிபதகை பெ. கங்கையாறு; கங்கை, யமுனை, சரசுவதி என மூன்றாய்ப் பிரிந்து பாய்வதால் திரிபதிகை எனப்பட்டது.

திரு[1] பெ. செல்வம்.

திரு[2] பெ. 1.இலக்குமி. 2.திருமகள் 3.தெய்வத் தன்மை. 4.செல்வன். 5.செல்வி. 6.சோதிடங் கூறுவோன்.

திரு[3] பெ. 1.விழிப்பு மொழி. 2.அடைமொழி. 3.சிறப்பு.

திரு[4] பெ. அல்லி.

திரு[5] பெ. 1.மேன்மை. 2.நல்வினை. 3.பாக்கியம். 4.கண்டாரால் விருப்பப்படும் தன்மை.

திரு[6] பெ. மாங்கலியம்.

திரு[7] பெ. 1.அழகு. 2.பொலிவு.

திரு[8] பெ. பழைய தலையணிவகை.

திருக்குறள் பெ. பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றும் அதிகாரத்துக்குப் பத்துக் குறள் கொண்ட 133 அதிகாரங்களில் அறம் பொருள் இன்பங்களைப் பற்றிக் கூறுவதும் திருவள்ளுவர் இயற்றியதுமான நூல்.

திருக்கைவழக்கம் பெ. கம்பர் இயற்றிய நூல்.

திருக்கோவையார் பெ. மாணிக்கவாசகர் இயற்றியதும் திருச்சிற்றம்பலத்தைப் பற்றியதுமான அகப்பொருட் கோவை.

திருத்துதல்[1] வி. 1.பிழை நீக்குதல். 2.மதிப்பிடுதல். 3.மாற்றுதல்.

திருத்துதல்[2] வி. நல்வழிப்படுத்துதல்.

திருத்தொண்டர்புராணம் பெ. பெரியபுராணத் திற்குச் சேக்கிழார் இட்ட பெயர்.

திருந்துதல் வி. நல்வழிப்படுதல்.

திருநீற்றுக்காப்பு பெ. பெரியோர்களால் வாழ்த்தி வழங்கப்படும் திருநீறு.

திருப்பெருந்துறை பெ. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் உள்ள ஊர்.

திருமந்திரம் பெ.இதனை எழுதியவர் திருமூலர்; இது சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறை யாகும்.

திருமுருகாற்றுப்படை பெ. பத்துப்பாட்டினுள் ஒன்றும் நக்கீரர் இயற்றியதும் முருகக்கடவுளைப் பற்றியது மான ஒரு நூல்.

திருமுறை பெ. தேவாரம், திருவாசகம், திரு விசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந்திருமுறை, பெரியபுராணம் என்ற சைவநூல்கள்.

திருமேனி பெ. திருவுடல்.

திருமை பெ. அழகு.

திருவடி[1] பெ. பாதம்.

திருவடி[2] பெ. 1.சுவாமி. 2.முனிவர். 3.அனுமான். 4.கருடன். 5.திருவிதாங்கூர் அரசர்.

திருவடி[3] பெ. நோவில்லாத புண்.

திருவருட்பா பெ. வள்ளலார் அருளிய அருட் பாடல்.

திருவருள் பெ. தெய்வ கிருபை.

திருவழுந்தூர் பெ. (சோழநாடு) கம்பர் பிறந்த ஊர்.

திருவள்ளுவமாலை பெ. திருக்குறளைப் புகழ்ந்து சங்கப்புலவர்கள் பாடியனவாகக் கருதப்படும் செய்யுட்களமைந்த நூல்.

திருவள்ளுவர் பெ. திருக்குறளை இயற்றியவர்.

திருவாசகம் பெ. திருவாதவூரினைச் சேர்ந்த மாணிக்கவாசகர் எழுதிய துதி நூல்.

திருவாதவூர் பெ. மாணிக்கவாசகர் பிறந்த ஊர்.

திரை[1] பெ. அலை.

திரை[2] பெ. திரைச்சீலை.

திலவதியார் பெ. திருநாவுக்கரசரின் தமக்கையார்.

திவ்வியம் பெ. மேன்மை.

திளைத்தல் வி. தோய்ந்திருத்தல்.

திறமை[1] பெ. திறள்.

திறமை[2] பெ. திறன்.

திறமை[3] பெ. வலிமை.

திறமை[4] பெ. சாவி.

திறமை[5] பெ. வரி.

தின்பண்டம் பெ. உண்பொருள்.

தினசரி[1] பெ. நாள்தோறும்.

தினசரி[2] பெ. நட்சத்திரம்.

தீ

தீண்டாமை[1] பெ. தொடாது விலகியிருக்கை.

தீண்டாமை[2] பெ. தீது.

தீயின்வாய் பெ. நெருப்பு.

தீயோர் பெ. 1.கீழ்மக்கள். 2.பொல்லாதவர்கள். 3.வேடர். 4.தீம்பர். 5.அறிவற்றவர்.

தீர்[1] பெ. செலவழிக்கை.

தீர்[2] பெ. முடி.

தீர்[3] பெ. தீங்கு.

தீர்[4] பெ. தீர்வு.

தீர்ப்பு[1] பெ. முடிவு.

தீர்ப்பு[2] பெ. பிராயச்சித்தம்.

தீர பெ. முற்றிலும்.

தீராமை பெ. நீங்காமை.

தீவட்டி பெ. ஒரு விளக்கு.

தீவிரம்[1] பெ. உறைப்பு.

தீவிரம்[2] பெ. கொடுமை.

தீவிரம்[3] பெ. சடுதி.

தீவிரம்[4] பெ. சூரியகிரணகம்.

தீவிரம்[5] பெ. நரகம்.

தீவிரம்[6] பெ. 1.பெருஞ்சினம். 2. மூர்க்கம்.

தீவு பெ. கடலிடைக் குறை, கண்டம், தூரதேசம், நாவலந்தீவு முதலிய தீவுகள்.

து

துக்கங்கொண்டாடுதல் வி. இழவு கொண்டாடுதல், புலம்புதல்.

துக்கிப்பு பெ. துக்கம்.

துகர் பெ. பவளம்

துகள்[1] பெ. குற்றம்.

துகள்[2] பெ. புழுதி.

துகள்[3] பெ. பூந்தாது.

துகிர்[1] பெ. பவளம்.

துகிர்[2] பெ. சீலை.

துகிர்[3] பெ. விருதுக்கொடி.

துடி பெ. பறை.

துடிப்பு பெ. 1.பரபரப்பு. ஒரே துடிப்பா இருக்கியே. 2.சுறுசுறுப்பு. 3.வேகம்.

துணிச்சல் பெ. 1.துணிவு. 2.தைரியம்.

துணிதல்[1] வி. 1.தைரியமடைதல். 2.தெளிதல்.

துணிதல்[2] வி. நிச்சயித்தல்.

துணிதல்[3] வி. தொடங்குதல்.

துணிதல்[4] வி. நீங்குதல்.

துணிதல்[5] வி. வெட்டுண்ணுதல்.

துணிவு[1] பெ. 1.திடன். 2.தெளிவு. 3.நம்பிக்கை. 4.நோக்கம்.

துணிவு[2] பெ. துண்டு.

துணிவு[3] பெ. வெட்டு.

துணுக்கம் பெ. அச்சம் உள்ளோசை.

துணுக்குகள் பெ. சிறுபகுதிகள் (செய்தித் துணுக்குகள்

துணை[1] பெ. அளவு.

துணை[2] பெ. உதவி.

துணை[3] பெ. இரட்டை.

துணை[4] பெ. ஒப்பு.

துணை[5] பெ. வரை.

துணை[6] பெ. வாழ்க்கைத்துணை.

துணை[7] பெ.ஆதரவு.

துணைச்சொல் பெ. உதவிச் சொல்.

துணையடி பெ. இணைந்த திருவடி.

துதி பெ. தோத்திரம்.

துதித்தல்[1] வி. புகழ்தல்.

துதித்தல்[2] வி. 1.தொழுதல். 2.நினைத்தல்.

துப்புதல் வி. உமிழ்தல்.

தும்பு[1] பெ. கரும்பு.

தும்பு[2] பெ. 1.நார். 2.கயிறு.

தும்பு[3] பெ. குறைவு.

தும்பு[4] பெ.சிம்பு.

தும்பு[5] பெ.நெருஞ்சில்.

தும்பை[1] பெ. 1.ஒரு கொடி 2.ஒரு பூடு.

தும்பை[2] பெ. ஒரு மீன்.

தும்பை[3] பெ. கறவைப்பசு.

தும்பை[4] பெ. கூட்டம்.

தும்பை[5] பெ. போரில் வென்றோர் சூடும் மாலை.

தும்பை[6] பெ.வெற்றிலை.

தும்பைத்திணை பெ. போர்க்களத்தில் இருத்திறத் தாரும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவர்.

தும்பை மாலை பெ. ஒரு பிரபந்தம், அது தும்பைப் பூ மாலை சூடி மற்றவரோடு போரிடுவதைக் கூறுவதும், போரில் வென்றோருக்கு சூடப்படும் மாலை.

துய்த்தல்[1] வி. 1.அனுபவித்தல். 2.நுகர்தல். 3.உண்ணுதல்.

துய்த்தல்[2] வி. நூற்நூற்றல்.

துயர் பெ. 1.துயரம். 2.துன்பம். 3.வாழ்க்கைத்துயர்.

துயில்[1] பெ. 1.உறக்கம். 2.தூக்கம். 3.கனா.

துயில்[2] பெ. துயில் எழுகை.

துயில்[3] பெ. தாங்குகை.

துயில்[4] பெ. சாவு.

துயில்[5] பெ. ஆடை.

துர்மேதை பெ. மந்தபுத்தி.

துரப்பு பெ. துரத்துகை.

துரிதம்[1] பெ. ஒருதாளம்.

துரிதம்[2] பெ. 1.கலக்கம். 2.கேடு. 3.துன்பம்.

துரிதம்[3] பெ. சீக்கிரம்.

துரிதம்[4] பெ. பாவம்.

துரியர் பெ. 1.கடவுள். 2.சுத்தநிலையில் சலனமற்று இருப்போர்.

துருக்கன் பெ. ஓர் அசுரன்.

துருவம்[1] பெ. ஐம்பத்தாறு தேசங்களுள் கன்னட தேசத்திற்குத் தெற்கிலுள்ள நாடு.

துருவம்[2] பெ. பதினெண் மொழிகளுள் துருவ தேசத்தில் வழங்கும் மொழி.

துருவுதல்[1] வி. 1.கடைதல். 2.துளைத்தல்.

துருவுதல்[2] வி. தேடுதல்.

துருவுதல்[3] வி. தொடர்தல்.

துரை பெ. 1.அதிகாரி. 2.மேன்மகன்.

துரைத்தனக்காரர் பெ. அதிகாரமுள்ளோர்.

துரைத்தனம் பெ. அதிகாரம்.

துரோகி பெ. 1.இரக்கமற்றவன். 2.கொடும்பாவி. 3.கூடி இருக்கும் போதே தீங்கு செய்பவர்.

துலங்குதல் வி. 1.விளங்குதல். 2.வெளிப்படுதல். 3.உருப்படுதல்.

துலை பெ. துலாக்கோல் (தராசு).

துலையில்லார் பெ. ஆற்றலில் குறைந்தவர்.

துவ்வாமை பெ. வறுமை.

துளக்கம் பெ. விளக்கம்.

துள்ளல்[1] பெ. 1.துள்ளுதல். 2.துடிப்பு.

துள்ளல்[2] பெ. 1.கூத்து. 2.ஆடுகை.

துள்ளல்[3] பெ. துள்ளல் ஓசை.

துளி பெ. 1.திவலை. 2.சொட்டு.

துளை பெ. 1.திறப்பு. 2.பொத்தல். 3.ஓட்டை 4.துளை யிடுகை. 5.துளைப்பு.

துறந்தார் பெ. 1.உலக ஆசைகளை விட்ட துறவிகள். 2.பற்றினை விட்டவர்.

துறை பெ. தோணித்துறை.

துன்பம்[1] பெ. 1.வருத்தம். 2.தீங்கு. 3.கெடுதி.

துன்பம்[2] பெ. 1.நோய். 2.மெய்வருத்தம். 3.மன வருத்தம்.

துன்பம்[3] பெ. வறுமை.

துன்பு பெ. துன்பம்.

துன்னார்[1] பெ. பகைவர். (துன்னலர்)

துன்னார்[2] பெ. அழகியமலர்.

தூர்கட்டி பெ. பயிர் அடி பருத்து வளர்தல்.

தூய்மை[1] பெ. 1.பரிசுத்தம். 2.மெய்ம்மை. 3.முத்தி. 4.நன்மை. 5.நேர்மை.

தூய்மை[2] பெ. துப்புரவு.

தூய்மைஉடையர் பெ. மனத்தூய்மை உடையவர் ஆவர்.

தூஉயம் பெ. தூய்மை உடையோர்.

தூய[1] பெ.எ. 1.மாசற்ற. 2.புனித.

தூய[2] பெ.எ. கலப்பற்ற.

தூவி[1] பெ. 1.இறகு. 2.தோகை.

தூவி[2] பெ. எழுதுகோல்.

தூற்றுதல்[1] வி. காற்றில் விடுதல்.

தூற்றுதல்[2] வி. அள்ளிவிடுதல்.

தூற்றுதல்[3] வி. வசைபாடுதல்.

தூறு[1] பெ. குவியல்.

தூறு[2] பெ. 1.குறுங்காடு. 2.சுடுகாடு.

தூறு[3] பெ. 1.பழிச்சொல். 2. தீங்கு.

தூறு[4] பெ. போர்.

தெ

தெண்கடல்வளாகம் பெ. தெளிந்த நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகம்.

தெண்டனிடுதல் வி. வணங்குதல்.

தெண்டிரை பெ. தெளிந்த அலைகள்.

தெய்வப்புலவர் பெ. தெய்வத்தன்மை வாய்ந்த புலமையுடையவர்

தெரிசனம் பெ. காட்சி.

தெருள் பெ. 1.தெளிவு. 2.அருள். 3.ஞானம்.

தெலுங்கு[1] பெ. ஒருதேசம்.

தெலுங்கு[2] பெ. தெலுங்குதேசத்தில் பேசும் மொழி.

தெளிதல் வி. விளக்கம் பெறுதல்.

தெளிவு[1] பெ. 1.விளக்கம். 2.ஞானம். 3.ஆராய்ந்து கண்டது.

தெளிவு[2] பெ. குரல்.

தெளிவு[3] பெ. பொலிவு.

தெளிவு[4] பெ. சாறு.

தெளிவு[5] பெ. நம்பிக்கை.

தென்றல் பெ. 1.தென்காற்று. 2.இனிய காற்று. 3.வாடை.

தென்னம்பொருப்பு பெ. தென்பகுதியில் உள்ள பொதிகைமலை.

தென்னவன்குலதெய்வம் பெ. சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்.

தே

தே பெ. தெய்வம்.

தேசம் பெ. 1.நாடு. 2.இடம். 3.தேசு.

தேட்டை பெ. செல்வம்.

தேட பெ.எ. தேடுவது.

தேநீர் பெ. தேயிலை நீர் (இ).

தேர்ச்சி பெ. 1.ஆசோசனை. 2.தெளிவு. 3.கல்வி. 4.பரீட்சையில் தேறுகை. 5.பயிற்சி. 6.ஆராய்ச்சி.

தேரழுந்தூர் பெ. கம்பர் பிறந்த ஊர்.

தேவாரம் பெ. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள்.

தேவை பெ. வேண்டியது.

தொ

தொகைநூல் பெ. ஒருவராலேனும் பலராலேனும் பாடப்பட்டனவாய்ப் பொருள், இடம், காலம் தொழில் என்பன பற்றியும் பாட்டு அளவு என்பன பற்றியும் ஒழுங்குதிரட்டப்பட்ட செய்யுள் நூல்.

தொட்டணைத்து பெ.அ. தோண்டும் அளவு.

தொடர்நிலைத் தொடர் பெ. ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவது.

தொடர்பு பெ. 1.நட்பு. 2.மிகவும் உதவுபவர்.

தொடர்வாக்கியம் பெ. ஒரு தொடரில் ஒரு எழுவாயும் பல பயனிலைகளும் வருவது. (எ.கா.) தேன்மொழி வந்தாள்; கண்டாள்; பேசினாள்; சென்றாள்.

தொடுத்தல்[1] வி. பொருளை விரித்துப் பேசுதல்.

தொடுத்தல்[2] பெ. இடைப்பகுதி

தொடை பெ. மாலை.

தொண்டு[1] பெ. 1.கடவுள் வழிபாடு. 2.பொதுப்பணி. 3.அடிமைத்தனம்.

தொண்டு[2] பெ. பழனம்.

தொண்டு[3] பெ. ஒன்பது.

தொல்காப்பியம் பெ. தமிழ் மொழியில் உள்ள மிகப் பழமையான இலக்கண நூலாகும்.

தொழிற்கல்வித்துறை பெ. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் போன்ற துறைகள்.

தொழு[1] பெ. சிறை.

தொழு[2] பெ. மாட்டுக்கொட்டில்.

தொழு[3] பெ. குட்டம்.

தொழு[4] பெ. இல்வாழ்க்கை.

தொழுதல் வி. வணங்குதல்.

தொழும்பர் பெ. தொண்டர்கள்.

தொன்மம் பெ. புராணம்.

தொன்மை[1] பெ. பழமை.

தொன்மை[2] பெ. தொன்றுதொட்டு.

தொன்று[1] பெ. பழமை.

தொன்று[2] பெ. ஊழ்.

தொனி பெ. ஓசை.

தோட்கப்படாதசெவி பெ. துளைக்கப்படாத காதுகள்.

தோல்[1] பெ. 1.துருத்தி. 2.தோலினாலியன்ற கேடகம்.

தோல்[2] பெ. விதையின் மேற்றோல்.

தோல்[3] பெ. புறணி.

தோல்[4] பெ. சருமம்.

தோல்[5] பெ. துரதிருஷ்டம்.

தோல்[6] பெ. தோல்வி.

தோல்[7] பெ. மூங்கில்.

தோற்றம்[1] பெ. பிறப்பு.

தோற்றம்[2] பெ. 1.வடிவம். 2. தோற்றப்பொழிவு.

தோற்றம்[3] பெ. காட்சி.

தோற்றம்[4] பெ. படைப்பு.

தோற்றாதாள் பெ. கடைப்பிடிக்காதவன்.

தோன்றுதல் வி. 1.முளைதல். 2.படுதல். 3.உண்டாகுதல். 4.எழுதல்.

ந

நகரம்[1] பெ. 1.நகர். 2.வீடு. 3.கோயில். 4.அரண்மனை.

நகரம்[2] பெ. ஒரு ஏவல்.

நகுதல் வி. சிரித்தல்.

நகை[1] பெ. நட்பு.

நகை[2] பெ. மலர்.

நகை[3] பெ. ஒளி.

நகை[4] பெ. 1.புன்னகை. 2.சிரிப்பு.

நகை[5] பெ. 1.முத்து. 2.அணி.

நகை[6] பெ. அவமதிப்பு.

நகை[7] பெ. இன்பம்.

நகைச்சுவை பெ. **ஒன்பது சுவைகளுள் ஒன்று சிரிப்பூட்டுவது** (அவர் ஒரு நகைச்சுவை நாயகர்)

நட்டல் பெ. நட்புக்கொள்ளுகை.

நட்பு பெ. 1.சிநேகம். 2.சுற்றம். 3.உறவு.

நடலை பெ. துன்பம்.

நடு பெ. 1.இடைப்பகுதி. 2.நடுவுடல். 3.மையம்.
நடுதல் வி. ஊன்றுதல்.
நடுங்குதல் வி. 1.உதறுதல். உடல் நடுங்கிற்று. 2.அசைவு ஏற்படுதல்.
நடுநாள்யாமம் பெ நள்ளிரவு.
நடுவுநிலைமை[1] பெ. 1.மத்தியநிலை. 2.யோக நிலை.
நடுவுநிலைமை[2] பெ. நிதானம்.
நடுவுநிலைமை[3] பெ. செம்மை.
நடை[1] பெ. நடத்துகை.
நடை[2] பெ. தடவை.
நடை[3] பெ. மையப்பகுதிவழி.
நடை[4] பெ. பாணி.
நடை[5] பெ. நடை உடை பாவனை.
நடை[6] பெ. சாலையில் செல்லும் வண்டிகள்.
நடை[7]பெ. நடக்கை.
நடை[8] பெ. இடைகழி.
நடை[9] பெ. ஒழுக்கம்.
நடை[10] பெ. வழக்கு.
நடை[11] பெ. மொழிப்போக்கு.
நடைமுறைஇலக்கணம் பெ. ஒத்த ஓசை உடைய சொற்களை உருவாக்குதல் ஒருமைப்பன்மை அறிதல்.
நண்ணார் பெ. பகைவர்.
நண்பு பெ. 1.நட்பு. 2.அன்பு.
நந்நெறி பெ. நமது வழி.
நம்பி பெ. 1.சிறந்த மகன். 2.கடவுள் நங்கை.
நமன் பெ. எமன்.
நயம்[1] பெ. 1.நலம். 2.அருள். 3.விருப்பம். 4.நன்மை. 5.மகிழ்ச்சி. 6.அன்பு. 7.ஓம்புகை.
நயம்[2] பெ. பக்குவம்.
நயம்[3] பெ. மலிவு.
நயம்[4] பெ. நீதி.
நயன்[1] பெ. நன்மை.
நயன்[2] பெ. இலாபம்.
நயன்[3] பெ. செல்வம்.
நயன்[4] பெ. நல்லபயன்.
நயன்[5] பெ. நீதி.
நயன்[6] பெ. பகை.
நயன்[7] பெ. உபாயம்.
நயனம் பெ. கண்கள்.
நல்கினார் வி. அளித்தார்.
நல்குரவு பெ. வறுமை.
நல்லந்துவனார் பெ. கலித்தொகையைத் தொகுத்தவர்; நெய்தல் கலியைப் பாடியவர்.
நல்ல[1] பெ. நன்மையான.
நல்ல[2] பெ. கடுமையான.
நல்லவை பெ. நன்மை தரும் உறுதிப் பொருள்கள்.
நல்லறம் பெ. 1.நன்மை பொருந்திய வாழ்க்கை. 2.நல்லொழுக்கம்
நல்லொழுக்கம் பெ. நல்வழியில் நடந்து நன்மை தருமாறு நடக்கும் ஒழுக்கம்.
நவ்வி பெ. மான்.
நற்கழகங்கள் பெ. நூலகங்கள்.
நற்றிணை பெ. பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி தொகுப்பித்ததும் எட்டுத் தொகையுள் ஒன்றானதும் அகப்பொருள் பற்றியதுமான தொகை நூல்.
நற்றிறம் பெ. அறநெறி.
நறுமணம் பெ. வாசனைப் பொருள்.
நன்கணியர் பெ. நெருங்கியிருப்பவர்.
நன்செய் பெ. நஞ்செய்.
நன்மை[1] பெ. 1.நற்பயன் தருவது. 2.பயன்.
நன்மை[2] பெ. 1.நலம். 2.மேம்பாடு.
நன்மை[3] பெ. ஆசி.
நன்மை[4] பெ. அழகு.
நன்மை[5] பெ. 1.நற்குணம். 2.சன்மார்க்கம். 3.நல்வினை.
நன்மை[6] பெ. உபகாரம்.
நன்மை[7] பெ. 1.சிறப்பு. 2.இருதுவாகை.
நன்மை[8] பெ. 1.புதுமை.
நன்மை[9] பெ. மிகுதி.
நன்மை[10] பெ. சுபகாரியம்.
நன்மை[11] பெ. ஆக்கம்.
நன்றி பெ. 1.செய்ந்நன்றி. 2.அறம்.
நன்னூல் பெ. நல்லநூல் (இலக்கண நூல்).

நன்னெறி பெ. நல்லவழி.

நனவு[1] பெ. தோற்றம்.

நனவு[2] பெ. பகல்.

நனவு[3] பெ. மெய்ம்மை.

நனி பெ. மிகுதி.

நனைதல் வி. 1.ஈரமாகுதல். 2.தோய்த்தல். 3.துணிகளை நனைத்தல்.

நனை[1] பெ. அரும்பு.

நனை[2] பெ. தேன்.

நனை[3] பெ. கள்.

நனை[4] பெ. மிகுதி

நா

நாகரிகம் பெ. 1.நகரவொழுக்கம். 2.மரியாதை. 3.கண்ணோட்டம். 4.உயரிய மக்கள் பண்பாடு. 5.பண்புடன் நடக்கை.

நாடகம் பெ. 1.தாளதுக்கு இணைய நடிக்கும் நடனம். 2.கதா புருசர்களின் வேசம்பூண்டும் ஒரு கதையை நடந்தது போல் நடித்துக் காட்டுவது. 3.நாடகத்தமிழ்; முத்தமிழுள் கூத்துப் பற்றி வழங்கும் தமிழிலக்கியப் பகுதியாகிய நாடகத்தமிழ்.

நாடி[1] பெ. தாது.

நாடி[2] பெ. 1.இரத்தக்குழாய். 2.மேல் உறுப்பு.

நாடி[3] பெ. மாளிகை.

நாடி[4] பெ. நாழிகை.

நாடி[5] வி.எ. விரும்பி.

நாடு[1] பெ. 1.பூமி. உலகம் முழுவதும் சென்று ஒவ்வொரு நாட்டையும் சுற்றிப்பார்க்க வேண்டும். 2.உலகம். 3.மருதநிலம். 4.இடப்பரப்பு. 5.பக்கம். 6.நாட்டுப்புறம். 7.தேசப்பகுதி.

நாடு[2] பெ. இராச்சியம்.

நாடு[3] பெ. ஒரு பேரெண்.

நாடுதல் வி. விரும்புதல்.

நாண் பெ. நாணம்.

நாணம் பெ. 1.செய்யக் கூடாததனைச் செய்ய அச்சப் படுகை. 2.வெட்கம்.

நாதொலைவில்லை பெ. சொல்சோர்வு இல்லை.

நாபி பெ. கொப்பூழ், கத்தூரி.

நாமக்கல் கவிஞர் பெ. நாமக்கல்லில் வாழந்த ஓர் காந்தியக்கவிஞர்.

நாமம் பெ. பெயர்.

நாயக்கால் பெ. நாயின் கால்.

நாயகன் பெ. தலைவன்.

நால்வர்நான்மணிமாலை பெ. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மாணிக்கவாசகர் என்று சிவனடியார்கள் மேல் சிவப்பிரகாசர் இயற்றிய பிரபந்தம்.

நாலடியார் பெ. பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றானதும்; சமணமுனிவர்களால் இயற்றப் பட்டதும் அறம் பொருள் இன்பம் இவற்றை 400 வெண்பாக்களாற் கூறுவதுமாகிய நூல்.

நாலாயிரத்திவ்விய பிரபந்தம் பெ. குலசேகர ஆழ்வார் (பாப்பகுதி ஆசிரியர்).

நாவலன் பெ. புலவர்.

நாவன்மை பெ. பேச்சுவன்மை.

நாவாய் பெ. 1.படகு. 2.கடலில் செல்லும் பெரிய கப்பல்.

நாழி[1] பெ. தானியங்களை அளக்கும்படியளவை.

நாழி[2] பெ. அளவுப்பெயர்.

நாழி[3] பெ. நேர அளவு .

நாழி[4] பெ. நாடா.

நாழி[5] பெ. அம்பறாத்தூணி.

நாளிகேரம் பெ. தென்னை.

நாற்கரணம் பெ. 1.மனம். 2.புத்தி. 3.சித்தம். 4.அகங்காரம் என்னும் உட்கருவிகள்.

நாற்குணம் பெ. 1.அச்சம். 2.மடம். 3.நாணம். 4.பயிர்ப்பு.

நாற்படை பெ. 1.யானைப்படை. 2.தேர்ப்படை. 3.குதிரைப்படை. 4.காலாட்படை

நாற்பொருள் பெ. 1.அறம். 2.பொருள். 3.இன்பம். 4.வீடு.

நாற்றம் பெ. 1.நறுமணம். 2.துர்வாசனை. கழிவரை ஒரே நாற்றமடிக்கிறது (பே.வ.) .

நாற்றிசை பெ. 1.கிழக்கு. 2.மேற்கு. 3.வடக்கு. 4.தெற்கு.

நான்குபேறு பெ. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகள்.

நான்மணிக்கடிகை பெ. பதினெண்கீழ்க்கணக்கினுள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு மணிகளை கொண்ட அணிகலன்களாகிய உறுதிப்பொருள் பற்றி நூறு செய்யுட் களில் விளம்பி நாகனாரால் இயற்றப்பட்ட நீதிநூல்.

நான்மறை (நால்வேதம்) பெ. ரிக், யசுர், சாமம், அதர்வணம்.

நானிலம் பெ. 1.உலகம். 2.குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும் நால்வகை நிலங்களாகும்.

நி

நிகழும் பெ. 1.நடைபெற்றுக்கொண்டிருக்கும். 2.நடக்கும். நான்சொல்வது நிச்சயம் நிகழும் (பே.வ).

நிணம் பெ. கொழுப்பு (இறைச்சி).

நிதி பெ. செல்வம்.

நிந்தனை பெ. 1.பழிக்கை. 2.தெய்வநிந்தனை. 3.வசை.

நிபுணர் பெ. வல்லுநர்.

நிமிடம் பெ. மணித்துளி.

நியாயம்[1] பெ. 1.முறையான இயல்பு. 2.நீதி. 3.நேர்மை. 4.கட்டுப்பாடு.

நியாயம்[2] பெ. 1.சட்டம். 2.வழக்குரை. 3.முகாந்தரம். 4.வாக்குவாதம்.

நிருணயம் பெ. 1.ஆராய்வு. 2.தீர்ப்பு. 3.உறுதி.

நிருபம் பெ. 1.எழுதியனுப்பும் கட்டளை காகிதம். 2.தீர்மானம். 3.கடிதம்.

நிரைகவர்தல் பெ. பகைவர்களின் மாட்டுக்கூட்டங் களைப்பிடித்தல்.

நில்லாமை பெ. நிலையாமை.

நிலம் பெ. 1.இடம். 2.தேசம். 3.பூமி.

நிலமாகியமுதற்பொருள் பெ. குறிஞ்சி –மலையும் மலைசார்ந்த இடம், முல்லை – காடும் காடு சார்ந்த இடம், மருதம் – வயலும் வயல் சார்ந்த இடம், நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடம், பாலை – மணலும் மணல் சார்ந்த இடம்.

நிலவல் பெ. ஒளிசெய்கை.

நிலவு[1] பெ. ஒளி.

நிலவு[2] பெ. திங்கள்.

நிலவுதல்[1] வி. ஒளிவிடுதல்.

நிலவுதல்[2] வி. நிலையாய் இருத்தல்.

நிலவுதல்[3] வி. வழங்குதல்.

நிலாமண்டபம் பெ. நிலா முற்றம்.

நிலைத்தல் வி. நிலைபெறுதல்.

நிலைநிறுத்துதல் வி. உறுதியாக்குதல்.

நிலைபெறுத்தல் வி. காத்தல்.

நிலைமொழி பெ. பதப்புணர்ச்சியின்கண் முதனிற்கு மொழி.

நிலைபேசு[1] பெ. 1.உறுதி. 2.நிச்சயம். 3.மானம்.

நிலைபேசு[2] பெ. 1.அசையாமை. 2.தூண்.

நிவேதனம்[1] பெ. படையலமுது.

நிவேதனம்[2] பெ.ஒப்புவித்தல்.

நிழக்கிழார் பெ. நிலத்துக்கு உரியவர்.

நிற்க இ.சொ. ஓர் இடைச்சொல். கற்றவாறு நிற்க.

நிறம்[1] பெ. 1.இயல்பு. 2.நடுவிடம். 3.உயிர் நிலை.

நிறம்[2] பெ. ஒளி.

நிறம்[3] பெ. 1.உடல். 2.தோல். 3.மார்பு.

நிறம்[4] பெ. வர்ணம்.

நிறை[1] பெ. 1.எடை. 2.அளவு. 3.திண்மை.

நிறை[2] பெ. 1.ஒழுக்கம். 2.நற்பண்பு. 3.மாட்சிமை. 4.கற்பு. 5.நீதி. 6.சால்பு

நிறைகோல் பெ. துலாக்கோல் (தராசு).

நிறையுடைமை பெ. ஒருவனிடம் உள்ள சான்றாண்மைப் பண்பு.

நிறைவு பெ. 1.மாட்சிமை. 2.பூரணம்.

நினைத்தல் வி. நினைவுக்குக் கொண்டுவருதல்.

நீ

நீக்குதல் வி. அழித்தல்.

நீங்கிய பெ.எ. விலகிய.

நீட்டுதல் வி. 1.நீளுமாறு செய்தல். 2.கைகளை நீட்டுதல். 3.மடக்குதல் நீட்டுதல்.

நீடுபக்தி பெ. மிகுந்த பக்தி.

நீடூழி பெ. நெடுங்காலம் நீடூழிவாழ்க.

நீதி பெ. 1.நியாயம். 2.நடுநிலை முடிவு. 3.வழக்கு மன்றத்தின் தலையாயபணி.

நீதிநெறி பெ. நல்லொழுக்கம்.

நீர்சுழற்சிஇயக்கம் பெ. மழை பெய்வதற்கான இயக்கம்.

நீர் பெ. கடல்.

நீர்வார்கண் பெ. நீரொழுகும் கண்கள்.

நீரவர் பெ. அறிவுடையார்.

நு, நூ

நுகர்வு பெ. இன்ப துன்ப நுகர்ச்சி.

நுண்மை[1] பெ. 1.நுட்பம். 2.கூர்மை. 3.அறிவுநுட்பம். 4.பொருநுட்பம்.

நுண்மை[2] பெ. மிகுதி.

நுண்மை[3] பெ. சிற்றுண்டி.

நுணங்கியநூல் பெ. நுண்ணறிவு நூல்கள்.

நுணங்குதல் வி. நுட்பமாகுதல்.

நுதல் பெ. நெற்றி.

நுதல்விழி பெ. நெற்றிக்கண்.

நுந்தை பெ. நும்தந்தை.

நூற்கழகங்கள் பெ. நூலகங்கள்.

நூற்றாண்டு பெ. கிறித்துவ சகாப்தங்களில் நூறு வருடங்கொண்ட காலவளவு.

நெ

நெக்குவிடுதல் வி. பிளந்துவிடுதல்.

நெகிழ்தல் வி. 1.நிலைக்குலைதல். 2.உள்ளம் உருகுதல். 3.கட்டுதளர்தல். 4.நழுவுதல். 5.மெலிதல். 6.மலர்தல். 7.குழைதல். 8.இளகுதல். 9.மணம்மிரங்குதல். 10.பொசிதல். 11.பொடியாதல். 12.தளர்தல். 13.இளகுதல். 14.நெகிழ்ச்சிஅடைதல்.

நெகிழவிடுதல் வி. தளரவிடுதல்.

நெசவு பெ. நெய்யும் தொழில்.

நெஞ்சம் பெ. 1.மனம். 2.இருதயம். 3.மார்பு. 4.தொண்டை.

நெட்டிருப்புப்பாரை பெ. இரும்புக் கடப்பாரை.

நெட்டெழுத்து பெ. 1.நெடிலெழுத்து. 2.கையொப்பம்.

நெடி பெ. 1.காரம். 2.தீ நாற்றம்.

நெடியமொழிதல் பெ. அரசரிடம் சிறப்புப் பெறுதல்.

நெடிய பெ.எ. 1.நீளமான. 2.உயரமான. 3.நீண்ட.

நெடியவன் பெ. உயர்ந்தவனாகிய இராமன்.

நெடுநல்வாடை பெ. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்மேல் நக்கீரனார் பாடப்பட்டதும் பத்துப்பாட்டினுள் ஏழாவதுமான பாட்டு.

நெத்தி பெ. நெற்றி.

நெருங்குதல் வி. 1.நெருக்கமாய் இருத்தல். 2.அணுகுதல்.

நெருப்பு பெ. 1.தீ. 2.கணல். 3.அழல்.

நெற்றி பெ. முகத்தில் கண்களுக்கு மேல் உள்ள இடம்.

நெறி[1] பெ. 1.மனநிலை. 2.அருள். 3.சமயம். 4.கோயில். 5.ஒழுக்கம். 6.ஆளுகை.

நெறி[2] பெ. வளைவு.

நெறி[3] பெ. விதி.

நெறி[4] பெ. கட்டி.

நெறி[5] பெ. குதிரை முதலியவற்றின் நடை.

நெறி[6] பெ. உபாயம்.

நெறி[7] பெ. குலம்.

நெறி[8] பெ. வழி.

நெறி[9] பெ. 1.செய்யுள்நடை. 2.வரிசை.

நெறி[10] பெ. தாழ்ப்பாள்.

நெறிநாலு பெ. வைதருப்பம் (ஆசுகவி), கௌடம் (மதுரகவி), பாஞ்சாலம் (சித்திரகவி), மாகதம் (வித்தாரகவி) ஆகிய செய்யுள் நெறிகள் .

நெறிமுறைமை (நெறிமுறை) பெ. நியாய வழி.

நெறியிலார் பெ. நல்லொழுக்க மில்லாதவர்.

நெறியினிற்றல் வி. அறநெறியில் நிற்றல்.

நே

நேயம் பெ. 1.நேசம். 2.பக்தி. 3.நன்மை. 4.அன்பு.

நேர்[1] பெ. 1.நிகழ், நேரானது. 2.மேல் நோக்கியது.

நேர்[2] பெ. நிகர்மொழி.

நேர்[3] பெ.பாதி.

நேர்[4] பெ.வளமை.

நேர்[5] பெ. 1.செவ்வை. 2.நேர்மை.

நேர்[6] பெ. நிலை.

நேர்[7] பெ. ஓர் உவமஉருபு.

நேர்கூற்று பெ. ஒருவர் கூறிய செய்திகளை அப்படியே மாற்றாமல் கூறுவது; நான் நாளை ஊருக்குச் செல்வேன் என்று தேன்மொழி சொன்னாள்.

நேர்கூற்றுத் தொடர் பெ. ஒருவர் பேசுவதை அவர் பேசியபடியே கூறுவது.

நேர்ந்தார் பெ. இசைந்தார்.

நேர்மை பெ. உண்மை.

நேரில் பெ. நேரிடை.

நை

நை பெ. ஓர் இகழ்ச்சிக் குறிப்பு.

நையாண்டி பெ. 1.கேலிப்பேச்சு. 2.சிரிப்புப் பேச்சு.

நையாண்டி மேளம் பெ. வாத்திய வகைகளுள் ஒன்று.

நொ

நொச்சித்திணை பெ. பகையரசனால் முற்றுகை யிடப்பட்ட தம் நாட்டு மதிலை நொச்சிப்பூவைச்சூடி இரு வீரர்கள் உள்ளிருந்து மதிலைக்காப்பது.

நோ

நோ பெ. துன்பம் ஓரெழுத்து ஒரு மொழி.

நோக்குதல்[1] வி. ஆராய்தல்.

நோக்குதல்[2] வி. வலித்தல்.

நோய் பெ. துன்பம்.

நோற்கிற்பவர் பெ. பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவர், பொறுப்பவர்.

நோற்பார் பெ. நோன்பு மேற்கொள்பவர்.

நோன்மை பெ. தவம்.

நோன்றல் பெ. பொறுத்தல்.

ப

பகல்கனவு பெ. நிறைவேறாக் கற்பனை.

பகவத்கீதை பெ. 1.இந்து சமயநூல்; உலக வாழ்வியல் நெறிகளை உணர்த்தும் நூல். 2. பாரதப்போரில் கிருஷ்ணர் அர்ச்சுணனுக்கு உபதேசித்த தத்துவம்.

பகுத்தல் வி. 1.பிரித்தல். 2.வகுத்தல்.

பகுதி பெ. 1.பிரிவு. 2.பக்கம். 3.மேலும் பிரிக்கமுடியாத. கோட்டுக்குக் கீழ் உள்ள எண்.

பகுதிநேரம் பெ. அரைநேரம். அவர் ஒரு பகுதி நேர ஆசிரியர்.

பகை பெ. 1.விரோதம். 2.வெறுப்பு. 3.எதிரி. 4.பகைவன்.

பங்களா பெ. மாளிகை.

பச்சை பெ. நிறம்.

பச்சைக்குழந்தை பெ. இளம்பிள்ளை.

பச்சைத்தண்ணீர் பெ. குளிர்ந்தநீர்.

பச்சைப்பயிர் பெ. இளம்பயிர்.

பச்சைபொய் பெ. சிறிதும் உண்மையில்லாதது.

பசி பெ. 1.உணவு வேட்கை. 2.அறிவுப்பசி. 3.வறுமை.

பசு[1] பெ. பசுமாடு.

பசு[2] பெ. பல்லாங்குழி ஆட்டத்தில் குழியில் விழுந்து ஒருங்குசேறும் ஆறுவிதை.

பசு[3] பெ. ஆன்மா (உயிர்).

பசு[4] பெ. இடம்.
பசு[5] பெ. வேள்வி.
பசுந்துணி பெ. பசிய துண்டம்.
பஞ்சம்[1] பெ. 1.உணவுகிடைக்காத நிலை. 2.பற்றாக்குறை.
பஞ்சம்[2] பெ. ஐந்து.
பஞ்சம்[3] பெ. கருப்புக்காலம்.
பட்சி பெ. பறவை.
பட்டா பெ. வாள். பட்டாக்கத்தி.
பட்டி[1] பெ. சிற்றூர்.
பட்டி[2] பெ. 1.ஆட்டுக்கிடை. 2.திருட்டுமாடு.
பட்டி[3] பெ. மனவடக்கம், நாவடக்கம் அற்றவன். அவன் சரியான வாய்ப்பட்டி
பட்டி[4] பெ. சீலை.
பட்டி[5] பெ. பரத்தை.
பட்டி[6] பெ. அட்டவணை.
பட்டினப்பாலை பெ. பத்துப்பாட்டுநூல்களில் ஒன்று; கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பாட்டு.
பட்டினம் பெ. நகரங்களைக் குறிக்கும் பகுதி.
பட்டுருவுதல் வி. அம்பு ஊடுருவிச் செல்லுதல்.
பட்டை[1] பெ. பட்டையாக உள்ளது.
பட்டை[2] பெ. விபூதிபட்டை.
பட்டை[3] பெ. வாழைப்பட்டை.
பட்டை[4] பெ. மறுப்பது, ஒன்றும் இல்லாதது.
படப்பிடிப்புக்கருவி பெ. ஒரு திரைப்படத்தினை ஒளிப் பதிவு செய்ய இன்றியமையாத சாதன மாகும்.
படர் பெ. 1.படர் கொடி. அவரை ஒரு படர்கொடி வகையைச் சார்ந்தது. 2.படர்கை.
படர்க்கை பெ. சொற்களுக்குரிய மூவிடங்களில் அது தன்மை முன்னிலை இல்லாத இடம்.
படலம் பெ. உட்பிரிவு.
படித்தல் வி. 1.உரிய ஒலிப்புடன் உரக்கப்படித்தல். 2.புத்தகம் படித்தல்.
படிறு பெ. 1.வஞ்சம். 2.வஞ்சனை.
படுக்கை[1] பெ. 1.படுக்க உதவும் பாய் முதலியவை. 2.படுக்கை அறை.
படுக்கை[2] பெ. படுக்கைபுண்.
படைப்பாற்றல் வி. செயல்திட்டம். உனது இந்த நூலின் படைப்பாற்றல் நன்றாக உள்ளது.
பண்[1] பெ. 1.இசை. 2.வண்ணம். 3.வடிவு.
பண்[2] பெ. 1.தகுதி. 2.இயல்பு.
பண்[3] பெ. அழகுபடுத்தல்.
பண்[4] பெ. நீர்நிலை.
பண்ணவர் பெ. தேவர்.
பண்ணவன் பெ. நற்குணங்கள் பல உடைய இலக்குவன்.
பண்பு பெ. 1.இயல்பு. 2.வண்ணம். 3.வடிவு.
பணயம்[1] பெ. ஈடாக வைத்த பொருள்.
பணயம்[2] பெ. பந்தயப் பொருள்.
பணி[1] பெ. 1.தொண்டு. 2.செயல். 3.பணிகை. 4.கீழ்ப்படிகை. 5.வணங்குகை. 6.மலர்களால் அலங்கரிக்கை.
பணி[2] பெ. 1.ஆபரணம். 2.வேலைப்பாடு.
பணி[3] பெ. கட்டளை விதி.
பணி[4] பெ. நாகம்.
பணி[5] பெ. தொழில். வில்வித்தை முதலியவற்றை கற்கும் தொழில்.
பணி[6] பெ. ஈகை.
பணி[7] பெ. தோற்கருவி.
பணிவிடம் பெ. பாம்பின் நஞ்சு.
பணிவு பெ. கீழ்படிகை. எப்பொழுதும் பணிவுடன் இருக்கவேண்டும்.
பணை[1] பெ. மூங்கில்.
பணை[2] பெ. வயல்.
பத்தடுத்த பெ. பத்துமடங்கு.
பத்துப்பாட்டு பெ. திருமுகாற்றுப்படை, பொருந ராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் எனப் பத்துப் பாடல்கள் அடங்கிய பழைய நூற்றொகுதி.
பதம் பெ. பதம் என்பதற்குச் சொல், கிளவி என்ற வேறு பெயர்களும் உண்டு.
பதற்றம் பெ. 1.கலங்குகை. 2.விரைவுபடுகை.

பதி[1] பெ. 1.கடவுள். 2.தலைவன். 3.கணவன்.

பதி[2] பெ. பதிவு செய்கை.

பதி[3] பெ. நாற்று.

பதி[4] பெ. 1.ஊர். 2.இடம்.

பதி[5] பெ. கோயில்.

பதி[6] பெ. குதிரை.

பதிற்றுப்பத்து பெ. 1.நூறு.2.எட்டுத்தொகையுள் ஒன்றானதும், சேரர் பதின்மரைப்பற்றிய புலவர் பதின்மரால் பாடப் பெற்றதும் ஒவ்வொன்றுக்கும் பத்துப் பத்துப்பாட்டாக நூறு பாடல்கள் அமைந்ததுமான நூல்.

பதினெண்கீழ்க்கணக்கு பெ. அடிநிமிர்வில்லாது பெரும்பாண்மை வெண்பாவால் அமைந்து அறம், பொருள், இன்பங்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் கூறும் நாலடியார் நான் மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணையெழுபது, திணை மொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்ற பதினெட்டு நூல்கள்.

பதுங்குதல் வி. 1.ஒளிதல். தீவிரவாதிகள் காட்டில் பதுங்கியுள்ளனர். 2.பதுங்குதல். 3.தப்புதல். 4.மறைதல்.

பதுமத்தான் பெ. தாமரையில் உள்ள பிரமன்.

பதுமன் பெ. பிரமன்.

பந்தயம் பெ. 1.போட்டி. 2.போட்டிப் பொருள்.

பந்துமித்ரர் பெ. 1.சுற்றம். 2.நட்பு.

பயக்கும் பெ. 1.கொடுக்கும். 2.தரும்.

பயில் பெ. 1.பயிற்சி. 2.கல்.

பரங்குன்றுளான் பெ. திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன்.

பரணி[1] பெ. போரில் ஆயிரம் யானைகளைக் கொன்றவன் மீதும் பெரும் போர்புரிந்தவன் மீதும் பாடப்படுவது.

பரணி[2] பெ.நட்சத்திரம் (சோதிடம்).

பரவுதல்[1] வி. 1.போற்றுதல். 2.புகழ்தல். 3.துதித்தல்.

பரவுதல்[2] வி. பரவிச்செல்தல்.

பரவை பெ. கடல்.

பராபரம் பெ. இறைவன். நான் அறியேன் பராபரமே!

பரி பெ. குதிரை.

பரிக்கால் பெ. குதிரைக்கால்.

பரிந்து பெ. விரும்பி.

பரிதி[1] பெ. 1.கதிரவன். 2.இளம்பரிதி.

பரிதி[2] பெ. சுற்றளவு.

பரிபாடல் பெ. 1.ஒருவகைப்பா. 2.எட்டுத்தொகையுள் எழுபது, பரிபாட்டால் தொகுக்கப்பட்ட நூல்.

பரிவாய் பெ. அன்பாய். பரிவாய் பேசினாள்.

பரிவு பெ. 1.இரக்கம். 2.அன்பு. 3.கருணை.

பருவம்[1] பெ. 1.கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு பொழுதுகள். 2.தக்ககாலம். 3.முழுநிலா நாள். 4.பிரதமை, அஷ்டமி, நவமி, பிரதோசம், அமாவாசை, அல்லது பௌர்ணமி என்னும் ஒவ்வொரு பட்சத்திலும் வரும் ஐந்து விசேட தினங்கள். 5.ஆடவர் பெண்களுக்குரிய வெவ்வேறு ஆயுட்கால நிலைகள். 6.பலனளிக்கும் காலம். 7.வருடம். 8.பயிரிடுதற்குரிய காலம். 9.சூரியன் ஒவ்வொரு இராசியிலும் பிரவேசிக்கும் காலம். 10.மழைக்காலம். 11.மாதம்.

பருவம்[2] பெ. நிலையாமை.

பருவம்[3] பெ. நூலின் ஒருகூறு.

பருவம்[4] பெ. முகமதியர் திருவிழாவகை.

பருவம்[5] பெ. உயர்ச்சி.

பருவம்[6] பெ. அளவு.

பருவம்[7] பெ. கணு (உடல் உறுப்பு).

பருவம்[8] பெ. 1.வயது. 2.இளமை.

பலன் பெ. பயன்.

பவம் பெ. பயன்நோக்கிய செயல்.

பவளம் பெ. நவமணியுள் ஒன்று.

பவனி பெ. உலாவருகை.

பவித்திரம் பெ. தூய்மையானது.

பழக்கம் பெ. 1.வழக்கம். 2.பழகி வருவது.

பழித்தல் வி. இழித்தல்.

பழம்[1] பெ. வயது முதிர்ந்தவன்.

பழம்[2] பெ. முக்கால்.

பழம்[3] பெ. அனுகூலம்.

பழம்[4] பெ. ஆட்டக் கெலிப்பு.

பழம்[5] பெ. கனி.

பழமை[1] பெ. தொன்மை. பழமையான ஓவியங்கள்.

பழமை[2] பெ. பழமைவாதி.

பழமொழிகள் பெ. முதுமொழிகள்.

பழவினை பெ. முன்வினை.

பழி பெ. 1.குற்றம். 2.தீராபழி. 3.பழிக்குப்பழி. 4.பழிப்பு. 5.குற்றச்சாட்டு. பொதுத்தொண்டு செய்பவர்கள் பழிக்கப்படுவது இயல்பு.

பழைய ஏற்பாடு பெ. 1.பண்டைய வழக்கம். 2விவிலிய நூலின் பழைய ஆகமம்.

பள்ளம் பெ. 1.தாழ்ந்த பகுதி. 2.ஆழம்.

பள்ளி[1] பெ. அறை.

பள்ளி[2] பெ. 1.ஊர். 2.சிற்றூர். 3.இடைச்சேரி. 4.அறச்சாலை. 5.மருதநிலத்தூர்.

பள்ளி[3] பெ. 1.ஒரு சாதி. 2.ஒரு சாதிப் பெண். 3.தேவர்.

பள்ளி[4] பெ. 1.கல்லூரி. 2.பயிலும் இடம். 3.பள்ளிக் கூடம்.

பள்ளி[5] பெ. 1.சமண பௌத்த கோயில். 2.கோவில்.

பள்ளி[6] பெ. நித்திரை.

பள்ளி[7] பெ. மக்கட்படுக்கை.

பள்ளி[8] பெ. முனிவர் வாசம்.

பள்ளிக்கணக்கு பெ. பள்ளிப்படிப்பு.

பள்ளிக்கல்வி பெ. பள்ளியில் பயிலும் கல்வி.

பள்ளிக்கூடம் பெ. முதல்வகுப்பிலிருந்து பணிரெண்டாம் வகுப்பு வரை பயிலுமிடம்.

பள்ளிவாசல் பெ. முகமதியர் மசூதி.

பள்ளு பெ. 1.உழத்திப்பாட்டு. 2.ஒரு சிற்றிலக்கிய வகை.

பற்றின்மை பெ. விருப்பின்மை.

பற்று[1] பெ. 1.பாசம். 2.பிடி.

பற்று[2] பெ. 1.பற்றுகை. 3.ஆசை. 4.அன்பு. 5.விருப்பு. 6.நட்பு.

பற்று[3] பெ. வயல்.

பற்று[4] பெ.செல்வம்.

பற்றுதல் வி. பிடித்தல்.

பறவை பெ. பறக்கும் வகையைச் சேர்ந்த உயிரினங்கள்.

பறி[1] பெ. 1.நீர் இறைக்கும் கருவி. 2.மீன்பிடிக்கருவி.

பறி[2] பெ. கொல்லை.

பறி[3] பெ. பொன்.

பறி[4] பெ. கூடை.

பன்னாடுதந்தமாறன்வழுதி பெ. நற்றிணையைத் தொகுப்பித்தவர்.

பன்றி பெ. கேழல்.

பனவன் பெ. அந்தணன்.

பனி பெ. குளிர்ந்தவை.

பனை[1] பெ. பனைமரம்.

பனை[2] பெ.ஒருபேரளவு.

பனை[3] பெ.ஒருவகைமீன்.

பா

பாக்கம் பெ. கடற்கரைச் சிற்றூர்களைக் குறிக்கும்.

பாக்கல் பெ. 1.பாவு. 2.கல்.

பாக்கி பெ. நிலுவை.

பாசறை பெ. 1.துன்பம். 2.பகைமேற் சென்றோர் தங்கும் உறைவிடம். 3.ஒரு மரம். 4.மணியாசிப் பலகை.

பாடம் பெ. 1.படிக்க வேண்டிய பகுதி. 2.மூலம். 3.படிப்பினை. 4.மனப்பாடம்.

பாடல் பெ. பாட்டு.

பாடலம் பெ. பாதிரிப்பூ.

பாடுபடுதல் வி. உழைத்தல்.

பாடுபொருள் பெ. கவிதையைப் பாடுவதற்குரிய பொருள்.

பாடுவோர் பெ. 1.புலவர். 2.இசைப்பாடுவோர்.

பாண்டம் பெ. 1.பாத்திரம். 2.கலம் (மட்பாண்டம்).

பாண்டவர் பெ. பாண்டுவின் மைந்தர்களான தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் பஞ்சபாண்டவர்களாவர்.

பாண்டியநாடு பெ. கொற்கை.

பாண்டியன்பரிசு பெ. பாரதிதாசன் இயற்றிய கவிதை நூல்.
பாணச்சி பெ. பாணர் சாதிப்பெண்.
பாணம் பெ. அம்பு.
பாணன் பெ. பாடுபவன்.
பாணாற்றுப்படை பெ. வள்ளல் ஒருவனிடம் பரிசு பெற்று வரும் பாணன் ஒருவன் மற்றொரு பாணனை அவ்வள்ளலிடம் பரிசு பெறுமாறு செய்வதைக்கூறும் புறத்துறை; பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை.
பாணி பெ. எழுதுவதில் உள்ள நடைவேறுபாடு. அவர் சிறுகதையில் ஒரு புதிய பாணியைக் கையாள்வார்.
பாத்திரம்[1] பெ. 1.ஏனம். 2.பித்தளைப் பாத்திரம்.
பாத்திரம்[2] பெ. 1.இயல்பு. 2.கதாநாயகன் பாத்திரம்.
பாதகம் பெ. 1.தீங்கானது. 2.பாவம்.
பாதகன் பெ. பாதகம் செய்பவன்.
பாதரசம் பெ. நீர்மநிலையில் உள்ள ஒரே உலோகம் (பாதரசக்கலவை).
பாதாதிகேசம் பெ. அடிமுதல் முடிவரை ஒரு சிற்றிலக்கியம்).
பாதாளகங்கை பெ. புவிக்குக் கீழ் ஓடும் நீரோட்டம்.
பாதாளம் பெ. 1.கீழ் உலகம். 2.நரகம்.
பாதி[1] பெ. அரை, பாதியளவு.
பாதி[2] பெ. முற்றுப்பெறாநிலை.
பாதி[3] பெ. பங்கு. அந்தப்பழத்தில் எனக்கு அரைபாதி கொடு.
பாதிப்பு பெ. சேதம்.
பாதிரியார் பெ. கிறித்துவக் குரு.
பாதீடு பெ. பங்கிடுகை.
பாதுகாவலர் பெ. பாதுகாப்பாளர்.
பாதை பெ. வழி.
பாநான்கு பெ. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
பாப்பா பெ. சிறுகுழந்தை.
பாமரம் பெ. மூடத்தன்மை.
பாமரமக்கள் பெ. பொதுமக்கள்.
பாமரன் பெ. அறிவில்லாதவன்.
பாமாலை பெ. 1.பாக்களால் தொகுக்கப்பட்ட மாலை. 2.புகழ்மாலை.
பாய்[1] பெ. கோரையாலும் ஓலையாலும் முடையப் பட்ட விரிப்பு.
பாய்[2] பெ. கப்பற்பாய். பாய்மரக்கப்பல்.
பாய்ச்சல் பெ. 1.தாவி ஓடுதல். ஏண்டா இப்படிப் பாய்ந்து ஓடற. 2.நீர் ஓடுகை.
பாய்தல் வி. 1.ஓடுதல். 2.தாவுதல்.
பாயசம் பெ. நீர்ம இனிப்புணவு.
பாயிரப்பொருள்கள் பெ. இலக்கணப்படி பாயிரத் திற்குரிய 11 பொருள்கள் இவை ஆக்கியோன் பெயர், வலி, எல்லை, பயன் முதலியவை.
பாயிரம் பெ. 1.செய்யுளாலான முகவுரை தொல் காப்பிய பாயிரம். 2.பொருளடக்கம்.
பாயிரம்சிறப்பு பெ. தொல்காப்பியத்திற்கு பனம்பார னார் இயற்றியது.
பார் பெ. உலகம். பார் முழுதும் ஓர் முனையில்.
பார்குளம் பெ. உலகம் முழுதும்.
பார்த்து வி.எ. கவனமாக.
பார்ப்பன்[1] பெ. பயன்.
பார்ப்பன்[2] பெ. 1.பிரமன். 2.பிராமணன்.
பார்மகள் பெ. நிலமகள்.
பார்வை பெ. 1.காட்சி. 2.நோக்குகை.
பார்வையாளர் பெ. கண்டுகளிப்பவர். அந்த நிகழ்ச்சியில் நான் பார்வையாளராகப் பங்கேற்றேன்.
பாரதகண்டம் பெ. இந்திய நாடு.
பாரதப்போர் பெ. பாண்டவர் கௌரவர் போர்.
பாரதம் பெ. பாரததேசம்.
பாரதர் பெ. 1.பாண்டவர், கௌரவர் உள்ளிட்ட பாரத வம்சத்தினர். 2.பாரத நாட்டினர்.
பாரதி பெ. கலைமகள், பண்டிதன்.
பாரதியார் பெ. 1.புலவர். 2.சுப்பிரமணிய பாரதியார். 3.சோமசுந்தர பாரதியார்.
பாரப்பழி பெ. பெருங்குற்றம்.
பாரம் பெ. 1.பளு. 2.சுமை.
பாரம்தூக்கி பெ. பளுத்தூக்கி.
பாரம்பரியம் பெ. 1.பரம்பரை. 2.மரபுவழி.

பாராட்டு பெ. 1.புகழ்ந்து கூறுவது. 2.புகழ்ச்சி.

பாராயணம் பெ. சமய நூலை முறைப்படி ஓதுதல்.

பாராளுமன்றம் பெ. நாடாளுமன்றம். இந்தியப் பாராளுமன்றம்.

பாரி பெ. கடையெழு வள்ளல்களில் ஒருவன்.

பாரிவள்ளல் பெ. சங்க காலத்தில் முல்லைக் கொடிக்குத் தேர் ஈன்றவன்.

பால்[1] பெ. 1.பால்சுரப்பி சுரக்கும் நீர்மம். 2.தாவர நீர்மம்.

பால்[2] பெ. இலக்கணப் பாகுபாடு.

பால்கல்வி பெ. பால் இன்பம் குறித்த அறிவியல் கல்வி.

பால்கவர்ச்சி பெ. ஆண் பெண் கவர்ச்சி.

பால்கொள்கை பெ. 1.பால் உள்ளார்ந்த பண்புகளை உருவாக்குகிறது என்றும் நம்பிக்கை. 2.பெண் வெறுப்புக் கொள்கை.

பால்பற்றி பெ. ஒருபக்கம் சார்பு, நடுவு நிலைமையிலிருந்து மாறும்நிலை.

பால்வண்ணன் பெ.1.பலராமன். 2.சிவன்.

பால்வினைநோய் பெ. பிறருடன் (தவறான) உடலுறவினால் ஆண், பெண் ஆகிய இருவருக்கும் பிறப்புறுப்புகளில் ஏற்படும் தொற்று நோய்.

பால்வீதி[1] பெ. வெண்ணிற வழிப்போல் தோற்றமளிக்கும் விண்மீன் கூட்டம்.

பால்வீதி[2] பெ. ஒரு நூல்.

பாலகன் பெ. சிறுவன்.

பாலபாடம் பெ. தொடக்க நூல்.

பாலம் பெ. ஆறு முதலியவற்றை இணைப்பது.

பாலாறு பெ. தமிழ்நாட்டில் பாயும் ஓர் ஆறு. பாலாறு ஓடும்.

பாலை பெ. பாலை நிலம். முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலம்.

பாலைவனச்சோலை பெ. பாலைவனத்தில் அரிதாகக் காணப்படும் மரங்களும் நீரும் நிறைந்த மகிமையான இடம்.

பாலைவனம் பெ. கடும் வெப்பமும் மணல் பரப்பும் அருகிய விளைச்சலும் கொண்ட நிலம்.

பாவகம் பெ. 1.பாசாங்கு. 2.பாவனை. 3.இயல்பு கருத்து.

பாவண்ணம் பெ. நூற் பாவின் சந்தம்.

பாவநிவாரணம் பெ. தீச்செயல்களின் பலன்களாகிய பாவம் நீக்குகை.

பாவம் பெ. 1.தீவினை. 2.உணர்ச்சி வெளிப்பாடு. 3.இரக்கக்குறிச் சொல்.

பாவலர் பெ. 1.கவிஞர். 2.புலவர். 3.பாவலர் ஏறு.

பாவனை பெ. பாவிக்கை.

பாவிகம் பெ. தொடக்கமுதல் முடிவு வரை வனப்புடையதாக அமையும் காப்பியப் பண்பு.

பாவியம் பெ. காப்பியம்.

பாவை பெ. பொம்மை.

பாவைக்கூத்து பெ. பொம்மலாட்டம்.

பாவைப்பாட்டு பெ. திருப்பாவை, திருவெம்பாவையில் உள்ளவை போல நான்கடியில் மிக்கு வரும் செய்யுள்.

பாவையாடல் பெ. பெண்பாற்பிள்ளைத்தமிழின் உறுப்புகளுள் பாட்டுடைத் தலைவி பாவை வைத்து விளையாடல்.

பாவைவிளக்கு பெ. பெண் தன் கையில் தாங்கி நிற்பது போல் அமைந்திருக்கும் விளக்கு பதுமை விளக்கு.

பாவோடுதல் வி. நூலை நெசவுப் பாவாக்குதல்.

பாழ் பெ. 1.இழப்பு. எல்லாம் பாழாய்ப்போச்சு. 2.வெறுமை. 3.இன்மை.

பாழ்வீடு பெ. குடியில்லாத வீடு.

பாளம் பெ. உலோகக் கட்டி.

பாளை பெ. மடல் (தென்னம்பாளை).

பாளைப்பாட்டு பெ. அரசருக்குப் போரில் உதவி செய்யும் பொருட்டுப் படைத்தலைவருக்கு விடப்படும் நிலம்.

பாளையம் பெ. 1.படை. 2.பாசறை. 3.குறுநில மன்னர் ஊர்.

பாற்கடல் பெ. 1.ஏழுகடல்களுள் பால்மயமான கடல். 2.திருமால் குடி கொண்டிருப்பது.

பான்மயக்கம் பெ. **பால்மயக்கம்.** ஒரு பாலுக்குரிய சொல் வேறொரு பாலுக்குரிய சொல்லுடன் வருதல்.

பான்முல்லை பெ. தலைவியைக்கூடிய தலைவன் தங்கள் இருவரையும் கூட்டி வைத்து நல் வினையைப் புகழ்ந்து கூறும் துறை.

பான்மை பெ. 1.பண்பு. 2.தன்மை.

பானை பெ. அகன்ற வாயும் கிட்டத் தட்ட கோள வடிவமும் உள்ள ஏனம். (மண்பானை இட்லிபானை).

பி

பிங்கலம் பெ. பிங்கல நிகண்டு என்னும் ஒரு நூல்.

பிங்கலன் பெ. பிங்கல நிகண்டு செய்த ஆசிரியன்.

பிங்கலை பெ. 1.பத்து நாடியுள் ஒன்று. 2.வலமூக்கு வழியாக வரும் மூச்சு.

பிச்சை பெ. தருமம்.

பிசிர் பெ. ஒட்டியிருக்கும் சிறுபகுதி.

பிஞ்சு[1] பெ. இளங்காய்.

பிஞ்சு[2] பெ. கிழிந்திருக்கை.

பிட்டு பெ. இடித்த அரிசிமாவலிருந்து செய்யப்படும் இனிப்புச் சிற்றுணவு (மாவினை வேகவைத்து சர்க்கரை தேங்காய் நெய் கலந்த உணவு).

பிடி[1] பெ. 1.பற்று. 2.உறுதி.

பிடி[2] பெ. 1.பற்றுகை. 2.அகப்படுமாறு செய்கை. 3.கைப்பற்றுகை.

பிடி[3] பெ. புகை.

பிடி[4] பெ. 1.அழுத்திவிடுகை. 2.பிடித்துவிடுகை. 3.ஊன்றுகை. 4.கைப்பிடி.

பிடி[5] பெ.இசை.

பிடி[6] பெ. விருப்பம்.

பிடித்தல் வி. 1.பற்றுதல். 2.அகப்படுமாறு செய்தல். 3.அழுத்தி விடுதல். 4.கைப்பற்றுதல். 5.ஊன்றுதல்.

பிடிப்பு பெ. 1.பற்று. 2.பற்றுகை. 3.கட்டுப்பாடு.

பிடிவாதம் பெ. கொண்டது விடாமை.

பிண்டப்பொருள் பெ. கருத்து.

பிணம் பெ. சவம். (உயிர் நீங்கிய உடல்).

பிணி[1] பெ. 1.நோய். 2.துன்பம். 3.நீங்கா நோய்.

பிணி[2] பெ. கட்டு.

பிணி[3] பெ. பின்னல்.

பிணியாளி பெ. நோயாளி.

பிணையல் பெ. ஒன்று சேர்க்கை.

பித்தநீர் பெ. பித்தப்பையில் உள்ள நீர்.

பித்தப்பை பெ. கல்லீரலில் உள்ள பை.

பித்தன் பெ. 1.சிவன். 2.பைத்தியக்காரன்.

பிம்பம் பெ. ஆடியுரு (மனபிம்பம், மின்பிம்பம்).

பிரகாசம் பெ. 1.வெளிச்சம். 2.நம்பிக்கை.

பிரசங்கம் பெ. சொற்பொழிவு.

பிரசுரம் பெ. வெளியீடு (தமிழ் பிரசுராலயம்).

பிரதமை பெ. அமாவாசை, பௌர்ணமி இரண்டு நாட்களுக்கும் உள்ள அடுத்த நாள்.

பிரதானி பெ. அமைச்சர்.

பிரதி பெ. படி.

பிரதிநிதி பெ. 1.பேராளர். 2.சார்பாக வருபவர் (மேநாட்டுப் பிரதிநிதி).

பிரதியன் பெ. கைம்மாறு.

பிரதேசம் பெ. 1.நிலப்பிரிவு. **2.மாநிலம்.** ஆந்திர பிரதேசம்.

பிரபந்தம் பெ. 1.நூல் (ஒரு சிற்றிலக்கியம்). 2.பாமாலை (96 வகைப்பட்ட நூல்).

பிரபு பெ. செல்வந்தர்.

பிரம்பு பெ. நாணல் வகைத்தண்டு.

பிரமாண்டம் பெ. **மிகப்பெரியது.** பிரமாண்ட ஊர்வலம்.

பிரமாதம் பெ. அருமை.

பிரயோகம் பெ. பயன்படுத்துகை.

பிராகிருதம் பெ.1.வடமொழித்திரிபாயுள்ள பாசை. 2.பிராகிருத சம்பந்தமானது. 3.இயற்கை யானது. 4.அழியத்தக்கது.

பிரார்த்தனை பெ. 1.நேர்கடன். 2.வேண்டுதல்.

பிரெய்லி பெ. பார்வையற்றோருக்கான எழுத்து முறையை உருவாக்கியவர்.

பிழை பெ. 1.தவறு. 2.குற்றம்.

பிழைத்திருத்தம் பெ. பிழையும் அதன் திருத்தமும் நூலில் கடைசியாய் கொடுக்கப்பட்டிருப்பது.

பிள்ளைக்குருகு பெ. நாரைக்குஞ்சு.

பிள்ளைத்தமிழ் பெ. கடவுளையோ பெரியவரையோ பிள்ளையாகக் கருதிக் காப்பு முதலிய பருவங்களை அமைத்துப் பாடும் சிற்றிலக்கியம் (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்).

பிளப்பு பெ. 1.பிளவு. 2.விரிசல்.

பிளிறு பெ. **பேரொலி எழுப்புகை.** யானை பிளிறியது.

பிளேட்டோ பெ. கிரேக்கச் சிந்தனையாளர்.

பிற்காலம் பெ. வருங்காலம் (பிற்கால வாழ்க்கை).

பிற்சேர்க்கை பெ. நூல் பின்னிணைப்பு.

பிற்பகல் பெ. பகற்பொழுதின் பின்பகுதி.

பிற்பாடு பெ. பின்நிகழ்ச்சி.

பிற்போக்கு பெ. பிற்பட்ட நிலை.

பிறகு பெ.எ. பின்பு.

பிற சான்றோர் பெ. சங்கப்புலவரல்லாத புலவர் பெருமக்கள்.

பிறப்பிடம் பெ. பிறந்த இடம்.

பிறப்பு[1] பெ. மயக்கம்.

பிறப்பு[2] பெ.அச்சம்.

பிறப்பு[3] பெ. மகளிரணியும் முளைத்தாலி.

பிறப்பு[4] பெ. 1.உடன்பிறந்தவர். 2.நெருக்கம். 3.பிறர். 4.அயலவர்.

பிறப்பு[5] பெ. தொடக்கம்.

பிறப்பு[6] பெ. சாதி.

பிறப்பு[7] பெ. உயிர் உற்பத்தியாகி வெளிவரும் நிலை.

பிறப்பு[8] பெ. வெண்பாவின் இறுதியில் நிரையசை ஒன்றுடன் உகரமான நேரசை கூடிவரும் வாய்பாடு.

பிறவி பெ. 1.பிறப்பு. 2.இயல்பு. 3.இழிபிறவி.

பிறை[1] பெ. 1.சந்திரன். 2.இளந்திங்கள்.

பிறை[2] பெ. மகளிர் தலையணி வகை.

பிறை[3] பெ. அபிநயவகை.

பின்குறிப்பு பெ. பிற்குறிப்பு (கடிதம் புத்தகம்).

பின்பனிக்காலம் பெ. பனி மிகுதியாக உள்ள மாசி பங்குனி மாதங்களைக் கொண்ட பருவம்.

பின்மழை பெ. காலந்தவறியமழை.

பின்வருமாறு வி.அ. கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போல (ஆய்வைப் பின்வருமாறு செய்).

பின்விளைவு பெ. பின்னால் ஏற்படும் விளைவு.

பின்னல் பெ. 1.பின்னப்படுகை. 2.வலைப் பின்னல் சடை. 3.இழைப்பின்னல்.

பின்னிரவு பெ. நள்ளிரவுக்குப்பிற்பட்ட இரவு.

பின்னிலை பெ. பின்தங்கிய நிலை.

பின்னொட்டு பெ. **அடிச்சொல்.** பின் சேர்க்கப்படும் உருபு (மின்இயல்) என்பதில் இயல் பின்னொட்டு ஆகும்.

பீ

பீடபூமி பெ.உயரமான அகன்ற நிலப்பகுதி.

பீடம் பெ. மேடை.

பீதி பெ. அச்சம் (தீவிரவாதிகளின் தாக்குதல் மக்களிடையே பீதி ஏற்படுத்தியுள்ளது).

பீலி பெ. மயிலிறகு.

பீழை பெ. துன்பம்.

பீற்றல் பெ. 1.கந்தை. 2.கிழிந்தவகை.

பு

புகட்டுதல் வி. கற்பித்தல் (அறிவுபுகட்டுதல்).

புகல்[1] பெ. சொல்.

புகல்[2] பெ. 1.அடைக்கலம். 2.தங்குமிடம். 3.புகலிடம். 4.துணை. 5.இருப்பிடம். 6.சரண்.

புகல்[3] பெ. புகழ்.

புகல்[4] பெ. விருப்பம்.

புகல்[6] பெ. புகுகை.

புகலி பெ. சீர்காழி.

புகழ் பெ. 1.பெருமை. 2.புகழ்ச்சி. 3.பார்புகழ். 4.துதி.

புகழ்ச்சி பெ. 1.புகழ்ந்து கூறுகை. 2.பெருமை. 3.புகழ்.

புகழ்ச்சிமாலை பெ. 96 சிற்றிலக்கியங்களில் ஒன்று; இது அகலவடிவும் கலிவடிவும் மயங்கிய வஞ்சிப்பாவால் மகளிரது சிறப்பைக் கூறும் நூல்.

புகழ்சாலை பெ. புகழைத்தருமிடம்.

புகழ்தல் வி. ஒருவரை புகழ்ந்து பேசுதல். (நாட்.வ.)

புகு பெ. 1.நுழை. 2.புகுகை.

புகை[1] பெ. நெருப்பி லிருந்து வரும் கரும்படலம்.

புகை[2] பெ. பகை.

புகைவண்டி பெ. பயணிகள் தொடர்வண்டி (புகை வண்டி நிலையம்).

புடைத்தல் பெ. வீங்குதல்.

புடைநகர் பெ. புறநகர்.

புடைநூல் பெ. நூல்வகை மூன்றனுள் ஒன்று. முதல்நூல், வழிநூல்களோடு (பொருள்முடிவு நூல்).

புண்[1] பெ. 1.காயம். 2.வடு. 3.உடல்புண். 4.தசை.

புண்[2] பெ. 1.மனநோவு. 2.மனப்புண்.

புண்[3] பெ. ஊறு.

புண்ணியம் பெ. 1.நல்வினை. 2.புனிதம். 3.நன்மை. 4.நல்வினைப்பயன்.

புனை[1] பெ. தெப்பம்.

புனை[2] பெ. 1.உதவி. 2.ஈடு.

புத்தகப்புழு பெ. நூலை மிக விரும்பிப் படிப்பவர்

புத்தகம் பெ. 1.நூல். 2.கட்டு.

புத்தி பெ. அறிவு. புத்தியுடன் நடந்துக்கொள்.

புத்திக்கூர்மை பெ. கூரிய அறிவு.

புத்திமதி பெ. அறிவுரை.

புத்திரன் பெ. மகன்.

புத்திலக்கியம் பெ. தற்கால இலக்கியம்.

புத்துணர்ச்சி பெ. புதிய எழுச்சி.

புத்துயிர் பெ. புதிய மலர்ச்சி.

புத்துரை பெ. புதிய உரை.

புத்தேள்[1] பெ. புதுமை.

புத்தேள்[2] பெ. 1.புதியவள். 2.தெய்வம்.

புதிர் பெ. 1.விடுகதை. 2.சிக்கல்.

புதினம் பெ. 1.புதுமை. 2.நெடுங்கதை (புதின இலக்கியம்).

புதுக்கவிதை பெ. 1.சிந்தனை. 2.மாற்றத்தின் விளைவின் தோற்றமாகும்.

புதுப்பழக்கம் பெ. புதிய வழக்கம்.

புதைபொருள் பெ. புவியின் அடியில் புதைந்திருக்கும் பொருள்.

புந்தி பெ. அறிவு.

புயம் பெ. 1.தோள். 2.புடை.

புயல்[1] பெ. 1.காற்றழுத்தக் குறைவால் ஏற்படும் பலத்த காற்று மழை. வங்கக்கடலில் புயல் உருவாகியுள்ளது. 2.நீர். 3.பெருங்காற்று. 4.மழைக் கோள். 5.மேகம்.

புயல்[2] பெ. சுக்கிரன்.

புரட்சி பெ. சமூகம் அல்லது அரசியலில் ஏற்படும் பெருமாற்றம்.

புரட்சிக்கவிஞர் பெ. பாரதிதாசன்.

புரதம் பெ. உடல்வளர்ச்சிக்கும் இன்றியமையாத பொருள்.

புரம் பெ. ஊர்.

புரவி பெ. குதிரை.

புரளி பெ. பொய்ச் செய்தி. புரளியைக் கிளப்பாதே.

புராணம் பெ. 1.தொன்மை. 2.பழங்கதை. 3.வரலாறு.

புரி[1] பெ. 1.இழை. 2.நாற்புரி.

புரி[2] பெ. 1.நான்குபுரிகள் கொண்ட கயிறு. 2.வைக் கோல்புரி.

புரிசை பெ. மதில்.

புரைதீர்த்தல் வி. குற்றம் நீக்குகை.

புல்[1] பெ. ஆடுமாடு தின்னும் தாவரம்.

புல்[2] பெ. கீழான.

புல்லார் பெ. பற்றார்.

புலம்[1] பெ. 1.நிலம் (சான்று: தாமரைப்புலம் மாம்புலம்)

புலம்[2] பெ. துறை.

புலம்[3] பெ. 1.பக்கம். 2.திசை. 3.திக்கு. 4.நாடு.

புலம்[4] பெ. 1.அறிவு. 2.துப்பு.

புலம்[5] பெ. நூல்.

புலம்பு பெ. அங்கலாய்ப்பு.

புலம்புதல் வி. 1.அழுதல். 2.அங்கலாய்த்தல். 3.தனிமை. 4.பிரிவு. 5.குற்றம். 6.வருத்தம். 7.வெறுப்பு. 8.கடற்கரை.

புலமை பெ. தேர்ந்த அறிவு. அவர் புலமையுள்ளவர்.

புலால் பெ. இறைச்சி.

புலி பெ. 1.உழுவை. 2.வேங்கை.

புவனம் பெ. உலகம்.

புவி பெ. உலகம்.

புழுதி[1] பெ. 1.தூசி. 2.துகள்.

புழுதி[2] பெ. 1.புழுதி உழுகை. 2.புழுதிக்கால் சாகுபடி. 3.காய்ந்தநிலம்.

புள் பெ. 1.அன்னம். 2.பறவை (புறா).

புளகிதம் பெ. மகிழ்ச்சி.

புளி பெ. உணவில் சேர்க்கும் பொருள்.

புறஞ்சொல்லுதல் வி. குறை கூறுதல்.

புறத்துறுப்பு பெ. உடல் உறுப்புகள்.

புறநானூறு பெ. எட்டுத்தொகையுள் ஒன்றானதும் புறப்பொருளைப் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதுமான தொகைநூல்.

புறம்[1] பெ. 1.வெளியிடம். 2.அன்னியம். 3.பக்கம். 5.இறையிலி நிலம். 6.மருதநிலத்தூர். 7.மதில்.

புறம்[2] பெ. 1.புறநானூறு. 2.புறத்திணை. 3.வீரம். 4.புறக்கொடை. 5.புறங்கூறு.

புறம்[3] பெ. 1.பின்புறம். 2.முதுகு.

புறம்[4] பெ. பட்சபாதம்.

புறம்[5] பெ. இடம்.

புறம்[6] பெ. ஏழாம் உருபினுள் ஒன்று.

புறம்[7] பெ. திசை.

புறம்[8] பெ. காலம்.

புறம்[9] பெ. உடம்பு.

புறம்பேரார் பெ. வெளிப்படுத்தமாட்டார்.

புறவு பெ. புறா.

புன் கண் பெ. துன்பம்.

புன்கணீர் பெ. துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்.

புன்செய் பெ. 1.வானம் பார்த்த பூமி. 2.புஞ்செய் நிலம், கொல்லைநிலம்.

புன்முறுவல் பெ. சிரித்த முகம். எப்பொழுதும் புன்முறுவலுடன் இருக்கவேண்டும்.

புன்மை பெ. இழிந்த தன்மை

புனல்[1] பெ. 1.ஆறு. 2.நீர்.

புனல்[2] பெ. மலைசார் கொல்லை.

புனைதல் வி. புகழ்தல்.

பூ

பூகம் பெ. குமுகம் (பாக்குமரம்).

பூசல் பெ. 1.வெளிப்பட்டுநிற்பவை. 2.வெளிப்படுகை.

பூசல்தருதல் வி. வெளிப்பட்டுநிற்றல்.

பூண்[1] பெ. 1.வளையம். 2.உலக்கைப்பூண். 3.தரி.

பூண்[2] பெ. 1.உறுதி ஏற்றல். 2.நட்புகொள். 3.அணிகை.

பூதம்[1] பெ. அளவில் மீறிய உருவம்.

பூதம்[2] பெ. ஐம்பூதம்.

பூதரம் பெ. மலை.

பூதி பெ. திருநீறு.

பூம்புகார் பெ. பழந்தமிழரின் துறைமுகப் பட்டினம்.

பூரிகை பெ. கொலையல்.

பூவரும்பு[1] பெ. கலுவம்.

பூவரும்பு[2] பெ. கன்னிகை.

பூவிதழ்[1] பெ. 1.சிறிய இலை. 2.ஏடு. 3.தண்டு. 4.மடல்.

பூவிதழ்[2] பெ. தளம்.

பூவிதழ்[3] பெ. தோடு.

பூனூல் பெ. பார்ப்பனர் கம்மாளர் முதலியோர் அணியும் முப்புரி நூல்.

பூனை[1] பெ. அலவன்.

பூனை[2] பெ. ஆகுபகை.

பூனை[3] பெ. இற்புலி.

பூனை[4] பெ. பவனம்.

பூனை[5] பெ. பூசை.

பெ

பெட்டி பெ. 1.பேழை.

பெட்டையென்னும் பெயர் பெ. 1.ஒட்டகம். 2.குதிரை. 3.கழுதை. 4.மரை. 5.சிங்கம்.

பெட்பு பெ. ஆசை.

பெண்கணாற்குணம் பெ. 1.நாணம். 2.மடம். 3.அச்சம். 4.பயிர்ப்பு.

பெண்குரங்கு பெ. மந்திகம்.

பெண்பாலெழுத்து பெ. உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப்பதினாறுமாம்.

பெண்மகள் பெ. 1.அணங்கு. 2.இளையாள்.

பெண்யானை பெ. 1.அத்தினி. 2.கரிணி. 3.பிடி. 4.வடகை.

பெண்வண்டு பெ. 1.கரும்புள். 2.கேசவம். 3.தேன்.

பெப்பிசு பெ. உலக நாட்குறிப்பு இயக்கத்தின் முன்னோடி

பெயர் பெ. 1.ஆக்குவயம். 2.நாமதேயம். 3.நாமம்.

பெயர்தல் வி. 1.பிறழ்தல். 2.போதல்.

பெருகுதல் வி. 1.நிறைதல். 2.ஆர்தல். 3.கழுவல். 4.கெழுமல். 5.தும்மல். 6.துவன்றல்.

பெருங்குருகு பெ. யானையுண் குருகு.

பெருங்குறகு பெ. முருடு.

பெருங்குறிஞ்சி பெ. 1.கோரண்டம். 2.கூரண்டகம்.

பெருங்கொடை பெ. 1.ஈசல். 2.இசைத்தல். 3.நீட்டல். 4.புரத்தல். 5.நல்கல்.

பெருச்சாளி பெ. 1.ஆகு. 2.உந்துருந்தளம். 3.காகம். 4.முடிகம்.

பெருஞ்சிரம் பெ. பெரிய தலை.

பெருஞ்சினம் பெ. அதிக கோபம்.

பெரியபுராணம் பெ. 63 அடியவர்களாகிய பெரியவர்களின் வரலாற்றினைக் கூறும் நூல். இதன் ஆசிரியர் சேக்கிழார்.

பெரியவாச்சான் பிள்ளை பெ. நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தின் உரையாசிரியர்.

பெரியார் பெ. ஒரு சீர்திருத்தவாதி.

பெரியாரைத்துணைக்கோடல் பெ. நன்னெறியில் செலுத்தும் பேரறிவுடையாரைத் துணையாகக் கொள்ளுகை.

பெருகியது பெ. நிறைந்தது.

பெரும்பாணாற்றுப்படை பெ. பத்துப்பாட்டினுள் ஒன்றானதும் தொண்டைமான் இளந்திரை யனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியதுமான நூல்.

பெரும்பொழுது பெ. இது ஆறு வகைப்படும். இளவேனிற்காலம் – சித்திரை வைகாசி முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி ; கார்காலம் – ஆவணி, புரட்டாசி; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை; முன்பனிக்காலம் – மார்கழி, தை; பின் பனிக்காலம் – மாசி, பங்குனி.

பெருமாள்திருமொழி பெ. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் குலசேகரர் பாடியதாகும்.

பெருமான் பெ. 1.பெருமையிற் சிறந்தோன். 2.அரசன். 3.மூத்தோன். 4.கடவுள். 5.பெரு மாட்டி.

பெருமிதம்[1] பெ. 1.பெருமகிழ்ச்சி. 2.மேம்பாடு.

பெருமிதம்[2] பெ. பேரெல்லை.

பெருமை பெ. 1.மாட்சிமை. 2.அணி. 3.புகழ். 4.வல்லமை. 5.அருமை.

பெருமையிற்சிறந்தோன் பெ. 1.அண்ணல். 2.செம்மல்.

பெற்றம் பெ. பசு.

பெற்றியார் பெ. பெருமையுடையார்.

பே

பேகன் பெ. ஆண்தவளை.

பேச்சு பெ. தேவை உற்றவர் முன்பு விடை பகர்தலே பேச்சு நிலையாகும்.

பேச்சுக்கலை பெ. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை.

பேச்சுத்துணை பெ. பேசிப்பொழுது போக்குவதற்கு உதவியாக இருக்கும் ஆள்.

பேச்சுவழக்கு பெ. பேசுவதில் பயன்படும் சொல்.

பேச்சுவார்த்தை பெ. உரையாடல்.

பேசாமடந்தை பெ. அமைதியாக இருப்பவர்.

பேசுதல் வி. 1.கூறுதல். 2.இசைத்தல். 3.இயம்பல். 4.புகறல். 5.பிதற்றல். 6.உறையாற்றுதல். 7.நேர் காணல்.

பேடு[1] பெ. 1.அலி. 2.பெண்தன்மை.

பேடு[2] பெ. ஊர்.

பேடு[3] பெ. நடுவிரல்.

பேடு[4] பெ. பறவையின் பெண்.

பேதைமை பெ. 1.அறியாமையின் பாற்பட்ட தீய சொற்கள். 2.அறியாமை.

பேணுதல் வி. 1.பாதுகாத்தல். 2.போற்றுதல்.

பேதைப்பருவம் பெ. அறியாப் பருவம்.

பேதைமை பெ. அறியாமை.

பேதையார் பெ. அறிவிலார்.

பேர் உரம் கிழித்தபெண் பெ. அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கை.

பேரரசன் பெ. மாமன்னன்.

பேரருவி பெ. பெரிய அருவி.

பேரவா பெ. பேராசை.

பேரவை பெ. சட்டமன்றம்.

பேரவைத் தலைவர் பெ. சட்டமன்றத் தலைவர்.

பேரறிஞர்அண்ணா பெ. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர். தமிழக முதலமைச்சராக இருந்தவர்.

பேரறிவு பெ. முழுமையான அறிவு.

பேரன்பு பெ. பெரிய அன்பு.

பேராசிரியர் பெ. உயர்கல்வி நிலையங்களில் அறிவு, திறமை, பணிமூப்பு காரணமாக உயர்நிலைப் பதவி பெறுபவர்; தமிழ்ப் பேராசிரியர்.

பேராண்மை பெ. 1.அரிய வீரச்செயல். 2.வீரம். 3.மானம்.

பேராயன் பெ. பெருமையுடையவன்.

பேராழி பெ. பெருங்கடல்.

பேராளர் பெ. பிரதிநிதி.

பேரிகை (பேரி) பெ. 1.பேரிகை முழக்கம். 2.முரசு.

பேரிடர் பெ. பெருந்துன்பம்.

பேரியாழ் பெ. இருபத்தொரு நரம்புகளுள்ள நால்வகையாழுள் ஒன்று.

பேரிளம்பெண் பெ. முப்பத்திரண்டு வயதுக்கு மேல் நாற்பது வயது வரையுள்ள பெண்.

பேரின்பம் பெ. பேரானந்தம்.

பேருதவி பெ. பெரிய உதவி.

பேருந்தகைத்தல் வி. பின்வாங்கும் தன்மை யாதல்.

பேருந்து பெ. மக்கள் செல்லும் பெரிய ஊர்தி (பேருந்து நிலையம்).

பேரூர் பெ. 1.நகரம். 2.மேலை சிதம்பரம்.

பேரூராட்சி பெ. நகர உள்ளாட்சி அமைப்பு.

பேரெண் பெ. 1.பெருந்தொகை. 2.அளவடி ஈரடியாக வரும் அம்போதரங்க உறுப்பு.

பேரொலி பெ. 1.அதிர்ச்சி. 2.அரவம்.

பேரொளி பெ. 1.மிக்கஒளி. 2.கதிரவன். 3.திங்கள்.

பேழை பெ. பெட்டி.

பேறு பெ. செல்வம்.

பை

பை பெ. 1.அடைப்பம் (பணப்பை). 2.உணவுப்பை (இரைப்பை). 3.விரிபை (காற்றுப்பை). 4.தேக்கும் பை (சிறுநீர்பை).

பைபிள் பெ. பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய இயேசுவின் புனித நூல்.

பைம்பொன் பெ. பசும்பொன்.

பைரவர் பெ. துர்க்கையின் படையினரான கணங்களுள் ஒன்று.

பைரவன் பெ. சிவமூர்த்திகளுள் ஒருவரான பைரவக் கடவுள்.

பொ

பொடி பெ. 1.புழுதி. 2.தூள். 3.மகரந்த பொடி. 4.துகள்.

பொதி[1] பெ. தொகுதி.

பொதி[2] பெ. 1.குலை. 2.அரும்பு. 3.பட்டை.

பொதி[3] பெ. மூட்டை.

பொதி[4] பெ. உடல்.

பொதி[5] பெ. நெல்.

பொதிந்துவைப்பர் பெ. (மனத்துள்) தம் மனத்தில் பாதுகாத்து வைத்து மதிப்பார்.

பொதியமலை பெ. தென்மலை.

பொதுஅறிவு பெ. உலக நடப்பு பற்றிய அறிவு.

பொதுஇனம் பெ. வகைப்பாட்டியலில் சிறப் பினத்திற்கு முன்னுள்ள அலகு.

பொது பெ. 1.அனைவருக்கும் பொதுவானது (பொது வீடு). 2.நடுவுநிலை.

பொதுக்கூட்டம் பெ. பொதுமக்கள் கலந்து கொள்ளும் அரசியல் கட்சி அல்லது சமூகக் கட்சிக் கூட்டம்.

பொதுத்தேர்தல் பெ. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நடைபெறும் தேர்தல்.

பொதுத்தேர்வு பெ. பொதுவாகத் தேர்பவர் களுக்காக மாநில அளவில் அரசு நடத்தும் தேர்வு (பத்தாம் வகுப்புத் பொதுத் தேர்வு).

பொதுநூல் பெ. எல்லா மதத்தினர்க்கும் பொது வாகிய சாமானிய தருமங்களை எடுத்துரைக்கும் நூல்.

பொதுநெறி பெ. அனைவரும் செல்லும் வழி.

பொதுமக்கள் பெ. 1.சிறப்பில்லாத மக்கள். 2.பொது சனங்கள்.

பொதுமை பெ. 1.சாமானியம். 2.பொதுவுடைமை. 3.நன்மை.

பொதுவிதி பெ. முயற்சியை விட உழைப்பே வலியது என்னும் கொள்கை.

பொதுவுடைமை பெ. எல்லாம் சமூகத்திற்கே என்னும் கொள்கை பொதுவுடைமை அரசு.

பொய் பெ. 1.தவறு. 2.பொருந்துகை. 3.உள்ளீடு இல்லாதது. 4.பொந்து.

பொய்கை பெ. குளம்.

பொய்த்தல் வி. 1.தவறுதல். 2.கெடுதல். 3.வஞ்சித்தல்.

பொய்ப்பொருள் பெ. எக்காலத்துமில்லாத பொருள்.

பொய்மை பெ. உண்மையற்றது.

பொய்யாமொழி பெ. 1.உண்மையுரை. 2.திருக் குறள். 3.தஞ்சைவாணன் கோவை ஆசிரியர்.

பொய்யாவிளக்கு பெ. அணையா விளக்கு.

பொருட்சுவை பெ. 1.நகை. 2.அச்சம். 3.இழிவு. 4.உவகை. 5.பெருமிதம். 6.கோபம். 7. வியப்பு. 8.கருணை. 9.சாந்தம்.

பொருத்தம் பெ. இணக்கம்.

பொருதகர் பெ. ஆட்டுக்கடா.

பொருந்திய பெ.அ. உடைய. ஒளி பொருந்திய கலைகள்.

பொருநராற்றுப்படை பெ. சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியர் பாடியதும் பத்துப்பாட்டினுள் ஒன்றுமான ஆற்றுப்படை நூல்.

பொருப்பு பெ. மலை.

பொருள்[1] பெ. 1.கொள்கை. 2.அறிவு. 3.செல்வம். 4.அறம்.

பொருள்[2] பெ. 1.திரவியம். 2.பொன். 3.பலபண்டம்.

பொருள்[3] பெ. பயன்.

பொருள்[4] பெ. மோட்சம்.

பொருள்[5] பெ. 1.கடவுள். 2.நன்குமதிக்கப்படுவது.

பொருள்[6] பெ. 1.கல்வி. 2.மெய்ம்மை. 3.சொற் பொருள். 4.உண்மைக்கருத்து. 5.தத்துவம். 6.அர்த்த சாஸ்திரம். 7.அகமும் புறமுமாகிய திணைப்பொருள். 8.உவமேயம். 9.தந்திரம்.

பொருள்[7] பெ. காரியம்.

பொருள்[8] பெ. தலைமை.

பொருள்[9] பெ. புத்திரன்.

பொருள்செயல்வகை பெ. பொருளை ஆக்கு வதற்கும் கலப்பதற்குமான செயல்முறைகள்.

பொருள்வயிற்பிரிவு பெ. பொருள் தேடுதலின் பொருட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் நிலை.

பொருளல்லாவர் பெ. தகுதியற்றவர்.

பொருளாதாரம் பெ. பொருளியல்.

பொல்லாக்காட்சி பெ. மாயத் தோற்றம்.
பொல்லாங்கு பெ. தீமை.
பொலிவு பெ. 1.உவப்பு. 2.அதிகம்.
பொழி பெ. 1.வரப்பு. 2.வரம்பு. 3.ஏவல். 4.பொழில்.
பொழில் பெ. 1.சோலை. 2.நாடு.
பொழுது பெ. 1.காலம். 2.வேலை. 3.காலத்தின் பெயர்.
பொழுதுபோக்கல் பெ. 1.உலாவல். 2.விநோதம்.
பொள்ளென வி.எ. உடனே.
பொற்காசு பெ. காணம்.
பொற்கிழி பெ. பொன்முடிப்பு.
பொற்குருத்து பெ. மிக இளமையான வாழைக் குருத்து.
பொற்பாங்கயத்தடம் பெ. பொற்றாமரைக் குளம்.
பொற்றொழில் சிலம்பு பெ. வேலைப்பாடு மிக்க பொற்சிலம்பு.
பொறாமை பெ. 1.பொறுமையின்மை. 2.பிறர் ஆக்கஞ் சகியாமை. 3.அழுக்காறு.
பொறுத்தல் பெ. பொறுத்துக் கொள்ளுதல்.
பொறுப்பு பெ. கடமை.
பொறுமை பெ. பொறுத்துக்கொள்ளும் குணம்.
பொறை[1] பெ. சுமை.
பொறை[2] பெ. மலை.
பொறை[3] பெ. பொறுமை.
பொறை[4] பெ. வலிமை.
பொறையுடைமை பெ. பொறுமையுடைமை.
பொன்[1] பெ. 1.மண்ணுக்கடியில் மறைந் திருப்பது. 2.செம்பொன். 3.சங்குருவாய் கிடைக்கும் பொன்.
பொன்[2] பெ. அரி.
பொன்[3] பெ. ஈகை.
பொன்மலை[1] பெ. மணிமேகலை.
பொன்மலை[2] பெ. எமசுவம்.
பொன்மைநிறம் பெ. 1.அரிதம். 2.அரித்திராபம். 3.பசப்பு. 4.கறுப்புக் கலந்த பொன்மை.
பொன்னாங்கண்ணி பெ. ஒரு கீரை வகை.
பொன்னி பெ. காவேரி ஆறு.
பொன்னுதல் வி. அழிதல்.
பொன்னோலை பெ. மகளிர் காதணி வகை.

போ

போ பெ. 1.சொல்லண்னேவல். 2.நீங்குகை.
போக்குவரத்து பெ. போக்குவரவு.
போக பெ. தவிர
போட்டி பெ. 1.பந்தயம். 2.எதிராகச் செய்யும் முயற்சி.
போது[1] பெ. பொழுது.
போது[2] பெ. மலர்.
போய் இ.சொ. ஓர் இடைச்சொல், அங்கு நானும் போய் வந்தேன்.
போர் பெ. 1.சண்டை. 2.ஆர்ப்பு. 3.இகல். 4.இரணம். 5.உறழ்வு. 6.வினை.
போர்க்களம் பெ. அடுகளம்.
போர்த்தலைவர் பெ. பொருநர்.
போர்முனை பெ. போர் முகம்.
போராட்டம் பெ. 1.சண்டை. 2.எதிர்ப்புத் தெரிவித்தல்.
போற்றி பெ. 1.கோயிற் பூசைசெய்யும் மலையாள நாட்டுப் பிராமணன் துதிச்சொல் வகை. 2.வணக்கம். 3.துதிக்கை. 4.புகழ். 5.புகழ்மொழி.
போற்றுதல் வி. 1.பாதுகாத்தல். 2.புகழ்தல்.
போன்று இ.சொ. ஒத்து இருக்கும்.
போன பெ.எ. சென்ற (போன ஆண்டு).

பௌ

பௌத்தர் பெ. 1.சாக்கியர். 2.தேரர். 3.புத்தர். 4.அத்தவத்தோர். 5.சீவகர்.

ம

மக்கள்இலக்கியம் பெ. சங்க இலக்கியத்தின் மறுபெயர்.
மக்கள் பெ. பிள்ளைகள் (பொதுமக்கள்).
மக்களவை பெ. நாடாளுமன்றத்தின் கீழவை.
மக்கு பெ. 1.மடையன். 2.அழிந்த பொருள்.
மகசூல் பெ. விளைச்சல்.
மகடூஉ பெ. 1.பெண். 2.மனைவி.
மகத்துவம் பெ. பெருமை.

மகரமீன்[1] பெ. கலை.

மகரமீன்[2] பெ. 1.சுறா. 2.மான். 3.மீன்.

மகரராசி[1] பெ. தை.

மகரராசி[2] பெ. 1.சுறா. 2.மான்.

மகரராசி[3] பெ. கலை.

மகள் பெ. 1.புதல்வி. 2.சிறுமி.

மகளிர்கூட்டம் பெ. 1.ஆயம் (சுற்றத்தார்). 2.குழு.

மகளிர்விளையாட்டு பெ. மகளிர் விளையாடும் விளையாட்டு. (கூகை, சித்திரான்மை)

மகன் பெ. 1.காதலன். 2.மகவு. 3.மைந்தன். 4.சிறார். 5.பாளர்.

மகநாள் பெ. 1.மாசி. 2.பிதிர்நாள். 3.கொடுமுகம்.

மகாசபை பெ. பேரவை.

மகிமை பெ. பெருமை.

மகிழ்[1] பெ. மகிழ்ச்சியடைகை.

மகிழ்[2] பெ. மகிழமரம்.

மகிழமரம் பெ. 1.இலஞ்சி. 2.கேசரம். 3.இதள்விதை.

மங்கலம் பெ. நன்மை.

மங்கலச்செய்வகை[1] பெ. திரு.

மங்கலச்செய்வகை[2] பெ. களிறு.

மங்கலச்செய்வகை[3] பெ. பொலிவு.

மங்கலச்செய்வகை[4] பெ. மணி.

மங்கலச்செய்வகை[5] பெ. புகழ்.

மங்கலச்செய்வகை[6] பெ. பூ.

மங்கலவழக்கு பெ. எண்வகை மங்கலம், தகுதி, வழக்கு மூன்றனுள் மங்கல மல்லாததை மங்கலமாகக் கூறும் வழக்கு.

மங்கை பெ. பருவப்பெண்.

மஞ்ஞை பெ. மயில்.

மட்டு[1] பெ. 1.அளவு. 2.மீதம்.

மட்டு[2] பெ. 1.தேன். 2.கள்.

மட்டு[3] பெ. எல்லை.

மட்டும் பெ. 1.வரை. 2.மாத்திரம்.

மடங்கல் பெ. சிங்கம்.

மடநாகு பெ. இளையபசு.

மடப்பிடி பெ. பாஞ்சாலி.

மடவார்பொறை பெ. 1.அறிவில்லாமையால் தவறு செய்பவரைப் பொறுத்தலாகும். 2.அறிவிலிகள்.

மடவாள் பெ. பெண்.

மடி பெ. சோம்பல்.

மடித்தல் பெ. உழைத்தல்.

மடைப்போக்கு பெ. நீர்பாயும் வழி.

மண் பெ. பூமி.

மணக்கொடை பெ. வரதட்சணை (பெரியார் கூற்று)

மணம் பெ. 1.நறுமணம். 2.வாசனை.

மணல் பெ. 1.நண்மணல். 2.வெண்மணல்.

மணவாளர் பெ. 1.கணவன். 2.கொழுநன்.

மணிநகர் பெ. அழகிய நகரம்.

மணிப்பிரவாளம் பெ. வடமொழியும் தென் மொழியும் போன்ற இரு மொழிச் சொற்கள் கலந்த நடை.

மணிமேகலை பெ. இரட்டைக்காப்பியங்களுள் இரண்டாவதாக அழைக்கப்படுவது.

மதலை பெ. துணை.

மத்திமம் பெ. நடுத்தரம்.

மத்தியானம்[1] பெ. இராசி.

மத்தியானம்[2] பெ. 1.உச்சி. 2.உருமம். 3.நடுப்பகல். 4.நண்பகல்.

மத்து[1] பெ. 1.கலம். 2.மந்தம்.

மத்து[2] பெ. மோர் கடையும் மத்து.

மதகரி பெ. மதம் பொருந்திய யானை.

மதம்[1] பெ. 1.கொள்கை. 2.சமயம். 3.அறிவு. 4.சம்மதம். 5.பெற்றதைப் பெரிதாக மதிப்பது. 5.போதனை.

மதம்[2] பெ. மகிழ்ச்சி.

மதம்[3] பெ. தேன்.

மதலை பெ. துணை.

மதி[1] பெ. 1.நிலவு. 2.திங்கள்.

மதி[2] பெ. அறிவு.

மதித்தல் வி. 1.கணித்தல். 2.கருதல். 3.குனித்தல். 4.குறித்தல். 5.பேணல்.

மதியம் பெ. நிலவு.

மதில் பெ. 1.அகப்பா. 2.அரணம். 3.அரணி. 4.அரண். 5.ஆரல்.

மதிலுறுப்பு[1] பெ. 1.எந்திரம். 2.கோசம்.

மதிலுறுப்பு[2] பெ. 1.நாஞ்சில். 2.ஞாயில்.

மதிலுறுப்பு³ பெ. தோனி.

மது பெ. தேன்.

மதுகரம் பெ. தேன் உண்ணும் வண்டு.

மதுரகவி பெ. 1.சொல்லாற்றல். 2.தொடை. 3.தொடை விகற்பம்.

மதுரமொழி பெ. இனிய மொழி.

மதுரைக்காஞ்சி பெ. பத்துப்பாட்டினுள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை மாங்குடி மருதனார் பாடிய பாட்டு.

மதுரைக்காண்டம் பெ. சிலப்பதிகாரத்தில் உள்ள ஒரு பிரிவு.

மதுரை நகரம் பெ. 1.கூடல். 2.ஆலவாய்.

மதோன்மத்தர் பெ. பெரும்பித்தனாகிய சிவபெருமான்.

மந்தம் பெ 1.குறைவு. 2.சோம்பல்.

மந்தமாருதசீதம் பெ. குளிர்ந்த இளந்தென்றல் காற்றுடன் கூடிய குளிர்ந்த நீர்.

மந்தராசலம்¹ பெ. மந்தரமாலை.

மந்தராசலம்² பெ. மந்திரமலை.

மந்தரை பெ. கைகேயின் தோழி.

மந்தி¹ பெ. 1.பெண் குரங்கு. 2.வண்டு.

மந்தி² பெ. சூரியன்.

மந்திரம் பெ. மறை.

மந்திரியர் பெ. 1.அமைச்சர். 2.மூத்தோர். 3.முன்னோர்.

மயக்கம் பெ. தலைசுற்றும் உணர்வு.

மயிரி பெ. மயக்கம்.

மயிற்குரல் பெ. 1.ஆலவ். 2.அகவல். 3.ஏங்கல்.

மயிற்சிறகு பெ. தூவி.

மயிர்ச்சுருள் பெ. சுருண்ட மயிற்கற்றை.

மரக்கலம் பெ. 1.கப்பல். 2.கலம். 3.கட்டுமரம். 4.நாவாய். 5.படகு. 6.பரிசில். 7.புணை. 8.தோணி. 9.தெப்பம். 10.திமில். 11.அம்பி. 12.வங்கம். 13.மிதவை. 14.பஃறி. 15.ஓடல்.

மரக்கன்று¹ பெ. 1.குழவி. 2.பிள்ளை.

மரக்கன்று² பெ. மரத்தில் இளங்கன்று.

மரகதப்புறா பெ. தமிழ்நாட்டின் தேசியப் பறவை.

மரகம் பெ. 1.அரி. 2.பச்சை.

மரம் பெ. ஒரு மரம்.

மரவரி பெ. 1.இறைஞ்சி. 2.சீரை. 3.வற்கலை.

மருக்கொழுந்து பெ. ஒரு வகை வாசனைப் பூ.

மருங்கு¹ பெ. 1.இடை. 2.பக்கம். 3.குலம்.

மருங்கு² பெ.நூல்.

மருங்கு³ பெ. கண்ணோட்டம்.

மருத்துவர் பெ. 1.ஆயுள்வேதியர். 2.பிடகர். 3.மாமத்திரர்.

மருதத்தலைவன் பெ. 1.ஊரன். 2.கிழவன். 3.மகிழ்நன்.

மருதநிலத்தூர் பெ. 1.கிராமம். 2.கோட்டம். 3.நகரம். 4.நகர்.

மருதநிலமாக்கள் பெ. 1.உழவர். 2.கடைஞர். 3.கம்பளர். 4.கிளைஞர். 5.தொழுவர். 6.பள்ளர். 7.மள்ளர். 8.வினைஞர்.

மருந்து பெ. 1.உறை. 2.இரணத்தழும்பு தீர்க்கும் மருந்து.

மருதநிலப்பறை பெ. 1.கிணை. 2.பணை.

மருப்பு பெ. தந்தம்.

மருள்¹ பெ. 1.மயக்கம். 2.ஆவேசம். 3.மருளாடல். 4.மிரளுகை. 5.மருண்டுபோகை.

மருள்² பெ. உவமவுருபு.

மருள்நீக்கியார் பெ. திருநாவுக்கரசரின் இயற்பெயர்.

மரை பெ. மான்.

மல்லல் பெ. வளமை.

மலர்தல் வி. 1.அவிழ்தல். 2.விரியல்.

மலர்ந்தார் பெ. அருளினார்.

மலைபடுகடாம் பெ. நன்னன்சேய் நன்னனைப் பற்றிப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியதும் கூத்தராற்றுப்படை என்ற மறு பெயருடையதும் பத்துப்பாட்டில் ஒன்றுமான ஆற்றுப்படை நூல்.

மலையாளம் பெ. தேசம் ஐம்பத்தாறனுள் ஒன்று.

மலை¹ பெ. மலைக்கை.

மலை² பெ. 1.பாறைத்தொகுதி. 2.பறம்பு.

மலையுச்சி பெ. 1.குவடு. 2.கொடுமுடி. 3.கோடு. 4.சிகரம்.

மழவிடை பெ. இளங்காளை.

மழு பெ. 1.கடங்கம். 2.கணிச்சி.

மழை பெ. 1.நீர். 2.குளிர்ச்சி. 3.மேகம். 4.கருமை. 5.மாரி. 6.திவலை. 7.ஆர்கலி.

மறம் பெ. 1.வீரம். 2.வலி. 3.போர். 4.கொலை. 5.பாவம். 6.கருணை. 7.வீரம், கருணை இரண்டுக்குமே அன்புதான் அடிப்படை என்பது பொருள்.

மறவர் பெ. வீரர்.

மறு^{1} பெ. 1.எதிர். 2.மீண்டும். 3.ஒரு முறை. 4.அடுத்து.

மறு^{2} பெ. மறுகரை.

மறு^{3} பெ. குற்றம் குறை.

மறு^{4} பெ. அடையாளம்.

மறுமை பெ. 1.மறுபிறவி. 2.மறுவுலகம்.

மறை^{1} பெ. மந்திராலோசனை மறைபொருள் உடையது.

மறை^{2} பெ. 1.கமுக்கம். 2.வேதம். 3.ஆகமம். 4.எதிர் மறை. 5.நான்மறை. 6.பொதுமறை.

மறை^{3} பெ. மறைப்பு.

மறை^{4} பெ. மறைவு.

மறைதல் வி. ஒளித்தல்.

மறைநூல் பெ. நான்மறை.

மறைவிடை பெ. ஒரு செயலை மறுத்துக் கூறும் விடையே மறைவிடை. இதைச் செய்வாயா என்று வினவியபோது செய்யமாட்டேன் என்று மறுத்துக் கூறுவது.

மன்மதன் பெ. 1.அனங்கன். 2.திருமகன். 3.மைந்தன்.

மன்றாடுதல் வி. 1.தனக்காக இறைவனிடம் வேண்டிக்கொள்ளுதல். 2.மிக வேண்டுதல்.

மன்னன் பெ. 1.அரசன். 2.எப்பொருட்கு மிறைவன். 3.தலைவன். 4.கணவன். 5.ஆடவன்.

மன்னுயிர் பெ. நிலைபெற்ற உயிர்.

மனநலம் பெ. மனத்தூய்மை.

மனம் பெ. 1.உள்ளம். 2.விருப்பம்.

மனுமக்கள் பெ. மனிதர்கள்.

மனுநீதிச்சோழன் பெ. பசுவின் துயரத்தைப் போக்கியவன்.

மனை^{1} பெ. வீடு.

மனை^{2} பெ. 1.மனைவி. 2.இல்வாழ்க்கை.

மனை^{3} பெ. ஓர் அளவு.

மனோதத்துவம் பெ. உளவியல்.

மா

மா^{1} பெ. விலங்கு.

மா^{2} பெ. மாமரம்.

மா^{3} பெ. மாவு.

மா^{4} பெ. நூறுகுழி.

மா^{5} பெ. பெரிய.

மா^{6} பெ. 1.மாநாடு. 2.மாபெருங்கூட்டம்.

மா^{7} பெ. அருப்பம்.

மா^{8} பெ. இடி.

மா^{9} பெ. பிண்டி.

மாக்கள் பெ. பகுத்தறிவற்ற மனிதர்கள்.

மாக்சுமுல்லர் பெ. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர்.

மாசிமாதம்^{1} பெ. மாசிமகம்.

மாசிமாதம்^{2} பெ. 1.தமிழ் மாதங்களில் ஒன்று. 2.கும்பரவி.

மாசு^{1} பெ. 1.குற்றம். 2.களங்கம். 3.கசடு.

மாசு^{2} பெ. அழுக்கு.

மாசு^{3} பெ. கறை.

மாசு^{4} பெ. மலம்.

மாட்சிமை பெ. 1.மாண்பு. 2.வளம்

மாடப்புறா பெ. பறவை வகை (புறா)

மாடம் பெ. 1.மேல்மாடி. 2.வாசற்சுவற்றில் விளக்கு வைக்கும் இடம்.

மாடு பெ. செல்வம்.

மாண்டார் பெ. மாண்புடைய சான்றோர்.

மாண்பு பெ. 1.பெருமை. 2.உயர்வு. 3.சிறப்பு. 4.மேன்மை.

மாணவன் பெ. மாண்பை உடையவன். (படிக்கும் மாணாக்கர்)

மாணவி பெ. மாண்பை உடையவள்.

மாணிக்கம் பெ. செம்மனரி பதுமராகம்.

மாணிக்கவாசகர் பெ. ஒன்பதாம் நூற்றாண்டினராகக் கருதப்படுபவரும் திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றின் ஆசிரியரும் சைவசமயசாரியார் நால்வருள் ஒருவருமான பெரியார்.

மாத்திரை[1] பெ. 1.அளவு. 2. செய்யுளுக்குரிய மாத்திரை அளவு. 3.குற்றுயிரெழுத்து. 4.நொடி.

மாத்திரை[2] பெ. காதணி.

மாத்திரை[3] பெ.காலநுட்பம்

மாத்திரை[4] பெ. பாக்கியம்.

மாத்திரை[5] பெ. கணம்.

மாத்திரை[6] பெ. இமை.

மாதம்[1] பெ. திங்கள்.

மாதம்[2] பெ. மதி.

மாதவர் பெ. முனிவர்.

மாதா பெ. அம்மா.

மாதிரம் பெ மலை.

மாதுளை பெ. பழவகையினுள் ஒன்று.

மாந்தர் பெ. மக்கள்.

மாமரம்[1] பெ. தேமாவின் பெயர்.

மாமரம்[2] பெ. இரதம்.

மாமரம்[3] பெ. சொக்கு.

மாமூல் பெ. வழக்கம்.

மார்க்கம் பெ. 1.வழி. 2.நெறி.

மார்கழிமாதம் பெ. தமிழ் மாதங்களில் ஒன்று.

மாரன் பெ. மன்மதன்.

மாரி பெ. மழை.

மாலை[1] பெ. 1.அணி. 2.ஆரம்.

மாலை[2] பெ. சுரி.

மாலை[3] பெ. அலங்கல்.

மாலை[4] பெ. பூமாலை.

மாற்றம்[1] பெ. 1.மாறுகை. 2.பகை.

மாற்றம்[2] பெ. சொல்.

மாற்றார் பெ. பகைவர்.

மாறன் பெ. பாண்டியன், பாண்டியமன்னன்.

மாறு பெ. 1.பகை. 2.எதிர்.

மாறுதல்[1] வி. 1.மாறுபடுதல். 2.வேறுபடுதல். 3.நீக்கல்.

மாறுதல்[2] வி. தன் குணங்களில் மாறி நிற்றல்.

மான் பெ. 1.மரை (போத்து கலைமான்). 2.கன்று. 3.பார்ப்பு. 4.குழவி. 5.பெண் பிணை.

மானம் பெ 1.உயர்மதிப்பு. 2.உயரிய பண்பு. 3.தன்மதிப்பு. 4.பெருமை. 5.குற்றம். 6.கத்தூரி.

மானுடம் பெ. 1.ஆடவர். 2.மானிடர். 3.மனிதர். 4.மாக்கள். 5.மாந்தர். 6.மாணவர்.

மி

மிகுதி பெ. அதிகம்.

மிசை[1] பெ. மேல்.

மிசை[2] பெ. 1.மேடு. 2.மேலிடம். 3.உணவு.

மிடர் பெ. முகை.

மிதம் பெ. நடுத்தரம்.

மிலேச்சர் பெ. மிலைச்சர்.

மிளகு[1] பெ. 1.கொடி வகை. 2.மிளகு போன்ற சிறுமணிகளையுடைய உயர்ந்த சம்பா நெல் வகை.

மிளகு[2] பெ. கறி.

மிளகு[3] பெ. காயம்.

மிளிர் பெ. 1.ஒளிர்கை. 2.பளிச்சிடுகை.

மின்னார் பெ. பெண்கள்.

மீ

மீன் பெ. நீரில் வாழும் உயிரினம்.

மீனவன் பெ. 1.மீன் கொடியை உடைய பாண்டியன். 2.மீன்பிடித்தொழில் புரிபவன்.

மு

முக்கனி பெ. மா, பலா, வாழை.

முக்காலம் பெ. 1.இறந்தகாலம் – பார்த்தேன். 2.நிகழ் காலம் – பார்க்கிறேன். 3.எதிர்காலம் – பார்ப்பேன்.

முக்குற்றம் பெ. காமம், வெகுளி, மயக்கம்.

முகடு[1] பெ. மஞ்சு.

முகடு[2] பெ. உச்சி.

முகடு[3] பெ. 1.சுவர்ப்புறந்து நீண்ட உத்திரம். 2.வீடு முதலியவற்றின் உச்சி

முகடு[4] பெ.மலை.

முகத்தலளவு பெ. நாழி முதலியவற்றால் அளக்குதல்.

முகத்துதி பெ. முகமன் வார்த்தை.

முகத்துவாரம் பெ. கடலும் ஆறும் பொருந்துகை.

முகத்தெளிவு பெ. முகக்கலை.

முகநகை பெ. முகமலர்ச்சி.

முகநட்பு பெ. முகத்திற்குமுன் காட்டும் நட்பு.

முகப்பு[1] பெ. தலைப்பு.

முகப்பு[2] பெ. முகனை.

முகப்பு[3] பெ. மூட்டு.

முகப்பு[4] பெ. முன்.

முகமலர்ச்சி பெ. சந்தோசம்.

முகமைந்து பெ. முகம் மகிழ்ந்து.

முகன் பெ. முகம்.

முகில்[1] பெ. மேகம்.

முகில்[2] பெ. தோன்றுகை.

முகில்[3] பெ. அரும்பு.

முகிவு பெ. கடை.

முகிழ்த்தல் வி. குவிதல்.

முகிழம் பெ. மலரும் பருவத்தரும்பு.

முகிழி பெ. முகிழ்.

முகிழகம் பெ. அரும்பு.

முகை பெ. மொட்டு.

முசுண்டி பெ. தாளையிடை முற்கரம்.

முட்காடு பெ. முள்ளுக்காடு.

முட்கீரை பெ. ஒரு செடி.

முட்கொன்றை பெ. ஒரு செடி.

முட்செடி பெ. முள்ளுப்பற்றை.

முட்டாள் பெ. அறிவில்லாதவர்.

முட்டு பெ. குவியல்.

முட்டுக்கட்டுதல் வி. 1.பாத்திக்கட்டுதல். 2.முட்டு கொடுத்தல்.

முட்டை[1] பெ. அண்டம்.

முட்டை[2] பெ. வரிட்டம்.

முட்டை[3] பெ. கரு.

முட்டை[4] பெ. கோசம்.

முட்டை[5] பெ. சிறுகரண்டி.

முட்டை[6] பெ. தவிடு.

முட்டை[7] பெ. ஒரு நோய்.

முட்டை[8] பெ. கந்தன்.

முட்பன்றி பெ. காட்டில் வாழும் பன்றியினம் (முள்ளம் பன்றி).

முடவன் பெ. சூரியன்.

முடித்தல்[1] வி. தீர்த்தல்.

முடித்தல்[2] வி. நீட்டித்தல்.

முடிவு[1] பெ. 1.அந்தம். 2.அந்தரம். 3.இறுதி.

முடிவு[2] பெ. ஓய்வு.

முடிவு[3] பெ. கடை.

முடிவு[4] பெ. கரை.

முடிவு[5] பெ. காண்டம்.

முடைதல் வி. பின்னுதல்.

முண்டாயி பெ. தீம்பண்டம்.

முண்டிரம் பெ. உபநிடதமுப்பத்திரண்டில் ஒன்று.

முணங்கு பெ. அடக்கம்.

முத்தம்அடைத்தல் வி. முத்துக்கள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக் கொண்டு கிடத்தல்.

முத்தம்[1] பெ. முத்து.

முத்தம்[2] பெ. வாய் இதழ்களினால் இச் என்று தரப்படும் ஒலிக் குறிப்பு.

முத்தம்[3] பெ. 1.வேம்பு. 2.புளி. 3.ஆமணக்கு ஆகியவற்றின் வித்து.

முத்தமிழ் பெ. இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

முத்திரை[1] பெ. பொறி.

முத்திரை[2] பெ. அடையாளம்.

முத்து[1] பெ. 1.ஆரம். 2.நித்திலம். 3.மணிமுத்தம்.

முத்து[2] பெ. தானம்.

முத்தக்குளித்தல் வி. கடலில் மூழ்கி முத்து எடுத்தல்.

முத்துச்சிப்பி பெ. முத்துள்ள அட்டினையுடைய நீர்வாழ் உயிரி.

முத்து, பவளம் பெ. ஆழ்கடலில் ஆழ்ந்து எடுப்பது.

முத்தேர்நகை பெ. முத்துச்சிரிப்பு.

முத்தொழில் பெ. படைத்தல், காத்தல், அழித்தல்.

முதல் பெ. ஆதி.

முதல் முதல் பெ. துவக்கம்.

முதல், முதல்வகை பெ. 1.அடி, ஆதி. 2.தலை. 3.தாள். 4.முன்னர்.

முதலாகுபெயர் பெ. முதலின் பெயர் சினைக்காகி வருவதாகிய பெயர்.

முதலாளி பெ. முதன்மைக்காரன்.

முதலி பெ. 1.முல்லன். 2.செங்குந்தன்.

முதலெழுத்து பெ. தனியெழுத்து அஃது உயிரு மெய்யுமாகிய முப்பதெழுத்து.

முதலை பெ. நீரில் வாழும் உயிரினம்.

முதலைக்கண்ணீர் பெ. 1.பொய்யாக அழுதல். 2.ஏமாற்றுதல்.

முதலோன் பெ. கடவுள்.

முதற்பொருள் பெ. **அகவொழுக்கம் நிகழ் வதற்குக் காரணமான நிலமும் பொழுதும்;** 1.நிலம் – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. 2.பொழுது– பெரும்பொழுது, சிறு பொழுது.

முது பெ. பேரறிவு.

முதுனம்[1] பெ. பழமை.

முதுனம்[2] பெ. மூப்பு.

முந்நாள் பெ. மூன்று நாள்.

முந்நீர் பெ. 1.ஆற்றுநீர். 2.ஊற்றுநீர். 3.மழைநீர்.

முப்பால்[1] பெ. அறம், பொருள், இன்பம்.

முப்பால்[2] பெ. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்று மூன்று விதப்பால்.

முப்பால்[3] பெ. காய்ச்சுப்பால் திரட்டுப்பால் குழம்புப்பால்.

மும்மை[1] பெ. உம்மை, இம்மை, அம்மை மூன்று.

மும்மை[2] பெ. மூன்றாயிருக்குந் தன்மை.

முயற்சி[1] பெ. 1.ஆள்வினை. 2.இயற்றி. 3.உற்சாகம். 4.உஞற்று.

முயற்சி[2] பெ. உத்தியோகம்.

முயற்சி[3] பெ. உழைப்பு உள்ளம்.

முராரி பெ. திருமால்.

முரித்தல்[1] வி. ஒடித்தல்.

முரித்தல்[2] வி. கெடுத்தல்

முரித்தல்[3] வி. 1.தோற்றல். 2.நகைத்தல். 3.இலங்குதல்.

முரிதிரை பெ. மடங்கிவிடும் அலை.

முரிவு[1] பெ. 1.ஒடிவு. 2.முறிவு.

முரிவு[2] பெ. மடிப்பு.

முருக்கு[1] பெ. முரக்கென்னேவற் கொலை.

முருக்கு[2] பெ. பலாசு.

முருக்குதல்[1] வி. 1.அழித்தல். 2.கொல்லுதல்.

முருக்குதல்[2] வி. உருக்குதல்.

முருக்குதல்[3] வி. முறித்தல்.

முருகன்கூத்து பெ. 1.குடை. 2.கொட்டி. 3.துடி.

முருகு[1] பெ. 1.அழகு. 2.இளமை.

முருகு[2] பெ. அகில்.

முல்லைச்சூட்டு பெ. முல்லைப்பூவாகிய மாலை.

முல்லைத்தலைவன் பெ. குறும்பொறைநாடன்.

முல்லைத் தலைவி பெ. கிழத்தி.

முல்லைத்திணை[1] பெ. புறவணி.

முல்லைத்திணை[2] பெ. புறவம்.

முல்லைநிலத்தார் பெ. பாடி. முல்லை நிலத்தில் வாழும் மக்கள்.

முல்லைநிலத்தெய்வம் பெ. திருமால்.

முல்லைநிலநீர் பெ. 1.கான்யாறு. 2.குறுஞ்சுனை.

முல்லைநிலப்பறை பெ. ஏறுகோட்பறை. பம்பை.

முல்லைநிலமாக்கள் பெ. ஆயர்.

முல்லைப்பாட்டு பெ. பத்துப்பாட்டினுள் நப்பூதனார் பாடிய பாட்டு.

முல்லையர் பெ. இடையர்.

முழக்கம் பெ. 1.ஆரவாரம், ஒலி. 2.முகிலின் ஒலிப்பு.

முழக்குதல் வி. 1.ஒலித்தல். 2.முகில் முழக்கம்.

முழக்கோல் பெ. நிலம் அளக்கும்கோல்.

முழல் பெ. சுழற்சிக்கொடி.

முழவம் பெ. முரசு.

முழவு பெ. 1.மத்தளம். 2.பறைப்பொது. 3.முரசு. 4.பால்கறக்குங் கலம்.

முழுக்காட்டுதல் வி. நீராட்டுதல்.

முழுமனை பெ. அறுபதடி நீளமும் நாற்பதடி அகலமுங்கொண்ட நிலம்.

முழுமை பெ. எல்லாம்.

முழுவலயம் பெ. முழுவட்டம்.

முழை பெ. 1.குகை. 2.துடுப்பு. 3.வளை.

முற்பிறப்பு பெ. உம்மை.

முற்றம் பெ. 1.அங்கணம். 2.முன்றில்.

முறுவல் பெ. புன்னகை.

முறைமை பெ. 1.ஊழ். 2.ஒப்புரவு. 3.ஒழுக்கம். 4.கடன். 5.நியதி. 6.நியமம். 7.மரபு வழி.

முறை பெ. 1.ஒழுங்கு. 2.தடவை. 3.மாற்றுகை. 4.உறவு.

முன்[1] பெ. முகம் நோக்கி.

முன்[2] பெ. காலம்.

முன் பெ. 1.பக்கம். 2.பழைமை. 3.முதல். 4.முன்பு.

முன்பிறந்தாள் பெ. 1.அக்கால். 2.அக்கை. 3.அண்ணன். 4.செவிலி. 5.சேட்டை.

முன்பு பெ. 1.பழைமை. 2.பெருமை. 3.முன். 4.முற்காலம்.

முன்னம் பெ. 1.கருத்து. 2.குறிப்பு. 3.சீக்கிரம்.

முன்னர் பெ. 1.ஆதி. 2.இடம். 3.முன்.

முன்னவள் பெ. 1.தமக்கை. 2.மூதேவி.

முன்னவன் பெ. 1.கடவுள். 2.சிவன். 3.தமையன். 4.முதலானவன்.

முன்னனை பெ. மாட்டுத்தொட்டி.

முன்னாள் பெ. முற்காலம்.

முன்னிரை பெ. பெருந்தொகைக்கூட்டம்.

முன்னிலை பெ. 1.காரணம். 2.மூவிடத்தொன்று.

முன்னிலையொழி பெ. அறத்தொடு நிலை.

முன்னீடு பெ. 1.தலைமை. 2.முன்னடைவு. 3.முன் செல்லுகை.

முன்னீர் பெ. கடல்.

முன்னேற்றம் பெ. 1.வளர்ச்சி. 2.சீரடைகை.

முனிவர் பெ. 1.அந்தணர். 2.சடை. 3.முடியோர். 4.தவத்தோர். 5.அடிகள். 6.அறவோர். 7.துறவோர்.

முனை பெ. நுனி.

முனைதல் வி. 1.துணிதல். 2.பகைத்தல். 3.வினைதல். 4.வெறுத்தல்.

முனைவன் பெ. அருகன்.

முனைவு பெ. 1.சினம். 2.வெறுப்பு. 3.அவாவின்மை.

மூ

மூ[1] பெ. ஓர் எழுத்து.

மூ[2] பெ. மூப்பு.

மூ[3] பெ. மூன்று.

மூக்கடைப்பான் பெ. 1.நீர்க்கோள் அடைப்பு. 2.மூக்குநோய் வகை.

மூக்கணைமரம் பெ. வண்டியின் ஏர்க்கால்.

மூக்கம்[1] பெ. சீற்றம்.

மூக்கம்[2] பெ. பழமை.

மூக்கு பெ. 1.மனிதமூக்கு. 2.பறவை மூக்கு. 3.நாசி. 4.நாடி.

மூக்குக்கண்ணாடி பெ. கண்ணில் அணியும் கண்ணாடி.

மூக்கொலி பெ. மூக்கிற் பிறக்கும் ஓசை.

மூகம்[1] பெ. ஊமை.

மூகம்[2] பெ. வறுமை.

மூகம்[3] பெ. ஒரு மீன்.

மூகன் பெ. 1.ஓரசுரன். 2.ஊமை.

மூச்சு[1] பெ. 1.சுவாசம். 2.தும்மல்.

மூச்சு[2] பெ. 1.ஆண்மை. 2.பலம்.

மூஞ்சி பெ. முகம்.

மூஞ்சுறு[1] பெ. சுண்டன்.

மூஞ்சுறு[2] பெ. மிகுதி.

மூட்டம்[1] பெ. ஆயத்தம்.

மூட்டம்[2] பெ. உலைமுகம்.

மூட்டம்[3] பெ. மூடுகை.

மூட்டம்[4] பெ. மேகமூட்டம்.

மூட்டல் பெ. 1.பொறுத்தல். 2.மாட்டல்.

மூட்டு[1] பெ. கடிவாளம்.

மூட்டு[2] பெ. கோள்.

மூட்டு[3] பெ. எழுச்சி.

மூட்டை பெ. 1.சரக்குப்பை. 2.பொதி. 3.ஒரு சாக்களவு.

மூடம்[1] பெ. அறிவின்மை.

மூடம்[2] பெ. எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவை.

மூடுதல் வி. 1.போர்த்தல், மறைக்குதல். 2.சுவித்தல். 3.பொதித்தல். 4.வேய்தல்.

மூத்த அறிவுடையோர் பெ. திறனறிந்து தேர்ந்து கொள்ளவேண்டியவர்.

மூத்தல் வி. முதுமையுறுதல், கேடுறுதல்.

மூத்திரம் பெ. சிறுநீர்.

மூத்தோன் பெ. முதியோன்.

மூதிரை பெ. திருவாதிரை நாள்.

மூதில் பெ. பழங்குடி.

மூது[1] பெ. முதுமை.

மூது[2] பெ. பழைமை.

மூது[3] பெ. ஈகை.

மூதுரை பெ. 1.பெரியோர் வாக்கு. ஔவையார் பாடிய மூதுரை. 2.நீதிமொழி. 3.வேதம். 4.பழமொழி.

மூதேவி[1] பெ. இந்திரனுக்குமூத்தாள்.

மூதேவி[2] பெ. கழுதை.

மூப்பர் பெ. முதன்மைக்காரர், முதியோர்.

மூப்பு[1] பெ. 1.கிழமை. 2.முதுமை.

மூப்பு[2] பெ. முற்றல்.

மூப்பு[3] பெ. விருத்தம்

மூப்பு[4] பெ. 1.மூலநாள். 2.அசுரநாள்.

மூப்பு[5] பெ. 1.அன்றில். 2.குருகு. 3.கொக்கு.

மூலமொழி பெ. மொழிகள் பல தோன்றி வளர்வதற்கு அடிப்படையான மொழியாகும்.

மூவகைத்தமிழ் பெ. 1.இயற்றமிழ். 2.இசைத் தமிழ். 3.நாடகத்தமிழ்.

மூவகைநிலங்கள் பெ. 1.செம்மண் நிலம். 2.உவர் நிலம். 3.களர்நிலம்.

மூவிடம் பெ. தன்மை, முன்னிலை, படர்க்கை.

மூவுலகு பெ. 1.மண்ணுலகம். 2.விண்ணுலகம். 3.பாதாள உலகம்.

மூவேந்தர் பெ. 1.சேரர். 2.சோழர். 3.பாண்டியர்.

மூழ்குதல்[1] வி. நீரில் மூழ்குதல்.

மூழ்குதல்[2] வி. 1.ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுதல். 2.வேலையில் மூழ்குதல்.

மூன்றாம்நந்திவர்மன் பெ. பல்லவமன்னன்; நந்திக் கலம்பகம் இவன் மீது பாடப்பெற்றது.

மெ

மெத்தனவை பெ. இனிய சொற்கள்.

மெத்தை பெ. 1.அணை. 2.காகுளி. 3.தவிசு. 4.தர்பம்.

மெய்[1] பெ. உண்மை.

மெய்[2] பெ. உணர்ச்சி.

மெய்[3] பெ. 1.உடல். 2.ஆண்மா. 4.திண்மை. 3.மார்பு.

மெய்[4] பெ. ஒற்றெழுத்து.

மெய்காப்பாளர் பெ. 1.கஞ்சுகர், காவிலர், வாயிலாளர். 2.வாயிலோர்.

மெய்கிறித்தவர் பெ. உண்மையான கிறித்தவர்.

மெய்ஞானம் பெ. மெய்யறிவு.

மெய்ப்பொருள்[1] பெ. கடவுள்.

மெய்ப்பொருள்[2] பெ. .உண்மைப் பொருள்.

மெய்ப்பொருள்[3] பெ. செல்வம்.

மெய்யெழுத்து பெ. ஒற்றெழுத்து.

மெல்லல் பெ. கவட்டல்.

மெலிவு பெ. 1.அற்றம். 2.சிக்கம். 3.தேம்பல்.

மே

மேகம்[1] பெ. 1.கொண்டல். 2.முகில். 3.நீர்.

மேகம்[2] பெ. குயில்.

மேகம்[3] பெ. நோய்.

மேடைப்பேச்சு பெ. கூட்டத்தார் முன்பு பேசுதல், மேடைப்பேச்சு.

மேதி பெ. எருமை.

மேதினி பெ. உலகம்.

மேதை பெ. 1.பேரறிஞர். 2.அறிவாளி. 3.அறிவு நுட்பம். 4.பேரறிவு.

மேதையர் பெ. வல்லவர்.

மேல்[1] பெ. 1.முன்னே மேற்கு. 2.மேற்புறம். 3.வருங் காலம். 4.ஆகாயம். 5.இடம். 6.பின்.

மேல்[2] பெ. சரீரம்.

மேல்காற்று பெ. கோடைக்காற்று.

மேலவர் பெ. மேலோர்.

மேலே[1] வி.அ. மேல், உயரே. தொடர்ந்து.

மேலே[2] வி.அ. மேற்கத்திய, (மேலைநாடுகள்).

மேலே[3] வி.அ. உயர்ந்தவர்.

மேழி பெ. 1.கலப்பை. 2.ஏர்.

மேற்கோள்[1] பெ. 1.உதாரணம். 2.முன்னோர் வழக்கு.

மேற்கோள்[2] பெ.மேன்மை.

மேன்மை பெ. சிறப்பு.

மேனி பெ. உடல்.

மொ

மொய்யிலை பெ. செறிந்த இலை.

மொழி பெ. 1.சொல். 2.கட்டுரை. 3.பாசை. 4.வாக்கு மூலம். 5.பொருள்.

மொழிபெயர்த்தல் வி. நூல் முதலியவற்றை வேறு மொழியில் மாற்றி எழுதுதல்.

மொழிமாற்றம் பெ. ஒரு மொழியில் இருப்பதை மற்றொரு மொழியில் மாற்றி அமைக்கும் முறை.

மோ

மோனை பெ. செய்யுள் தொடை ஐந்தனுள் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

ய

யவனர் பெ. 1.யவன நாட்டார். 2.சித்திரக்காரர்.

யா

யாக்கை பெ. உடம்பு.

யாணர் பெ. புதுவருவாய்.

யாத்திரை பெ. புண்ணியப் பயணம்.

யாப்பு பெ. 1.கட்டுகை. 2.செய்யுள். 3.சிறப்புப்பாயிர இலக்கணம் பதினொன்றனுள் இன்னநூல் கேட்டபனி; இன்னது கேட்கத்தக்க தென்னும் சம்பந்தம்.

யாம்மாட்டும் பெ. எல்லாரிடமும்.

யானை பெ. கரி.

யூ

யூதருக்கு குலவேந்தன் பெ. யூதகுலத்தவர்க்கு அரசன்.

வ

வகுப்பு[1] பெ. 1.சாதி. நீங்கள் எந்த வகுப்பினைச் சேர்ந்தவர். 2.பிரிவு. 3.தரம்.

வகுப்பு[2] பெ. 1.கூறுபடுத்துகை. 2.சந்தம்.

வகுப்பு[3] பெ. பொலிவு.

வகுப்பு[4] பெ. தடுக்கப்பட்ட அறை.

வஞ்சனை பெ. தீய செயல்கள்.

வஞ்சி[1] பெ. 1.வஞ்சிப்பா. 2.ஒரு புறத்திணை.

வஞ்சி[2] பெ. ஒரு கொடி.

வஞ்சித்திணை பெ. வஞ்சிப் பூவினைச் சூடிச் சென்று பகைவர்மீது போரிடச் செல்லுதல்.

வட்டி பெ. பனையோலைப் பெட்டி.

வடலூர் பெ. 1.இராமலிங்கர் பிறந்த ஊர். 2.இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம்.

வடிவம்பு பெ. வடிக்கப்பட்ட அம்பு.

வண்ணம் பெ. 1.பேரீகை. 2.வளப்பம். 3.அழகு.

வண்ணம்தீட்டும்கோல்[1] பெ. 1.தூரிகை. 2.துகிலிகை.

வண்ணம்தீட்டும்கோல்[2] பெ. இசைப்பாட்டு.

வண்ணம்தீட்டும்கோல்[3] பெ. 1.நிறம். 2.அழகு. 3.ஒப்பனை.

வண்மை பெ. 1.வள்ளல்தன்மை. **2.கொடை.** எப்பொழுதும் வண்மையுள்ளத்துடன் இருக்க வேண்டும்.

வணங்குதல் வி. பணிதல்.

வயல் பெ. 1.நன்செய் நிலம், புன்செய்நிலம். 2.கழனி. 3.வெளி.

வயவேந்து பெ. வெற்றிவேந்தன்.

வர்ணம் பெ. 1.வண்ணம். 2.நிறம்.

வரம்பு பெ. வரப்பு, **ஓரம், வயல்;** வரம்புல தென்னங் கன்றை நட்டுவை.

வருத்தம் பெ. 1.துன்பம். 2.மனவருத்தம்.

வரை[1] பெ. மலை.

வரை[2] பெ. தீட்டு.

வரைபடம் பெ. **கோட்டுப்படம்;** எனக்கு பாடப் புத்தகத்தை பார்த்து வரைபடம் வரைந்துத்தா.

வல்லாமை பெ. **இயலாமை; முடியாமை.** ஒரு செயலை முடிக்க முடியாமை.

வல்லுநர் பெ. வல்லோர்.

வலசை பெ. இடம் விட்டு இடம் குடிபோதல்; பறவைகள் வலசை போகின்றன.

வலம்[1] பெ. 1.வெற்றி. 2.வலிமை.

வலம்[2] பெ. வலப்பக்கம்.

வலம்வருதல் வி. சுற்றி வருதல். ஏன் என்னைச் சுற்றி வலம் வருகிறாய்.

வலி பெ. **நோய்.** எனக்கு வலிப்பு நோய்.

வழக்கம் பெ. 1.மரபு வழிவரும் பழக்கம். 2.முறைப்படி வருவது. **3.வாழ்க்கை நெறி.** உன் பழக்க வழக்கங்கள் சரியான முறையில் இருக்க வேண்டும்.

வழக்குரைகாதை பெ. **சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்களின் உட்பிரிவு.** கண்ணகி கோவலனுக்காக பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்ததை கூறுவது வழக்குரை காதையாகும்.

வழக்குவகைகள் பெ. 1.உலக வழக்கு. 2.செய்யுள் வழக்கு. 3.இயல்பு வழக்கு. 4.பேச்சு வழக்கு. 5.தகுதி வழக்கு. 6.எழுத்து வழக்கு.

வழி[1] பெ. பாதை.

வழி[2] பெ. உறவு.

வழி[3] பெ. தீர்வு.

வழிநடை[1] பெ. உணவு; இதனைக் கட்டுச்சோறு என்று இக்காலத்தில் சொல்வோம்.

வழிநடை[2] பெ. நடந்துசெல்லும் வழி.

வழிநூல் பெ. **மூன்றுவகை நூல்களில் ஒன்று.** முதல் நூலுக்கு அடுத்தது.

வழிபடுதல் வி. 1.போற்றி வணங்குதல். 2.பின்பற்றுதல்.

வழிமொழிதல் வி. ஆதரித்துக் கூறுதல்.

வழுகுதல் வி. சறுக்குதல்.

வழுவுபாடல் பெ. குற்றமுள்ள பாடல்.

வள் பெ. நெருக்கம்.

வள்ளலார் பெ. சத்திய தருமசாலையை நிறுவியவர்.

வள்ளிதழ் பெ. நெருங்கிய இதழ்கள்.

வள்ளுகிர் பெ. கூர்மையான நகம்.

வள்ளுவம் பெ. திருவள்ளுவர் வாழ்க்கை நெறி.

வள்ளை[1] பெ. நெல் குத்தும்போது பெண்களால் பாடப்படும் உலக்கைப்பாட்டு.

வள்ளை[2] பெ. ஒருவகை நீர்க் கொடி.

வளம்[1] பெ. 1.செல்வம். 2.வருவாய்.

வளம்[2] பெ. செழுமை.

வளி பெ. காற்று.

வளையல் பெ. 1.கைவளை. 2.வளைவுள்ளது.

வற்றல்மரம் பெ. வாடிய மரம்.

வற்றிய பெ.எ. 1.சுருங்கிய. 2.வறண்ட. 3.நீர் அருகிய

வறியவர் பெ. **வறுமையுடையவர்.** அவர் மிகவும் வறியவர்.

வறுமை பெ. 1.வறுமை நிலை. 2.பஞ்சம்.

வன்கண் பெ. வீரத்தன்மை.

வன்சொல் பெ. கடுஞ்சொல்.

வன்மறவோர் பெ. கொடியவராகிய அக்காவலர் கள்.

வன்மை[1] பெ. 1.வலிமை. 2.கடினம்.

வன்மை[2] பெ. வல்லினமெய்.

வன்மை[3] பெ. 1.கொடுமை. 2.மன அழுத்தம்.

வனப்பு பெ. அழகு.

வனம் பெ. காடு.

வனிதம் பெ. 1.சிறப்பு. 2.மேன்மை.

வா

வாக்கியம் பெ. பொருள் நிறைவுள்ள முழுத்தொடர். அந்த வாக்கியத்தை முழுமையாக எழுது.

வாக்கியவகை பெ. 1.தனிவாக்கியம். 2.கூட்டு வாக்கியம். 3.கலவை வாக்கியம்.

வாக்கு[1] பெ. 1.**உறுதிமொழி.** பொய்பேசமாட்டேன் என்று எனக்கு வாக்கு கொடு. 2.புகழ்சொல். 3.செல்வாக்கு.

வாக்கு[2] பெ. திருத்தம்.

வாக்கு[3] பெ. 1.வளைவு. 2.பக்கம்.

வாக்கு[4] பெ. தன்மை.

வாக்குறுதி பெ. சொன்ன சொல் தவறாமை.

வாகைத்திணை பெ. வெற்றிப்பெற்றவர்கள் ஆரவாரித்தல்.

வாகை மாலை பெ. வெற்றிமாலை.

வாகையர் பெ. வெற்றியாளர்.

வாங்குவில் பெ. வளைந்த வில்.

வாச்சியம் பெ. இசைக்கருவி.

வாசகர் பெ. படிப்பவர்.

வாசனை பெ. 1.மணம். 2.வாசனைத்திரவியம்.

வாசுகி பெ. திருவள்ளுவரின் மனைவி.

வாட்டான் பெ. வகுத்தான்.

வாடுதல்[1] வி. மெலிதல்.

வாடுதல்[2] வி. காய்தல், வதங்குதல்.

வாண்மங்கலம் பெ. பகையரசரை வென்ற வேந்தன் தன் வாளினைக் கொற்றவை மேல் நிறுத்தி நீராட்டுதலைக்கூறும் புறத்துறை.

வாணி பெ. கலைமகள்.

வாணிகம் பெ. வியாபாரம்.

வாத்தியார் பெ. ஆசிரியர் நாடகம் முதலிய வற்றைப் பயிற்றுவிப்பவர்.

வாதவூரர் பெ. திருவாதவூரில் பிறந்த மாணிக்க வாசகர்.

வாய்ச்சொல் பெ. வாயிலிருந்து . தோன்றும் சொற்கள்.

வாய்ப்பாடம் பெ. மனப்பாடம்.

வாய்ப்பு பெ. 1.சந்தர்ப்பம், அரியவாய்ப்பு. 2.பேறு. 3.அனுகூலம். 4.சிறப்பு. 5.அழகு. 6.செல்வம்.

வாய்முதல் பெ. (வாயிற்முதலாகிய) உதடு.

வாய்மை பெ. 1.உண்மை. 2.பண்பு. 3.தவறாத சொல்.

வாயில் பெ. ஐம்பொறிகள்.

வாயினராதல் வி. மொழியினை உடையவர்.

வாயுணர்வின்மாக்கள் பெ. உணவுச்சுவை.

வாயுணர்வு பெ. **வாயால் உணரப்படுவன.** அவை, கைப்பு, கார்ப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, என்னும் அறுவகைச் சுவைகளாகும்.

வாரம் பெ. இசைப்பாடல்.

வாரி பெ. கூரைப்பகுதி.

வால்[1] பெ. 1.வெண்மை, விலங்கின் வால்பகுதி, பின்புற நீட்சி, 2.ஒரு உறுப்பு.

வால்[2] பெ. குறும்பு.

வால்[3] பெ. இளமை.

வால்[4] பெ. தூய்மை.

வால்[5] பெ. பெருமை.

வாலறிவன் பெ. 1.கடவுள். 2.பேரறிவு.

வாலை[1] பெ. நீர்மம் வழங்கும் பாண்டம்.

வாலை² பெ. பூப்படையாத பெண்.

வாழ் வி. வாழ்தல்.

வாழ்க்கைத்துணைவன் பெ. கணவன்.

வாழ்க்கைத்துணைவி பெ. மனைவி.

வாழ்க்கைவரலாறு பெ. ஒருவர் வாழ்க்கையைப் பற்றி இன்னொருவர் எழுதுவது. சான்று, திரு.வி.க. வாழ்க்கை வரலாறு.

வாழ்த்து பெ. ஒருவகை அணியிலக்கணம். வாழ்த்தணி.

வாழ்தல் வி. வாழ்ந்திருத்தல்.

வாழ்த்துதல் வி. **1.வாழ்த்துக்கூறுதல்.** வாழ்க வளமுடன். 2.ஆசிவழங்குதல். 3.துதித்தல். 4.மங்களம் பாடுதல்.

வாள்¹ பெ. ஒளி.

வாள்² பெ. 1.ஒரு கருவி. 2.கத்தி.

வான்¹ பெ. 1.முகில். 2.மழை. 3.புயல்.

வான்² பெ. எதிர்கால வினையெச்ச விடைச் சொல்.

வான்³ பெ. 1.பெருமை. 2.மகத்துவம்.

வான்⁴ பெ. அமுதம்.

வான்கவிகள் பெ. தேவர்கள்.

வான்புனல் பெ. வானத்துநீர்.

வானகம் பெ. வேருலகம்.

வானப்புலை பெ. மழைநீர்.

வானரங்கள் பெ. 1.பொதுவாகக் குரங்குகளைக் குறிக்கும். 2.சிறு பிள்ளைகள் குறும்பு செய்யும்போது பெரியோர்கள் பிள்ளைகளைப் பார்த்து சரியான வானரங்கள் என்று சொல்லு வார்கள்.

வானவர் பெ. 1.விண்ணவர். 2.சேரர்.

வானவூர்தி பெ. ஆகாய விமானம்.

வானோர் பெ. தேவர்கள்.

வி

விக்கிரகங்கள் பெ. கடவுள்சிலைகள்.

விகுதி பெ. பகுபதவுறுப்புகளுள் இறுதி.

விசாரணை பெ. 1.ஆராய்ச்சி. 2.விசாரிப்பு.

விசும்பு பெ. 1.வானம். 2.வானுலகம்.

விசுவாசம் பெ. 1.அன்பு. 2.பற்று.

விசைத்தறி பெ. மின்விசையால் இயங்கும் தறி.

விடலை பெ. 1.விடலைப் பருவம். 2.திண்ணயன். 3.வீரன்.

விடாமுயற்சி பெ. **அயராமுயற்சி.** மாணவர் கள் தேர்வில் முதலிடம் பெறுவதற்கு விடாமுயற்சி வேண்டும்.

விடியல் பெ. **விடியும் நேரம்.** மாணவர்கள் தினமும் விடியல் காலை 5 மணிக்கு எழுந்து படிப்பதற்கு பழகவேண்டும்.

விடிவிளக்கு பெ. இரவு முழுவதும் மங்களான விளக்கு.

விடிவெள்ளி பெ. அதிகாலையில் தோன்றும் வெள்ளி எனும் கோள்.

விடுகதை பெ. விடுவிக்க வேண்டிய புதிர்.

விடுதலை பெ. விடுபடுதல்.

விடை¹ பெ. 1.பதில். 2.முடிவு.

விடை² பெ. முறைத்துக்கொள்ளுதல்.

விடைத்தாள் பெ. தேர்வில் பதில் எழுதும் தாள்.

விண் பெ. வானம்.

விண்கல் பெ. எரிகல்.

விண்கலம் பெ. விண் ஊர்தி.

விண்கொள்ளி பெ. விண்ணலிருந்து விடும் ஒளிச்சுடர்.

விண்ணகம் பெ. வானகம்.

விண்ணப்பம் பெ. மனு.

விண்ணுலகம் பெ. மேலுலகம்.

வித்தகம் பெ. 1.அறிவு. 2திறமை.

வித்தகன் பெ. இறைவன்.

வித்தியாசம் பெ. வேறுபாடு.

வித்தியாலயம் பெ. கல்வி நிலையம்.

வித்து பெ. விதை.

வித்துவான் பெ. புலவன்.

விதம் பெ. 1.வகை. 2.வழி.

விதி பெ. 1.ஊழி. 2.சட்டம். 3.நியதி.

விதிமுறை பெ. நெறிமுறை.

விதிர்விதிர்த்தல் வி. 1.உடல் சிலிர்த்தல். 2.நடுங்குதல். 3.ஆத்திரப்படுதல்.

விடீதம் பெ. விசித்திரம்.

விபுதர் பெ. புலவர்.

விம்மல்[1] பெ. விம்மல் ஒலி.

விம்மல்[2] பெ. ஒலியலைகளின் செறிவில் ஏற்படும் ஏற்ற இறக்கம்.

வியத்தல் வி. 1.அதிசயித்தல். 2.பாராட்டுதல்.

வியப்பு[1] பெ. 1.ஆச்சரியம். 2.மெய்ப்பு. 3.அதிசயம்.

வியப்பு[2] பெ. (செய்.) வியப்பைக்கூறுமலங்காரம்.

வியாபாரம் பெ. வணிகம்.

விரக்தி பெ. வெறுப்பு. எனக்கு வாழ்க்கையே விரக்தியாக இருக்கு.

விரயம் பெ. வீண்செலவு. என் பணமெல்லாம் விரயமாகப்போகுது.

விரல் பெ. 1.கைவிரல். 2.கால்விரல்.

விரலி பெ. மஞ்சள்.

விரவுப் பெயர் பெ. பொதுப்பெயர்.

விரி பெ. விரிக்கை.

விரிகுடா பெ. அரைவட்டத்தில் நிலம் சூழ்ந்திருக்கும் கடல் பகுதி (எ.கா.) வங்காள விரிகுடா.

விரிசல் பெ. பிளவு.

விரிவுரையாளர் பெ. பாடங்களை விவரித்துச் சொல்லுபவர். கல்லூரி விரிவுரையாளர் (ஆசிரியர்).

விருது பெ. பரிசு. எனக்கு நல்லாசிரியர் விருது கிடைத்துள்ளது.

விருந்தாளி பெ. விருந்தினர். உங்கள் வீட்டிற்கு இன்று விருந்தாளியாக வந்திருப்பவர் யார்.

விருந்து பெ. புதுமை.

விருப்பப்பாடம் பெ. விரும்பி எடுக்கும் பாடம்.

விருப்பம் பெ. விரும்புதல்.

விரை[1] பெ. கலவைச்சாந்து.

விரை[2] பெ. 1.மலர். 2.பூத்தேன்.

விரை[3] பெ. விதை.

விரை[4] பெ. 1.மணம் (வாசனை). 2.அகில். 3.சந்தனம் என்ற ஐவகை வாசனைப் பண்டமாகிய நறும்புகை.

விரை[5] பெ.கோட்டம்.

விரை[6] பெ. தகரம்.

வில்[1] பெ. 1.அம்பு எய்தும் கருவி. மகாபாரதத்தில் வரும் அரச்சுனன் வில்வித்தையில் வல்லவன். 2.மின் வில்.

வில்[2] பெ. வில்வண்டி.

வில்[3] பெ. வில்தராசு.

வில்லுப்பாட்டு பெ. வில் தட்டிப்பாடும் பாட்டு. உனக்கு வில்லுப்பாட்டு தெரியுமா?.

வில்லை பெ. அடையாள வில்லை.

விலாசம் பெ. முகவரி.

விலை பெ. 1.மதிப்பு. 2.பொருளை வாங்குவதற்குக் கொடுக்கும் பணம்.

விலைவாசி பெ. பொருள்களின் விலைநிலவரம்.

விவசாயம் பெ. வேளாண்மை.

விவாகம் பெ. திருமணம்.

விவேகம் பெ. அறிவுக்கூர்மை.

விழா பெ. நல்ல நிகழ்ச்சி.

விழி[1] பெ. 1.கண். 2.பார்வை. 3.திறக்கை. 4.விழிப்பு

விழி[2] பெ. தடம்.

விழிப்புணர்ச்சி பெ. விழிப்புணர்வு. எயிட்ஸ்நோய் விழிப்புணர்வு.

விழுக்காடு பெ. சதவீதம்.

விழுச்செல்வம் பெ. சிறந்த செல்வம்.

விழுது பெ. மரத்திநின்றும் காற்றில் தொங்கும் வேர் இளகிய நிலை, நெய்விழுது.

விழுப்பம் பெ. சிறப்பு.

விழுப்பிணி பெ. தீராநோய்.

விழுமம் பெ. 1.சிறப்பு. 2.துன்பம்.

விழுமிய பெ.எ. சிறந்த.

விழைதல் வி. விரும்புதல்.

விளக்கு[1] பெ. ஒளிதரும் கருவி.

விளக்கு[2] பெ. பெருக்குகை.

விளக்குத்தண்டு பெ. விளக்கு வைக்கும் தண்டு.

விளக்குதல் பெ. 1.தெளிவுபடுத்துதல். 2.விளங்குதல்.

விளம்பரதாரர் பெ. 1.விளம்பரம் வழங்குபவர். 2.வணிக அறிவிப்பு.

விளம்புதல் வி. கூறுதல்.

விளிம்பு பெ. 1.ஓரம். 2.முனை.

விளைச்சல் பெ. 1.உற்பத்தியாதல். 2.விளைதல்.

விளைதல் வி. பயிர்செய்தல்.

விளைபொருள் பெ. விளையும் பொருள்.

விளையாட்டு பெ. 1.ஆட்ட ஓட்டம். 2.வேடிக்கை. 3.குறும்பு.

விற்படை பெ. வில்கருவி.

விறகு பெ. எரியமரம், எரிபொருள்.

வினவுதல் வி. கேள்வி கேட்டல்.

வினா பெ. கேள்வி.

வினாடிவினா பெ. வினாடியில் விடை கூறுவதற் குரிய வினா.

வினாத்தாள் பெ. கேள்வித்தாள்.

வினாத்தொகுப்பு பெ. விடை சொல்வதற்குரிய வினாக்கள் அடங்கியதொகுதி.

வினை பெ. 1.செயல். 2.வினைச்சொல்.

வினைக்குறிப்பு பெ. குறிப்பு வினை. குறிப்பில் ஒருவர் செயலை சுட்டிக்காட்டுவது.

வினைஞர் பெ.தொழில் செய்பவர்.

வினைத்திட்டம் பெ. செயல்திட்டம்.

வினைப்பெயர் பெ. தொழிற்பெயர்.

வீ

வீ^{1} பெ. 1.மரணம். 2.அழிவு. 3.நீக்கம்.

வீ^{2} பெ. மலர்.

வீ^{3} பெ. பறவை.

வீச்சு பெ. 1.வீசும் செயல். 2.முனைப்பு.

வீசமாரி பெ. கடல்.

வீசுதல்^{1} வி. ஆட்டுதல்.

வீசுதல்^{2} வி. பரவச்செய்தல்.

வீசுதல்^{3} வி. எறிதல்.

வீட்டுக்காரி பெ. மனைவி.

வீட்டுப்பாடம் பெ. வீட்டில் படிக்கும் பாடம்.

வீட்டு வேலை பெ. குடும்ப வேலை.

வீணன் பெ. பயனற்றவன்.

வீதம் பெ. அளவு.

வீதி பெ. பாதை.

வீரம் பெ. உடல் வலிமை.

வீராங்கனை பெ. வீரம் மிகுந்தவள்.

வீழ்நாள் பெ. பயனற்ற நாள்.

வீறாப்பு பெ. இறுமாப்பு.

வீறு^{1} பெ. 1.எழுச்சி. 2.பெருமிதம். 3.வலிமை. 4.தனிப் பட்ட சிறப்பு. 5.வெற்றி. 6.பெருமை. 7.நல்வினை. 8.கருவம். 9.வெறுப்பு. 10.தனிமை. 11.அடி.

வீறு^{2} பெ. மருந்து முதலியவற்றின் வீரியம்.

வீறு^{3} பெ. ஒளி.

வெ

வெஃகுதல் வி. விரும்புதல்.

வெக்கை^{1} பெ. மிகு வெப்பம். ஒரே வெக்கையாக இருக்கு.

வெக்கை^{2} பெ. கால்நடை நோய்.

வெகுமதி பெ. 1.வெகுமானம். 2.பரிசு.

வெகுளல் வி. சினத்தல்.

வெங்கதிர் செல்வன் பெ. கதிரவன்.

வெங்களம் பெ. போர்க்களம்.

வெஞ்சம் பெ. 1.வஞ்சம். 2.பழி. 3.சினம்.

வெஞ்சமன் பெ. எமன்.

வெட்சித்திணை பெ. ஆநிரைகளைக் கவர்தல்.

வெட்டவெளி பெ. வயல்வெளி, அடைப்பு ஏதும் இல்லாத பகுதி.

வெட்டனவை பெ. வன்சொற்கள்.

வெட்டிச்சோறு பெ. தண்டச்சோறு.

வெட்டிவேர் பெ. மகளிர் தலையில் அணிந்து கொள்ளும் மணமுள்ள வேர்.

வெட்டு பெ. கைகால்களை வெட்டி இழுக்கும் வலிப்பு.

வெட்டுக்கிளி பெ. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் ஒரு தொற்றுப்பூச்சி.

வெட்டுதல்^{1} வி. 1.நறுக்குதல். 2.கழித்தல். 3.தோண்டுதல்.

வெட்டுதல்^{2} வி. பொறித்தல்.

வெட்டுதல்^{3} வி. மறுத்தல்.

வெட்டுதல்[4] வி. நீக்குதல்.
வெட்பாலை பெ. ஒரு மர வகை.
வெடி[1] பெ. 1.சீனி வெடி. 2.வெடிமருந்து.
வெடி[2] பெ. வெடிப்பு.
வெடுவெடுப்பு பெ. கடுகடுப்பு.
வெண்கமலம் பெ. வெண்டாமரை.
வெண்குட்டம் பெ. உடலில் வெள்ளையாகப் படரும் சரும நோய்.
வெண்குடை பெ. வெண்கொற்றக் குடை.
வெண்டலை பெ. தலையோடு.
வெண்ணாரை பெ. கொக்குவகை.
வெண்மதி பெ. **திங்கள்.** வெண்மையான சந்திரன்.
வெண்மைப்புரட்சி பெ. பால் உற்பத்தி புரட்சி.
வெதும்புதல்[1] வி. 1.இளஞ்சூடாதல். 2.வெம்மையாதல். 3.கொதித்தல்.
வெதும்புதல்[2] வி. சிறிதுவாடுதல்.
வெதும்புதல்[3] வி. 1.சினங்கொள்ளுதல். 2.மனங்கலங்குதல்.
வெந்தழல் பெ. சிவந்தெரியும் தீ.
வெந்நீர் பெ. சுடுநீர்.
வெம்படை பெ. கொடிய படைக்கருவி.
வெய்யவன் பெ. கதிரவன்.
வெய்யவினை பெ. 1.துன்பம் தரும் சொல். 2.துன்பம் தரும் செயல்.
வெருள் பெ. அச்சம்.
வெள்ளம்[1] பெ. 1.கடல். 2.நீர்பெருக்கு.
வெள்ளம்[2] பெ. ஒரு பேரெண்.
வெள்ளி[1] பெ. வெள்ளி எனும் உலோக வகை.
வெள்ளி[2] பெ.வெள்ளிக்கிழமை.
வெள்ளி[3] பெ. 1.வெள்ளியெனும்கோள். 2.விண் மீன்.
வெள்ளிவிழா பெ. இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவுக் கவட்டம்.
வெள்ளெயிறு பெ. வெண்ணிறப்பூக்கள்.
வெள்ளைக்கரு பெ. வெண்கரு.
வெள்ளையன் பெ. வெள்ளைக்காரன், ஐரோப்பிய சாதியான், வெண்மை நிறமுள்ளவன்.
வெள்ளையணு பெ. குருதியில் உள்ள வெண்ணிற அணு.
வெள்ளோட்டம் பெ. முதன்முதலாக ஓர் ஊர்தியை ஓட்டிப் பார்த்தல்.
வெள்ளோசை பெ. வெண்பாக்குறிய ஓசை
வெளி பெ. 1.அகன்ற பரப்பு. 2.வெளிப்புறம். 3.வெளிச்சுவர்.
வெளிச்சம் பெ. ஒளி.
வெளிநபர் பெ. வெளியாள்.
வெளிநாடு பெ. அயல்நாடு.
வெளிப்பாடு பெ. **மறைதலின்றி வெளிப்பட்டுத் தோன்றுகை.** பெரியோருக்கு அளிக்கும் கையுறை.
வெளியீடு பெ. வெளியிடப்படல்.
வெற்றி பெ. வெற்றி பெறுகை (ஜெயம்).
வெற்றிடம்[1] பெ. காலியிடம்.
வெற்றிடம்[2] பெ. காற்று இல்லாத இடம்.
வெற்றிப்பாட்டு பெ. வெற்றியாற் பெற்ற பெருமை.
வெற்றிமாலை பெ. போரில் வென்றோர் சூடும் மாலை.
வெற்றுடல்[1] பெ. பிணம்.
வெற்றுடல்[2] பெ. வெறும் உடம்பு.
வெறி பெ. 1.பித்து. 2.முரட்டுத்தனம். 3.அளவுக்கு மேற்பட்ட ஆசை.
வெறியாட்டம் பெ. அட்டூழியம்.
வெறுங்காவல் பெ. கடுமையில்லாத தண்டனை.
வெறுத்தல் பெ. பிறரிடம் அன்பில்லாமல் விலகல்.
வெறுமை பெ. ஒன்றும் இல்லாமை.
வென்றி பெ. வெற்றி.

வே

வேக்காடு பெ. வேகவைத்தல்.
வேகத்தடுப்பு பெ. வேகத்தடை.
வேகப்பந்து பெ. விரைவான பந்து ஆட்டம்.
வேகம்[1] பெ. 1.கடுமை. 2.கதி. 3.சினம்.
வேகம்[2] பெ. சுக்கிலம்.
வேகம்[3] பெ. 1.தீவிரம். 2.விரைவு.
வேங்கை பெ. புலிவகை.

வேசம்[1] பெ. உடை.

வேசம்[2] பெ. கதம்.

வேசம்[3] பெ. சம்பளம்.

வேசம்[4] பெ. வாயில்.

வேசம்[5] பெ. வீடு.

வேட்கை பெ. விருப்பம், அவா, பற்றுள்ளம்.

வேட்டல் பெ. விரும்புகை.

வேட்டி பெ. இடுப்பில் ஆண் அணியும் ஆடை.

வேட்டுவன் பெ. வேடன்.

வேட்டை பெ. பறவை முதலியவற்றை கொன்று கைக்கொள்ளுதல்.

வேட்பு மனு பெ. தேர்தலில் போட்டியிடுவதற்கு உரிய முறையில் விண்ணப்பிக்கும் மனு.

வேடதாரி பெ. 1.நாடகத்தில் வேடம் தாங்கியவர். 2.வெளிவேடம்போடுபவர்.

வேடம் பெ. 1.ஒப்பனை. 2.பாத்திரத்திற்கேற்ப செய்யும் ஒப்பனை. 3.பகட்டு.

வேடன் பெ. வேட்டையாடுபவன்.

வேண்டுகோள் பெ. ஒன்றைச் செய்யுமாறு நயந்து கேட்டல்.

வேண்டுதல் வி. பிராத்தனை செய்தல்.

வேணி[1] பெ. 1.சடை. 2.பின்னிய மயிர்.

வேணி[2] பெ. ஆறு.

வேணி[3] பெ. வசம்பு.

வேணி[4] பெ. நெஞ்சடை.

வேதம் பெ. மறை, திருக்கீதை, திருக்குறள், விவிலியம் முதலியவை.

வேறு பெ. வேறுபட்டது.

வேதவாக்கு பெ. மதிக்கத்தக்க சொல்.

வேதாளம் பெ. ஒரு வகைப்பேய்.

வேந்தர் பெ. மன்னர்.

வேந்தன்[1] பெ. 1.வியாழன். 2.சந்திரன். 3.சூரியன்.

வேந்தன்[2] பெ. 1.அரசன். 2.இந்திரன். 3.மன்னன்.

வேப்பெண்ணெய் பெ. வேப்பங்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்.

வேம்பு பெ. கசப்பான சொற்கள்.

வேய்[1] பெ. மூங்கில்.

வேய்[2] பெ. 1.கூரை அமைக்கை. 2.ஓடு வேய்கை.

வேர் பெ. 1.தாவர உடலின் கீழ்ப்பகுதி. 2.ஆணி வேர். 3.வெற்றிடவேர்.

வேலி பெ. பயிரைப் பாதுகாக்கப் போடப்படும் தடுப்பு முள்வேலி.

வேலை பெ. 1.பணி. 2.பணியிடம். 3.காரியம். 4.தொழில்நுட்பம்.

வேழம் பெ. யானை.

வேள்வி பெ. யாகம்.

வேனல்கட்டி பெ. கோடைக்காலத்தில் தோன்றும் தோல் கட்டி.

வை

வை பெ. ஒரு பொருளை வையென்னேவல்

வைகறை பெ. விடியற்காலை.

வைசியன் பெ. வணிகன்.

வைதல் பெ. கோபமாக ஒருவரை பழித்தல், திட்டுதல், சபித்தல் முதலான செயல்களைச் செய்தல்.

வைபவம் பெ. கொண்டாட்டம்.

வையகம்[1] பெ. 1.ஊர்தி. 2.சிவிகை. 3.சவாரவண்டி 4.குதிரை பூண்டிழுக்கும் இரதம்.

வையகம்[2] பெ. உரோகிணி நட்சத்திரம்.

வையகம்[3] பெ. 1.பூமி. 2.உலகம்.

வையகம்[4] பெ. வைக்கோல்வேய்ந்த வீடு.

வையத்து அமுது பெ. பூமியின் அமுதம்.

வையம் பெ. 1.பூமி. 2.உலகம். 3.ஊர். 4.இடம் .

வையைநாடவன் பெ. **பாண்டிய மன்னன்.** வையை ஆறு பாயும் பாண்டிய நாடு.

வைரவிழா பெ. ஒரு நிறுவனத்தில் அறுபது ஆண்டு நிறையும் பொழுது கொண்டாடப்படும் விழா.

வௌ

வௌவால் பெ. **ஒரு பறவை.** இதற்குப் பல்லிருத்தலால் மிருகங்களின் இனத்தில் ஒன்று என்று கூறுவரும் உளர்; இது இரவில் இறைதேடும் பாலூட்டி.

வௌவு பெ. கைப்பந்து.

ஆங்கிலச் சொல்

அட்டெண்டன்ஸ் – வருகைப்பதிவேடு
அப்ளிகேஷன் – விண்ணப்பம்
ஆக்ஸிடெண்ட் – நேர்ச்சி (விபத்து)
ஈவ்னிங் – மாலைநேரம்
எஞ்சினியர் – பொறியாளர்
ஃபேன் – மின்விசிறி
கம்ப்யூட்டர் – கணிப்பொறி, கணினி
கம்ப்யூட்டர்கோர்ஸ் – கணிப்பொறி படிப்பு
கரண்ட் – மின்சாரம்
காஃபி – குளம்பி
கார் – மகிழ்வுந்து
காலேஜ் – கல்லூரி
கான்வர்சேசன் – கலந்துரையாடல்
காஸ்ட்லி – மிகுந்த விலை மதிப்புள்ளது.
கிரைண்டர் – அரவை இயந்திரம்
கிளார்க் – எழுத்தர்
கூல்ட்ரிங்ஸ் – குளிர்பானம்
கேம்பிரிட்ஜ் – இங்கிலாந்திலுள்ள பல்கலைக் கழகம்
கோர்ட் – நீதிமன்றம்
சண்டே – ஞாயிறு(வாரத்தின் முதல்நாள்)
சயின்ஸ் – அறிவியல்
சாக்பீஸ் – சுண்ணக்கட்டி
சினிமா – திரைப்படம்
செக் – காசோலை
செல்போன் – அலைபேசி
சேக்ஸ்பியர் – ஆங்கில நாடக ஆசிரியர்
சேர் – நாற்காலி
டஸ்டர் – துடைப்பான்
டாடி – தகப்பன்
டாக்டர் – மருத்துவர்
டிக்கட் ரிசர்வ் – பயணச்சீட்டு முன்பதிவு
டிபன் – சிற்றுண்டி
டிராப்ஃட் – வரைவோலை
டிரான்ஸ்பர் – மாற்றுச் சான்றிதழ்
டீ – தேனீர்
டீ ஸ்டால் – தேனீர் விடுதி
டுமாரோ – நாளை
டைப்பிஸ்ட் – தட்டச்சர்
டெலஸ்கோப் – தொலைநோக்கி
டெலிபோன் – தொலைபேசி
டைப்ரைட்டர் – தட்டச்சுப் பொறி
தாலுக்காஆபிஸ் – வட்டாட்சியர் அலுவலகம்
தியேட்டர் – திரையரங்கு
தெர்மாமீட்டர் – வெப்பமானி
நம்பர் – எண்
நாலெட்ஜ் – அறிவு
நோட்புக் – குறிப்பேடு
பர்த்டே – பிறந்தநாள்
பஸ் – பேருந்து
பஸ் ஸ்டாப் – பேருந்து நிறுத்தம்
பஸ்ஸ்டாண்ட் – பேருந்து நிலையம்
பார்கிங் சார்ஜ் – அடைப்புக்கட்டணம்
பிரண்ட்ஸ் – நண்பர்கள்
பிரிஜ் – குளிர்பதனப் பெட்டி
பிலாஸ்டிக் – நெகிழி, இளகி
பிளாக்போர்டு – கரும்பலகை
பிளாட்பாரம் – நடைபாதை
பிளைட் – விமானம்
பெஞ்ச் – விசிப்பலகை
பேங்க் – வங்கி
போலீஸ் ஸ்டேசன் – காவல்நிலையம்
போஸ்ட்ஆபிஸ் – அஞ்சலகம்
மணியார்டர் – பணவிடை
மம்மி – அம்மா
மீட்டிங் – கூட்டம்
மீடியா – ஊடகம்
மேட்ச் – போட்டி
மைக்ராஸ்கோப் – நுண்ணோக்கி

யுனிவர்சிட்டி – பல்கலைக்கழகம்
ரிப்பேர் – பழுதடைதல்
ரிமோட் – இயக்கி
ரிஜிஸ்டர் போஸ்ட் – பதிவு அஞ்சல்
லாரி – சுமையுந்து, சரக்குந்து
லெட்ஜர் – பேரேடு
லைட் – விளக்கு
வேன் – மூடுந்து
ஸ்கூல் – பள்ளிக்கூடம்
ஸ்காலர்ஷிப் – உதவித்தொகை
ஸ்பீக்கர் – ஒலிப்பெருக்கி
ஜெராக்ஸ் – ஒளிப்படி
ஹாஸ்டல் – விடுதி
ஹேப்பி – மகிழ்ச்சி
ஹோட்டல் – உணவகம்

இலக்கணம்
எழுத்து-1

எழுதப்படுதலின் எழுத்தாயிற்று. இது சொற்கள் உண்டாவதற்குக் காரணமாய் அமையும் வரிவடிவமாகும்.

தமிழில் உள்ள முதல் எழுத்துக்கள் மொத்தம் -30

1.உயிர் எழுத்துக்கள் -12

2.மெய் எழுத்துக்கள் -18

3. உயிர்+மெய் = உயிர்மெய் எழுத்துக்கள் 12+18=30

எ.கா. உயிர் எழுத்துக்கள் அ முதல் ஔ வரை -12

மெய்யெழுத்துக்கள் க முதல் ன் -18

உயிர்மெய் எழுத்துக்கள் உயிரும் மெய்யும் இணைந்த எழுத்துக்கள்

எ.கா. க என்ற எழுத்தில் **க் + அ** என்று மெய்யெழுத்தும் உயிர் எழுத்தும் இணைந்திருப்பதைக் காணலாம்.

இந்த உயிரும் மெய்யும் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் மொத்தம் -216

ஆய்த எழுத்து ஃ 1

ஆக தமிழ் எழுத்துக்கள் மொத்தம் - 247

உயிர் எழுத்து	- 12
மெய் எழுத்து	- 18
உயிர்மெய்	- 216
ஆய்த எழுத்து	- 1
மொத்தம்	**247**

உயிர்மெய் எழுத்துக்களில் சில எழுத்துக்கள் பயன்படுவதில்லை **ங, ஞு** போன்ற எழுத்துக்களை நாம் பயன்படுத்துவதில்லை.

எழுத்துக்கள் குறில்,நெடில் என்ற இருவகையில் ஒலிக்கப்பெறுகின்றன.

க என்ற உயிர்மெய் குறில் என்றும்,

கா என்ற உயிர்மெய் நெடில் என்றும்

அதேபோல் உயிர் எழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறில் என்று ஒலிக்கப்பெறுகின்றன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துக்களும் நெடில் எழுத்துக்கள் எனப்படும். குறில் எழுத்துக்கள் குறுகியும், நெடில் எழுத்துக்கள் நீட்டியும் உச்சரிக்கப்படுகின்றன. உயிர்மெய் எழுத்துக்களிலும் அவ்வாறே அறிந்து கொள்க.

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குறில் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களோடு சேரும்போது உயிர் மெய்க்குறில் எழுத்துக்கள் உண்டாகின்றன.

எ.கா. கடல், நிலவு

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெடில் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களோடு சேரும்போது உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் உண்டாகின்றன.

எ.கா. கோவில், மாலை, ஆட்டம் போல்வன.

எழுத்துக்களும் உறவும்

எழுத்துக்களின் உறவு மூன்று நிலைகளில் உள்ளன.

1. தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துக்கள்
2. தன் எழுத்துக்களுடன் சேராது பிற எழுத்துக்களுடன் சேரும் எழுத்துக்கள்
3. தன்னுடனும் பிற எழுத்துக்களுடனும் சேரும் எழுத்துக்கள்

1.தன்னுடன் மட்டும் சேரும் எழுத்துக்கள்:

க், ச், த், ப் ஆகிய மெய் எழுத்துக்கள் தன் எழுத்துக்களுடன் மட்டும் சேர்ந்து வரும். எ.கா. அக்கம், பக்கம், மொத்தம் இதில் **க்** என்ற மெய்யெழுத்து பக்கத்தில் உள்ள க என்ற எழுத்துடன் சேர்ந்து வருகிறது. மொத்தம் என்பதில் உள்ள **த்** என்ற மெய்யெழுத்து **த** என்ற (த்+அ)எழுத்துடன் சேர்ந்து வருகிறது.

2. தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும் எழுத்துக்கள்

எ.கா. வாழ்க்கை, சார்பு

ழ், ர் என்ற மெய் எழுத்துக்கள் தன் எழுத்துடன் வராது ர் என்பதன் அருகில் க் என்பதும் ந் என்பதன் அருகில் ப் (பு = ப்+உ) என்ற வேற்று எழுத்துடனும் வந்ததைக் காணலாம்.

3. தன்னுடனும் பிறனுடனும் சேர்ந்து வரும் எழுத்துக்கள்

எ.கா. சுற்றம், கன்னம், இதில் **ற்** என்ற எழுத்து அருகில் தனதொத்த **ற** என்பதுடன் தனது அல்லாது ***ம்*** என்பதுடனும் வந்துள்ளதை அறியவும். **கன்னம்** என்பதில் உள்ள ***ன்*** தனது ஒத்த **ன** னுடனும் (ன் + அ) வேற்று எழுத்தாகிய ம் என்ற எழுத்துடனும் சேர்ந்து வருகிறது.

சுட்டுச் சொற்கள்

குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ குறிப்பிட்டுச் சொல்ல உதவும் சொல் சுட்டுச்சொற்கள் ஆகின்றன. அ, இ, உ என்ற மூன்றும் சுட்டுச் சொற்கள் ஆகும்.

அ – அவன் தான் திருடினான்
இ – இவன் தான் திட்டினான்
உ – என்ற் சுட்டுச்சொல் பழங்காலத்தில் பழக்கத்தில் இருந்தது.
உதுக்காண் – என்றால் சற்று தூரத்தில் பார் என்று பொருள்.
உப்பக்கம் என்றால் முதுகு பக்கம் என்பது பொருள்.

உம்பர் என்றால் மேலே என்று பொருள். ஆனால் தற்போது **உ** என்னும் சுட்டு எழுத்தினை பயன்படுத்துவது இல்லை.

அ, இ, என்னும் சுட்டெழுத்துக்கள் தனியே நின்று சுட்டும்போது ஆண்பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன. எ.கா. அது, இது, அந்த, இந்த போல்வன.

அவன், இவள், அவை, இவை என்றே சுட்டும்போது ஆண், பெண், வேற்றுமைகளைப் புலப்படுத்துகின்றன. மேலும், அவள், இவள் என்கின்ற போது உயர்திணையினையும் அவை, இவை என்கின்ற போது அஃறிணையையும் புலப்படுத்துகின்றன.

உயர்திணை - மக்கள் தேவர்

அஃறிணை - மற்றவை எல்லாம்

1. மாத்திரை

இலக்கணத்தில் மாத்திரை என்பது எழுத்துக்களின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல்.

மாத்திரையின் கால அளவு கண் சிமிட்டும் நேரம் அல்லது விரல் சொடுக்கும் நேரம்.

எழுத்துக்களின் மாத்திரைகள்

மெய்யெழுத்து	- அரை மாத்திரை
உயிர்எழுத்து (குறிலுக்கு)	- ஒரு மாத்திரை
உயிரெழுத்து (நெடிலுக்கு)	- இரண்டு மாத்திரை
உயிர்மெய் குறில்	- ஒன்னரை மாத்திரை
உயிர் மெய் நெடில்	- இரண்டரை மாத்திரை

இந்த அளவைத் தாண்டும் போது **அளபெடை** என்றாகிறது.

அளபெடை

எழுத்துக்கள் தன் மாத்திரையிலிருந்து நீட்டி ஒலிப்பது **அளபெடை** எனப்படும். உப்பு என்ற சொல்லை உப்போ உப்பூ உஉஉ என்றே நீட்டி ஒலிப்பது அளபெடை ஆகின்றது.

அளபெடை இரண்டு வகைப்படும்

1. உயிரளபெடை, 2. ஒற்றளபெடை என்பன.

உயிர் எழுத்துக்களை நீட்டி ஒலிப்பது உயிரளபெடை. எ.கா.உப்பூ உ உ உ

2. ஒற்றெழுத்து அதாவது மெய்யெழுத்து நீண்டு ஒலித்தால் அது ஒற்றளபெடை ஆகும்.

எ.கா. நீ சொல்வது பொய்ய்ய் என்றே அழுத்தம் கொடுத்து நீண்டு ஒலிப்பதால் அது ஒற்றளபெடை ஆயிற்று.

எழுத்துக்க்ளின் பிறப்பு

எழுத்துக்கள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள்.

உயிருள்ள உடம்பினுள்ளே எழுகின்ற காற்று, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி உதடு, நாக்கு, பல்மேல்வாய் (அண்ணம்) ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துக்கள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும் உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் கூறுவர்.

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் முதலெழுத்துக்கள் எனப்படும். மெய்யெழுத்துக்களை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி என்பன.

முதலெழுத்துக்களின் இடப்பிறப்பு

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், இடையின எழுத்துக்கள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.

மெல்லின எழுத்துக்கள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன. வல்லின எழுத்துக்கள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

முதலெழுத்துக்களின் முயற்சிப்பிறப்பு

அ) உயிர் - பன்னிரண்டு

அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன. அங்காப்பு வாயைத் திறத்தல்.

இ,ஈ,எ,ஏ,ஐ ஆகிய ஐந்து எழுத்தும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதினால் தோன்றுகின்றன.

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடை குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

ஆ) மெய் பதினெட்டு

க், ங் -இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
ச், ஞ் -இவ்விரு மெய்களும் இடைநா (நடுநா) நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
ட், ண் -இவை நாவினது நுனி, அண்ணத்தினது நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
(நா-நாக்கு; அண்ணம் - மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் -க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும்/ பின்வரும் நூற்பாக்களிலுள்ளவற்றையும் இவ்வாறே கொள்க.)
த், ந் - மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துக்கள் தோன்றுகின்றன.
ப், ம் - மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த இவை தோன்றும்.
ய் - இது நாக்கினது அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியோடு பொருந்துவதனால் தோன்றுகிறது.
ர், ழ் - இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
ல் - இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவினது ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
ள்- இது மேல்வாயை நாவினது ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.
வ் - இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.
ற், ன் - இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றது.

சார்பெழுத்துக்களின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும்.

பிற சார்பெழுத்துக்கள் யாவும் தத்தம் முதலெழுத்துக்கள் தோன்றுதற்குரிய இடத்தினையும் அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

எண்

ஒருமை, பன்மை என எண் இரு வகைப்படும், ஒன்றைக் குறிப்பது ஒருமை ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

எ.கா. பூ - ஒருமை
பூக்கள் - பன்மை
மாணவன் - ஒருமை
மாணவர்கள் - பன்மை

பெயர் ஒருமையில் இருந்தால் வினை முடிபும் ஒருமையிலேயே இருக்கவேண்டும்.

எ.கா. திருமகள் வந்தாள்.

பெயர் பன்மையில் இருந்தால் வினை முடிபும் பன்மையிலேயே இருக்கவேண்டும்.

எ.கா. மாணவர்கள் வந்தனர்.

இடம் : தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

நான் - தன்மை என்பது தன்னைக்குறிப்பது
நீ - முன்னிலை - என்பது முன்னால் இருப்பவரைக் குறிப்பது
அவர் - படர்க்கை - தன்மை முன்னிலை அல்லாத மற்றவரைக் குறிப்பது.

எ.கா. நான், அவர் வீட்டுக்கு போனேன் நீயேன் வரவில்லை.

தன்மை ஒருமையில் வரும்போது நான், **நீ** என்பது போன்றும் பன்மையில் வரும்போது நாங்கள், நீங்கள் என்பது போலவும் வரவேண்டும். ஒவ்வொரு இடமும் அதற்கேற்ப வினை முடிவை பெறவேண்டும். **நான்** என்றே தன்மையில் வந்தால் வினைமுடிவில் வரும்போது வந்தேன் என்றோ பன்மையில் வந்தால் நாங்கள் வந்தோம் என்றோ வருதல் வேண்டும். அவ்வாறே படர்க்கையிலும் அவர் வந்தார் என்று தன்மையிலும் அவர்கள் என்றபோது வந்தார்***கள்*** என்று பன்மையிலும் வருதல் வேண்டும்.

1.ஐகாரக்குறுக்கம்

ஐ என்ற உயிர் எழுத்தினை தனியாக உச்சரிக்கும்பொழுது அதற்கு 2 மாத்திரை அளவாகிறது. அதுவே சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும், வரப்பெறும்போது தனது 2 மாத்திரையிலிருந்து 1 1/2 மாத்திரையாக அளவு குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிப்பதால் ஐகார குறுக்கம் ஆயிற்று.

எ.கா. ஐம்பது - முதலில் குறைந்து ஒலிப்பது
தலைவன் - இடையில் குறைந்து ஒலிப்பது
கடலை - இறுதியில் குறைந்து ஒலிப்பது

2 ஔகாரக் குறுக்கம்

ஔ என்னும் நெட்டெழுத்து ஐ என்னும் நெட்டெழுத்தைப் போலவே தனியாக ஒலிக்கும்போது தனது மாத்திரை அளவில் இருந்து குறையாது 2 மாத்திரை அளவிலே ஒலிக்கும். சொல்லுக்கு முதலில் வரும்போது தனது மாத்திரை அளவிலிருந்து குறைந்து 1, 1/2 மாத்திரையாக ஒலிக்கும். இது முதலில் மட்டும் குறுகும் இடை, கடையில் வராது.

எ.கா. கௌவுதல் , ஔவை

3.மகரக்குறுக்கம்

ம் என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது மகர குறுக்கம் ஆகும். ம் என்னும் மெய்யெழுத்திற்கு 1/2 மாத்திரை அது தன் 1/2 மாத்திரை அளவிலிருந்து குறைந்து 1/4 மாத்திரையாக ஒலிக்கும்.

எ.கா. போலும் - போன்ம்

மருளும் - மருள்ம்

செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர இறுதியைக் கொண்ட சொற்கள் ஈறயலில் (இறுதி எழுத்துக்கும் முன் உள்ள எழுத்து) உள்ள (ஓ, ல்+உ) உகரம் கெட்டு போல்ம் மருள்ம் என்றே வரும்.

இந்த மகரங்கள் தனது 1/2 மாத்திரை அளவிலிருந்து குறைந்து 1/4 மாத்திரை அளவுள்ளதாக ஒலிக்கும்.

அதேபோல் ம கரம் இறுதியாக நிலைமொழியில் இருக்க வரும்மொழியின் முதற் எழுத்து வ கரமாக இருந்தால் நிலை மொழியில் உள்ள மகரம் குறைந்து ஒலிக்கும்.

எ.கா. வரும்வண்டி - வரும் + வண்டி. நிலைமொழியில் வரும் என்ற சொல் உள்ளது. அந்தச் சொல்லின் இறுதியில் ம் என்னும் மகர எழுத்து உள்ளது. வரும்மொழியில் வண்டி என்ற சொல் இருக்கிறது. முதல் எழுத்து வ என்பது அதாவது வகரச் சொல் வந்துள்ளது.

வரும் + வண்டி = வரும் வண்டி

நிலைமொழி + வருமொழி

நிலைமொழியில் இருக்கிறது - ம் + வ் வருமொழியில் உள்ளது (வ்+அ=வ) இவ்வாறு வரப்பெறினும் மகரம் குறுகும்.

4. ஆய்த குறுக்கம்

ஆய்த எழுத்து ஃ என்பது.

அது தன் மாத்திரையாகிய 1/2 மாத்திரையிலிருந்து 1/4 மாத்திரையாக குறைந்து ஒலிக்கும்.

நிலைமொழியில் தனிக்குறில் எழுத்திற்கு அடுத்து வரும் ல, ள என்னும் எழுத்துக்கள் வரும்மொழியில் (த்) தகரம் வந்தால் த என்ற எழுத்தோடு சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் மாத்திரையாகிய 1/2 மாத்திரையிலிருந்து 1/4 மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இதுவே ஆய்த குறுக்கம் எனப்படும்.

எ.கா. கல்+ தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

இங்கு க என்னும் குறில் எழுத்திற்கு பிறகு வந்த லகரம் அதேபோல மு என்ற குறில் எழுத்திற்கு பின் வந்த ள என்ற எழுத்து வரும்மொழியில் உள்ள தீது என்பதில் (தீ = த்+ஈ) உள்ள தகரத்துடன் இணையும்போது இடையில் ஃ என்ற ஆய்த எழுத்துத் தோன்றி ஒலிக்கப்படுகிறது.

நிலைமொழி - கல் + தீது = = கஃறீது - வருமொழி

நிலைமொழி - முள் + தீது = முஃடீது - வருமொழி

வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கு ஏற்ப (ற்) றகரமாகவும் (ட்) டகரமாகவும் மாறி புணர்ந்து வரும்.

கல் + தீது = = கஃறீது - றகரம்

முள் + தீது = முஃடீது - டகரம்

அடி

சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும். இது ஐவகைப்படும். 1.குறளடி, 2.சிந்தடி, 3.அளவடி, 4.நெடிலடி, 5.கழி நெடிலடி என்பன.

1.குறளடி

அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது. குறளடி எனப்படும்.

எ.கா. கண்ணா கண்ணா
காவிய வண்ணா
உறக்கம் என்ன

2.சிந்தடி

அடிதோறும் மூன்று சீர்களால் வருவது.

எ.கா. குயிலே குயிலே குயிலக்கா
கூட்டுக் குள்ளே யாரக்கா

3.அளவடி

அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது. இது அளவடி அல்லது நேரடி என்று பெயர்பெறும்.

எ.கா. நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ
நெஞ்சில் நினைத்ததிலே நடந்ததுதான் எத்தனையோ

4.நெடிலடி

அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது.

எ.கா. நீடும் குடப்பைத் தறித்த பிரானித்த நீர்நிலத்தில்
பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பாதம்புயத்தை

5.கழி நெடிலடி

அடிதோறும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைப் பெற்று வருவது.

எ.கா. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை

தாமார்க்கும் குடியல்லாத் தம்மை யாலி
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க (தேவாரம்; திருநாவுக்கரசர்)

இப்பாடல் அடிதோறும் 8 சீர்கள் வரப்பெற்று பாடப்பெற்றுள்ளது. ஆறும் அதற்கு மேல் வரும் சீர்கள் அந்த அந்த சீரின் எண்ணிக்கையை வைத்து குறிக்கப்பெறும். அறுசீர் என்றால் அறுசீர் கழிநெடிலடி எட்டுசீர் என்றால் எண்சீர்கழிநெடிலடி என்பது போலாம்.

தொடை

மலர்களைத் தொடுப்பது போல சீர்களிலும் அடிகளிலும் மோனை, எதுகை வரத் தொடுக்கப்பெறுவது தொடை எனப்படும்.

தொடை - தொடுக்கப்படுவது.

பாடலின் ஓசையின்பத்திற்காக தொடை என்பது வேண்டப்படுகிறது. தொடை எட்டு வகைப்படும்.

1. மோனைத் தொடை, 2.எதுகைத் தொடை, 3.முரண்தொடை, 4.இயைபுத் தொடை, 5. அளபெடைத் தொடை, 6. ரெட்டைத் தொடை, 7.அந்தாதித் தொடை, 8. செந்தொடை என்பன.

1.மோனைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத்தொடை ஆகும்.

எ.கா. கண்ணிலே அன்பிருந் தால்
கல்லிலே தெய்வம் வரும்

இப்பாடலின் முதல் அடியின் முதல் சீரில் உள்ள எழுத்து க என்பது. இரண்டாம் அடியில் முதல் எழுத்து க என்பது. இவ்வாறு அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவதால் மோனைத்தொடை ஆகும். அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரப்பெற்றால் அடி மோனை எனப்படும்.

2.எதுகைத் தொடை

அடிதோறும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவரப் பாடப்படுவது எதுகைத்தொடை ஆகும்.

எ.கா. கற்றதனால் ஆயபய னென்கொல் வாலறிவன்
நற்றா தொழார் எனின்

இதில் அடிதோறும் உள்ள இரண்டாம் எழுத்து *ற்* என்பது ஒன்றிவரப் பாடப்பெற்றுள்ளது.

3.முரண்தொடை

அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்யென்பான்
துன்பம் உறுதல் இலன் (குறுந்.628)

முதல் அடியில் இன்பம் என்றும் இரண்டாம் அடியில் அதற்கு முரண்பாடான துன்பம் என்பது வரப்பெற்றுள்ளதால் இது முரண்தொடை ஆயிற்று.

4.இயைபுத் தொடை

அடிதோறும் இறுதி சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை எனப்படும்.

நாடு அதை நாடு
நாடாவிட்டால் ஏது வீடு

5.அளபெடைத் தொடை

அடிதோறும் முதல்சீர் அளவெடுத்து வருவது அளபெடைத்தொடை.

எ.கா. **கொடுப்பதூஉம்** கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை *(குறள்.15)*

இப்பாடலில் கொடுப்பதுவும் எடுப்பதூவும் என்பது அளவு எடுத்து கொடுப்பதூஉம் எடுப்பதூஉம் என்றே நீண்டு வந்துள்ளதான அடிதோறும் அளபெடுத்து வந்துள்ளதால் அடி அளபெடைத்தொடை ஆகும்.

தொடை விகற்பங்கள்

தொடை விகற்பங்கள் 35 வகைப்படும். நான்கு சீர்களை உடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒருஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்வேழும் மோனை, எதுகை, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் 35 வகைப்படும்.

இணைமோனை

ஓரடியில் முதல் இரண்டு சீர்களின் முதல் எழுத்துகளும் ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

எ.கா. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல *(குறள்.4)*

பொழிப்பு மோனை (1, 3)

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு மோனை ஆகும்.

எ.கா. அன்னமிட்ட கைகளுக்கு அன்பு செய்த கண்களுக்கு

உன்னைவிட்டு போவதற்கு உள்ளமில்லை மகளே

முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவந்துள்ளது.

ஒருஉ மோனை (1,4)

ஓர் அடியுள் முதல் சீரிலும் நான்காம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது ஒருஉ மோனை எனப்படும்.

எ.கா. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டி விடும் (குறள்.28)

கூழை மோனை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல் இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழை மோனை எனப்படும்.

எ.கா. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்

வானம் வழங்கா தெனின் (குறள்.19)

மேற்கதுவாய் மோனை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல் மூன்று நான்காம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **மேற்கதுவாய் மோனை** எனப்படும்.

எ.கா. **வி**ண்ணின்று பொய்ப்பின் **வி**ரிநீர் **வி**யனுலகத்

துள்நின்று டற்றும் பசி (குறள்.13)

கீழ்க்கதுவாய் மோனை (1, 2, 4)

ஓரடியுள் முதல், இரண்டு நான்காம் சீர்களில் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **கீழ்க்கதுவாய் மோனை** எனப்படும்.

எ.கா. **இ**ருள்சேர் **இ**ருவினையும் சேரா **இ**றைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள்.5)

முற்றுமோனை (1,2,3,4)

ஓர் அடியின் நான்கு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **முற்றுமோனை** எனப்படும்.

எ.கா. **க**ற்க **க**சடறக் **க**ற்பவை **க**ற்றபின்

நிற்க அதற்குத் தக (குறள்.391)

குறிப்பு : நான்கு சீர்களில் மோனைக்குரிய விகற்பங்கள் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழிற்கும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது போலவே எதுகையும் வரும்.

எதுகைத்தொடை

1.இணை எதுகை (1, 2)

முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **இணை எதுகை** எனப்படும்.

எ.கா. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள்.225)

2. பொழிப்பு எதுகை (1, 3)

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

எ.கா. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்

மல்லல்மா ஞாலம் கரி (குறள்.245)

3. ஒரூஉ எதுகை (1, 4)

ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **ஒரூஉ எதுகை** எனப்படும்.

எ.கா. அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்

கிவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள்.247)

4.கூழை எதுகை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்று சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

எ.கா. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள்.350)

5.மேற்கதுவாய் எதுகை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல், மூன்று, நான்கு சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

எ.கா. அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்
பிற்பயக்கும் நற்பலா லவை (குறள்.659)

6.கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4)

ஓர் அடியுள் முதல், இரண்டு, நான்கு சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

எ.கா. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (குறள்.629)

7.முற்றெதுகை (1, 2, 3, 4)

ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **முற்றெதுகை** எனப்படும்.

எ.கா. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை (குறள்.12)

உவம உருபுகள்

ஒரு பொருளை சிறப்பித்துக் கூற அதனைவிட சிறந்த வேறொரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறுதலே உவமித்துக்கூறுதல் எனப்படும். சிறப்பிக்கும்பொருள் உவமேயம் எனவும் அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் உவமம் எனவும் பெயர் பெறும். இதனை உவமானம் என்றும் அழைக்கப்பெறும். உவமை உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு உவமஉருபு எனப்படும்.

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே (நன்னூல் - 367)

உவம உருபு -	**தொடர்**
1. போல -	மான்போல ஓடினாள்

2.புரைய - வேய்புரைய தோள் (மூங்கிலை ஒத்த தோள்)
3.ஒப்ப - தந்தை ஒப்ப மகன்குணம்
4.உறபு - முடிவு உறபு தடக்கை
5.அன்ன - மலரன்ன சேவடி

விரியுவமை

உவமை உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இது உவமைத் தொடர் என்று பெயர் பெறும்.

எ.கா. தேன் போன்ற மொழி, இத்தொடரில்

தேன் - உவமை
மொழி - உவமேயம்
போன்ற - உவமஉருபு

உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இது விரியுவமை எனப்படும்.

தொகையுவமை

உவமை, உவமேயம் ஆகிய இரண்டினுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்தால் அது தொகையுவமை என்பதாகும்.
எ.கா. தேன்மொழி - இடையில் போன்ற என்ற உவம உருபு இல்லை.

உவமை உருவக மாற்றம்

உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவது உருவகம் எனப்படும்.

எ.கா.

பவளவாய் என்பதில் பவளம் போன்ற வாய் என்பதாய் உவமைப்படுத்தி கூறப்பட்டுள்ளது விளங்கும். இதனையே வாய்ப்பவளம் என்றே கூறும்போது உவமை உவமேயம் என்றே பிரித்துப் பார்க்கமுடியாது வாயே பவளம் எனப் பொருள் உணர்த்துவதாய் அமைந்துள்ளதால் இது உருவகம் ஆயிற்று.

எ.கா.	உவமை	உருவகம்
	அமுதமொழி	மொழியமுது
	(அமுதம்போன்ற மொழி)	(அமுதே மொழி)
	மலரடி (மலர்போன்ற அடி)	அடிமலர் (அடியே மலர்)

சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள் தரும் பலச்சொற்கள்.

பதம் - பகுபதம் (பகுக்கவியலும் பதம்)

மொழி - தனிமொழி, தொடர் மொழி, பொதுமொழி

கிளவி - இரட்டைக்கிளவி (இரட்டைச்சொல்)

எ.கா. ஓரெழுத்து ஒரு சொல்

1. பூ - மலர்
2. கா - சோலை
3. ஈ - ஒரு சிறுபறையினம்
4. வா - அழைக்கும் குறிப்பு
5. கை - உறுப்பு

பல எழுத்துக்கள் தொடர்ந்த சொற்கள்

1. கண்
2. மக்கள்
3. படகு
4. நடந்தனர்
5. சாப்பிட்டனர்

இயற்சொல்

பெயர், வினை, இடை, உரி என்பன இயற்சொல்: எல்லோருக்கும் பொருள் விளங்கும் வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச் சொல் இயற்சொல் எனப்படும். இது பெயர் இயற் சொல் வினை இயற்சொல் என இரண்டு வகைப்படும்.

எ.கா. காற்று, நிலவு, மலர், போல்வன

எளிதில் பொருள் விளங்கும் பெயர்ச்சொற்கள் இவற்றை பெயர் இயற்சொல் என்பர். படித்தான் நடந்தான் தூங்கினான் என்பது போல் வரும் வினையை (தொழில்) குறிக்கும் சொற்கள் வினை இயற்சொல் என

உரிச்சொல்

கற்றவர்களுக்கு மட்டுமே பொருள் விளங்கும்படி இருக்கும் சொற்கள், பீலி, உகிர், போன்றவாறு உள்ள சொற்களுக்கு பொருள் நன்கு கற்றறிந்தால் மட்டுமே அறியவரும் பீலி என்றால்

மயிலிறகு, உகிர் என்றால் நகம் என்றே பொருள் அறிந்தவர்களால் மட்டுமே சொல்ல இயலும். இதுபோன்ற சொற்கள் உரிச்சொல் அல்லது திரி சொல் எனப்படும்.

1. பெயர் உரிச்சொல் 2. வினை உரிச்சொல் என்றே இவையும் இரண்டு வகைப்படும் .

எ.கா.

எயிறு – பால்

வேய் – மூங்கில்

மடி – சோம்பல்

நல்குறவு – வறுமை

வினவினான் – கேட்டான்

விளித்தான் – அழைத்தான்

சொற்கள் வினைஉரிசொல் என்றும் பெயர்பெறும்.

திசைச்சொல்

தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் தமிழில் வழங்கும் சொற்கள் அப்பகுதியிலிருந்து தமிழில் வழங்கப்பெறும். இவை திசைச்சொற்கள் எனப்படும்.

கேணி – கிணறு

பெற்றம் – பசு

வடசொல்

சமசுகிருத சொற்கள் சில தமிழில் பேச்சுவழக்கில் நடைமுறைக்கு வந்துள்ளன. அவைகள் வடசொல் எனப்படும்.

எ.கா. கமலம் – தாமரை

விஷம் (விடம்) – நஞ்சு

புஷ்பம் (புட்பம்) – மலர்

இவ்வாறு வடமொழி சொற்கள் திரிந்தும் திரியாமலும் வந்து வழங்கப்பெறும். அவைகள் வடசொல் என்று அழைக்கப்படுகின்றன.

வழக்கு

முன்னோர்கள் எந்தச் சொல்லை வழங்கிவந்தார்களோ அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு வழக்கு என்று பெயர். இது இரண்டு வகைப்படும் 1. இயல்பு வழக்கு, 2. தகுதி வழக்கு என்பன.

இயல்பு வழக்கு

ஒரு பொருளைச் சுட்டுவதற்கு எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ அந்தச் சொல்லாலேயே வழங்குவதை இயல்பு வழக்கு எனப்படும். இது மூன்று வகைப்படும்.

1.இலக்கண முடையது 2.இலக்கண போலி 3.மரூஉ என்பன.

இலக்கணமுடையது

இலக்கண பிழை இல்லாமல் வழங்கி வருவதே இலக்கணமுடையது ஆகும்.

எ.கா. கண்ணன் குழல் ஊதினான். இத்தொடர் இலக்கணப்பிழை இன்றியே அமைந்துள்ளது எனவே இது இலக்கணமுடையது ஆகும்.

இலக்கணப்போலி

இலக்கணம் இல்லாததை நம் முன்னோர்கள் இலக்கணம் உள்ளது போல் வழங்கி வந்தனர். அது இலக்கண போலி எனப்படும்.

எ.கா.

நகர்புறம், கால்வாய், கொம்பு நுனி போன்ற இலக்கணமுடைய சொற்களை புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு என்றே நம் முன்னோர்கள் மாற்றி வழங்கி வந்தனர். இது போன்றவைகளே இலக்கண போலி எனப்படும்.

மரூஉ

இயல்பாய் உள்ள சொற்கள் சற்றே சிதைந்து அழைக்கப்படுவதுண்டு. அவைகள் மரூஉ சொற்கள் எனப்படும்.

எ.கா.

தஞ்சாவூர் என்ற சொல்லை தஞ்சை என்றும் கோயமுத்தூரை கோவை என்றும் மருவி அழைக்கின்றோம் இவை போன்றவைகளே மரூஉ சொற்கள் ஆகின்றன.

தகுதி வழக்கு

ஒன்றனுக்கு ஏற்ற தகுதியான சொற்களைப் பேசுவது தகுதி வழக்கு எனப்படும். அவை மூன்று வகைப்படும். 1. இடக்கரடக்கல் 2. மங்கலம் 3. குழுவுக்குறி என்பன.

இடக்கரடக்கல்

பலர் முன்னே கூறுவதற்கு இடர்பாடாக இருக்கும் சொற்களை அதற்கான தகுந்த சொற்களால் கூறுவது இடக்கரடக்கல் எனப்படும்.

எ.கா. மலம் கழித்து வருவதை கால்கழுவி வந்தேன் என்றல்.

மங்கலம்

அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொற்களால் கூறுவது

எ.கா. செத்தாரை துஞ்சினார் என்றல், அல்லது இயற்கை எய்தினார் என்றல்.

குழுஉக்குறி

ஒரு குழுவினருக்கு மட்டுமே புரிந்து கொள்ளும்படியாக இரகசியமாக வைத்து பேசும் சொற்கள்.

பொற்கொல்லர் பொன்னை - பறி என்று கூறுவது

(பறி என்றால் பொன் என்பதாய் பொற்கொல்லர்கள் மட்டுமே பயன்படுத்தி பேசுவர்.)

மூவகை மொழிகள்

1. தனிமொழி
2. தொடர்மொழி
3. பொதுமொழி

தனிமொழி : ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி.

எ.கா. ஆ- பசு

தா - கொடு என்று கேட்கும் சொல்.

தொடர்மொழி

ஒன்று அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது.

எ.கா. 1. கடவுளைக் கண்டேன்

2.தருமம் செய்வது நல்லகுணம்

பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அதுவே வேறு சொற்களுடன் இணைந்து நின்று வேறு பொருளையும் தருவது பொது மொழி.

எ.கா. அந்தமான், பலகை.

1.அந்தமான் என்பது ஒரு தீவையும் அச்சொல்லே அந்த+மான் எனப் பிரிந்து நின்று அந்தமான் (விலங்கு) வேறு பொருளையும் தருகின்றது.

2. பலகை என்பது மரத்தினால் செய்யப்பட்ட ஆசனத்தையும் அதுவே பல+கை என்று பிரிந்து பல கைகள் என்றே பொருள் தருவதாயும் அமைகிறது.

வினைச்சொல்

ஒரு செயலைக் (வினை) குறிப்பது வினைச்சொல் எனப்படும்.

எ.கா. அப்துல்கலாம் வந்தார்.

இதில் வந்தார் எனும் வினைச்சொல் வருதல் என்னும் செயலைக் காட்டுகின்றது. இவ்வாறு செயல்களைக் குறிப்பதாய் அமையும் சொற்கள் வினைச்சொற்கள் ஆகின்றன.

வினை முற்று

தன் பொருளில் முற்றுப் பெற்று வந்துள்ள வினைச் சொற்கள் வினை முற்று எனப்படும்.

வந்தான் சாப்பிட்டான், என்பதில் வினையானது தன் அளவில் முற்றுப் பெற்றிருப்பதை அறியலாம்.

வினை முற்றானது எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும் முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும். திணை, பால், எண், இடங்களைக் காட்டும் இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று , குறிப்பு வினைமுற்று என்றே இரண்டு வகைப்படும்.

தெரிநிலை வினைமுற்று

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம் செய்பொருள் எனும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிவினை வினைமுற்று எனப்படும்.

எ.கா. உழுதான்

செய்பவன்	- உழவன்
கருவி	- கலப்பை
நிலம்	- வயல்
செயல்	- உழுதல்
காலம்	- இறந்தகாலம்
செய்பொருள்	- நெல்

குறிப்பு வினைமுற்று

பொருள் முதல் ஆறனையும் அடிப்படையாகக்கொண்டு முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தில் ஒன்றை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும். பொருளைக் காட்டுவது (எ.கா.) அவன் பொன்னன்.

பொன்னை உடையவன் ஆதலால் பொன்னனை என்றே பொருளைக் காட்டி நின்றது.

இடம்: அவன் காஞ்சிபுரத்தான்.

காஞ்சிபுரம் என்ற இடத்தின் வழி ஆள் குறிக்கப்பட்டது.

காலம் : சித்திரையாள்

சித்திரையில் பிறந்ததால் சித்திரையாள் என்று சொல்வதுண்டு. இங்கு சித்திரை என்ற மாதம் காலத்தைக் குறித்து கர்த்தா (ஆள்) உணர்த்தப்பட்டது.

சினை (உறுப்பு) அவன் கரிகாலன்.

கருமையான காலை கொண்டுள்ளதால் அவன் கரிகாலன் என்றே அழைக்கப்படுகின்றான். அவனது காலாகிய உறுப்பை வைத்துக் கூறப்பட்டது.

குணம் : அவன் பொல்லான்

பொல்லாத இயல்புகளை உடையதால் பொல்லான் எனப்பட்டான். குணத்தைக் குறித்து கர்த்தா உணர்த்தப்பட்டது.

தொழில் : அவன் கள்வன்.

களவு தொழில் செய்ததால் கள்வன் என்றே தொழில் வைத்துக் குறிக்கப்பெற்றது. அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பொன்னன் என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னனை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

எச்சம் : வினை முற்றின் விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும். படித்தான், சிரித்தாள் என்பன வினை முற்றுகள், இந்த வினை முற்றுகள் சில இடங்களில் ஆன், ஆள், போன்ற விகுதிகள் குறைந்து வரும். எச்சங்கள் பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள ஆறு வகைப்படும். அவை,

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்பன.

பகுபதத்தில் முதலில் நின்று பொருள்தரும். இதனை முதனிலை பகுதி என்றும் அழைக்கப்படும். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாகவே வரும்.

படித்தான் என்றால் அதன்பகுதி - படி என்பது.

அழைத்தான் என்றால் அதன் பகுதி - அழை என்பது.

சாப்பிட்டான் என்றால் அதன் பகுதி - சாப்பாடு என்பது,

வந்தான் என்றால் அதன் பகுதி - வா என்பது.

2. விகுதி

பகுபதத்தின் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் முதலியவற்றைக் காட்டும்.

எ.கா. நடந்தான் - ஆன் - ஆண்பால் விகுதி
நடந்தாள் - ஆள் - பெண்பால் விகுதி
நடந்தார் - ஆர் - பலர் பால் விகுதி
நடந்தது - அது - ஒன்றன்பால் விகுதி
நடந்தன - அன - பலர்பால் விகுதி.

நடந்தான் என்பதில் உள்ள விகுதியாகிய ஆன் என்பது உயர்திணையைக் காட்டுகிறது. ஆன் என்பது ஆண்பாலாய் இருப்பதால் பாலைக்காட்டுவது ஆன் என்பது ஒருமையில் இருப்பதால் எண்ணிக்கையை காட்டுவது ஆர் என்பது நடந்தார் விகுதி நடக்கும் இடத்தைப் பொறுத்தது ஆதலால் இப்படி விகுதி, திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டி நிற்கின்றது.

3.இடைநிலை

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இது காலத்தைக் காட்டுவதால் காலம் காட்டும் இடைநிலை என்றும் கூறப்பெறும்.

காலம் காட்டும் இடைநிலைகள்

இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை எதிர்மறை இடைநிலை என நான்கு வகைப்படும்.

1.இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன் என்பன.

எ.கா. பார்த்தான் = பார் + த் + த் + ஆன்,,

உண்டான் = உண் + ட் + ஆன்,

வென்றான் = வெல் + ன் + ற் + ஆன் ,

பாடினான் = பாடு + இன்+ ஆன்.

2. நிகழ்கால இடைநிலைகள்

கிறு -- கின்று -- ஆநின்று என்பன.

எ.கா. உண்கிறான் = உண் + கிறு + ஆன்

உண்கின்றாள் = உண் + கின்று +ஆள்

உண்ணா நின்றார் = உண் +ஆநின்று +ஆர்

3. எதிர்கால இடைநிலை

ப்-- வ் -- என்பன

எ.கா. உண்பாள் = உண் +ப் +ஆள்

வருவாள் = வா (வரு) + வ் + ஆள்

4. எதிர்மறை இடைநிலைகள்

இல் -- அல் -- ஆ முதலியன

எ.கா. உண்டிலன் உண் + ட் + இல் + அன் (உண்டலுக்கு எதிர்மறை)

காணலன் காண் + அல் + அன் (காண்பதற்கு எதிர்மறை)

பாரான் பார் + ஆ +ஆன்.

சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி. இது சில இடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடைநிலையிலும் வரும்.

எ.கா. பார்க்கிறான் = பார் + க்+ கிறு + ஆன்

கடையார் = கடை + ய் + ஆர்

சாரியை

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை. இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

எ.கா. பார்த்தனன் = பார்(பகுதி + த் (இடை)+ அன் + அன் -(விகுதி)

அன், ஆன், இன், அல், அற்று , இற்று, அற்று, அம், முதலியன சாரியைகள் ஆகும்.

விகாரம்

பகுதி இடைநிலை விகுதி போன்றவை சேரும் போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்பதில் உள்ள பகுதி வா என்பது அது வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று (வந்தான் என வந்தது).

பகாபதம்

பதம், மொழி, கிளவி, என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள் ஆகும். பதம் என்பது பகுபதம், பகாபதம் என்றே இரு வகைப்படும்.

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றைக் கொண்டு பகாப்பதம் நான்கு வகைப்படும்.

பெயர் பகாப்பதம்	மரம், நாய், நீர்
வினை பகாப்பதம்	ஓடு, உண், பாடு
இடைப்பகாப்பதம்	தில், மன், பிற.
உரிப்பகாப்பதம்	சால, நனி, கடி, உறு.

(இடைச் சொல்லும் உரிச்சொல்லும் பகாபதங்களாகவே இருக்கும்)

பெயரெச்சம்

முற்றுப்பெறாத வினையெச்சங்கள் பெயரைக்கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம். முற்றுபெறாது இருப்பதால் எச்சம் என்று பெயர் பெற்றது. எச்சங்கள் பெயரைக் கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் என்றும் வினையைக் கொண்டு முடிந்தால் அது வினை எச்சம் என்றும் பெயர் பெறும்.

எ.கா *கடைந்த மோர்*

கடைந்த என்னும் முற்றுப்பெறாத எச்சம் மோர் என்ற பெயரைக் கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.

பெரெச்சம் இறந்தகாலப்பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப்பெயரெச்சம் என மூன்று வகைப்படும்.

1.இறந்தகாலப் பெயரெச்சம் : பார்த்த நாடகம்

2.நிகழ்காலப் பெயரெச்சம் : படிக்கின்ற தங்கை

3.எதிர்காலப் பெயரெச்சம் : நடிக்கும் நாடகம்

இது தெரிநிலை பெயரெச்சம் குறிப்புப்பெயரெச்சம் என இரண்டு நிலையில் வரப்பெறும்.

தெரிநிலைப் பெயரெச்சம்

பெயரைக்கொண்டு முடியும் பெயரெச்ச வினைகள் முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறைவிலும் வரும்.

எ.கா உண்ட மணிமேகலை

செய்பவள் - மணிமேகலை

கருவி - கலம்

நிலம் - வீடு

செயல் - உண்ணுதல்

காலம் - இறந்தகாலம்

செய்பொருள் - சோறு (உணவு)

உண்ணுகின்ற மணிமேகலை உண்ணும் மணிமேகலை என்றே நிகழ்,எதிர் காலமும் இதுபோன்றே வரும்.

உடன்பாடு - உண்ட கண்ணன்

எதிர்மறை - உண்ணாத கண்ணன்.

குறிப்புப்பெயரெச்சம்

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லாகக் கொண்டு முடியும் எச்சம்.

எ.கா நல்ல பையன் - உடன்பாடு

ரௌடிமாணவன் - எதிர்மறை

வினையெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறு ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது வினையெச்சம் எனப்படும். அது கால வகையால் மூவகைப்படும்.

எ.கா படித்து வந்தான் - இறந்தகால எச்சவினை
பாடக் கேட்டான் - நிகழ்கால எச்சவினை
போய்ப் பார்ப்பான் - எதிர்கால எச்சவினை

இந்த வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

பெயரெச்சத்தின் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற,செய்யும் எனக் காலத்திற்கேற்ப மாறும்பெயர்கள் மாறா வினையெச்சத்தில் எச்சங்கள் மாறாது அது முக்கால வினை முற்றுகளையும் பெற்றுவரும்.

தெரிநிலை வினையெச்சம்:

காலத்தையும் செயலையும் உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

எ.கா படிக்கச் செல்கிறான்.

குறிப்பு வினையெச்சம்

மெல்லப் பேசினான், கண்ணன் நோயின்றி வாழ்ந்தான், இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல இன்றி என்னும் எச்சவினைச் சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் பண்பினை உணர்த்தி நின்று வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன ஆகையால் இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

முற்றெச்சம்

ஒரு வினைமுற்றுச்சொல் எச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

முற்றெச்சம்

ஒரு வினைமுற்றுச்சொல் எச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

எ.கா. நித்யா வந்தனள் பாடினள்

முருகன் படித்தனன் தேறினன்

இத்தொடர்களில் வந்தனன், படித்தனள் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருளில் வந்து வேறு வினைமுற்றுக்களைக் கொண்டு முடிந்துள்ளன.

வேற்றுமை உருபேற்கும்போது திரியும் பெயர்கள்

பெயர்ச்சொல்

பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். அது அறுவகைப்படும் அவை,

1. தொழிற்பெயர்
2. வினையாலணையும் பெயர்
3. பண்புப்பெயர்
4. தன்மைப்பெயர்
5. முன்னிலைப்பெயர்
6. படர்க்கைப் பெயர்கள்

பொதுவாகத் தொழிலைக்குறிக்கும் பெயர்கள் தொழிற்பெயர்கள் எனப்படும். ஆடல் என்றால் ஆடுதலைக்குறிக்கின்றது. அதாவது ஆடும் தொழிலைக் குறிக்கின்றது.

ஆடு + அல் = ஆடல் என்பதாகும். அல் என்பது தொழிற் பெயர் விகுதி இவ்வாறு தொழிற் பெயரைக் குறிக்கவரும் விகுதிகள் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு,பாடு, அரவு, ஆனை, மை,து, என்பன.

வினைச்சொல்லின் பகுதியோடு மேற்குறித்த விகுதிகளை சேர்த்தால் தொழிற் பெயராகும்.

எ.கா. பெறுதல் - பெறு + தல்
ஆட்டம் - ஆடு +அம்
கறவை - கற +வை
போக்கு - போ + கு
தோற்றரவு - தோற்று +அரவு
காய்த்து - காய் + து
கோடல் - கோடு + அல்
உண்கை - உண் +கை
களிப்பு - களி + பு
செலவு - செல் + உ
கோட்பாடு - கோள் + பாடு
மறவானை - மற + ஆனை

தொழிற்பெயர் இருவகைப்படும் அவை 1.முதனிலைத் தொழிற்பெயர்,2.முதனிலை திரிந்த தொழிற் பெயர் எனப்படும்.

முதனிலைத் தொழிற்பெயர்

தொழிற்பெயர்கள் விகுதிகளே இல்லாமல் பகுதி மட்டும் வந்து தொழிலை உணர்த்துமாயின் முதனிலைத் தொழிற் பெயர் என்பதாகும்.

எ.கா. கமர்கட்டை ஒரு கடி கடி

இந்தத் தொடரில் கடி என்பது கடித்தல் என்றே விகுதி பெறாமல் பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது. எனவே இது முதனிலைத் தொழிற் பெயராகும்.

முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

தொழிற் பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது. (எ.கா.) அவனுக்கு என்ன கேடு? இத்தொடரில் உள்ள கேடு என்பது கெடு என்னும் முதனிலையைக் கொண்டது. கெடு என்பது கேடு என்றே திரிந்து வந்துள்ளது. எனவே இது முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினை (செயல்) செய்தவைகளை குறித்துவரின் அது வினையாலணையும் பெயர் என்பதாகும். இது வினைக்குரிய காலம் காட்டும் பெயர்க்குறிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.

எ.கா.

பரிசு பெற்றானைப் பாராட்டினர். இதில் பெற்றான் என்ற வினைச்சொல் பரிசு பெற்றவனைக் குறித்து வந்தது. பெறுதல் என்னும் வினையைக் குறிக்காமல் பெற்றவனை குறித்து நின்றதால் வினையாலணையும் பெயராயிற்று. மேலும் பெற்றானை என்பது இறந்தகாலம் எனவே கால்ம் காட்டும் விகுதியைப்பெற்று வந்துள்ளது.

பெற்றானை	–	இறந்த காலம்
பெறுகின்றானை	–	நிகழ்காலம்
பெறுவானை	–	எதிர்காலம்.

தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்;

தொழிற்பெயர்	**வினையாலணையும் பெயர்**
தொழிலுக்குரிய பெயராய் வரும்	தொழில் செய்தவனைக் குறிக்கும்.
படர்க்கை இடத்தில் வரும்	தன்மை முன்னிலை படர்க்கை எனும் மூவிடங்களிலும் வரும்
காலம் காட்டாது	முக்காலத்தையும் காட்டும்

பண்புப்பெயர்கள்

பண்பை உணர்த்தும் பெயர்கள் பண்புப்பெயர்கள் ஆகும். இது நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

1.செம்மை, வெம்மை, கருமை - நிறப்பண்பு

2.வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் - வடிவப்பண்பு

3.ஒன்று, அரை, கால் - அளவுப்பண்பு

4.காரம், புளிப்பு, இனிப்பு -சுவைப்பண்பு

பண்புப்பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, உ, கு, றி,று, அம்,நல்,பம், து, மன், இல்,என்பன.

எ.கா. நன்மை - நல் + மை

தொல்லை - தொல் + ஐ

மாட்சி - மாண் + சி

மாண்பு - மாண் + பு

நன்கு - நல் + கு

நன்றி - நல் + றி

நன்று - நல் + று

நலம் - நல் + அம்

நோக்கம் - நோக்கு + அம்

நெடுநல் - நெடு + நல்

திட்பம் - திண் + பம்

தீது - தீமை + து

கண்மன் - கண் + மன்

வேற்றுமை உருபேற்கும்போது திரியும் பெயர்கள்

வேற்றுமை உருபுகளாகிய ஐ, ஆல், கு,இன், அது, கண், என்பவை

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்று வரும்போது திரியும்.

1. தன்மைப்பெயர்கள்

நான், யான், என்பவை தன்மை ஒருமைப்பெயர்கள். நாம்,யாம், என்பவை தன்மைப் பன்மைப்பெயர்கள். யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும் போது என் எனத்திரியும்.

யான் - ஐ - என்னை

யான் - ஆல் - என்னால்

யான் - கு - எனக்கு

யான் - இன்/ இல்- என்னின் என்னில்

யான் - அது - எனது

யான் - கண் - என்கண்/எனின்.

யாம் என்னும் தன்மைப் பன்மை பெயர் வேற்றுமை உருபேற்கும் போது எம் எனத்திரியும் எம்மை, எம்மால்,எமக்கு, எம்மின், எமது, எங்கள் எனவரும்.

நாம் என்னும் தன்மைப்பெயர் நம் எனக் குறுகும். நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நாங்கள் எனக் குறுகிவரும்.

யாங்கள், நாங்கள் என்னும் தன்மைப்பன்மை பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் போது எங்கள் எனத்திரியும். எங்கள், எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது என்பதாய் வரும்.

முன்னிலைப் பெயர்கள்

நீ – என்பது முன்னிலை ஒருமை நீர், நீவிர், நீயிர், நீங்கள் என்பது முன்னிலைப்பண்மை.

நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நின் எனவும் உன் எனவும் மாறும்.

படர்க்கைப் பெயர்கள்

தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும். தான் என்னும் படர்க்கை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும் போது தன் என்றே மாறும்.

தான்	–	ஐ	–	தன்னை
தான்	–	ஆல்	–	தன்னால்
தான்	–	கு	–	தனக்கு
தான்	–	இன்	–	தன்னின்
தான்	–	அது	–	தனது
தான்	–	கண்	–	தன்கண் எனவரும்.

தாம் என்னும் படர்க்கை பன்மைப்பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபு ஏற்கும். எடுத்துக்காட்டு: தம்மை, தம்மால், தம்மிக்கு, தம்மின், தமது,தங்கள்.

தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் தங்கள் எனத்திரியும் (எ.கா.) தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கள் எனவரும்.

தொடர்

சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது.

எ.கா. ரோஜா வாசம் இதமானது

சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளைத் தருகிறது. அதாவது ரோசா மலரின் மணத்தினை உணர்த்துகின்றது.

கண்ணன் பாடம் படித்தான்

இத்தொடர் கண்ணன் பாடம் படித்ததை உணர்த்துகின்றது.

தொகை நிலைத்தொடர்

உருபுகள் மறைந்து வரும் தொடர்கள் தொகை நிலைத் தொடர்கள் எனப்படும்.

ரோஜா வாசம் இதமானது என்ற தொடரின் ***ரோசா வின் வாசம்*** என்பது புலப்படுவதாக உள்ளது. ரோசா + இன் = ரோசாவின் "இன்" என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தருவதை காணலாம். ஐந்தாம் வேற்றுமை உருபு வந்ததால் ஐந்தாம் வேற்றுமை தொகை ஆயிற்று.

தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை, 1.வேற்றுமைத் தொகை 2.வினைத்தொகை 3.பண்புத்தொகை 4.உவமைத்தொகை 5.உம்மைத்தொகை 6.அன்மொழித்தொகை.

வேற்றுமைத்தொகை

வேற்றுமை உருபுகள் எட்டு வகைப்படும் அவை சொற்றொடரில் மறைந்து வரும்போது வேற்றுமைத்தொகை எனப்படுகிறது(முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு கிடையாது)

2 ம் வேற்றுமை உருபு - ஐ

3-ம் வேற்றுமை உருபு - ஆல், ஓடு, உடன்

4-ம் வேற்றுமை உருபு - கு,

5-ம் வேற்றுமை உருபு - இன், இல், இடம்,

6-ம் வேற்றுமை உருபு - அது

7-ம் வேற்றுமை உருபு - கண்

பால் பருகினான் **-2 ம் வேற்றுமைத் தொகை**

பாலைப்பருகினான் என்பது பொருள் – இதில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வருகின்றது.

கையடித்து சத்தியம் செய்தான் - **3ம் வேற்றுமைத் தொகை** இதன் பொருள். கையால் அடித்து சத்தியம் செய்தான் என்பது . கையடித்து என்ற சொற்றொடரில் ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு மறைந்து வருவதைக் காணலாம்.

ஓடு என்னும் வேற்றுமை உருபிற்கு (எ.கா.) இது இனிப்புப்பண்டம் மூன்றாம் வேற்றுமை உருபாகிய ஓடு என்பது மறைந்து வந்துள்ளது. இனிப்புப் பண்டம் எனபதற்கு இனிப்போடு கூடிய பண்டம் என்பது பொருள். இதில் ஓடு என்னும் உருபு மறைந்து வந்துள்ளதை அறியலாம்.

எ.கா. வாந்தி மயக்கம்.

வாந்தியுடன் கூடிய மயக்கம் **உடன்** என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

மீனா பள்ளிச் சென்று பாடம் படித்தாள் நான்காம் **வேற்றுமைத் தொகை** பள்ளிச் சென்று என்ற தொடரில் பள்ளிக்குச் சென்று என்ற பொருள் உள்ளது - **கு** என்ற நான்காம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

பாட்டிக்கை சுருக்கமாக இருக்கிறது ஐந்தாம் **வேற்றுமைத் தொகை** (இன்) பாட்டிக்கை- பாட்டியின் கை. இதில் **இன்** என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

நீர் பறவை - நீரில் (உள்ள) பறவை. இல் என்னும் **ஐந்தாம் வேற்றுமை உருபு** மறைந்து வந்துள்ளது.

ராமன் சட்டை - **ஆறாம் வேற்றுமைத்தொகை** ராமனது சட்டை- அது என்ற உருபு மறைந்து வந்துள்ளது.

குகைப்புலி - **ஏழாம் வேற்றுமைத் தொகை** (குகை + கண் + புலி)

குகையின்கண் உள்ள புலி என்ற பொருளாகிறது. இங்கு கண் என்ற 7 ம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

வினைத்தொகை

இறப்பு, நிகழ்வு, எதிர் என்னும் மூன்று காலத்திற்கும் பொருந்தி வரும் சொற்றொடர் வினைத்தொகை எனப்படும்.

உண்கலம் - இதில் உள்ள தொடரை இறந்த காலம் நோக்கிப் பார்க்கும்போது உண்ட கலம் என்றும் நிகழ்காலத்தை நோக்கிப் பார்க்கும் போது உண்ணும் கலம் என்னும் முக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைகிறது. இவ்வாறு காலத்தைக் காட்டி நிற்கும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் வினைத்தொகை எனப்படும்.

தொகா நிலைத் தொடர்

வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் உருபுகள் மறைந்து நின்று வந்து பொருள் தருவன தொகாநிலைத் தொடர் உருபுகள் மறைந்து நில்லாமல் அப்படியே பொருள் தருவன.

எ.கா. கணேசன் வந்தான்

இத்தொடரில் கணேசன் என்பவன் வந்தான் என்று அப்படியே பொருள் தருவதாக இருக்கிறது இதன் இடையே வேற்றுமை உருபுகள் மறைந்து வரவில்லை. இவ்வாறு ஒரு தொடரில் இரு சொற்கள் அமைந்து வந்து இரண்டிற்கும் இடையே சொல்லோ உருபோ வரப் பெறாமல் பொருளினை அப்படியே உணர்த்தினால் அது தொகா நிலைத் தொடர் ஆகும்.

தொகாநிலைத்தொடர்களின் வகைகள்

1.எழுவாய்த் தொடர்

எழுவாய் என்பது பெயரைக் குறித்து நிற்பது (சொல்லில் முதலில் வருவது) நித்யா பாடினாள் இத்தொடரில் நித்யா என்னும் எழுவாயைத் தொடர்ந்து பாடினாள் என்னும் பயனிலை வந்துள்ளதால் இது எழுவாய்த்தொடர் ஆகும். (எழுவாய் தொடரில் எழுவாயும் பயனிலையும் சேர்ந்தே வரும்)

2.விளித்தொடர்

விளித்தல் என்றால் அழைத்தல் கூப்பிடுதல் என்று பொருள் தருவதாகும்.

கண்ணா வா! இது விளித்தொடர் (கண்ணனை அழைப்பது அதாவது விளிப்பது)

3.வினைமுற்றுத் தொடர்

பார்த்தேன் என் தந்தையை என்ற தொடரில் வினை முற்று முதலில் வந்து பெயரைத் தொடர்கிறது அதனால் இது வினைமுற்றுத் தொடர் ஆயிற்று.

பார்த்தேன் – என்பதில் உள்ள பார்த்தல் என்ற வினை பார்த்தேன் என்றே வினை முற்று பெற்று நிற்கிறது எனவே அச்சொல் வினைமுற்று என்று அறிக.

4.பெயரெச்சத் தொடர்

உடைந்த கண்ணாடி உடைந்த – என்ற எச்சவினை கண்ணாடி என்ற பெயரைக் கொண்டு முடிவதால் பெயரெச்சத்தொடர் எச்சம் என்றால் எஞ்சி நிற்பது அதாவது உடைந்த என்ற சொல் முற்றுபெறாமல் ஏதோ ஒன்றை உணர்த்த முடிவு பெறாமல் மிச்சப்பட்டு நிற்கிறது. அது கண்ணாடி என்ற பெயரோடு முடிகிறது. இப்போது உடைந்த கண்ணாடி என்றே முழுமை பெற்று பெயரெச்சத் தொடரை உணர்த்தி நிற்கிறது.

உடைந்த, வந்த , பெற்ற, போன்ற சொற்கள் ஏதோ ஒன்றை உணர்த்த எஞ்சி நிற்பதால் இவை போன்றவை எச்சங்கள் எனப்படுகின்றன. இவை பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் என்றும் வினையைக்கொண்டு முடிந்தால் வினையெச்சம் என்றும் பெயர் பெறும்.

5.வினையெச்சத் தொடர்

வினைச்சொல் எச்சமாக நின்று வினையைக் கொண்டு முடிந்தால் அது வினையெச்சத்தொடராகும்.

எ.கா. கண்டு களித்தல்- கண்டு என்பது காணுதல் என்னும் வினை ஆகும். களித்தல் என்பது களித்தல் (மகிழ்தல்) என்னும் வினை ஆகும்.

முதல் வினையான காணுதல் என்பது கண்டு என்றே எச்சப்பட்டு நின்று களித்தல் என்ற வினையோடு முடிந்துள்ளது எனவே இது வினையெச்சத் தொடராகும்.

6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

நாட்டை ஆண்டான் என்பதில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இது வேற்றுமைத் தொகா நிலைத் தொடராகும்.

7.இடைச் சொற்றொடர்

மற்றொன்று மற்று + ஒன்று இதில் மற்று என்பது இடைச்சொல்லாகும். மற்று என்ற இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் தொடர்ந்து வந்ததால் அது இடைச்சொற்றொடர் ஆகும். இடைச்சொற்கள் இன்னதென்று அறிதல் வேண்டும். ஆய்கு போய் ஆத்தி (அடி ஆத்தி) ஆகோ ஆய்க ஆகிய போல்வன).

8.உரிச் சொற்றொடர்

உரிச்சொற்கள் நனி, தவ, சால, மா, போன்ற பலச்சொற்களைக் கூறலாம். கற்றவர்களுக்கு தெரிந்த சொற்கள் உரிச் சொற்களாகும்.

மா முனிவர் - என்னும் இத்தொடரில் **மா** என்பது பெரிய என்ற பொருள் படுவதாக நிற்கிறது.

அடுக்குத்தொடர்

ஒரே சொல் அடுக்கி வந்து பொருள் தருமாயின் அது அடுக்குத்தொடர் ஆகும்.

வாழ்க வாழ்க ஒழிக ஒழிக போல்வன.

மேலே கூறப்பட்டவைகள் யாவும் தொகா நிலைத் தொடர்கள் ஆகும்.

இரட்டைக்கிளவி

இது இரண்டுமுறை அடுக்கி வரும் சொல்லாகும். பிரித்தால் பொருள் தராது.

எ.கா. **கல கல** வென சிரித்தாள்

இங்கு **கலகல** என்பது **கல கல** என இரண்டு முறை அடுக்கி வந்துள்ளது. கல + கல = கலகல என்பதாகும். இது ஒலிக்குறிப்பிற்காக கூறப்படும் சொற்கட்டு. இந்த இரட்டைக்கிளவி அடைமொழியாய் குறிப்புப் பொருளில் வரும்.

கலகல வென சிரித்தாய் என்பதில் உள்ள கல கல என்னும் இரட்டைக் கிளவிச் சொல் சிரிப்பின் தன்மையைக் குறிப்பதாய் அமைகிறது.

அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேற்றுமைகள்

அடுக்குத் தொடர்	இரட்டைக்கிளவி
1. இரண்டு, மூன்று, நான்கு முறையும் கூட அடுக்கி வரும் எ.கா: பாம்பு.. பாம்பு .. பாம்பு......	இரட்டைச் சொல்லாகவே வரும் எ.கா: பட படவென்று தட்டினான்
2. பிரித்தால் பொருள்தரும் பாம்பு+ பாம்பு = பாம்புபாம்பு பிரித்தாலும் பாம்பு என்ற பொருளைத் தருகிறது	பிரித்தால் பொருள் தராது பட +பட= படபட பட என்றால் பொருள் இல்லை சேர்ந்து வரும்போது மட்டுமே குறிப்பால் உணர்த்திநிற்கும்.
3. விரைவு, வெகுளி, (கோபம்) உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும்.	அடைமொழியால் குறிப்புப்பொருளில் வரும்

ஆகுபெயர்

ஒன்றின் பொருள் மற்றொன்றிற்கு ஆகிவருவது ஆகுபெயர் ஆகும்.

எ.கா.

வகுப்பே என்னைப் பார்த்து பாராட்டியது என்ற சொற்றொடரில் வகுப்பு என்ற சொல்லின் பொருள் மாணவர்கள் அமர்ந்து பாடம் பயிலும் இடம் என்பதாகும்.இங்கு வகுப்பே என்னைப் பாராட்டியது அதில் அமர்ந்துள்ள மாணவர்களை குறித்து நின்றது. எனவே வகுப்பு என்ற சொல்லின் பொருள் வகுப்பறையில் அமர்ந்துள்ள மாணவர்களுக்கு ஆகி வந்து பொருள் தந்ததால் இது ஆகுபெயர் ஆயிற்று.

ஆகுபெயர் ஆறு வகைப்படும். அவை

1. முதலாகுபெயர் 2.இடவாகுப்பெயர்

3. காலவாகு பெயர் 4.சினையாகுபெயர்

5. குணவாகுபெயர் 6.தொழிலாகுபெயர் என்பன.

முதலாகுபெயர்

முதற் பொருள் சினை ஆகிய உறுப்பிற்கு ஆகி வருவது முதலாகுபெயராகும்.

எ.கா. மல்லிகை.

இங்கு மல்லிகை என்பது பூ அல்ல. அது கொடி, மல்லிகை சூடினாள் எனக் கூறும்போது அங்கு மல்லிகை என்பது கொடியாகிய முதற் பொருளைக் குறிக்காமல் பூ என்னும் சினையைக் குறிக்கிறது.

சினை என்றால் உறுப்பு. மல்லிகைக் கொடிக்கு உறுப்பாக இருப்பது மல்லிகை மொக்கு, பூ, இலை போல்வன.

இவ்வாறு முதற்பொருள் சினைக்கு ஆகி வருவது முதலாகு பெயராகும். இதனைப் பொருளாகுபெயர் எனவும் கூறுவர்.

இடவாகுபெயர்

இடத்தின் பெயர் வேறொன்றிற்கு ஆகிவருவது இடவாகுபெயர் என்பதாகும். உன்னைப் பார்த்து இந்த உலகம் சிரிக்கிறது. உலகம் சிரிக்கிறது என்ற சொல்லில் உள்ள உலகம் என்பது உயிர்கள் வாழும் இடமாகிய உலகத்தைக் குறித்து நிற்கிறது. அது இடப்பெயர் ஆனால் உலகம் சிரிக்கிறது என்ற பொது உலகம் என்ற இடம் சிரிக்காது அதில் உள்ள மக்கள் சிரிப்பார்கள் என்று பொருளாகின்றது. உலகம் என்ற இடத்தின் பெயர் அதில் உள்ள மக்களுக்கு ஆகிவந்ததால் அது இடவாகுபெயர் எனப்படுகிறது.

காலவாகு பெயர்

காலத்தின் பெயர் மற்றொன்றிற்கு ஆகிவருவது காலவாகு பெயர்.

எ.கா. டிசம்பர் பூக்கவாரம்பித்துவிட்டது.

இங்கு டிசம்பர் என்னும் மாதத்தின் பெயர் டிசம்பர் பூவிற்கு ஆகிவந்தது எனவே கால ஆகுபெயர் ஆயிற்று.

(நாள், மாதம், வருடம் போல்வன காலத்தைக் குறிக்கும் சொற்கள்.)

சினையாகு பெயர்

சினை என்றால் உறுப்பு. சினைப்பெயர் அதனைக் குறிக்காமல் முதற் பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயராகும்.

எ.கா. வெற்றிலை நட்டாள்

இத்தொடரில் வெற்றிலையாகிய சினையை (வெற்றிலைக் கொடியின் உறுப்பு) குறிக்காமல் அதன்முதல் பொருளாகிய கொடிக்கு ஆகிவந்தது. வெற்றிலைக் கொடியை நடமுடியுமே தவிர வெற்றிலை எனும் இலையை நடுதல் என்பது இல்லை. எனவே சினைப்பெயர் முதற் பொருளாகிய வெற்றிலைக் கொடிக்கு ஆகிவந்ததை அறிக.

பண்பாகு பெயர்

ஒன்றின் பண்பு மற்றொன்றிற்கு ஆகி வருவது.

எ.கா. வெள்ளை அடித்தல்

வெள்ளை என்பது வெண்மை நிறப் பண்பினைக் குறிப்பது. ஆனால் இங்கு வெள்ளை அடித்தல் என்பது வெண்மையைக் குறிக்காமல் சுண்ணாம்பை குறித்துவந்தது. அதனால் இதனை பண்பு ஆகுபெயர் அல்லது குணவாகு பெயர் என்றும் கூறுவர்.

தொழிற் பெயர்

ஒரு தொழிற் பெயர் தொழிலைக் குறிக்காது அத்தொழிலால் ஆகும் வேறொன்றைக் குறித்து நிற்பின் அது தொழிலாகு பெயராகும்.

எ.கா. பொங்கல் – சாப்பிட்டேன்

என்பதில் உள்ள பொங்கல் என்னும் அதாவது பொங்குதல் என்னும் தொழிர் பெயர் உணவிற்கு ஆகிவந்ததால் இது தொழில் பெயர் ஆயிற்று.

வழா நிலை

இலக்கண முறைபடி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

எ.கா. பத்மா ஆடினாள்

இத்தொடரில் பத்மா என்பது பெண்பால் ஒருமைப் பெயர் இது ஆடினாள் என்ற பெண்பால் ஒருமை வினை முற்றைக் கொண்டு முடிந்துள்ளது எனவே இது வழா நிலை எனப்படும்.

வழா நிலை ஆறு வகைப்படும்

1. திணை வழாநிலை

லட்சுமி பாடினாள்

குதிரை ஓடியது

இங்கே லட்சுமி என்பது உயர்திணை ஆகையால் அது ஆள் என்ற விகுதியை பெற்று வந்தது.

குதிரை என்பது அஃறிணை ஆகையால் ஓடியது என்றே அஃறிணை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது.ஆகையின் இது திணை வழா நிலை(திணை என்பது உயர்திணை, அஃறிணை) – **உயர்திணை என்பது தேவர், கடவுள், மக்கள். அஃறிணை என்பது மற்றவைகள் எல்லாம்.**

2.பால் வழா நிலை

பால்வழா நிலை என்பது ஆண்பால், பெண்பால் , பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவைகள் சொற்றொடரில் வரும்போது அதற்கேற்ற விகுதிகளைப் பெற்று வழுவு அல்லாமல் வருவது ஆகும்.

எ.கா. கண்ணன் வந்தான்

இதில் கண்ணன் என்பது உயர்திணை ஒன்றன்பால் ஏனெனில் கண்ணனை மட்டுமே குறிக்கின்றது. அது வந்தான் என்ற ஒருமை வினை முற்றைக் கொண்டே முடிகிறது. பால் வழா நின்றதால் பால் வழா நிலை ஆயிற்று.

3.இடவழாநிலை

இடம் என்பது தன்மை , முன்னிலை, படர்க்கை என்பதை குறிக்கின்றது. இந்த மூன்றின் அடிப்படையில் வரும் சொற்கள் அந்த இடத்திற்குரிய வினைமுற்றைப் பெற்று வரும்.

எ.கா. நான் வந்தேன்

நான் : என்பது தன்மை இடத்தைக் குறிக்கும்.

வந்தேன் : என்பது அந்த இடத்திற்கு ஏற்றாற் போன்ற ஆண்பால் ஒருமை வினை முற்றைக் கொண்டு முடிந்துள்ளது. நான் வந்தேன் என்றுதான் வருமே அன்றி நான் வருவான் என்று படர்க்கை இடத்தில் வராது.

நீ வருவாய் இங்கு நீ என்பது முன்னிலை அது வந்தன என்ற வினைமுற்றைப் பெற்று வருவதைக் காணலாம்.

4.கால வழாநிலை

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களில் ஒன்றை ஏற்று வரும் சொல் அதற்கான வினைமுற்றைக் கொண்டே முடியும்.

எ.கா. நேற்று வந்தேன் - இறந்தகாலம்

இன்று வருகிறேன் - நிகழ்காலம்

நாளை வருவேன் - எதிர்காலம்

5.வினா வழா நிலை

வினவப்படும் வினாக்கள் எந்த வித வழுவும் இல்லாமல் வினை கேட்கப்படும் முறைபடி வரும்.

தமிழ் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

6.விடை வழா நிலை

விடை சொல்லும்போது எந்தவித குற்றமும் இல்லாமல் விடை கொடுக்கப்படும் முறைபடி வருவது.

இந்தியா எப்பொழுது சுதந்திரம் அடைந்தது? என்ற வினாவிற்கு

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி சுதந்திரம் அடைந்தது என்றே விடையளிப்பது.

வழு நிலை

வழு

முறையின்றி பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். அது ஏழு வகைப்படும்.

1. திணை வழு 2.பால் வழு

3. இட வழு 4.கால வழு

5. வினாவழு 6.விடை வழு

7. மரபு வழு என்பன.

1.திணைவழு

ஒருதிணை வரவேண்டிய இடத்தில் வேறு திணை மயங்கி வரப்பெறுவது .

எ.கா. என் மாமா வந்தது:

இதில் மாமா என்பது உயர்திணை வந்தார் என்று உயர்திணையில் முடியாமல் வந்தது என்றே அஃறிணை வினைகொண்டு முடிந்துள்ளது திணை வழுவாயிற்று.

2.பால் வழு

பால் ஏற்று வரும் சொல் முடியும் போது வேற்று பால் விகுதி பெற்று வந்தால் அது பால் வழு

எ.கா. மீரா பாடினான்:

இந்தச் சொற்றொடரில் மீரா என்பது பெண்பால் அது பாடினாள் என்றே பெண்பால் வினைக் கொண்டு முடியாது பாடினான் என்றே ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது எனவே இது பால் வழு ஆயிற்று.

3.இடவழு

தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற இடங்களை ஏற்று வரும்சொல் வேற்று இடத்தோடு முடியின் அது இடவழு ஆகும்.

எ.கா. நாங்கள் வந்தார்கள்:

இதில் நாங்கள் என்ற தன்மை இடமானது வந்தோம் என்றே தன்மை இடத்தில் முடியாது வந்தார்கள் என்ற படர்க்கை இடத்தைப் பெற்று வந்ததால் இடவழு ஆயிற்று.

4.கால வழு

ஒரு காலத்தைக் குறித்து நிற்கும் சொல் அதே கால வினையேற்று வராது வேற்று காலத்தைப் பெற்று வருவது.

எ.கா. கண்ணன் நேற்று வருவான்

இதில் கண்ணன் நேற்று என்பது இறந்தகாலம் வருவான் என்பது எதிர்காலம். வந்தான் என்று இறந்தகாலத்தைக் கொண்டு முடியாது வருவான் என்றே எதிர்காலத்தை கொண்டு முடிந்ததால் கால வழு ஆயிற்று.

5.வினா வழு

பொருத்தமில்லாத வினாவைக் கேட்பது வினாவழு ஆகும்.

குழந்தைப் பெற்றது பொன்னா கோழியா? என்று வினா எழுப்பப்படும். ஆகையால் அது வழு கோழி பெண்ணைப் பெறாது இது போன்ற பொருந்தாத வினாவை வினா வழு என்கிறோம்.

6.விடை வழு

வினாவிற்கான விடையை அளிக்காது பொருத்தமில்லாத வேறு விடையைக் கூறுவது.

எ.கா. நாளை தேர்வு உண்டா?

இந்த வினாவிற்கு பதிலாக எனக்கு உடல் நலம் சரியில்லை என்றே வரும் பொருத்தமில்லாத விடை வழு விடையாகும்.

7.மரபு வழு

சிங்கம் ஊளையிடும் என்ற தொடர் மரபு வழு ஆகும். சிங்கம் கர்ஜனை செய்யும் என்ற மரபினை விடுத்து ஊளையிடும் என்றே கூறுவது ஒலி மரபு வழு ஆகும். இருக்கவேண்டிய மரபினை விடுத்து பிழையான மரபினால் வருவது மரபு வழு ஆகும்.

வழுவமைதி

ஒருசொல் இலக்கண முறைபடி குற்றமுடையது ஆனாலும் இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என்று ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

இது உவகை, சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணை வழுவும்,பால்வழுவும் கால வழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திணைவழுவமைதி

வீடுகளில் வளர்க்கப்படும் அஃறிணையைப் பிராணிகளாகிய நாய், பசு போன்றவைகளுக்கு பிடித்தமான உயர்திணைப் பெயர் வைத்து வழங்குவது உண்டு. இவ்வாறு வரப்பெறுவதெல்லாம் திணை வழுவமைதி என்றே கொள்ளப்படும்.

எ.கா.

பசுவிற்கு லெட்சுமி என்றே பெயரிட்டு லெட்சுமி வந்து விட்டாள் என்றே பசுவை உயர்திணைக்கு உயர்த்தி கூறுவது வழுவாயினும் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாதலால் அது வழுவமைதி ஆயிற்று. திணை பற்றி வந்ததால் திணை வழுவமைதி ஆகும்.

கால வழுவமைதி

மாண்புமிகு முதலமைச்சர் நாளை தமிழ்ப்பல்கலைக்கழகம் வருகிறார் என்ற சொற்றொடரில் நாளை வரவிருக்கும் முதலமைச்சர் என்பது எதிர்காலம். ஆனால் அவர் நிச்சயம் வரவிருக்கும் உறுதியினால் வருகிறார் என்றே நிகழ்காலத்தில் கூறப்பட்டது. இவற்றை எல்லாம் பிழையாக கருதுவது இல்லை இதுபோல ஏற்றுக் கொள்ளப்பட்ட கால மயக்கம் காலவழுவமைதி எனப்படும்.

வழு - பிழை, தவறு, குற்றம்

வழா நிலை - பிழையின்மை, தவறின்மை

வழுவமைதி - பிழை - ஆனால் பிழையாகக் கொள்ளப்பெறாமல் ஏற்றுக்கொள்ளப் பெறுவது.

அடைமொழி

பல வகைப்பட்டதாக இருக்கும் ஒரு பொருளை பொதுவாகச் சுட்டும் பொழுது அதன் வகை குறித்து ஐயம் ஏற்படும். எனவே அவற்றை இனம் பிரித்துக் காட்டுவதற்கு தனிச்சொல் பயன்படுத்தப்படும். அந்தத் தனிச் சொல் அடைமொழி எனப்படும். மேலும் பொருள்களை இனம் பிரித்து அறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழிகள் எனப்படும்.

எ.கா. தெய்வப் புலவர் திருவள்ளுவர்

இதில் தெய்வப் புலவர் என்பது அடைமொழியாகிறது. திருவள்ளுவர் மற்ற புலவர்களிலிருந்து இனம் பிரித்துக் காட்டுவதற்கு அவரை தெய்வப்புலவர், பொய்யாமொழிப் புலவர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

இனமில்லா அடைமொழி

இனம் காட்ட வேண்டிய அவசியம் இல்லாத நேரத்தில் இனம் காட்டக்கூடிய பொருள் இல்லாத காரணத்தினாலும் சில சொற்கள் அடைமொழியாய் வந்தாலும் அவை இனமில்லா அடைமொழி என்பதாகிறது .

எ.கா. வெண்ணிலவு, செங்கதிரோன்

என்பனவற்றில் உள்ள வெண்மை, செம்மை என்பன அடைமொழியாகின்றன. ஆனால் கருநிலவு என்ற ஒன்றோ அல்லது கருங்கதிரோன் என்றோ ஒன்றுமே இல்லாததாக இருக்கிறது இதுபோன்று இனம் இல்லாது இருந்தும் வெண்ணிலவு என்றும் நிலவை அடைமொழியோடும் செங்கதிரோன் என்னும் கதிரவனை அடைமொழியோடும் கூறுகின்றோம்.

போலிகள்

ஒரு சொல்லின் எழுத்து மாறுபட்டு பொருள் மாறுபடாமல் வருவது போலி எனப்படும் அது மூன்று வகைப்படும் அவை, 1. முதற்போலி 2.இடைப்போலி 3. கடைப்போலி என்பன.

முதற்போலி

ஒரு சொல்லின் முதற் எழுத்து மாறினாலும் பொருள் மாறாது வருவது.

எ.கா. மஞ்சு - மைஞ்சு மயல் - மையல்

இதில் ம என்பது **மை** ஆயிற்று. மஞ்சு என்றால் மேகம் மைஞ்சு என்றால் மேகத்தையே குறிக்கும் / மயல் என்றால் ஆசை என்பது மையல் என்றால் ஆசையையே குறிக்கும்.

இடைப்போலி

ஒரு சொல்லின் இடையெழுத்து மாறினாலும் பொருள் மாறாது இருப்பது இடைப்போலி எனப்படும்.

எ.கா. இலஞ்சி, இலைஞ்சி - இதில் இடையெழுத்து மாறிவந்து பொருள் மாறாது இருக்கிறது.

கடைப்போலி

சொல்லின் கடைசி எழுத்து மாறினாலும் பொருள் மாறாது இருப்பது கடைப்போலி. அறம் அறன் (அறம்- தர்மம் அறன்- தர்மம்) கடைசி எழுத்தாகிய **ம்** கரம் மாறி **னகரம்** வந்துள்ளது இருப்பினும் பொருள் மாறுபடாது உள்ளது.

முற்றுபோலி

முதல், இடை, கடை, எனும் மூன்று போலிகள் தவிர முற்றுபோலி என்று ஒன்று உண்டு. ஒரு சொல்லின் அனைத்து எழுத்துக்களும் மாறிவந்து பொருள் மாறாது இருப்பது முற்றுபோலி எனப்படும். (எ.கா.) அஞ்சி (பைசா) ஐந்து (பைசா) ஐந்து என்பதில் உள்ள அனைத்து எழுத்துக்களும் மாறி அஞ்சி என்று வந்துள்ளது. ஆனால் பொருள் மாறாமல் ஐந்தின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

பொருள்கோள்

ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையாய் அமைத்துக் கொள்ளும் முறையைப் பொருள்கோள்(பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர். பொருள்கோள்கள் எட்டு வகைப்படும்

1.ஆற்றுநீர் பொருள்கோள் 2.மொழிமாற்றுப்பொருள்கோள்
3.நிரல்நிறைப்பொருள்கோள் 4.விற்பூட்டுப்பொருள்கோள்
5.தாப்பிசைப் பொருள்கோள் 6.அளைமறி பாப்புப்பொருள்கோள்
7.கொண்டு கூட்டுப்பொருள்கோள் 8.அடிமறிமாற்றுப்பொருள்கோள் என்பன.

1. ஆற்றுநீர் பொருள்கோள்

தங்குதடையின்றி செல்லும் ஆற்றுநீரைப்போல பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள்கொள்வது ஆற்றுநீர்ப்பொருள்கோளாகும். நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லது அன்றே மறப்பது நன்று - குறள் நன்றி மறப்பது நன்றன்று - ஒருவர் செய்த உதவியை மறப்பது நல்ல செயல் அல்ல (ஆனால் அதே சமயம்) நன்றல்லது அன்றே மறப்பது நன்று - நல்ல செயல்கள் அல்லாததை செய்த அந்த நாளே மறந்து விடுவது நன்று என்பது இதன்பொருள். செய்யுளுக்கான பொருள் நேரிடையாக உடனே விளங்குவதாய் உள்ளது. சொற்களை முன்பின் மாற்றாமல் அப்படியே பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது எனவே இதுபோன்ற பாடல்கள் ஆற்றுநீர் பொருள்கோளுக்குச் சான்றாகும்.

2.மொழி மாற்றுப் பொருள்கோள்

ஓரடியில் உள்ள சொற்களை அவை தரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழி மாற்றுப்பொருள்கோள் எனப்படும். எடுத்துக்காட்டு: சுரையால் அம்மி மிதப்ப, வரையறை யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப கானக நாடன் சுனை.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை முயற்கு நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

3. நிரல் நிறைப் பொருள்கோள்

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாறாமல் வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை பொருள்கோள் ஆகும்.

எ.கா. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள்.45.)

அன்பும் அறனும் இருந்தால் இல்வாழ்க்கையில் பண்பும் பயனும் அது என்பது பொருளாகிறது அன்பிற்கு பண்பும் அறனுக்கு பயனும் நிரல் நிறையாக அமைந்துப் பொருள் கொள்ளப்படுகிறது.

4. விற்பூட்டுப் பொருள்கோள்

வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல் போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும் இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்பட பொருந்துவது. பூட்டுவிற்பொருள்கோள் அல்லது விற்பூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

திறந்துடுமின் தீயவை பிறகாண்டு மாதர்
இறந்துபடின் பெரிதாம் . . . .
. . . .
. . . . கண்ணாரக்காணக் கதவு (முத்தொள்ளாயிரம்)

இப்பாடலில் முதல்சொல்லாகிய திறந்துடுமின் என்பது இறுதி சொல்லாகிய கதவு என்பானோடு பொருள்பட பொருந்துவதாகக் காணலாம்.

5.தாப்பிசைப் பொருள்கோள்

ஊஞ்சலின் நடுவில் இருக்கும் கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல்லானது செய்யுளில் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்தி பொருள்ளத் தருவது தாப்பிசைப் பொருள்கோள் எனப்படும்.

எ.கா. இறந்தார் இறந்தார் அனையச் சினைத்தைஅ
துறந்தார் துறந்தார் துணை

இச்செய்யுளில் நடுவில் உள்ள சினத்தை என்ற சொல் சினத்தை உடையவர் இறந்தார் அனையர் எனவும், சினத்தை துறந்தார் ஞானியர்துணை எனவும் அமைத்துப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

6.அளைமறிபாப்புப் பொருள்கோள்

பாப்பு (பாம்பு)

பாம்பானது புற்றிற்குள் நுழையும்போது முதலில் தலையை மேலாகவும் பின் உடல் அடுத்து செல்வதுபோல செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது அளைமறியாப்பு பொருள்கோள் எனப்படும்.

எ.கா. தாழ்ந்த உணர்வினராய் தாளுடைந்து
தன்னூன்றி தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்திசையில் சுழற்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன் செய்த
வினையென்றே முனைவார் தாமும்
வாழ்ந்த பொழுதிலே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே

இப்பாடலில் வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே என்னும் ஈற்றடி பாடலின் முதலில் கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும். முயற்சி செய்யாதவர்கள் என்ன ஆவார்கள் என்பது முதலில் கூறப்படுகிறது.

7.கொண்டு கூட்டுப் பொருள்கோள்

செய்யுளில் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்ப கூட்டிப் பொருள் கொள்வது.

எ.கா. *கட்டிக்கரும்பு கசக்கும் மிகக் கனிந்த*
எட்டிக் கனியினிக்கும் என்னூரில் - பட்டியுள
காளைபடிபால் கறக்குமே நல்லபசு
வேளை தவிரா தூமும்

இப்பாடலில் உள்ள சொற்களை பொருத்தமாகவைத்து பொருள் கொள்ளுதல்வேண்டும். கட்டிக்கரும்பு இனிக்கும். மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும். பட்டியிலிருக்கும் காளைமாடும் நேரம் தவிராது உழும். நல்லபசு படிபால் சுரக்கும் என அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாகப் பொருத்திப் பொருள் கொள்ளுதல் வேண்டும். மொழிமாற்று என்பது அந்தந்த அடிகளில் உள்ளதை முன் பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள் கொள்வது ஆகும் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

8.அடிமறி மாற்றுப் பொருள்கோள்

செய்யுளில் உள்ள அடிகளை எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறி மாற்றுப்பொருள்கோள் ஆகும்.

எ.கா. *மாறாக் காதலர் மலைமறந்தனவே*
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி மும்மே
கூறாய் தோழி யான் வாழுமாறே

இப்பாடலின் அடிகளை எப்படி மாற்றிப் படித்தாலும் பொருளும் ஓசையும் மாறாது.

யாப்பு

யாப்பு என்றால் யாக்கப்படுவது அதாவது கட்டப்படுவது என்பதாகும். யாப்பு என்பது செய்யுள் உறுப்புகள் ஆகும்.

செய்யுளின் உறுப்புகள் ஆறுவகைப்படும் அவை,

1.எழுத்து 2.அசை 3.சீர்

4.தளை 5.அடி 6. தொடை

என்பன

1.எழுத்து

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துக்கள் முதன்மையாகக் கருதப்படுகின்றன.

குறிலில் - உயிர் குறில் (உயர்மெய் குறில்)

நெடில் - உயிர் நெடில் (உயிர்மெய் நெடில்) (மெய்யினை ஒற்று என்றும் சொல்லப்பெறும்)

எ.கா. பாடல் என்ற சொல்லில்

பா - நெடில், ல் - என்பது ஒற்று, ட - குறில்

2.அசை

எழுத்து தனியாகவோ பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து பிரிந்து நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை

குறில் எழுத்து தனித்தும் ஒற்று எடுத்தும் நெடில் தனித்தும் ஒற்றெடுத்தும் வரப்பெறுவது நேரசை எனப்படும்.

எ.கா. குறில் தனித்து வருவது - க

குறில் ஒற்றுடன் வருவது - கல்

நெடில் தனித்து வருவது - வா

நெடில் ஒற்றுடன் வருவது - வால்.

நிரையசை

குறில் இணைந்தும் ஒற்றெடுத்தும், நெடில் இணைந்தும் ஒற்றெடுத்தும் வரப்பெறுவது; குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் ஒற்றெடுத்தும் பரவப்பெருவது.

எ.கா. குறில் இணைந்துவருவது - படு

குறில் ஒற்றெடுத்து - இடர்

குறில் நெடில் இணைந்து வருவது - தடா
குறில் நெடில் ஒற்றெடுத்து வருவது - தடால்

3.சீர்

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். அது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்பர்.

ஓரசைச்சீர்

வெண்பாவின் ஈற்றில் நேரசை நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும் அவை ஓரசைச்சீர் எனப்படும். அவை நாள் (நேர்) மலர் (நிரை) காசு (நேர்பு) பிறப்பு (நிரைபு) என்னும் நால்வகை வாய்ப்பாடுகளுள் ஒன்றாய் வரும்.

ஈரசைச்சீர்

நான்கு வகைப்படும் அவை,

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன.

சீர்	-	வாய்ப்பாடு
நேர் நேர்	-	தேமா
நிரைநேர்	-	புளிமா
நிரை நிரை	-	கருவிளம்
நேர் நிரை	-	கூவிளம்

மூவசைச்சீர்

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் வருவது மூவசைச்சீர். நேரசையில் முடியும் நான்கும் நிரையசையில் முடியும் நான்கும் சேர்ந்து மொத்தம் எட்டு சீர்கள் ஆகும்.

காய்ச்சீர் : நான்கு

நேர் நேர் நேர்	-	தேமாங்காய்
நிரை, நேர், நேர்	-	புளிமாங்காய்
நிரை, நிரை, நேர்	-	கருவிளங்காய்
நேர், நிரை, நேர்	-	கூவிளங்காய்

கனிச்சீர் : நான்கு

நேர் நேர் நிரை	-	தேமாங்கனி
நிரை, நேர், நிரை	-	புளிமாங்கனி
நிரை, நிரை, நிரை	-	கருவிளங்கனி
நேர் நிரை நிரை	-	கூவிளங்கனி

கனிச்சீர்கள் நாலசைச்சீர்: பதினாறு.

மூவசைச்சீர் எட்டுடன் நேர் அசை, நிரை அசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறும் கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் என்று கூறப்படுகிறது.

4.தளை

நிலைமொழியின் ஈற்றசையும் வரும்மொழியின் முதற்சீரும் ஒன்றுபட்டும், ஒன்றுபடாமலும் வருவது தளை எனப்படும்.

தளை - கட்டுதல்

ஒன்றி வருவது - நேர் முன் நேர்

நிரை முன் நிரை

ஒன்றாமல் வருவது - நேர் முன் நிரை

நிரை முன் நேர்

எ.கா. ஒன்றி வருவது

கற்ற/ த/ னால்/ ஆ/ யப/ யன் - நேர்முன் நேர் ஒன்றிவந்தது

நேர் நி நேர் நேர் நி நேர்

உண்/பதும்/ உடுப்/பதும் ஒன்றிவந்தது

நேர் நிரை நிரை நிரை ஒன்றாமல் வருவது

அ/கர/முத/ல ஒன்றாமல் வந்தது

நி நே நி நே

மலர்/மிசை/ ஏ/கினான் ஒன்றாமல் வந்தது

நிரை நிரை நேர் நிரை

தளை ஏழு வகைப்படும். அவை,

1.நேரொன்றாசிரியத்தளை

2.நிறையொன்றாசிரியத்தளை

3.இயற்சீர் வெண்டளை

4.வெண்சீர் வெண்டளை

5.கலித்தளை

6.ஒன்றிய வஞ்சித்தளை

7.ஒன்றாத வஞ்சித்தளை

1.நேரொன்றாசிரியத்தளை

மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியதளை

நேர் நேர் என்னும் வாய்ப்பாடுகள் நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் ஒன்றாய் வருவது நேரொன்றாசிரியத்தளை ஆகும்.

எ.கா. நேர் நேர் நேர் நேர் நேர் நேர் சேர்ந்து வந்து

பா /ரி/ பா / ரி என்றே ஒன்றாகிறது

2.நிறையொன்றாசிரியத்தளை

விளம் முன் நிரை வருவது நிறையொன்றாசிரியத்தளை.

எ.கா. படித்/ததில் மறந்/தது

நி நி நி நி

3. இயற்சீர் வெண்டளை

மாமுன் நிறையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை

எ.கா. கண்/ணில் தெரி/யும்

நேர் நேர் நி நி

தேமா

தள/பதி வந்/ தான்

நிரை நிரை நேர்

விளம்

கண்/ணிலே அன்/பிருந்தால்

நே நிரை நேர்

விளம்

4. வெண்சீர் வெண்டளை

காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை எனப்படும். அதாவது முச்சீராகிய தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய் கூவிளங்காய் என்பன.

எ.கா. யார்/ தரு/வார் இந்/த

நேர் நி நேர் நே

தேமாங்காய் - வெண்பாவிற்கு உரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெணசீர் வெண்டளையும் ஆகும் இவ்விரு தளைகள் தவிர வேறு தளைகள் வராது.

5.கலித்தளை

காய் முன் நிறை வருவது கலித்தளை ஆகும்.

எ.கா. வீ/டு வ/ரை உற/வு

நே நிரை நேர் நிரை நேர்

கூவிளங்காய்

காய்முன் நிறைவந்தது - கலித்தளை.

6.ஒன்றிய வஞ்சித்தளை

கனி முன் நிரை வந்தால் அது ஒன்றிய வஞ்சித்தளை எனப்படும்.

எ.கா ஒன்/றா/னவன் உரு/வில்

நேர் நேர் நிரை நிரை நேர்

தேமாங்கனி

கனிமுன் நிரை வந்தது.

7. ஒன்றாத வஞ்சித்தளை

கனிமுன் நேர் வந்தால் ஒன்றாத வஞ்சித்தளை ஆகும்.

எ.கா. வா/னில்/ வளர்/ திங்/களன்/ன

நேர் நேர் நிரை நேர்

தேமாங்கனி

கனிமுன் நேர் வந்ததால் ஒன்றாத வஞ்சித்தளை

பா வகைகள்

'பா' எனில் செய்யுள் அல்லது பாடல் என்று பொருள்படும். இலக்கணத்தில் பா என்பது நான்கு வகைப்படும். அவை, 1. வெண்பா, 2. ஆசிரியப்பா, 3. கலிப்பா, 4. வஞ்சிப்பா என்பன.

வெண்பாவின் பொது இலக்கணம்

1.ஈற்றடி (இறுதி அடி) முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வரும்.

2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர் (காய்ச்சீர்) வரும் பிற சீர்கள் வராது.

(மாச்சீர் - தேமா, புளிமா)

விளச்சீர்- கருவிளம், கூவிளம்

காய்ச்சீர் - தேமாங்காய், புளிமாங்காய்

3.இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும் பிற தளைகள் வராது.

4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்ப்பாடுகளும் ஒன்றைக் கொண்டு முடியும்.

(நாள்: நேர் அசை மட்டும்

மலர்: நிரை அசை மட்டும்

காசு: நேர் நேர் -தேமா

பிறப்பு: நிரை நேர் - புளிமா)

5.செப்பலோசைப் பெற்று வரும்.

6. இரண்டடி முதல் பன்னிரெண்டு அடிவரை வரும்.

வெண்பாவின் வகைகள்

வெண்பா ஆறு வகைப்படும் அவை, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா என்பன.

1.குறள் வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தாலும் இரு விகற்பத்தாலும் வரப்பெறும். குறள் என்பது இரண்டடி கொண்டதாகும்.

எ.கா. 1.அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

இரண்டு அடிகளிலும் இரண்டாம் எழுத்து க என்றே ஒன்றி ஒரு விகற்பத்தால் வந்துள்ளது.

2. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபா

கோடாமைச் சான்றோர்க் கணி

இந்தக் குறளில் முதலடியில் இரண்டாம் எழுத்து ம என்றிருக்க இரண்டாம் அடியில் இரண்டாம் எழுத்து டா என்றே வேறாய் வந்துள்ளதால் இருவிகற்பத்தால் வந்துள்ளது.

2.நேரிசை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நான்கு அடி கொண்டதாகவும் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி ஒரு விகற்பமாயும் கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும் நான்கு அடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது நேரிசை வெண்பா எனப்படும்.

எ.கா. வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு

நுணங்கி நூல் நோக்கி நுழையா - இணங்கிய

பால்நோக்கி வாழ்நாள் பழியில்லா மன்னனாய்

நூல் நோக்கி வாழ்வான் நுதித்து

இதில் முதல் இரண்டடியிலும் இரண்டாம் அடியின் இறுதி சீரிலும் ண என்று எதுகை பெற்றும் மூன்றாம் நான்காம் அடியில் ல் என்ற எதுகைப்பெற்றும் வந்தால் இரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா ஆகும்.

3.இன்னிசை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தால் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

எ.கா தாய் தமக்கே ஒப்பில்லை தரணியில் எப்பொருளும்

சேய் நம்மைச் சீராட்டி செந்நிறைப் பாலாக்கி

வாய்வழியாத் தரமூட்டி வாழ்விக்கும் தெய்வமென்று

தாய்போலும் உணடாமோ தான்.

இப்பாடலில் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை நான்கு அடிக்கும் ஒரு விகற்பம் வந்துள்ளது. இரண்டாம் எழுத்து ய என்பது எதுகையாய் வந்துள்ளது.

4.பஃறொடை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரெண்டு அடிவரைப் பெற்று வருவது.

எ.கா. நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து

இது ஐந்து அடிகளால் வந்த பஃறொடை வெண்பா ஆகும். இது ஈற்றடி மூன்று சீராயும் ஏனைய அடிகள் நான்கு சீராயும் வந்த பஃறொடை வெண்பா ஆகும்.

5.நேரிசை சிந்தியல் வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போல இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தாலும், இருவிகற்பத்தாலும் மூன்றடிகளாய் வரப்பெறுவது. நேரிசை சிந்தியல் வெண்பா ஆகும்.

எ.கா விருந்தினர் மூத்தோர் பசுசிறைப் பிள்ளை
இவர்க் கூன் கொடுத்தல்லால் உண்ணார் - என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்

இது இரண்டாமடியில் தனிச்சொல் பெற்று மூன்று அடிகளாய் வந்தநேரிசை சிந்தியல் வெண்பாவாகும்.

6. இன்னிசை சிந்தியல் வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தாலும், பல விகற்பத்தாலும் வரப்பெறுவது.

எ.கா திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்த்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றிவ்
வங்கண் உலகளித்த லான்

இது ஒரு விகற்பத்தோடு தனிச்சொல் இன்றி மூன்றடிகளால் வந்த இன்னிசை வெண்பாவாகும்.

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

1. அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.

2.பெரும்பாலும் ஈரசைச்சீர்களாகிய மாச்சீர், விளச்சீர், ஆசிரிய உரிச்சீர்கள் பெற்று வரும்.

3.வஞ்சி உரிச்சீர்கள் வராது.

4.நேரொன்றாசிரியத் தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் மிகுந்து வரும்.

5.குறைந்தது மூன்றடிகள் கொண்டும் மிகுதியாக பாடுவோரின் எண்ணப்படி மிகுந்து வரும்.

6.ஈற்றடியின் இறுதிச்சீர் ஏ, ஐ, ஓ, ஈ, ஆய், என் - என்னும் அசைகளுள் ஒன்றைக் கொண்டு முடியும். ஏகாரத்தால் முடிவதே சிறப்பாகும்.

7.அகவல் ஓசைப் பெற்றுவரும். அகவல் ஓசை உடையதால் அகவற்பா என்றும் பெயர் பெறும்.

ஆசிரியப்பாவின் வகைகள்

1.நேரிசை ஆசிரியப்பா

2.நிலைமண்டில ஆசிரியப்பா

3.இணைக் குறள் ஆசிரியப்பா

4.அடிமறி மண்டில ஆசிரியப்பா

1.நேரிசை ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணம் பெற்று ஈற்றயலடி மூன்று சீர்கள் பெற்று ஏனைய அடிகள் நான்கு சீர்கள் பெற்று வருவது நேரிசை ஆசிரியப்பா எனப்படும்.

எ.கா பாரி பாரி என்று பலரேத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டிண் டுலகு புரப்பதுவே

ஈற்றயலடி முச்சீராய் மற்ற அடிகள் நாற்சீராய் வந்துள்ளன.

2.இணைக்குறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று முதலடியும் ஈற்றடியும் நான்கு சீர்களாகி இடையிடையே இருசீர் அடிகளாகவும் முச்சீர் அடிகளாகவும் அமைந்து வருவது.

எ.கா நீரின் தன்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத்திரும்
சாரல் நாடன் கேண்மை

சாரச் சாரச் சார்ந்து

தீரத் தீரத் தீர்ப்பொல்லாதே.

3.நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று அனைத்து அடிகளிலும் நான்கு சீர்கள் பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.

எ.கா நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்

அதனால் யான்உயிர் என்பது அறிகை

வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே

4.அடிமறி மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று ஒவ்வொரு அடியுனுள்ளும் பொருள் முடியுமாறும், அடிகளை மாற்றி அமைத்தாலும் பொருளும் ஓசையும் கெடாமல் வரப்பெறுவது அடிமறி மண்டில ஆசிரியப்பா எனப்படும்.

எ.கா. மாறாக் காதலர் மலைமறந் தனரே

ஆறாக் கட்பனி வரலா னாவே

வேறா மென்றோள் வள்ள நெசியுமும்மே

கூறாய் தோழி யான் வாழு மாறே

5.கலிப்பா

நாற்சீர் கொண்ட அளவடி உடையதாய் வெண்சீர் மிகப் பெற்று மாச்சீரும் விளங்கனிச் சீரும் பெறாமல் ஏனைய சீர்கள் சிறுபான்மையாகக் கொண்டு கலித்தளையும் பிறத்தளைகளும் வரப்பெற்று மூன்றடி சிறுமை உடையதாய் தரவு, தாழிசை அராகம், அம்போதரங்கம், தனிச்சொல் அரிதகம் என்னும் ஆறு உறுப்புகளுள் ஏற்பன கொண்டு முடிவது கலிப்பா ஆகும்.

கலிப்பாவின் வகைகள்

1.நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
2.அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
3.வண்ண ஒத்தாழிசைக் கலிப்பா
4.வெண்கலிப்பா
5.கலிவெண்பா
6.கொச்சகக்கலிப்பா

6.வஞ்சிப்பா

1.இருசீர் அடிகளும் முச்சீர் அடிகளும் கலந்து வரும்.

2.காய்ச்சீரும் கனிச்சீரும் மிகுந்துவரும்

3.வஞ்சித்தளை மிகுந்தும் பிறத் தளைகள் குறைந்தும் வரும்.

4.தனிச்சொல் ஆசிரியச் சுரிதகம் வரும்.

5.மூன்று அடிகள் முதல் பலவடிகள் வரும்.

6.தூங்கல் ஓசை பெறும்.

அணி

அணி என்றால் அழகு என்று பொருள் தரும். இயல்பான அழகை மேலும் அழகுபடுத்திக் கொள்ள ஆடை, ஆபரணங்கள் பயன்படுத்தி கொள்வதைப் போன்று பாடலை சொல்லாலும், பொருளாலும் அழகு பெறச் செய்வது அணி ஆகும். பதினாறு வகைகளாகக் கூறப்படும். அவை, 1.தன்மையணி, 2.உயர்வு நவிற்சி அணி, 3.உவமை அணி, 4.எடுத்துக்காட்டு உவமை அணி, 5.இல்பொருள் உவமை அணி, 6. உருவக அணி, 7.ஏகதேச உருவக அணி, 8.வேற்றுமை அணி, 9.வேற்றுப்பொருள் வைப்பணி, 10.தற்குறிப்பேற்ற அணி, 11.பிரிதுமொழிதல் அணி, 12. நிரநிரையணி, 13. சொற்பொருள் பின்வருநிலை அணி, 14. வஞ்சப்புகழ்ச்சி அணி, 15.இரட்டுற மொழிதல் அணி, 16 மடக்கணி என்பன.

1.தன்மையணி

உள்ளதை உள்ளவாறு இயற்கைத் தன்மை மாறாது அழகுபடக்கூறுவது.

எ.கா. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்ச்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

சிவபெருமானின் தோற்றம் உள்ளது உள்ளவாறு கூறப்பட்டுள்ளது. இது தன்மை அல்லது இயல்பு நவிற்சி அணி எனப்படும்.

2.1. இயல்பு நவிற்சி அணி

ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறே கூறுவது இயல்பு நவிற்சி அணியாகும்.

எ.கா. தோயும் வெண்டயர்மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் மங்கையர் அங்கை வருந்துவார்

இப்பாடலில் தயிர் கடையும் ஆய மகளின் தன்மை உள்ளது உள்ளவாறே அழகுபட சொல்லப்படுவதைக் காணலாம்.

2.2.உயர்வு நவிற்சி அணி

இயல்பான ஒன்றை மிகவும் உயர்த்திக் கூறுவது.

எ.கா. விள் முட்டும் கோபுரம்

கோபுரம் விண்ணை முட்ட முடியாது என்றாலும் அதன் உயர்ச்சிக்கருதி உயர்த்திக் கூறப்பட்டது.

3.உவமை அணி

ஒரு பொருளை மற்றொன்றோடு உவமைப்படுத்திக் கூறுவது உவமை அணி ஆகும். உவமை உவமிக்கப்படும் பொருள், உவம உருபு மூன்றும் வெளிப்படையாக அமைந்திருக்கும்.

எ.கா. என்பிலதனை வெயில் போல காயுமே
அன்பி லதனை அறம்

எலும்பில்லாத உயிரினத்தை வெயில் வாட்டுவதை போல அன்பில்லா உயிர்களை அறக்கடவுள் வாட்டும் என்பது பொருள். இங்கு என்பிலதனை வெயில்போல என்பதில் எலும்பில்லா உயிரை வெயில் வாட்டுவதைப் போல, அன்பிலதனை அறம் என்றவிடத்து அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் வாட்டும் என்றே உவமிக்கப்பட்டுள்ளது.

உவமை – எலும்பில்லாத உயிரை வெயில் காய்தல் உவமேயம் – அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வாட்டும் உவமஉருவு – போல

உவமை, உவமிக்கப்படும் பொருள் உவமஉருவு மூன்றும் வெளிப்படையாக அமைந்துள்ளது.

4.எடுத்துக்காட்டு உவமை அணி

உவமைத்தனியாகவும் பொருள் தனியாகவும் இருந்து உவம உருபு மறைந்து வந்தால் அது எட்டுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

எ.கா. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாய் இருப்பதுபோல உலகிற்கு இறைவன் முதலானவனாக (மூலமானபொருள்) இருக்கிறான் என்பது. இப்பாடலில் உவமைக் காட்டப்பட்டு இருப்பினும் உவம உருபு மறைந்து வருகிறது.

5.இல்பொருள் உவமை அணி

புலவர் ஒரு பொருளுக்கு உவமைக் கூறும்போது உலகில் இல்லாத பொருளை அல்லது நடைபெறாத செயலை உவமையாக வைத்துக் கூறுவர். அவ்வாறு கூறப்படுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

எ.கா. அன்பகத்தில்லா வுயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர் தற்று

அன்பு இல்லாதாளின் வாழ்க்கை வலியபாலை நிலத்தில் பட்ட மரம்தளிர்ந்ததற்கு ஒப்பாகும் என்பது பொருள். இங்கு பட்ட மரம் தளிர்த்தல் என்பது இல்லை. பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்க்காததைப்போல அன்பு இல்லாதான் வாழ்க்கை வாழ்கிறான் என்றே இல்லாத பொருள் உவமைக் காட்டப்பட்டுள்ளது.

6.உருவக அணி

உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடின்றி உவமையை பொருளாகக் கூறுவது.

எ.கா. முகமதி – இதில் முகமாகிய பொருள் மதியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

7.ஏகதேச உருவக அணி

புலவர் ஒரு செய்யுளில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள்களை உருவகம் செய்யும்போது ஒன்றை உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் கூறுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

எ.கா. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

இப்பாடலில் பிறவியாகிய பெருங்கடல் என்றே பிறவி கடலாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பிறவியைக் கடப்பதற்கு இறைவனின் திருவடிகள் மரக்கலமாக உருவகம் செய்யப்படவில்லை. இவ்வாறு ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்று உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

8.வேற்றுமை அணி

ஒரு செய்யுளில் இரண்டு பொருளுக்குரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் ஒரு காரணம் கூறி இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.

எ.கா. தீயனாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

தீயினால் சுட்டால் உடன் புண்படும் நாவினால் (கொடுஞ்சொல்) சுட்டால் உள்ளத்தை புண்படுத்தும் என்றே தீக்கும் நாவுக்கும் ஒற்றுமை கூறிவிட்டு அதன்பின் தீயினால் சுட்டபுண் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டப்புண் ஆறாது என்றே வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

9.வேற்றுப்பொருள் வைப்பணி

கவிஞர் தான் கூற நினைக்கும் சிறப்புப் பொருளை உலகம் அறிந்த பொதுப் பொருளால் வலியுறுத்திக் கூறுவது வேற்றுமைப்பொருள் வைப்பணி ஆகும்.

எ.கா. உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இச்செய்யுளில் குலத்திற்குரிய கல்வி கல்லாமலேயே இயல்பாக அமையும் என்பது பொதுப் பொருள். இந்தப் பொருளின் மூலமாக கரிகாற்சோழன் மிகவும் இளையவனாக இருத்தலால் நீதி வழங்குவானோ என்று ஐயுற்ற பெரியோர் மகிழும்படியாக நரைமுடி பூண்டு நீதி வழங்கினான் என்னும் சிறப்புப் பொருளைக் கவிஞர் விளக்கியுள்ளார். எனவே இச்செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணியாகும்.

10.தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது புலவன் தன்னுடைய கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

எ.கா. பேருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பனபோல மறித்துக் கைக்காட்ட – சிலப்பதிகாரம்

காற்றில் கொடிகள் அசைவது என்பது இயல்பான ஒரு நிகழ்வு. ஆனால் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் நுழையும்போது இந்த கோவலன் பின்பு கொல்லப்படுவான் என்பதால் வாராதே என்று அசைவது போல் இருந்தது என்றே தன் கருத்தை ஏற்றிக் கூறுகின்றார்.

11.பிறிதுமொழிதல் அணி

புலவன் தான் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் அதனோடு ஒத்த வேறு பொருளை வைத்துக் கூறி அதிலிருந்து தான் கூறக் கருதிய பொருளை பெறவைத்தல் என்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

எ.கா. பரியது கூர்ங் கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

யானையானது பருத்த உடலும் வலிய தந்தங்களை உடையதாக இருந்தாலும் புலி தாக்கினால் அஞ்சி நடுங்கும் என்பது இப்பாடலின் பொருள். இதிலிருந்து வேறு ஒரு பொருளை பெற வைக்கின்றார். படை வலிமை கொண்ட அரசனாக இருந்தாலும் ஊக்கமில்லாதவனாக இருப்பின் பகை அரசரைக் கண்டு அஞ்ச நேரிடும் என்பது பிறிது ஒரு பொருளாய் அமைகிறது.

12. நிரல் நிறையணி

புலவர் ஒரு செய்யுளில் முதலில் சில சொற்களை ஒரு வரிசையாகக்கூறி பின்னர் அச்சொற்களுக்கு ஏற்ப பொருளமைந்த சொற்களை அதே வரிசையாகக் கூறுவது நிரல் நிறையணியாகும்.

எ.கா. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள்)

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு; இல்வாழ்க்கையின் பயன் அறம் என்று கூறவந்த திருவள்ளுவர் அன்பு, அறன் என்னும் சொற்களை முதலடியில் கூறி அதனோடு பொருந்தும் வகையில் பண்பு, பயன் என்னும் சொற்களை இரண்டாம் அடியில் கூறினார். இவ்வாறு சொற்களை முதலில் ஒரு வரிசைப்படிக்கூறி அவற்றுக்கேற்ற சொற்களைப் பின்னர் அதே வரிசைப்படி அமைப்பது நிரல்நிரை அணி எனப்படும்.

13. சொற்பொருள் பின்வருநிலை அணி

செய்யுளில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து அந்த ஒரே பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலை அணி எனப்படும்.

எ.கா. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

இந்தச் செய்யுளில் நன்று என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து நன்று என்பதற்கான ஒரே பொருளைத் தந்துள்ளது.

14. வஞ்சப்புகழ்ச்சி அணி

ஒன்றைப் பழிப்பதுபோல் புகழ்வதும் புகழ்வது போல பழிப்பதும் வஞ்சப் புகழ்ச்சி அணி எனப்படும்.

எ.கா தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழு கலான்

தேவர்கள் மனம் விரும்புமாறு செயல்களைச் செய்யும் ஆற்றல் உடையவர்கள்; அதேபோல் கயவர்களுக்கும் தன் மனம் விரும்புமாறு கீழ்மையான செயல்களை செய்யக்கூடியவர்கள் என்று கூறுகின்றார். இங்கு கயவர்களை தேவர்களோடு ஒப்பிட்டு புகழ்வது போல கூறி அவர்களின் கீழ்மை குணங்களைப் பழித்துக் கூறுகின்றார். புகழ்வதுபோல பழித்துக் கூறுவதால் இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

15. இரட்டுற மொழிதல் அணி

இரண்டு + உற+ மொழிதல் = இரண்டு பொருள்படுமாறு கூறுதல்.

புலவர் ஒரு செய்யுளில் ஒரு சொல், அல்லது தொடர் இரண்டு பொருள் தரும்படி கூறுவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனை சிலேடை என்றும் கூறுவர்.

எ.கா. வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்.

இப்பாடலில் வைக்கோலும் யானையும் என்று இருபொருள்படும்படி சொற்கள் அமைந்துள்ளன.

யானை	- களம்	- போர்களம்
வைக்கோல்	- களம்	- நெற்களம்
யானை	- கோட்டை	- அரண்மனை
வைக்கோல்	- கோட்டை	- நெற்கோட்டை
யானை	- போர்	- சண்டை
வைக்கோல்	- போர்	- வைக்கோல் போர்

இரண்டு பொருள்படும்படி பாடப்பட்டதால் இது இரட்டுற மொழிதல் அணி ஆயிற்று.

16 மடக்கணி

ஒரு தொடர் மடங்கி வந்து இருவேறு பொருளைத் தருமாயின் அது மடக்கணி எனப்படும்.

எ.கா. ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரை சூழும் கலசையே - மேவும்
அரிவையம்பாகத்தான அரணெடு மூன்றாய் தோள்

அரிவையம் பாகத்தான் என்னும் சொல் இரண்டடிகளிலும் வந்துள்ளது. முதலடியில் வந்துள்ளதை அரி+வை+அம்பாகத்தான் எனப் பிரித்துத் திருமாலைக் கூரிய அம்பாகக் கொண்டு எனப்பொருள் கொள்ளவேண்டும்.

அரி	- திருமால்
வை	- கூர்மை

அம்பாகத்தாள் - அம்பாக

இரண்டாமடியில் வந்துள்ள அதே தொடரை அரிவை + அம்+ பாகத்தான் எனப் பிரித்து உமாதேவியை இடப்பாகத்தே கொண்ட சிவபெருமான் எனப் பொருள்கொள்ள வேண்டும்.

அரிவை - உமாதேவி

அம் - அழகிய

பாகத்தாள் - இடப்பாகத்தே உடையவன்

ஒரே தொடர் மடக்கிவந்து இருபொருள் தந்துள்ளது.

வினா விடைகள்

வினவப்படுதலின் வினா ஆயிற்று. கேட்கப்படுதலின் கேள்வி ஆயிற்று. வினா என்பது ஆறு வகைப்படும் 1.அறிவினா, 2.அறியாவினா, 3.ஐயவினா, 4.கொளல் வினா, 5.கொடை வினா 6.ஏவல் வினா என்பன.

1.அறிவினா

தான் ஒரு பொருளை நன்கு அறிந்திருந்தும் அப்பொருள் பிறருக்குத் தெரியுமா என அறியும்பொருட்டு வினவப்படும் வினா அறிவினா எனப்படும்.

எ.கா. ஐம்பெரும் காப்பியங்கள் யாவை? என்றே ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து கேட்க. ஆசிரியர்க்கு அதற்கான விடைத்தெரிந்திருந்தும் மாணவர்களுக்கு தெரிகின்றதா என்று அறிவதற்காக வினவப்பட்டது ஆகையினால் இது அறிவினாவாகும்.

2.அறியா வினா

ஒரு பொருளைப் பற்றி தான் அறியாதபோது அதனை அறிந்து கொள்வதற்காக கேட்கப்படும் வினா அறியாவினாவாகும்.

எ.கா. உயிர் எழுத்துக்கள் எத்தனை? என்றே ஆசிரியரைப் பார்த்து மாணாக்கர் கேட்கும் கேள்வி அறியாவினா என்பதாகும்.

மாணவனுக்கு கேள்விக்கான விடைத்தெரியாததால் ஆசிரியரிடம் கேட்கப்பட்ட வினா ஆதலால் இது அறியாவினா ஆயிற்று.

3.ஐயவினா

ஐயம் - சந்தேகம்

தனக்கு சந்தேகமாக (ஐயம்) இருக்கின்ற ஒரு பொருள் குறித்து சந்தேகத்தைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா - ஐயவினா ஆகும்.

எ.கா. அங்கே வருவது ஆணா? பெண்ணா?

4.கொளல் வினா

ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா கொளல்வினா ஆகும்.

எ.கா. மிளகாய் உள்ளதா? (வணிகரே) என்றே வினவுவது.

5.கொடைவினா

தான் ஒரு பொருளைத் தருவதற்காக அந்தப் பொருள் ஏற்கனவே அவர்களிடம் உள்ளதா என்று அறியும்பொருட்டு கேட்கப்படும் வினா கொடை வினா ஆகும்.

எ.கா. உன்னிடம் எழுதுவதற்கு எழுதுபொருள் எதுவும் இல்லையா?

(இல்லை எனின் எழுதுபொருளை கொடுப்பதற்காக கேட்கப்பட்ட வினா)

6.ஏவல் வினா

ஒரு தொழிலை செய்யும் படி ஏவும் வினா – ஏவல் வினா எனப்படும்.

எ.கா. வீட்டுப்பாடம் செய்தீர்களா?

விடை வகை

விடை என்பதற்கு இறை, செப்பு, பதில் என வேறு பெயர்களும் உண்டு. வினாவிற்கு ஏற்ற பதிவினைத் தருவது விடையாகும். விடை எட்டு வகைப்படும். அவை 1. சுட்டு 2.மறை, 3.நேர், 4.ஏவல், 5.வினா எதிர்வினா 6. உற்றது உரைத்தல் 7.உறுவது கூறல் 8.இனமொழி என்பன.

1.சுட்டு விடை

சுட்டி பதில் கூறுவது சுட்டுவிடை ஆகும்.

எ.கா. காட்டூர் செல்ல வழியாது?

என்று வினவினால் இதோ இந்த வலது பக்கம் சென்று திரும்பவேண்டும் என்பது போல் சுட்டிக்காட்டி விடை அளிப்பது.

2.மறைவிடை

(எதிர்மறுத்துக்கூறல் விடை)ஒரு வினாவிற்கு எதிர்மறுத்து விடைக்கூறுவது மறைவிடை ஆகும்.

எ.கா. இதைச் செய்வாயா?

என்று வினவியபோது செய்வேன் என்பது போல் எதிர்மறுத்துக் கூறும் விடை எதிர்மறை விடை ஆகும்.

3.நேர்விடை

கேட்கப்படும் வினாவிற்கு உடன்பட்டு விடை அளிப்பது நேர்விடை ஆகும்

எ.கா. இதைச் செய்வாயா?

என்று வினவியபோது செய்வேன் என்றே நேரிடையாக பதில் கூறுவது.

4.ஏவல் விடை

ஒரு வினாவிற்கு பதில் ஏவலில் அளிப்பது அதாவது கட்டளையில் கூறுவது .

எ.கா. இதைச் செய்வாயா?

என்று வினவப்படும்போது செய்வேன், செய்யமாட்டேன் என்று ஏதாவது ஒன்றைக் கூறாது **நீயே செய்** என்று பதில் கூறுவது ஏவல் விடை என்பதாகும்.

5.வினாஎதிர் வினாதல் விடை

கேட்ட கேள்விக்கு பதில் தரும்போது வினாவாகவே எதிர் வினாவில் பதிலினைக் கூறுவது வினாஎதிர்வினாதல் விடை ஆகும்.

எ.கா. இதைச் செய்வாயா?

என்று எதிர் வினாவில் கேட்கும்போது ஏன் செய்யமாட்டேனா? என்றே எதிர் வினாவில் பதில் கூறி செய்வேன் என்ற பதிலினை உணர்த்துவது.

6.உற்றது உரைத்தல் விடை

கேட்கப்படும் வினாவிற்கு தனக்கு நடந்ததைக்கூறி பதில் சொல்லுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

எ.கா. இதைச் செய்கிறாயா?

என்ற வினாவிற்கு தலைவலிக்கிறது என்றோ தனக்கு உள்ளதைக் கூறி பதில் இறுப்பது.

7.உறுவது கூறல் விடை

கேட்கப்படும் கேள்விக்கு தனக்கு நடக்கப்போவதை பதிலாக உரைப்பது.

எ.கா. இதை செய்வாயா?

என்ற வினாவிற்கு கைவலிக்கும் என்றோ வரப்போவதைக் கூறி பதில் இறுப்பது.

8.இனமொழி விடை

கேட்கப்படும் கேள்விக்கு அதற்கான பதிலைக் கூறாமல் அதற்கு இனமானவற்றைக் கூறி பதில் கூறுவது.

எ.கா. ஆடத் தெரியுமா?

என்ற வினாவிற்கு நன்றாகப் பாடுவேன் என்றோ அதற்கு இனமானவற்றைக் கூறி ஆடத்தெரியாது என்ற பதிலைக் கூறுவது.

ஒருபொருட் பன்மொழி

ஒருபொருளையே தரும் பல சொற்களை தொடர்வது ஒருபொருட் பன்மொழியாகும்.

எ.கா. நடுமையம்

இதில் நடு என்றாலும் மையம் என்றாலும் மத்தியில் உள்ளதைக் குறிப்பது என்றிருக்க நடு, மையம் என்ற இரு சொற்களும் தொடர்ந்து வந்து ஒரு பொருளை தந்தது.

பொருள் இலக்கணம்
அகப்பொருள்

பொருள் என்பது ஒழுக்கமுறைமை. பொருளிலக்கணம் அகம், புறம் என இரண்டு வகைப்படும்.

அகப்பொருள்

அன்புடைய தலைவன், தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என அகத்திணை ஏழு வகைப்படும். அவற்றுள் முதல் ஐந்தும் அன்பின் ஐந்திணை என வழங்கப்பெறும்.

அகப்பொருளுக்குரிய பொருள்கள் : முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

முதற்பொருள்

அகவொழுக்கம் நிகழ்த்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும். நிலம் ஐவகைப்படும்.

ஐவகை நிலங்கள்

1. குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
2. முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
4. நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
5. பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்

பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

1. கார்காலம் - ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக்காலம் - மார்கழி, தை
4. இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி
5. முதுவேனிற்காலம் - ஆனி, அடி

சிறுபொழுது (ஒரு நாளின் ஆறு கூறுகள்)

1. காலை - காலை 6 மணி முதல் 10 மணிவரை
2. நண்பகல் - காலை 10 மணி முதல் 2 மணிவரை

3. எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை
4. மாலை - மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை
5. யாமம் - இரவு 10 மணி முதல் 2 மணிவரை
6. வைகறை - இரவு 2 மணி முதல் காலை 6 மணிவரை

திணையும் பொழுதும்

திணை	பெரும்பொழுது	சிறுபொழுது
குறிஞ்சி	குளிர்காலம், முன்பனிக்காலம்	யாமம்
முல்லை	கார்காலம்	மாலை
மருதம்	ஆறு பெரும்பொழுதுகள்	வைகறை
நெய்தல்	ஆறு பெரும்பொழுதுகள்	எற்பாடு
பாலை	இளவேனில்,முதுவேனில்,பின்பனி	நண்பகல்

கருப்பொருள்

அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலியன பொருள்கள் கருப்பொருள் எனப்படும்.

கருப் பொருள்	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
தெய்வம்	முருகன்	திருமால்	இந்திரன்	வருணன்	கொற்றவை
மக்கள்	வெற்பன் குறவர் குறத்தியர்	தோன்றல் ஆயர் ஆய்ச்சியர்	ஊரன் உழவர் உழத்தியர்	சேர்ப்பன் பரதன் பரத்தியர்	எயினர் எயிற்றியர்
உணவு	மலைநெல் தினை	வரகு சாமை	செந்நெல் வெண்ணெல்	மீன், உப்புக்குப் பெற்ற பொருள்	சூறை யாடலால் வரும் பொருள்
விலங்கு	புலி, கரடி சிங்கம்	முயல், புலி,மான்	எருமை நீர்நாய்	முதலை சுறா	வலியிழந்த யானை
பூ	குறிஞ்சி காந்தள்	முல்லை தோன்றி	செங்கழுநீர் தாமரை	தாழை நெய்தல்	குரவம் பாதிரி
மரம்	அகில் வேங்கை	கொன்றை காயா	காஞ்சி மருதம்	புன்னை ஞாழல்	இலுப்பை பாலை
பறவை	கிளி,மயில்	காட்டுக்கோழி மயில்	நாரை, நீர்க்கோழி அன்னம்	கடற்காகம்	புறா,பருந்து
ஊர்	சிறுகுடி	பாடி,சேரி	பேரூர்,மூதூர்	பட்டினம், பாக்கம்	குறும்பு

நீர்	அருவிநீர் சுனைநீர்	காட்டாறு	மனைக் கிணறு பொய்கை	மணற் கிணறு உவர்க்கழி	வற்றிசுனை கிணறு
பறை	தொண்டகம்	ஏறு கோட் பறை	மணமுழா நெல்லரி கிணை	மீன்கோட் பறை	துடி
யாழ்	குறிஞ்சியாழ்	முல்லையாழ்	மருதயாழ்	விளரி யாழ்	பாலையாழ்
பண்	குறிஞ்சிப் பண்	முல்லைப் பண்	மருதப் பண்	செவ்வழிப் பண்	பஞ்சுரப் பண்
தொழில்	தேனெடுத்தல் கிழங்கு அகல்தல்	ஏறுதழுவுதல் நிரை மேய்த்தல்	நெல்லரிதல் களை பறித்தல்	மீன்பிடித்தல் உப்பு விளைத்தல்	வழிப்பறி நிரை கவர்தல்

புறப்பொருள்

வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல், முதலியப் பொருள்களைப் பற்றிக் கூறுவது அகப்பொருள்; வாழ்வியல் என்றால் புறப்பொருள் உலகியலாகும். புறம் பற்றிய செய்திகளைக் கூறுவது புறத்திணை ஆகும். இது 12 வகைப்படும் (திணை - ஒழுக்கம்)

1.வெட்சித்திணை

பகைவர் நாட்டின் மீது போர்த்தொடுக்கும் மன்னவன் முதலில் அந்நாட்டிலுள்ள ஆநிரைகளை (ஆ - பசு நிரை - கூட்டம்) கவர்ந்து வரச் செய்வான் அப்போது அந்த வீரர்கள் வெட்சிப்பூவினை சூடிச் செல்வார்கள் எனவே இது வெட்சித்திணை ஆயிற்று. வெட்சிப்பூ வெற்றிக்கு அறிகுறியாகக் கருதப்படும் ஒன்று. (இன்றைய இட்லிப்பூவே வெட்சிப்பூ என்று அறிக)

2.கரந்தைத்திணை

வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தமது ஆநிரைகளை மீட்கும் பொருட்டு கரந்தை என்னும் பூவைச்சூடிச் சென்று மீட்பது.

3.வஞ்சித்திணை

மண்ணாசைக் காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி வஞ்சிப்பூவைச் சூடி போருக்குச் செல்வது.

4.காஞ்சித்திணை

தமது நாட்டை கைப்பற்ற வந்த மாற்றரசரோடு எதிர்த்து போரிடுவது காஞ்சித்திணை ஆகும் . அப்போது வீரர்கள் காஞ்சிப்பூவைச் சூடிச்செல்வர்.

5.நொச்சித்திணை

பகை அரசரால் முற்றுகை இடப்பட்ட தமது மதிலைக் காத்தலின் பொருட்டு கோட்டையின் உள்ளே இருந்துக் கொண்டே போரிட்டு மதிலைக் காப்பது, இவர்கள் நொச்சிப்பூவை சூடுவர்.

6.உழிஞைத்திணை

உழிஞைப்பூ சூடிய வீரர்களுடன் சென்று மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலை சுற்றி வளைத்தல்.

7.தும்பைத்திணை

இரு அரசர்கள் நேருக்கு நேர் மோதி போர்புரிவது தும்பைத்திணை ஆகும். இருநாட்டு வீரர்களும் தும்பைப் பூவை சூடி போரிடுவர்.

8.வாகைத்திணை

வெற்றிப் பெற்ற அரசன் வாகைப்பூசூடி மகிழ்வது வாகைத்திணை ஆகும்.

9.பாடாண் திணை

பாடுதற்கு தகுதியுடைய ஒரு ஆண் மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை, முதலியவற்றைப் போற்றிப் பாடுவது பாடாண்திணை ஆகும்.(பாடு + ஆண் + திணை =பாடாண்திணை)

10.பொதுவியல் திணை

வெட்சி முதல் பாடாண் வரையிலுள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதவற்றையும் கூறுவது பொதுவியல் திணை ஆகும்.

11.கைக்கிளைத்திணை

கைக்கிளைத் திணை என்பது ஒரு தலைக்காமம். இஃது ஆண்பால் கூற்று பெண்பால் கூற்று என இருவகைப்படும்.

12.பெருந்திணை

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்– உட்காது
எதிருன்றால் காஞ்சி எயிற்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகும் உழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம் போர்களத்து மிக்கால்
செருவென்றது வாகை யாம் *– புறப்பொருள் வெண்பாமாலை*

எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள்.

1.வெளிப்படை

1.வெளிப்படையாகத் தன் பொருளை உணர்த்தும் சொல் வெளிப்படை என்று பெயர்பெறும்.

எ.கா. உலகிலேயே பண்பாட்டில் இந்தியா தான் தலைசிறந்து விளங்குகின்றது.

இங்கு வந்துள்ள இந்தியா என்னும் சொல் வெளிப்படையாக இடத்தைக் குறித்து நின்றது. இந்தியா, அமெரிக்கா, சீனா, என்றே பண்பாட்டு நிலையை நோக்கும் போது இந்திய நாடுதான் என்றே இடத்தை வெளிப்படையாக உணர்த்தி நின்றமையால் இது வெளிப்படைச்சொல் என்றாயிற்று.

குறிப்பு

ஒரு தொடரில் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனப்படும்.

எ.கா. பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

இத்தொடரில் வந்துள்ள தமிழ்நாடு என்பது தமிழ் நாட்டிற்காக விளையாடிய பூப்பந்து விளையாட்டு வீரர்களை குறிப்பால் உணர்த்தி நின்றதால் இது குறிப்பு ஆயிற்று.

2. குறிப்புச் சொற்கள்

ஒன்றொழி பொதுச்சொல் விகாரச்சொல் தகுதி வழக்குச் சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை வினைக்குறிப்புச்சொல் முதற்குறிப்புச்சொல், தொகைக் குறிப்புச்சொல் போன்றவை குறிப்பால் பொருள்காட்டும். அதற்கு ஒன்றொழி பொதுச்சொல் என்று பெயர் பெரும்.

உயர்திணை குறிப்புச்சொற்கள்

எ.கா. வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர். நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

இங்கு முதல் தொடரில் வந்துள்ள ஐவர் என்பது பொதுச்சொல் அச்சொல் கோலமிட்டனர் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலைக் குறித்து நின்றது.

பொதுவாக கோலமிடுதல் என்பது பெண்கள் மேற்கொள்வதால் பெண்கள் என்றே குறிப்பாக உணர்த்தி நின்றது.

இரண்டாம் தொடரிலுள்ள ஐவர் என்பது போர்க்களம் என்ற சொல்லின் குறிப்பால் ஆண்பாலை உணர்த்தி நின்றது. பொதுவாக போர்க்களத்திற்கு ஆண்கள் செல்வதால் ஐவர் என்பது ஆண்கள் என்றே குறிப்பால் உணர்த்தி நின்றது.

அஃறிணையில் குறிப்பு

எ.கா. இந்த மாடு வயலில் உழுகிறது

இந்த மாடு பால் கறக்கிறது

மாடு என்ற சொல் உழுகிறது என்னும் வினைக்குறிப்பால் காளை மாட்டைக் குறித்து நின்றது. உழுதல் தொழிலுக்கு காளைமாட்டை மட்டுமே பயன்படுத்துவதால் அவ்வாறு காளை மாட்டை உணர்த்தி நின்றது. இந்த மாடு பால் கறக்கிறது என்பதில் உள்ள மாடு பால் கறக்கிறது என்ற வினைக்குறிப்பால் பசுமாட்டைக் குறிப்பால் உணர்த்தி நின்றது.

இவ்வாறு ஒரு பொதுச்சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும்.

3. இனங்குறித்தல்

எ.கா. நான் வெற்றிலைப் போட்டேன் இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது போட்டேன் என்பதில் வெற்றிலையை மட்டுமே போட்டேன் சுண்ணாம்பு பாக்கு போன்றவற்றையும் சேர்த்துப்போட்டேன் என்பது விளங்குவதால் வெற்றிலைப் போட்டதில் வெற்றிலையோடு இனமாக சேர்ந்து பாக்கு சுண்ணாம்பு ஆகியவற்றையும் குறித்து நிற்பது உணரப்படுகிறது. இனம் குறித்து நின்றதால் இனங்குறித்தல் ஆயிற்று. இவ்வாறு ஒரு சொல் தன்பொருளையும் குறித்து தனக்கு இனமான பொருளையும் குறித்து நிற்பது இனங்குறித்தல் எனப்படும்.

4.அடுக்குத்தொடர்

அசை நிலைக்கும் விரைவு, சினம், அச்சம், மகிழ்ச்சி, துன்பம்; முதலிய பொருள் நிலைக்கும் செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு மூன்று நான்கு என அடுக்கி வருவது அடுக்குத்தொடராகும்.

எ.கா. அதே அதே	-	அசை நிலை
போ போ	-	விரைவு
அடி அடி	-	சினம்
வருக வருக	-	மகிழ்ச்சி
தீ தீ தீ	-	அச்சம்
நொந்தேன் நொந்தேன்	-	துன்பம்
கோடி கோடி கோடி கோடியே	-	இசைநிறை.



தமிழ்ப் பல்கலைக்கழகம்